19-8-1984
2727

# தமிழ் நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

### பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**திங்கட்கிழமை 1983 அக்டோபர் 24 தொகுதி LII எண். 1**

**Monday 24th October 1983 —Volume LII No. 1**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

Legislative Assembly Department, Fort St. George, Madras-600009

விலை ரூ. 3-50 பைசாக்கள்] [Price Rs. 3-50]

# உள்ளடக்கம்.

**24-10-1983.**


பக்கங்கள்.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். (i)—(iii)

(ii) Personnel of the Government of Tamil Nadu (iv)—(v)

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். (vi)—

(iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல். (vii)—(xiv)

1. இரங்கல் குறிப்புகள்:
முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மறைவு குறித்து

2. இரங்கல் தீர்மானங்கள்: 1—5

(அ) முன்னாள் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. பக்தவத்சலு நாயுடு அவர்கள் மறைவு. 5—6

(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவாகள் மறைவு. 7—8

(இ) இலங்கையில் இனப்படுகொலைகளின் காரணமாக உயிரிழந்த தமிழர்கள். 8—9

3. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. 9—36

136052
சென்னை-600 008.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (நிதி அமைச்சர்)— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (மின் துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு–எஃகுக் கட்டுப்பாடு.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)— பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** (செய்தி–அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வி அமைச்சர்)— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. **மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்,

9. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள். எடைகள்–அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை, பூமிதானம், கிராமத்தானம் மற்றும் நெடுஞ் சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற் பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.)

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத்தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Hon. Dr, M. G. RAMACHANDRAN (Chief Mi ister) Public General Admi istra io , i dian Administra ive Servi e, and other All India Services, District Revenue Officers. Deputy Collectors, Police Prevention of Corruption, pla ning, Mclasses, Archaeology and Excise

2. Hon Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for F nance) Fina ce. Legisiature Electio s, Food, Youth Service C ips. Price Co trol and Ex—Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minis er for Electrici y)— Electricity, Iro and Steel Control.

4. Hon. Thiru K. A KRISHNASAMY (Mi is er for Dairy Development)— Milk Dair Development. Registratio n and Stamp Ac

5. Hon T iru S .D. SOMASUNDARAM (Minister for Reve ue) Revenue Commercial Taxes and Census.

6. Hon Thiru R. M. VEERAPPAN (Minis e for Informatio a c Religious Endowments) — Information and Publicity, Film Techn logy Touriam, Tourism Development Corporation Ci ematograph Act Hi du Religious and Charitable Endowments, F rest, Cinchona and) Gran of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education Education, including Technical Education, Official Language.

8. Hon Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) — Agriculture. Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) — Law, Courts, Prisons, Legislation on weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panc ayat Union Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour Labour, Housing Slum Clearance Board, Statistics, Tamil Nadu water Supply and Drainage Board, Town and Planning Accommodation Control

12- Hon. DR. H. V. HANDE (Minister for Health) Heat

13. Hon Thiru S. MUTHUSAMY (Minister for Transport- Tranaport, Nationalised transport, Motor Vehicles Act and ports. on

14. Hon Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)— Large Scale Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S- N. RAJENDRAN (Minister for Public Works)- Prohibition excluding grant of liquor Permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravida Welfare) - Adi - Dravidar Welfare, Stationery and Printing, Government Press News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. Soundararajan (Minister for Nutritious Meals)- Nutritious Meals.

18. Hon Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control)- Environmental pollution Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)- Backward Classes.

20. Hon. Thirumathi Gomathi Srinivasan (Minister for Social Welfare)- Social Welfare including women and Children Welfare, Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. Hon Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi).Khadi.

22. Hon Thiru Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)- Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. Hon. Thiru R. ARUNACHALAM (Ministsr for Rural Industrics)- Rural Industries including Village, Cottageand Small Industric

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries)— Fisheries.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

பேரவைத் துணைத் தலைவர்

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
2. திரு. மா. சின்னராசு.
3. திருமதி டி. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்
5. திரு. என். வரதராஜன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.,
திரு. பி. எம். பத்மநாபநம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.,

குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.,

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்எல்.பி.,

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.,

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 25-10-83 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 11 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 12 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 14 | வெற்றிடம். | புரசைவாக்கம் |
| 15 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 16 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 18 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 19 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 20 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்–2 |
| 21 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 22 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 23 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 24 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 25 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 26 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 27 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 28 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 29 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 30 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 31 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 32 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 34 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 35 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 36 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 37 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 38 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 39 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 40 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 41 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 42 | இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதா கிருஷ்ண நகர் |
| 43 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 44 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 45 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 46 | ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், திரு. | அம்பாசமுத்திரம் |
| 47 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 48 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 51 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 52 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 53 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 54 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 55 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 56 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 57 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 58 | வெற்றிடம் | அண்ணாநகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 59 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 60 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 61 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.) |
| 62 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 63 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 64 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 65 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 67 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கயம் |
| 69 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 71 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிகுப்பம் |
| 72 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 73 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 74 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 75 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 76 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 77 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 78 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 79 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 80 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 81 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத் தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.) |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. [illegible] | அரூர் (செ.வ.) |
| 96 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. நா. | செங்கம் (செ.வ.) |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வீ. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.) |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ. |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமாறன், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுபாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், வேடச்சந்தூர் திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புகோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பீ. | பத்மநாபபுர |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர் பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி பழனிச்சாமி திருமதி. | வீரபாண்டி |
| 217 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலமலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே— அமைச்சர்
4 மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்
5 மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்
6 மாண்புமிகு திரு. க. காளிமணி—அமைச்சர்
7 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும்

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடர்

1983, அக்டோபர் 24, திங்கட்கிழமை

ஐப்பசி 7, ருத்ரோத்காரி திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-0. மணியளவில் மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு.க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

,,அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.''

ஒரு செயலை செய்யுங்கால் உண்டாகும் அழிவையும், நன்மையையும் ஆராய்ந்து, பின்னால் உண்டாகும் ஆதாயத்தையும் ஆராய்ந்து அச்செயலைச் செய்ய வேண்டும்.

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்
முன்னாள் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மறைவு
குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர்.
சீனிவாச ஐயர் அவர்கள் 23-5-1983 ஆம் தேதியன்றும்,
திரு. மு, கந்தசாமி படையாச்சி அவர்கள் 2-6-1983 ஆம்
தேதியன்றும், திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் அவர்கள்
7-6-1983 ஆம் தேதியன்றும், திரு. எம். சுரேந்திரன் அவர்கள்
7-6-1983 ஆம் தேதியன்றும், திரு. இரா. காளியப்பன்
அவர்கள் 8-6-1983 ஆம் தேதியன்றும், திரு. பி. டி.
வெங்கடாச்சாரி அவர்கள் 11-6-1983 ஆம் தேதியன்றும்,
திரு. என். வெங்கடராமையா அவர்கள் 28-6-1983 ஆம்
தேதியன்றும், திரு. எஸ். தினகரசாமித் தேவர் அவர்கள்
18-8-1983 ஆம் தேதியன்றும், திரு. பா. தம்பி நாயக்கர்
அவர்கள் 5-9-1983 ஆம் தேதியன்றும், திரு. டி. கே.
மொய்தீன்குட்டி அவர்கள் 6-9-1983 ஆம் தேதியன்றும்
திரு. வ. க. இராமராசன் அவர்கள் 16-9-1983 ஆம் தேதியன்றும், திரு. வ. துலுக்காணம் அவர்கள் 17-10-1983 ஆம்
தேதியன்றும், மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், நாடாளுமன்ற மக்களவையின் முன்னாள் தலைவரான சர்தார் உக்கும் சிங் அவர்கள் 27-5-1983 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்தும் இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1898 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளன்று பிறந்த
திரு. ஆர். சீனிவாச ஐயர் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தில்
பல ஆண்டுகள் பணி புரிந்தவர். சிறந்த வழக்கறிஞர். காவேரி
மேட்டூர் திட்டத்திற்குட்பட்ட பகுதிகளின் விவசாயிகள்
சங்கத்திற்குச் செயலாளராகப் பணியாற்றியவர். 19 7 ஆம்
ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை, தஞ்சை மாவட்டம்
பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல
முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு மு. கந்தசாமி படையாச்சி அவர்கள் 1952 ஆம்
ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையிலும், 1957 ஆம்
ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும்
1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும்
தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதியி
லிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்
தேர்ந்தெடுக்கப்பெற்று, பேரவையில் நல்ல முறையில் பணி
யாற்றியுள்ளார். கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைத்
துணைத் தலைவராகவும், வேலூர் கூட்டுறவு பயிற்சி நிலைய
துணைத் தலைவராகவும், தென்னாற்காடு கூட்டுறவு மத்திய
வங்கி இயக்குநராகவும், உளுந்தூர்பேட்டை ஊராட்சிஒன்றியத்
தலைவராகவும் மற்றும் உளுந்தூர்பேட்டை நகரப் பஞ்சாயத்துத்
தலைவராகவும் சிறந்த முறையில் அவர் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. கே. சின்னராஜ் கவுண்டர் அவர்கள் 1962 ஆம்
ஆண்டிலிருந்து 1967–ஆம் ஆண்டு வரை வடாற்காடு மாவட்டம்
செங்கம் தொகுதியில் இருந்தும். மற்றும் 1967 ஆம் ஆண்டி
லிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் வடாற்காடு மாவட்டம்
திருப்பத்தூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல
முறையில் பணியாற்றியுள்ளார். 1971 ஆம் ஆண்டிலிருந்து
1977 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற மக்கள் அவை உறுப்பின
ராகவும் அவர் பணியாற்றியுள்ளார். திருப்பத்தூர் கூட்டுறவு
விற்பனை கடன் சங்கத் தலைவராகவும், திருப்பத்தூர் பால்
வழங்கு சங்கத் தலைவராகவும், திருப்பத்தூர் கூட்டுறவு
வங்கியின் நெறியாளராகவும் மற்றும் திருப்பத்தூர் நகராட்சி
மன்றத் தலைவராகவும் சிறந்த முறையில் அவர் பணியாற்றி
யுள்ளார்.

திரு. எம். சுரேந்திரன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து
1971 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1971 ஆம் ஆண்டி
லிருந்து 1976 ஆம் ஆண்டு வரையிலும், சேலம் மாவட்டம்
மேட்டூர் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில்
பணியாற்றியுள்ளார். 1946 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம்
ஆண்டு வரை தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகவும்
பணிபுரிந்தார். பின்னர் 1948 ஆம் ஆண்டில் காங்கிரசிலிருந்து



விலகி சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். பின்னர், 1972-ல்
காங்கிரசில் சேர்ந்தார். 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம்
ஆண்டு வரை பிரஜா சோஷலிஸ்ட் கட்சி சட்டமன்ற
உறுப்பினராகவும், 1972-லிருந்து 1976 வரை காங்கிரஸ் (இ)
கட்சி உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றினார்.
காங்கிரஸ் கட்சியின் விடுதலைப் போராட்டத்தின்போது
பலமுறை இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறை
வைக்கப்பட்டிருந்தார். சேலம் மாவட்ட எல்லைக்குள் இவர்
நுழையக் கூடாதென்ற மாநில ஆளுநர் அவர்களின் தடை,
சுதந்திர அரசாங்கம் ஏற்படும் வரை இருந்தது. தொழிலாளர்கள்
விவசாயிகள் அமைப்புக்களை அமைத்து, அவர்களின் முன்னேற்
றத்திற்காக பல இயக்கங்களை நடத்தியுள்ளார்.

திரு. இரா. காளியப்பன் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து
1980 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஏற்காடு
(ஆதிவாசிகளுக்கான) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணி
யாற்றியுள்ளார்.

திரு. பி. டி. வெங்கடாச்சாரி அவர்கள் 1937 ஆம்
ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை தர்மபுரி மாவட்டம்
ஓசூர் பொது கிராமபுறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்
கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்
தெடுக்கப்பட்டு நல்ல முறையில்பணியாற்றியுள்ளார்.

திரு. என். வெங்கட்டராமையா அவர்கள் 1952 ஆம் ஆண்டு
நரசராவ்பேட் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த
சென்னை சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று
ஆந்திர மாநிலம் அமையும் வரை பேரவையின் உறுப்பினராக
இருந்தார். அவர் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். சிறந்த
தேசியவாதியும், காந்தியவாதியுமான இவர் ஏழைவிவசாயிகளின்
வாழ்க்கைத்தரம் உயரப் பல இயக்கங்களை நடத்தியவராவார்.
ஆந்திர மாநிலம் அமைக்கப்பெற்ற பின் அம்மாநில சட்ட
மன்றப் பேரவையின் முதல் தலைவராக 23-11-1953 அன்று
தேர்ந்தெடுக்கப் பெற்று. 1955 ஆம் ஆண்டு அம்மாநில புதிய
சட்டமன்றப் பேரவை அமையும்வரை பணிபுரிந்தார்.

திரு, எஸ். தினகரசாமி தேவர் அவர்கள் 1952 ஆம் ஆண்டி
லிருந்து 1957 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் சேடப்பட்டி
தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில்
பணியாற்றியுள்ளார்.

திரு. பா. தம்பி நாயக்கர் அவர்கள் 1967 ஆம் ஆண்டி
லிருந்து 1971 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம்
வடமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப் பெற்று, நல்ல
முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பி. கே. பொய்ந்தீன்குட்டி அவர்கள் 1937 ஆம்
ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும்
1916 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும்
பாலக்காடு முகமதியர் கிராமப்புறத் தொகுதியிலிருந்து
அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத்
தேர்ந்து எடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வ. க. இராமராசர் அவர்கள் 1967 ஆம் ஆண்டி
லிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1971 ஆம்
ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையிலும் இருமுறை
கோயம்புத்தூர் மாவட்டம் பவானிசாகர் (ஷெட்யூல்டு வகுப்பு)
தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்
தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வ. நிலுக்கண்ணன் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலிருந்து
1980 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்
பேட்டை (ஷெட்யூல்டு வகுப்பு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல
முறையில் பணியாற்றியுள்ளார்.

சர்தார் உக்கும் சிங் அவர்கள் 1895 ஆம் ஆண்டு ஆகஸ்ட்
மாதம் 30 ஆம் தேதி மாண்ட்கோமெரியில் பிறந்தார்.
சிரோமணி அகாலி தளத்தின் தலைவராக மூன்று ஆண்டுகள்
இருந்தார். சிறந்த வழக்கறிஞராகவும், பின்னர் கபுர்தலா
உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும் திறம்படப் பணிபுரிந்
துள்ளார். இந்திய அரசியல் அமைப்பு அவையின் Constituent
Assembly) உறுப்பினராகவும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957
ஆம் ஆண்டுவரையிலும், 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம்
ஆண்டு வரையிலும், மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து
1967 ஆம் ஆண்டு வரையிலும் முதல் மூன்று நாடாளுமன்ற
மக்கள் அவையின் உறுப்பினராகவும், சிறப்பான முறையில்
பணியாற்றியுள்ளார்.

மேலும் முதல் நாடாளுமன்ற மக்களவையின் துணைத்
தலைவராகவும் 1956 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்
பெற்றார். பின்னர் இரண்டாவது நாடாளுமன்ற மக்களவையின்
துணைத் தலைவராகத்தொட ந்து பணி புரிந்தார். அமெரிக்கா,
ரஷ்யா உட்பட பல உலக நாடுகளில் பயணம் செய்து
முதிர்ந்த அனுபவம் பெற்றவர். 1962 ஆம் ஆண்டிலிருந்து
1967 ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற மக்களவையில்
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுச் சிறந்த முறையில்
பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் இராஜஸ்தான் மாநில
ஆளுநராகவும் நியமிக்கப்பட்டு நல்ல முறையில் சேவை
செய்துள்ளார்.





(முற்பகல் 10-10)

அன்னார்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும்,
இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

இறந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில்
மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக
எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக
எழுந்து நின்றனர்.

2. இரங்கல் தீர்மானங்கள்.

(அ) முன்னாள் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. பக்தவச்சலு
நாயுடு அவர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் பேரவைத்
துணைத் தலைவருமான திரு. பி. பக்தவச்சலு நாயு
அவர்கள் 16-6-1983 ஆம் தேதியன்று மறைந்ததை இப்
பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பக்தவச்சலு நாயுடு அவர்கள் 1937 ஆம் ஆண்டி
லிருந்து 1939 ஆம் ஆண்டு வரை இராணிப்பேட்டை பொது
கிராமபுறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த
சென்னை சட்டமன்றப் பேரவைக்கும் 1952 ஆம் ஆண்டி
லிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம்
அரக்கோணம் தொகுதியிலிருந்தும், 1957 ஆம் ஆண்டிலிருந்து
1962 ஆம் ஆண்டு வரையிலும் வட ஆற்காடு மாவட்டம்
சோளிங்கர் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில்
பணியாற்றி உள்ளார்.

1952 ஆம் ஆண்டும் மீண்டும் 1957 ஆம் ஆண்டும் தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்
கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

மேலும் முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.
ஜே. சிவசண்முகம்பிள்ளை அவர்கள் 1955-இல் பதவி விலகிய
போது 16-8-1955 முதல் 27-9-1955 வரையிலும், பிறகு,
1956-இல்மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டதால் திரு. என்.
கோபாலமேனன் அவர்களின் பேரவைத் தலைவர் பதவிக்
காலம்முடிவுற்றபோது, 1-11-1956 முதல் இரண்டாவது சட்ட
மன்றப் பேரவை அமையும் வரையிலும், பின்னர் 1961-இல்
பேரவைத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள்
பதவிக் காலத்திலேயே மறைந்தபோது, 4-8-1961 முதல்

மூன்றாவது சட்டமன்றப் பேரவை அமையும் வரையிலும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் பதவி நிரப்பப்படாததால் அப்பதவிக்குரிய பணிகளையும் திரு பக்தவச்சலு நாயுடு அவர்கள் சிறப்பாக ஆற்றி வந்தார்கள்.

சட்டமன்றப் பணிகளோடன்றி, அவர் கூட்டுறவுத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டு, சுமார் இருபதாண்டுகள் வேலூர் கூட்டுறவு மைய கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தவிர, மாநில நிலவள வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கம் கியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மேலும், டெல்லி மைய பண்டகசாலை வாரியத்தின் இயக்குநராக ஒன்பது ஆண்டுகள் அவர் பணியாற்றியுள்ளார். வட ஆற்காட்டில் வட்ட மற்றும் மாவட்டக் கழகங்களின்(Taluk and District Boards) தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவுக்கு இரங்கலைத் தெரிவிக்கும் தீர்மானத்தைப் பேரவை முன் வைக்கிறேன்.

திரு பி. பக்தவச்சலு நாயுடு அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை இராணிப்பேட்டை பொதுக் கிராமபுறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் தொகுதியிலிருந்தும், 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ம் ஆண்டு வரையிலும் வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும் இருமுறை சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று பணியாற்றினார். மேலும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் பதவி மூன்று முறைகள் நிரப்பப்படாதபோது அப்பதவிக்குரிய பணிகளையும் திரு. பி. பக்தவச்சலு நாயுடு அவர்கள் சிறப்பாக ஆற்றி வந்தார்கள். அன்னார் 16-6-1983 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.



(ஆ) முன்னாள் பேரவைத் தலைவர் திரு.கே.ஏ. மதியழகன் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் தலைவருமான திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் 17-8-1983 அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மதியழகன் அவர்கள் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையிலும், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையிலும் சென்னை நகர் ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1967-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரையிலும் தமிழக அமைச்சரவையிலும், மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும் நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மதியழகன் மாணவராக இருந்த காலத்திலிருந்தே அரசியலில் தீவிரமாக ஈடுபட்டவர். திராவிட மாணவர் இயக்கத்தின் தலைவராக இருந்தார். அரசியல் போராட்டங்களில் தீவிரமாகப் பங்குகொண்டு ஒன்பதுமுறை சிறை சென்றார். பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவிய போது அண்ணாவுக்கு உறுதுணையாக இருந்த ஐம்பெருந்தலைவர்களில்ஒருவர். 1967-ஆம் ஆண்டு அண்ணா அமைச்சரவையில் அமைச்சராகஇருந்தபோது ரோம் நகரில் நடைபெற்ற உலக உணவு மாநாட்டிற்கு இந்தியக் குழுவின் தலைவராகச் சென்றார். 1970 ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் பங்கேற்றார்.'

அன்னாரின் மறைவுக்கு இரங்கலைத் தெரிவிக்கும் தீர்மானத்தைப் பேரவை முன் வைக்கிறேன்.

"திரு. கே; ஏ. மதியழகன் அவர்கள் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையிலும், 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையிலும் சென்னை நகர் ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1967-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரையிலும் தமிழக அமைச்சரவையில் அமைச்சராகவும் மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னார் 17-8-1983-ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்தத் துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது'',

இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

(இ) இலங்கையில் இனப்படுகொலைகளின் காரணமாக உயிரிழந்த தமிழர்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கையில் இனப்படுகொலைகள் காரணமாக தமிழர்கள் உயிரிழந்தமை குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன் வைக்கிறேன்.

''இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள், இந்தியப் பரம்பரை வழி வந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், ஆகியோர் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அவ்வப்போது பலவித இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு, வாழ்வுரிமைகள் பறிக்கப்பட்டு, உயிர்களும் உடைமைகளும் அழிக்கப்பட்டுச் சொத்துக்கள் சூறையாடப்பட்டு, சிறைக்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண்களின் கற்பு அழிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏதும் இன்றி அல்லற்பட்டு, கடந்த ஜூலைத் திங்கள் தொடர்ந்து சிங்கள இனவெறியர்களாலும், இலங்கை இராணுவத்தினர்—காவல் துறையினர் ஆகியோராலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடுதல், தீ வைத்தல், தீங்கிழைத்தல் போன்ற கொடுஞ்செயல்களுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை அறிந்து, இப்பேரவை தனது ஆற்றொணாத் துக்கத்தையும் துயரத்தையும் தெரிவிப்பதுடன், கலவரங்களில் உயிரிழந்தவர்களுக்கு வீரஅஞ்சலி செலுத்துவதுடன், அவர்கள் குடும்பத்தினர்க்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அக்கலவரங்களில் உறுப்புகளையும் உடைமைகளையும் உரிமைகளையும் இழந்து தவித்திடும் அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது.''

(முற்பகல் 10-20.)

இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இலங்கையில் நடந்த இனப்படுகொலைகளின் மூலம் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 25-10- 983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10-21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ). சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

1. 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (மருத்துவ சோதனை, சிகிச்சை) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக பொதுத்துறையின் (பணியாளர் அமைப்பு) 2-12-1982-ஆம் நாளிட்ட 2144-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)),

2. தமிழ்நாடு 951-ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழகத்தின் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 30-11-1982-ஆம் நாளிட்ட பணியாளர் அமைப்பு நிர்வாகம் சீர்திருத்த (பணியாளரமைப்பு) துறையின் 114-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

3. 940-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள்துறையின் 26-4-1982-ஆம் நாளிட்ட 1004-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

4. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராய விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 27-12-1982-ஆம் நாளிட்ட 875-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

5. 1940-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள்துறையின் 30-11-198 -ஆம் நாளிட்ட 3021-ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939)
133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

6. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்
கையை நீக்கம் செய்வது குறித்து 28-12-1982-ஆம் நாளிட்ட
3216-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ்
பேரவைமுன் வைக்கப்பெற்றது).

7. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்
கையை நீக்கம் செய்வது குறித்து 28-12-1982-ஆம் நாளிட்ட
3220-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
(தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது).

8. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்
கையை நீக்கம் செய்வது குறித்து 31-12-1982-ஆம் நாளிட்ட
3230-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
(தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது).

9. சட்டம் அமுலுக்கு வரும் தேதியினை குறித்து வருவாய்த்
துறையின் 1-12-1982-ஆம் நாளிட்ட 1966-ஆம் எண் அரசா
ணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1982-ஆம்
ஆண்டு குடியிருப்பு விதிகள் (திருத்தப்பட்டது) சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 35/1982) 1(2) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது).

10. வணிகவரி-அறநிலையத் துறையின் 29-4-1981-ஆம்
நாளிட்டII(1)/CTRE/239(b)/81-ஆம்எண் அறிவிக்கையில் திருத்தம்
செய்வது தொடர்பாக வணிகவரி-அறநிலையத் துறையின்
10-3-1983-ஆம் நாளிட்ட 275-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு1959-ஆம் ஆண்டு பொது
விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959)53 (5)
பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

11. தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள்
விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு-கூட்டுறவுத்
துறையின் 7-1-1983-ஆம் நாளிட்ட 7-ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு
கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961
119(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).



12. சென்னை நகரிலுள்ள மயிலாப்பூர், தேனாம்பேட்டை
பகுதி நகரத் திட்டப் பணியில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு
வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-8-1982-ஆம் நாளிட்ட
770-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
(தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர நாட்டுப்
புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972)
123(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

13. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில்
மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித்
துறையின் 20-7-1982-ஆம் நாளிட்ட 660-ஆம்எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு
1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத்திட்ட சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது).

14. வருவாய்த் துறையின் 17-12-1969-ஆம் நாளிட்ட II(1
எண் 5939/1969-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது
குறித்து வருவாய்த் துறையின் 13-5-1982-ஆம் நாளிட்ட 792-
ஆம் எண்அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு
1969-ஆம் ஆண்டு வேளாண்விளை நிலங்கள் பதிவுரு குடிவார
உரிமைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969; 18(4)
பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

15. கர்நாடக மாநிலத்திலுள்ள மாதேஸ்வர மலையில்
நடக்கும் யுகாதி மற்றும் மகாசிவராத்திரி திருவிழாக்களுக்கு தற்
காலிக அனுமதி வழங்குவது குறித்து உள்துறையின்3-2 1983-ஆம்
நாளிட்ட 224-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம்ஆண்டு மோட்டார் வண்டிகள்
வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2)
பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

16. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு மாநில போக்குவரத்து
மேல்முறையீட்டுத் தீர்ப்பாய விதிகளில் சில திருத்தங்கள்
செய்வது குறித்து உள்துறையின் 30-7-1982-ஆம் நாளிட்ட
1945-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (1939-ஆம் ஆண்டு மோட்டார்வண்டிகள் சட்டத்தின்
(மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது).

17. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள்
சட்டத்தின் 10பி பிரிவின் கீழ் பயணிகள் பேருந்து நடத்துபவர்
களிடம் கூடுதல் மேல் வரிவிதிப்பது குறித்து உள்துறையின்
27-1-1983-ஆம் நாளிட்ட 182-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1974)
25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

18. தமிழ்நாடு 1962—ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள்
(நில உச்சவரம்புக் கட்டுதல்) விதிகளில் சில திருத்தங்கள்
செய்வது குறித்து வருவாய்த் துறையின் 25-1-1983-ஆம் நாளிட்ட
133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
(தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள் (நில உச்ச
வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58 1961)112(2)
பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

19. தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு)
விதிகளில் திருத்தம்செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்துறையின்
15-2-1983—ஆம் நாளிட்ட 93-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது
விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3)பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

20. தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு கள் மற்றும் சாராயக்
கடைகள் (ஏலத்தின் மீது தீர்வு செய்தல்) விதிகளில் திருத்தம்
ஒன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின்
13-12-1982— ஆம்நாளிட்ட 850-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது
விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

21. தமிழ்நாடு 1954—ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக்
கழகத்தின் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து 30-11-1982
ஆம் நாளிட்ட பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணி
யாளரமைப்பு) துறையின் 138-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்
320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

22. கஞ்சம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப.எண்.165/
3.பி165/16பி-யில் உள்ள சென்னை பெருந்திட்டத்தில் மாற்றம்
செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின்
20-7-1982—ஆம் நாளிட்ட 654-ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர—
நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது

23. தமிழ்நாடு 1954—ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக்
கழகத்தின்விதிகளில் திருத்தம் செய்வதுகுறித்து பணியாளரமைப்பு
நிர்வாகசீர்திருத்தத் (பணியாளரமைப்பு) துறையின் 30-11-1982—
ஆம் நாளிட்ட 140—ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்டஅறிவிக்கை (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320
5)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

24. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்
பட்ட வெளிநாட்டு சாராவிகள்(தயாரிப்பு)விதிகளில் திருத்தங்கள்
செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில்
28-12-1982-ஆம் நாளிட்ட 876—ஆம் எண் அரசாணையிப்





வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937—ஆம் ஆண்டு மது
விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54(3)பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

25. ஊரகவளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 2-5-1980—ஆம்
நாளிட்ட II(2)/RUL/36 0/81-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம்
செய்வது குறித்து ஊரகவளர்ச்சி—உள்ளாட்சித் துறையின்
21-2-1983-ஆம் நாளிட்ட 231-ஆம் எண். அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958—ஆம் ஆண்டு பூதான
இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15 1958) 28(4)பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

26. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வட்டித் தொழிலர்
விதிகளின் படிவம் 'எச்'-ல்திருத்தம் செய்வது குறித்து உணவு
மற்றும் கூட்டுறவுத் துறையின் 17—2-1983—ஆம் நாளிட்ட 88—
ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை(தமிழ்நாடு
1957-ஆம் ஆண்டு வட்டித் தொழிலர் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 26/1957) 22(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.

27. தமிழ்நாடு 1957—ஆம் ஆண்டு சினிமா (முறைப்படுத்தல்)
விதிகளில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 18-12-1982—
ஆம் நாளிட்ட 3142—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு சினிமா (முறைப்
படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955)10(3)பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

28. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்
கைகளை ரத்து செய்வது குறித்து உள்துறையின் 28-12-1982—
ஆம் நாளிட்ட 3217 மற்றும் 3218 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது).

29. தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக
வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-12-1982—ஆம்
நாளிட்ட 1446-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

30. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்
பட்ட வெளிநாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் சில
திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத்
துறையின் 11-3-1983—ஆம் நாளிட்ட 147—ஆம் எண் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு
மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்) 10/1937) 54(3)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

31. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டத்திலுள்ள கீழ்நீலிதாநல்லூரில் உள்ளசிற்றூர், வண்ணான்பொட்டல் கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 11-4-1983—ஆம் நாளிட்ட 536 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958—ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

32. திருநெல்வேலி மாவட்டம், கோயில்பட்டி வட்டத்திலுள்ள சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 11-4-1983—ஆம் நாளிட்ட 535-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

33. திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டத்திலுள்ள சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 13-4-1983—ஆம் நாளிட்ட 549—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958—ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958)28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

34. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 16-3-1983 ஆம் நாளிட்ட 586—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939)133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

35, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்திலுள்ள சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 30-3-1983—ஆம் நாளிட்ட 475 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1958- ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

36. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்துறையின் 08—12—1982 ஆம் நாளிட்ட 876 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).





37. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிகள், நகர அமைப்பு பணிகள் விதியில் திருத்தம் செய்வதுகுறித்து ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 2—12—1982 ஆம் நாளிட்ட 1850 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(டி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

38. வரி செலுத்துவதிலிருந்து குறைப்பது குறித்து உள் துறையின் 21—3—1983 ஆம் நாளிட்ட 612 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[.

39. உள்துறையினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட சில அறிவிக்கைகளை ரத்து செய்வது குறித்து உள்துறையின் 28-12-1982 ஆம் நாளிட்ட 3221 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

40. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மதுபான (இடமாற்றல்( விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்துறையின் 2-2-1981 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

41. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாறு கட்டுப்பாடு ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 12-11-1982 ஆம் நாளிட்ட 793 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

42. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவிகள் (மொத்த விற்பனையின் கீழ் வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத்துறையின் 4-10-1982 ஆம் நாளிட்ட 71 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

43. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு சினிமா (முறைமைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 8-3-1983 ஆம் நாளிட்ட 468 ஆம் எண் அரசாணை

யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு சினிமா (முறைமைப்படுத்துதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

44. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நில சீர்த்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்] சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 28-12-1982 ஆம் நாளிட்ட 2103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

45. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு சினிமா (முறைமைப் படுத்துதல்) விதிகளின் 6—வது விதியில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 8-3-1983 ஆம் நாளிட்ட 467 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு சினிமா (முறைமைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

46. நந்தியம்பாக்கம் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22-9-1983 ஆம் நாளிட்ட 918 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர —நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

47. அத்திப்பட்டு கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 808 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

48. சித்தலப்பாக்கம் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு—வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-9-1982 ஆம் நாளிட்ட 888 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

49. ஊர வளர்ச்சிஉள்ளாட்சித்துறையின் 4-12-1976 ஆம் நாளிட்ட 2395 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப் பட்ட அறிவிக்கையின் சென்னை பெருநகர் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 803 ஆம் எண்



அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

50. எழும்பூர் கோட்டத்தின் சென்னை பெருநகர் பகுதிக் கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 3-9-1982 ஆம் நாளிட்ட 881 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

51. திருவொற்றியூர் ஊராட்சி ஒன்றியத்தின் நில அளவை எண் 5-ல் நகர அமைப்புத் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 29-9-1982 ஆம் நாளிட்ட 927 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ், ஆங்கிலம்) (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972)123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

52. மாதவரம் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 801 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

53. அட்டந்தாங்கல் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 804 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச்சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கத் பெற்றது).

54. ஆலமரு கிராமத்தின் சென்னைப் பெருநகர் பகுதிக் கான பெருந்திட்டத்தில் மாற்றம் சய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24-8-1982 ஆம் நாளிட்ட 852 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

55. திருநின்றவூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்பற வளர்ச்சித் துறையின் 24-8-1982 ஆம் நாளிட்ட 853 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற

திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. மீஞ்சூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22-9-1982 ஆம் நாளிட்ட 917 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. பம்மல் கிராமத்தைச் சேர்ந்த நி.அ.ப.எண். 90/3 ஆள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்துவீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 810ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

58. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 11-12-1976 ஆம் நாளிட்ட 2395 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிவிக்கையின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 11-10-1982 ஆம் நாளிட்ட 946 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச்சட்டத்தின் அறிவிக்கை (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

59. பாக்கம் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 11-10-1982 ஆம் நாளிட்ட 945 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

60. ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 4-12-1976 ஆம் நாளிட்ட 2395 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிவிக்கையின் சென்னைப் பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 20-7-1983 ஆம் நாளிட்ட 651 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது )

61. ஆலமதி கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக் கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-9-1982 ஆம் நாளிட்ட



887 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

62. பூந்தமல்லி கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக் கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 809 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

63. அயனாவரம் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 806 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு நகர—நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

64. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய விதிகளின் படிவம் F.Ac 1(6) மற்றும் விதி 33-ல் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 23-12-1982 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

65. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயம் (தாயாரித்தல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 30-3-1983 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

66. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு முத்திரைத் தாள் (உபகரணங்களை குறைத்து மதிப்பிடுதலை தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரி சமய அறக் கட்டளைகள் துறையின் 27-11-1982 ஆம் நாளிட்ட 1317 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் II/1899) 75-ஏ (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

67. 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் முதல் வடிவத்தில் தயாரிப்பு, வினியோகம் மற்றும் சீராக்கம் ஆசய்யும் போக்குவரத்து சாதனங்களை செங்குத்தாக நிறுவுதல் செயவற்றை சேர்த்தல் குறித்து தொழிலாளர் துறையின்

20-5-1983 ஆம் நாளிட்ட 1206ஆம் எண். அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை (1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள்
சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

68. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு)
விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்
தீர்வைத்துறையின் 30-5-1983 ஆம் நாளிட்ட 412 ஆம் எண்.
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937
ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு) சட்டம்
10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

69. கோபரசநல்லூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப்
பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 22-9-1982
நாளிட்ட 919 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுபுறத்
திட்டச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

70. நுங்கம்பக்கம் கிராமத்தின் நி.அ.பு.எண். 106–3ல்
சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம்
செய்வது குறுத்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்
துறையின் 11-10-1982 ஆம் நாளிட்ட 944 ஆம் எண்.
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971
ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்கின் (தமிழ்நாடு
சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைப் முன் வைக்கப்
பெற்றது).

71. நுங்கம்பாக்கம் மேற்கு பகுதியின் நகர அமைப்புத்
திட்டத்தின் பகுதி 1-ல் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி
மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 5-2-1983 ஆம்
நாளிட்ட 231 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற
திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2)
பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது).

72. செம்பரபாக்கம் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப்
பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து
4-5-1983 ஆம் நாளிட்ட 752 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர
நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972)
123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

73. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள்
குடிவாரஉரிமைகள் பதிவு விதிகளில் திருத்தம் செய்வது குறித்து
வருவாய்த்துறையின் 16-8-1982 ஆம் நாளிட்ட 1422 ஆம் எண்.



அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969
ஆம் ஆண்டு வேளாண் நிலங்கள் குடிவார உரிமைகள் பதிவுச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18(4) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

74. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள்
விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக உள் துறையின்
22-2-1983 ஆம் நாளிட்ட 335 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939)
133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

75. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய தயாரிப்பு
விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு
ஆயத்தீர்வைத்துறையின் 31-5-1983 ஆம் நாளிட்ட 417 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
[தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது].

76. சென்னையிலிருந்து ஈரோடு மார்க்கத்தில் ஓடும்
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் குளுமை வசதி
பேருந்திற்கு செலுத்தும் வரியில் சலுகைகள்
செய்யப்பட்ட
செய்வது குறித்து உள்துறையின் 28-5-1983 ஆம் நாளிட்ட
1099 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
[தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

77. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிகள் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தம் செய்வது
குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின்
14-12-1982 ஆம் நாளிட்ட 1385 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

78. வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையினால்
வெளியிடப்பட்ட 11/(1)/ /72/1982 நாள் 18-5-1982
அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து, வணிகவரிகள் சமய
அறக்கட்டளைகள் துறையின் 30-12-1982 ஆம் நாளிட்ட 1451
ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
[தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

79. வருவாய்த்துறையின் 22-1962 ஆம் நாளிட்ட எண் 11-1 2437/1962 அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-12-1982 நாளிட்ட 1362 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

80. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தம் செய்வது குறித்து 14-12-1982 ஆம் நாளிட்ட 1386 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

81. 1-7-1982-க்கு முன்பிலிருந்து வரியினால் அவதியுற்ற நிலக்கலை வியாபாரிகளுக்கு வரிசெலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-9-1983 ஆம் நாளிட்ட 1064 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

82. தாம்பரத்திலுள்ள சாட்நாத் இல்லம் எஸ். ஓ. எஸ். இந்திய கிராமங்கள் தயாரிக்கும் வியான அஞ்சல்கள், அஞ்சல் அட்டைகள், வாழ்த்து அட்டைகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 21-12-1982 ஆம் நாளிட்ட 1404 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1956 ஆம்ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1159) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

83. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள்— மய அறக்கட்டளைகள் துறையின் 14-12-1982 ஆம் நாளிட்ட 1387 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

84. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வதுகுறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22-2-1983 ஆம் நாளிட்ட 1915 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



85. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் சில திருத்தங்கள் செய்வது குறித்து 28-12-1982 ஆம் நாளிட்ட 1431 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

86. வணிகவரிகள்-அறக்கட்டளைத் துறையின் 27-2-1982 ஆம் நாளிட்ட (1)/ /42ஜி/82 எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து 8-3-1983 ஆம் நாளிட்ட 256 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-3-1983 ஆம் நாளிட்ட 254 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

88. நடுத்தர டிரெய்லர்களுக்கு விதிக்கும் வரியை 15 சதவிகிதத்திலிருந்து 8 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-3-1983 ஆம் நாளிட்ட 363 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் [1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது.]

89. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-12-1982 ஆம் நாளிட்ட 1443 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

90. கோயம்புத்தூர்-மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள் நலனுக்காக வாங்கப்படும் இயந்திரங்கள், மருத்துவ சாதனங்கள் மற்றும் கருவிகளை விநியோகிக்கும் விற்பனையாளர்களுக்கு விதிக்கும் வரிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 21-12-1982 ஆம் நாளிட்ட 1405 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

91. சென்னை புற்று நோய் நிலையத்திற்கு (டபிள்யூ.ஐ.ஏ.) விற்கப்படும் ஸ்டாண்டர்ட் ஆம்புலன்ஸ் வண்டி, தட்டெழுத்து இயந்திரம், பிரதி எடுக்கும் கருவி, ஜெராக்ஸ் மற்றும் போட்டோ காப்பியர்களுக்கு விற்கும் வரிகளிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 25-1-1983 ஆம் நாளிட்ட 88 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

92. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 31-12-1982 ஆம் நாளிட்ட 1457 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

93. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 8-7-1982 ஆம் நாளிட்ட 781 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

94. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-12-1982 ஆம் நாளிட்ட 1449 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

95. தமிழ்நாடு துறைகளுக்கான நில அளவை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 12-5-1981 ஆம் நாளிட்ட 500 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

96. நுங்கம்பாக்கம் வடக்கு நகர திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-1-1983 ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





97. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து உள்துறையின் 16-12-1982 ஆம் நாளிட்ட 31 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

98. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய பணிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 12-11-1982 ஆம் நாளிட்ட 1018 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதி (அபிவிருத்தி மற்றும் மாற்றம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

99. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 19-3-1983 ஆம் நாளிட்ட 634 ம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதி (அபிவிருத்தி மற்றும் மாற்றம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

100. தமிழ்நாடு 1940 ஆம் அண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து உள்துறையின் 27-11-1982 ஆம் நாளிட்ட 2988 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

101. வருடாந்திர அல்லது அரை இறுதி ஆண்டுகளில் செலுத்தப்படும் தொகைகளுக்கு சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் 15-6-1983 ஆம் நாளிட்ட 1248 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

102. 1963 ஆம் ஆண்டு சமய நிறுவனங்கள் (காப்பு, முதலீடுகள், பணம் கடன் வழங்குதல் அல்லது பெறுதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 24-11-1982 ஆம் நாளிட்ட 1305 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து அறநிலைய சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

103. திருச்சிராப்பள்ளியிலுள்ள சிங்காரத்தோப்பில் கடைப் பகுதி கட்டி முடியும் வரை திருச்சிராப்பள்ளி பர்மா அகதிகள் விற்கும் பொருள்களுக்கு செலுத்தப்படும் வரியிலிருந்து

விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 14-2-1983 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

104. வருவாய்த்துறையின் 21-11-1970 ஆம் நாளிட்ட 3612 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையை ரத்து செய்வது குறித்தும் மற்றும் செயற்கை கற்களுக்கு விதிக்கும் வரியை 15 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைப்பது குறித்தும் வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-11-1982 ஆம் நாளிட்ட 1333 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

105. 1983—84 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிவிக்கையில் மாற்றங்கள் மற்றும் விலக்குகள் குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 11-3-1983 ஆம் நாளிட்ட 290 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

106. தமிழ்நாடு மின் வாரியம் மற்றும் தமிழகமெங்கும் உள்ள அதன் கிளைகளுக்கு விற்கப்படும் பொருட்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1—11—82 ஆம் நாளிட்ட 1215 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிம்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

107. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-12-1982 ஆம் நாளிட்ட 1448 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தழ்மிநாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

108. கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏலம் விடும் மையங்களில் விற்கப்படும் தேநீருக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை 5 சதவிகிதத்திலிருந்து 2½ சதவிதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4-1-1983 ஆம் நாளிட்ட 3 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிம்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



109. பூவிருந்தவல்லி கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதி வளர்ச்சி துறையின் 6-11-1982 ஆம் நாளிட்ட 1003 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

110. திருநின்றவூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1-12-1982 ஆம் நாளிட்ட 1065 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

111. திருமுல்லைவாயில் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—10—1983 ஆம் நாளிட்ட 976 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

112. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு ஒன்றியங்கள் பொறியல் மற்றும் நீர் பராமரிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 23-3-1983 ஆம் நாளிட்ட 396 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

113. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு ஊராட்சி பணி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையின் 13—4—1983 ஆம் நாளிட்ட 554 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

114. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சி கடைநிலை பணி விதிகளில் திருத்தம் செய்வது குறித்து 28-3-1983 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1983 அக்டோபர் 24

115. ஊராட்சி உழியர்களின் திருமணத்திற்கு முன்பணம் வழங்குவதற்காக விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 15-4-1982 ஆம் நாளிட்ட 558 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

116. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச்சீர்த்திருத்த (உபரிநிலங்களை விற்றல்) விதிகளில் திருந்தம் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 12-1-1983 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நில சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

117. தண்டையார் பேட்டை கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24-1-1983 ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

118. பாடி மற்றும் கொரட்டூர் கிராமங்களின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 25-10-1982 ஆம் நாளிட்ட 974 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/19 2) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

119. வெள்ளிவாயல் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8-2-1983 ஆம் நாளிட்ட 143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

120. ஆலந்தூர் கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறையின் 3-11-1982 ஆம் நாளிட்ட 992 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1983 அக்டோபர் 24]

121. சேக்காடு கிராமத்தின் நி.அ.ட.எண். 204/18-ன் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23-3-1983 ஆம் நாளிட்ட 645 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

122. சென்னைப் பெருநகர் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 4-5-1983 ஆம் நாளிட்ட 751 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

123. வெள்ளிவாயில் கிராமத்தின் சென்னைப் பெருநகர பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 3-9-1982 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

124. 1933 ஆம் ஆண்டு சென்னை மற்றும் செங்கற்பட்டு நிலத்தடி நீர் (முறைமைப் படுத்துதல்) சட்ட முன்வடிவின் கீழ் விதிகளை அமைத்தல் குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 6-7-1983 ஆம் நாளிட்ட 981 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983 ஆம் ஆண்டு சென்னை மற்றும் செங்கற்பட்டு நிலத்தடி நீர் (முறைமைப் படுத்துதல்) சட்ட முன்வடிவின் (தமிழ்நாடு சட்ட முன் வடிவு 5/1983( 12-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

125. 1982 ஆம் ஆண்டு ஊராட்சி தணிக்கை ஆய்வாளர்கள் பணி விதிகளை வெளியிடுதல் குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 16-9-1983 ஆம் நாளிட்ட 1420 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

126. ஆஸாத் நகருக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தை வெளியிடுவது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27-9-1980 ஆம் நாளிட்ட 1266 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1983 அக்டோபர் 21

127. தலைவர் மற்றும் சில உறுப்பினர்களை நியமனம் மற்றும் மறு நியமனம் செய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 3–8–1933 ஆம் நாளிட்ட 1187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

128. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிகள் பொறியியல் மற்றும் நீர் வழங்கு நிலைய பணி விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 23–3–1983 ஆம் நாளிட்ட 395 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

129. சென்னை மாநகராட்சி அதிகாரத்திற்குட்பட்ட பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் பட்டியலை ஒப்புதல் அளிப்பது குறித்து ஊரக வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் 30–12–1982 ஆம் நாளிட்ட 1963 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வெற்றிடங்கள் (பேணிக்காத்தல் மற்றும் முறைமைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1959) 4 (3) பிரிவின் கீழ் வைக்கப் பெற்றது.]

130. சென்னையிலுள்ள ராதாகிருஷ்ணா நகருக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 88-2-1983 ஆம் நாளிட்ட 242 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

131. சென்னையிலுள்ள ஜீவா நகர்ப்பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-1-1983 ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

132. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 13-8-1982 ஆம் நாளிட்ட 802 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1983 அக்டோபர் 24]

133. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-1-1983 ஆம் நாளிட்ட 43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

134. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8-2-1983 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

135. மைலாப்பூரை சேர்ந்த ஆர். எஸ். எண். 4841/ பாகம் மற்றும் ஆர். எஸ். எண் 1426/1 பாகத்தில் உள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தால் கட்டப்பெற்ற கட்டிடத்திற்கு விலக்களிப்பது குறித்து வீட்டுவசதி மற்றும நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 28-2-1983 ஆம் நாளிட்ட 473 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

136. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 31-12-1982 ஆம் நாளிட்ட 1151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

137. சென்னைப் பெருநகர்ப்பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6-1-1983 ஆம் நாளிட்ட 44 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் தமிழ் நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

138. தமிழ்நாடு 1981 ஆம ஆண்டு பகுதி நேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்க விதிகளை வகுத்தல் குறித்து வருவாய்த் துறையின் 21-4-1983 ஆம் நாளிட்ட 730ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 11 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

139. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டுகள் விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 16-3-1983 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

140. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டுகள் மற்றும் சாராய கடைகள் ஏலத்தின் மூது நீர்வு செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 4-4-1983 ஆம் நாளிட்ட 199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

141. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு (சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் மருத்துவ செலவு ஈட்டுத்தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (பணியாளர் அமைப்பு-1) துறையின் 17-3-1983 ஆம் நாளிட்ட 415 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

142. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள், சட்டமன்ற அவைத் தலைவர்கள் (அரசு இல்லங்களில் பொருள் வசதி செய்தல்-பராமரித்தல் வசதிகளுக்கு வகை செய்தல்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து பொதுத் (பணியாளர் அமைப்பு-1) துறையின் 18-6-1983 ஆம் நாளிட்ட 961 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

143. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 16-12-1982 ஆம் நாளிட்ட 1109 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

144. சேலம் மாவட்டத்தில் கால்நடை மற்றும் தக்காளியை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 14-7-1983 ஆம் நாளிட்ட 1303 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 9 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



145. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினராக அறிவிப்பது குறித்து தொழிலாளர் துறையின் 30-7-1983 ஆம் நாளிட்ட 1822 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

146. கரும்புச் சர்க்கரையைப் பொறுத்தவரையில் தஞ்சாவூர் மாவட்டத்தை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 19-7-1983 ஆம் நாளிட்ட 1335 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

147. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய (மொத்த விற்பனை மூலம் வழங்கல்) விதிகளை தயாரித்தல் குறித்து—மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 25-6-1983 ஆம் நாளிட்ட 495 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம்ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

148. அரக்கோணம், தமிழ்நாடு இரும்பாலையில் இறக்குமதி செய்யப்பட்ட சிறுகுறிப்பு தாள்கள் மற்றும் கழிவுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களுக்கு 1-4-1977 முதல் 31-7-1981 வரை வரி விதிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-5-1983 ஆம் நாளிட்ட 482 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

149. சேலம் மாவட்டத்திலுள்ள திருவாளர்கள் வெள்ளி அம்பலம், கொங்கு பைபர் தொழியர்கள் கூட்டுறவு தொழிற்சாலை சங்கத்திற்கு 1972-73-ல் இருந்து 1978-79 வரை விதிக்கப்படும் விற்பனை வரியை குறைப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-6-1983 ஆம் நாளிட்ட 708 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

150. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணிகள் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 5-5-1983 ஆம் நாளிட்ட

758 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதி அபிவிருத்தி மற்றும் மாற்றும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

151. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 7-12-1982 ஆம் நாளிட்ட 1073 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர, நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

152. தமிழ்நாடு உப்புக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1982 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

153. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கையும் (தமிழ், ஆங்கிலம்) மற்றும் அதன் மீதான அரசின் ஆய்வுரையும் (தமிழ்) [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

151. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (தமிழ்) [தமிழ் நாடு 19 6 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

155. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

156. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் ஏழாம் ஆண்டறிக்கை [தமிழ் நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

157. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கையும், கணக்கு விவர அறிக்கையும் (ஆங்கிலம்) அது குறித்து அரசு ஆய்வுரையும் (தமிழ், ஆங்கிலம்) [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

1. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை.

2. 9-2-1983 அன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்த பிரச்சினை பற்றிய அவை உரிமைக் குழுக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள் (தமிழ்).

3. 29-4-1981 அன்றுபேரவையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்த உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுக் கூட்ட நடவடிக்கைகள் குறிப்புகள் (தமிழ்).

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25-1-1983 முதல் 15-2-1983 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கம் குறிப்பு.

5. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 24-1-1983 முதல் 28-4-1983 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

6. சில பொது நிறுவனங்களை பரிட்சார்த்தமாக பொது நிறுவனங்கள் குழுவில் சேர்ப்பது குறித்து 30-3-1983 ஆம் தேதியில் தமிழ்நாடு அரசிதழில் 30-3-1983 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை.

7. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவ்சரச் சட்டம் எண். 3/1983.)

8. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1983.)

9. 1983 ஆம் ஆண்டு சென்னை மற்றும் செங்கற்பட்டு நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1983.)

10. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 6/1983.)

11. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 7/1983.)

12. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 8/1983.)

13. 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/1983.)

14. 1983 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1983.)

15. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1983).

16. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய குழுக்கள் [தனி அலுவலர்கள் நியமனம் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1983).]

17. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1983.)

18. 1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1983.)

# உள்ளடக்கம்.

25—10—1983


பக்கங்கள்

1. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) பேரவைக்குள் உறுப்பினர்கள் கண்டன அட்டைகள் அணிவது குறித்து. 37—48

(ஆ) பேரவைக்குள் எதிர்க்கட்சிகள் வரிசையில் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது. 65—69

2. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 48—65

3. தகவல் கோரல்—

(அ) சட்டமன்ற நடவடிக்கைகளை செய்தித் துறை மூலமாக படமெடுப்பது. 70

(ஆ) அரசினர் தனித் தீர்மானத்தை அச்சிட்டுக் கொடுப்பது. 70

4. அறிவிப்புகள்—

(அ) பேரவை அலுவல் .. .. 70—72

(ஆ) டாக்டர் மு. கருணாநிதி, திரு. க. அன்பழகன், பதவி விலகல் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப் பெற்றமை குறித்து. 72

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. 72

(ஈ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983. (ஆ.இ.) 73

5. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1983. .. 72—73

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983. 73—75

(இ) இந்து சமய — அறக் கட்டளைகள் (திருத்தம்—செல்திறன்) சட்டமுன் வடிவு, 1983. 75—76

(ஈ) சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983. 76

6. அரசினர் தனித் தீர்மானம்—

இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை குறித்து 76—150
திரு. அ. ரகுமான்கான் 76,120—141
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 77—102
திரு. நா. சுந்தரராஜ் 104—120
திரு. மி. வின்சென்ட் 141—150

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 150—151

—x—

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1983, அக்டோபர் 25, செவ்வாய்க்கிழமை.

ஐப்பசி 8, ருத்ரோத்காரி— திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்''

ஒருவருடைய உள்ளம், தூய்மையாக இருத்தல், அவர் செய்யும் செயல் தூய்மையாக இருத்தல் ஆகிய இரண்டும் அவர் மேற்கொண்டுள்ள பண்பாட்டின் தூய்மை காரணமாகவே அமையும்.

### 1. ஒழுங்குப் பிரச்சினைகள்.

#### (அ) பேரவைக்குள் உறுப்பினர்கள் கண்டன அட்டைகள் அணிவது குறித்து.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒழுங்குப் பிரச்னை ஒன்றை நான் எழுப்ப விரும்புகிறேன். அவைத் தலைவரவர்களைக் கண்டிக்கின்ற சுலோகங்கள் அடங்கிய, வாசகங்களைக் கொண்ட பேட்ஜை இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் பொருத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது. இதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா? இதைப் போலவே மற்றவர்களைக் கண்டிக்கும் வகையில் உள்ள பேட்ஜ்களை இந்த வரிசையிலே இருப்பவர்கள் அணிவதற்கும் அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்ட முறையற்ற பேட்ஜ்களையும் மற்றவைகளையும் அணிவது தவறு. இது பாராளுமன்ற சம்பிரதாயமும் அல்ல. அவ்வாறு அணிவது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல என்பதை நான் அவர்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். எனவே, அவ்வாறு அணிந்து கொண்டு இங்கே வந்திருந்தால் அவைகளைக் கழற்றிவிட்டு அவை நடவடிக்கைகளிலே பங்கு கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

128—174—1

[1983 அக்டோபர் 25

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே,
நாங்கள் அணியக்கூடிய பேட்ஜ் சம்பந்தமாக நேற்றையதினமே,
நம்முடைய அருமை மாண்புமிகு உறுப்பினர்—ஆளுங்கட்சியின்
கொறடாவாக இருக்கின்ற திரு. மணிமாறன் அவர்கள் கலந்து
கொண்ட, உங்களுடைய அறையிலே நடந்த கூட்டத்திலேயே
நீங்களே இது சம்பந்தமாக எங்களிடத்திலே எடுத்துரைத்தீர்கள்.
நேற்றையதினம் அந்தச் சமயத்திலேயே நாங்களும் சொன்னோம்.
இன்றையதினமும் உங்களிடத்திலே நான் சொல்ல விரும்புகிறேன்.
இந்த பேட்ஜை அணிவதன் மூலம் தங்களையோ அல்லது இந்த
மன்றத்தையோ நாங்கள் கண்டனம் செய்வதாகவோ
அல்லது குறை சொல்வதாகவோ, தாங்களோ அல்லது
மற்ற யாருமோ நினைக்கக் கூடாது என்று நான் சொல்ல
விரும்புகிறேன். உங்களுடைய நேர்மையிலேயோ அல்லது
உங்களுடைய மற்றத் திறமைகளிலேயோ எங்களுக்கு எந்த
விதமான சந்தேகமும் கிடையாது. என்றாலும் கூட, தங்களைப்
போன்றவர்கள் சபாநாயகராக இருக்கக் கூடியவர்கள் அரசாங்க
விழாக்களிலே கலந்துகொள்ளுகின்ற சமயத்தில் எங்களை—
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைத் தாக்கக்
கூடிய நிகழ்ச்சிகளிலே தாங்கள் இருப்பது முறையா என்பதை
எடுத்துக் காட்டத்தான் இதை அணிகிறோம். அமைச்சர்கள்
அவ்வாறு பேசுவதற்கு உரிமை உண்டு, அந்த உரிமை இல்லை
என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அப்படிப்பட்ட
நிகழ்ச்சிகளில் தாங்கள் இருப்பது முறையா என்பதை எடுத்துக்
காட்டி தங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகத்தான் நாங்கள்
இந்த பேட்ஜ்களை அணிகிறோமே தவிர வேறல்ல என்பதைச்
சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் நேற்றையதினம் எடுத்துச் சொன்னதைப்
பொறுத்தும், இன்றையதினம் நீங்கள் எங்களுக்குச் சொல்லிய
ஒரு நிலையை அடுத்தும், இந்த வாசகங்களை உங்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில்தான்
நாங்கள் அணிகிறோம் என்று சொல்லி, இன்றைய தினத்தோடு
நாங்கள் இந்த பேட்ஜ் அணிவதை முடித்துக் கொள்கிறோம்.
இன்றையதினம் அணிந்துவிட்டு நாளைய தினத்திலிருந்து
அணியாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சநேரம் அணிவதற்குப்
பர்மிஷனா? அவ்வாறு கிடையாது, முறைகள் என்றால் அந்த
முறைகளைக் கடைபிடிக்கத்தான் வேண்டும். சட்டமன்றத்
திலேயும், பாராளுமன்றத்திலேயும் அப்படித்தான் நடை
முறைகள் கையாளப்படுகின்றன.

நான் ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். உறுப்பினர்
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்திருக்
கிறார்கள். பாராளுமன்றத்தில் என்ன சம்பிரதாயம் இருக்கிறது
என்பது அவர்களுக்குத் தெரியும். பாராளுமன்ற சம்பிர
தாயத்தைக் கடைப்பிடிப்பது, பாராளுமன்றத்தில் நடைமுறையில்
உள்ள நிலை, சட்டமன்றத்திற்கு உள்ள வழிமுறைகள்



1983 அக்டோபர் 25] [பேரவைத் தலைவர்]

ஆகியவைகளைப் பற்றி நான் சொல்கிறேனே தவிர வேறல்ல.
உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.
நேற்றையதினம் பத்திரிகைகளிலேயும் வந்து விட்டது. எனவே,
பத்து நாட்களுக்குப் போட்டிருந்தாலும் இதே கருத்தைத்தான்
வெளிப்படுத்தப் போகிறீர்கள். எனவே அந்த பேட்ஜ்களை
இப்பொழுதே கழற்றிவிட்டு பங்குகொள்வதுதான் சரியாக
இருக்கும்.

இன்னமும் சொல்ல வேண்டுமென்றால், இராஜ்யசபாவில்
பிலு மோடி அவர்கள் ஒருநாள் பேட்ஜ் ஒன்றை அணிந்து
கொண்டு வந்திருந்தார்கள். துணை ராஷ்டிரபதி அவர்கள்
இராஜ்யசபாவின் தலைவராக இருந்தார்கள். பிலு மோடி
அவர்கள் பேட்ஜைக் கழற்றிவிட்டுத்தான் பேச வேண்டுமென்று
அன்றைக்கு சபைத் தலைவர் கூறி, அவ்வாறு கழற்றிய பிறகு
தான் அவரைப் பேசவே விட்டார்.

ஆகவே இப்பொழுதும் நான் சொல்கிறேன், எந்தக்
கருத்தைச் சொல்ல வேண்டுமென்றாலும், அந்த பேட்ஜைக்
கழற்றிவிட்டுப் பேசலாம். பேட்ஜ் அணிந்துகொண்டு பேச
முடியாது. அவ்வாறு பேட்ஜ் அணிந்துகொண்டே பேசினால்
அவைக்குறிப்பிலே அது ஏறாது. அதற்காக என்மீது வருத்தப்
பட்டுக்கொள்ள வேண்டாம். நான் சம்பிரதாயத்தைச் சொல்லி
விட்டேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, இது பள்ளிக்
கூடமும் அல்ல; நாங்கள் மாணவர்களும் அல்ல, தாங்கள்
ஆசிரியரும் அல்ல. நாங்கள் பேட்ஜ்களைக் கழற்றப் போவ
தில்லை. தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால்
தாராளமாக எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியென்றால்
நடவடிக்கைதான் எடுக்க வேண்டும்.

* திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, அவைத்
தலைவருக்கு எதிராக பேட்ஜ் குத்துவது சரியல்லதான்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும்,
உங்களுக்கு எதிராக அல்ல, இந்தமாதிரி நடந்த நிகழ்ச்சிகளுக்
காகத்தான், அதைப்பற்றித் தங்களுடைய கவனத்தை ஈர்ப்
பதற்காகத்தான் அணிகிறோம் என்று சொல்லிவிட்டார்கள்.
நீங்கள் சொன்னதும் கரெக்ட் பொசிஷன் தான். இப்போது
நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால்
நேற்றையதினம் பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டியில் அப்பீல்
பண்ணப்பட்டிருக்கின்றது. அவ்வாறு அப்பீல் பண்ணப்பட்ட
தற்குப் பிறகு அதனை எடுத்துவிடுவதாக அவர்களும்
முடிவெடுத்திருக்கிறார்கள். இப்போதே அந்த பேட்ஜை
எடுத்துவிட்டு வந்தால்தான் பேச முடியும் என்று சொன்னால்
ப்ரெஸ்டிஜ் கொஸ்டின் வரக்கூடும். ஆகவே இதனை பிரஸ்டிஜ்
கொஸ்டினாக ஆக்கவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

[1983 அக்டோபர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேட்ஜை எடுத்துவிட்டு வந்தால்தான் பேசமுடியும் என்பது நான் சொன்னதல்ல. துணை ராஷ்டிரபதி பார்லிமென்டிலே அளித்த தீர்ப்பைத்தான் நான் சொன்னேன். நடைமுறை எப்படி இருக்கவேண்டும் என்பதற்காக அங்கே அளிக்கப்பட்ட தீர்ப்பைச் சொன்னேன். ஒரு நடைமுறை சம்பிரதாயம் அவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக அதை எடுத்துச் சொன்னேன். எனவே பிரெஸ்டிஜ் கொஸ்டின் என்ற பிரச்சினையே இங்கு இல்லை. என்னுடைய தனிப்பட்ட கௌரவம், மற்றவைகள் எல்லாம் பாதிக்கப் படுகின்ற பிரச்சினை இப்போது இல்லை. இந்தச் சபையி னுடைய பொதுவான தன்மைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக விடுக்கப்படுகின்ற வேண்டுகோள்தானே தவிர வேறல்ல.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எந்தவிதமான பேட்ஜையும் அணிந்துகொண்டு வரக்கூடாது என்பதுதான பாராளுமன்ற விதியாகும். ஆனால் இங்கே பல்வேறு பேட்ஜஸ் அணிந்துகொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் அப்ஜக்ட் செய்யவில்லை. ஏனென்றால் ஒரு பயங்கரமான நிகழ்ச்சி ஏற்பட்டு நம்முடைய தமிழர்கள் சிலோனிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை காரணமாக அந்த பேட்ஜ்கள் அணியப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த நிலையில் அங்கே ரூல்ஸ் பார்க்கக்கூடாது என்று சொல்லப் பட்டு அதை எல்லோரும் ஒத்துக்கொண்டு நடக்கின்றது. எனவே பொதுவாக ரூல்ஸ் என்று சொன்னால் எந்த பேட்ஜையும் அணிந்துகொண்டு வரக்கூடாதுதான். ஆனாலும் நேற்றைய தினம் இது ரெய்ஸ் பண்ணப்பட்டது. தாங்களும் எடுத்துவிட வேண்டும் என்று அப்பீல் பண்ணியிருக்கிறீர்கள். அவர்களும் அதனை எடுத்துவிடுவதாக முடிவெடுத்துவிட்டார்கள். ஆனால் பேட்ஜை எடுத்தால்தான் பேச முடியும் என்ற நிலைமை வந்தால் கன்ஃப்ரான்டேஷன் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து நான் சொல்வதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை இராஷ்டிரபதி அவர்கள் இட்ட ஆணையைத்தான் நான் சொன்னேன். பேட்ஜை எடுத்துவிடுவது என்று தீர்மானம் பண்ணிவிட்டார்கள் என்றால் அதைக் காலையில் எடுத்தால் என்ன, மாலையில் எடுத்தால் என்ன? எனவே இதிலே என்னுடைய பிரஸ்டிஜ் பிரச்சினை ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பிரஸ்டிஜைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியும். இந்த அவையின் பிரஸ்டிஜ் காப்பாற்றப்படவேண்டும். அதற்காகத்தான் எல்லோரும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்தார்கள். திரு. உமாநாத் அவர்களின் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். எனவே எல்லா கட்சி சார்பாகவும் விடப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் சொல்கிறேனே தவிர வேறல்ல.



1983 அக்டோபர் 25]

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, திரு. பிலுமோடி அவர்கள் அணிந்து வந்த பேட்ஜ் என்னவென்றால் சபாநாயகருக்கு எதிராகவோ, சேர்மனுக்கு எதிராகவோ அல்ல. தன்னையே ஒரு சி.ஐ.ஏ. ஏஜென்ட் என்று சொல்லிக்கொண்டு தனக்கு எதிராகவே பேட்ஜ் குத்திக் கொள்கிறேன் என்று சொல்லி குத்திக்கொண்டு வந்தார். அதாவது தன்னையே ஒரு அமெரிக்க ஏஜென்ட் என்று சொல்லிக்கொண்டு தனக்கு எதிராகவே அவ்வாறு வந்தார். பேட்ஜ் என்பதைப் பொறுத்த வரையில் யாருக்கு எதிராகவும் குத்தக்கூடாது என்பதுதான் விதி. அந்த ரூல் எல்லோருக்கும் அப்ளிகபிள்தான். ஆனால் எக்ஸப்ப்ஷன்ஸ் இன் எக்ஸ்ட்ராரார்டினரி சிச்சுவேஷனிலே வரும் போது பண்ணுகிறோம். ஆனால் இதிலே எக்ஸம்ப்ஷன் பண்ணச் சொல்லவில்லை. இதற்காக பேட்ஜ் அணியக்கூடாது என்று எல்லோரும் சேர்ந்து வேண்டுகோள் விட்டோம். அவர்களும் எடுக்கிறேன் என்று சொல்லி முடிவெடுத்துவிட்டார்கள். ஆனால் எடுத்தால்தான் பேசமுடியும் என்று சொன்னால் நிச்சயமாகக் கன்ஃபரான்டேஷன் வரும்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்திலேகூட இது பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டு, அது பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஆனால் இந்த மன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரையோ அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்தையோ வலியுறுத்துகின்ற நிலைமையில் பாட்ஜ்கள் அணியக் கூடாது என்ற மரபு பாராளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 'அவைத் தலைவர் அரசியல் கட்சிச் சர்ச்சைகளில் பங்கு பெறக்கூடாது' என்று அவைத் தலைவரையே குற்றம் சாட்டுகின்ற அளவிற்கும், அவர் பங்குபெறக்கூடாது என்று கூறுகின்ற அளவிற்கும்(குறுக்கீடு) பங்குபெறக் கூடாது என்பதே அவைத் தலைவருக்கே கட்டளையிடுகின்ற ஒரு சொற்றொடரே தவிர வேறு ஒன்றும் அல்ல.

பொதுவாகவே நாம் காப்பாற்றி வரும் மரபு அவைத் தலைவரைப் பொறுத்தவரையிலும், அவருடைய மதிப்பையும், மரியாதையையும், இந்த அவையிலே இருக்கின்ற 234 உறுப்பினர்களும் காப்பாற்றவேண்டும் என்ற மரபை நாம் கையாண்டு கொண்டு வருகிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினையில் சர்ச்சைக்கு உரியவராக—அரசோ, அமைச்சர்களோ, மற்றவர்களோ வருகின்றபோது—மாற்றுக்கட்சியினர், எதிர்க்கட்சியினர் கண்டனம் தெரிவிக்கவோ, எதிர்ப்பு தெரிவிக்கவோ பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன. இந்த அவையில் எடுத்துத் தெரிவிக்க, கண்டிக்க பல்வேறு வழிகள் இருக்கின்றன.

இந்தப் பிரச்சினை அவைத் தலைவர் தொடர்பாக இருப்பதால் இந்த அவையின் மரபைக் காப்பாற்றவேண்டியது நாம் மேற்கொள்ளவேண்டிய மரபாக இருக்கிறது. அந்த வகையிலேதான் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கேட்டுக் கொண்டார்கள், எடுத்துச் சொன்னார்கள்.

நேற்று முதல் நாளாக இருந்தது. பல்வேறு பெரியவர்கள், இந்த மன்றத்திலே பணியாற்றி மறைந்த தலைவர்களுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரவேண்டிய நிலைமையேற்பட்டதால் இந்த சர்ச்சை நேற்று எழுப்பப்படாமல், நேற்றைய தினம் அவை முடிந்தபிறகு நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவிலே இது பற்றி முடிவு செய்யப்பட்டது. ஆகவே, இது பற்றிய நிலைமையைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்து இருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு பிரச்னை வந்தபோது நேரடியாக அங்கே அவைத் தலைவர் பற்றிக் குறிப்பிடவில்லை என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். யாரும் எந்த ஒரு ஸ்லோகத்தையோ அல்லது கருத்தையோ தெரிவிக்கின்ற எந்த ஒரு பாட்ஜையும் அணியக் கூடாது. அடையாளங்கள் இருக்கலாம் என்ற வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக கொடி அடையாளமோ அல்லது காங்கிரஸ் கட்சியின் கொடி அடையாளமோ, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி அடையாளமோ அவற்றைப்போட்டுக்கொண்டு வருகிறார்கள். அதிலே கூட வாழ்க அல்லது ஒழிக என்ற ஸ்லோகங்கள் இருக்கக் கூடாது, கொடி அடையாளம்தான் இருக்கலாம். ஆளும் கட்சித் தரப்பிலே உள்ள உறுப்பினர்களுக்குக் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறோம் எந்தவிதமான ஸ்லோகமும் உள்ள பாட்ஜ் அணியக் கூடாது என்று.

திரு. பிலு மோடி அவர்கள் போட்டுக்கொண்டு இருந்த பாட்ஜை அணியக்கூடாது, அந்த வகையில் மரபு காப்பாற்றப் படவேண்டும் என்று மக்களவையிலே அவைத்தலைவர் கேட்டுக் கொண்ட உடனே, அவர் அணிந்திருந்த பாட்ஜை எடுத்து விட்டு பிறகு பேசத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போதும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்தப் பிரச்சினை வெளிவந்துவிட்டது. உங்களது நோக்கங்கள் நிறைவேறி விட்டன. இப்போது பேரவைத் தலைவர் அவர்களே கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீங்கள் அணிந்துள்ள பாட்ஜை எடுத்து விட்டு, இங்கே பங்கு கொள்வது மரபாக இருக்கும். அந்த மரபைக் காப்பாற்றும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகப் பெருந்தன்மையோடு பேரவைத் தலைவரின் அறிவுரையை ஏற்று, அந்த பாட்ஜை எடுத்து விட்டுக் கலந்து கொள்ளலாம்.





அவர்கள் பாட்ஜ் போட்டுக்கொண்டு வந்தார்கள். பிரச்சினை எழுப்பப்பட்டு விட்டது. அவர்களுடைய நோக்கம் எந்த அளவிற்கு நிறைவேற வேண்டுமோ அந்த அளவிற்கு அது நிறைவேறிவிட்டது. ஆகவே, பேரவைத் தலைவருக்கு மதிப்பு தருகின்ற வகையிலும், மரியாதை தருகின்ற வகையிலும், பெருந்தன்மை காட்டுகின்ற அளவிலும், இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு விட்ட காரணத்தால், அவர்கள் அந்த பாட்ஜை எடுத்து விட்டு இந்த மன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வது மரபாக இருக்கும். அந்த மரபு தொடர்ந்து காப்பாற்றப் படுவதற்கு வழிவகை செய்ததாக இருக்கும் என்று தங்கள் மூலமாக வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் தங்களுக்கு எந்தவிதமான களங்கமும் கற்பிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நாங்கள் இந்த முடிவு எடுக்கவில்லை. அரசு நடத்தும் விழாக்களில் தாங்களும் கலந்து கொண்டு, அமைச்சர்களும் கலந்துகொண்டு பேசுவது என்பது—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சராக இருந்தாலும்—மரபு இல்லை என்பது கனம் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். சமீபகாலமாக தங்களை வைத்துக் கொண்டு, அமைச்சர்கள் எதிர்க்கட்சியினரைத் தரக் குறைவாகப் பேசுவது என்பது மரபாக ஆகிவிட்டது. அது சரிதானா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்டவர்களைக் கண்டிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த முறையை நாங்கள் கையாண்டு இருக்கிறோமே தவிர, தங்களுக்குக் களங்கம் கற்பிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறோம். தாங்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடாது. அமைச்சர்கள் கலந்து கொள்ளும் அரசாங்கம் நடத்துகின்ற நிகழ்ச்சிகளிலும் இப்படிப் பேசக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இப்படிச் செய்து இருக்கிறோம். தாங்களும் பெருந்தன்மையோடு அதற்கு மறுப்பு வெளியிட்டு இருப்பீர்களானால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு இருக்காது. எனவேதான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று முடிவு எடுத்தோம்.

நேற்று தாங்களும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், எங்கள் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினோம். நாளைக்கு இந்த பாட்ஜை எடுத்து விடுவது என்று நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். நீங்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி நிகழாது என்று உத்தரவாதம் அளிப்பீர்களானால் இன்றைக்கே எடுத்து விடுகிறோம். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரும் உட்கார்ந்து பேசக் கூடாது. அரசு நிகழ்ச்சிகளில் இதை ஒரு விவாதமாக ஆக்குவதாக நீங்கள் சொல்வது அமைகிறது. அரசு நிகழ்ச்சிகளிலும், எல்லாக் கட்சியினரும் அழைக்கும் நிகழ்ச்சிகளிலும்

நான் கலந்துகொள்கிறேன். பல்வேறு கட்சியினர் என்னை அழைத்திருக்கிறார்கள். அழைக்காமல் கூட ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருக்கிறேன். பல்வேறு நிகழ்ச்சிகளில் திருமண நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. அந்தமாதிரி திருமண நிகழ்ச்சிகளுக்கும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் நான் போகும்போது, போகும் இடங்களில் எல்லாம் நான் சபாநாயகராக இருக்க முடியாது.

**திரு. ரா. உமாநாத் :** ஆனால் இன்விட்டேஷன் கார்டில் சபாநாயகர் என்று போடப்பட்டிருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் போகும் இடங்களில் எல்லாம் சபாநாயகராக இருந்து பணியாற்ற முடியாது; மணி அடித்து உட்கார வைக்க முடியாது. எனக்கு இருக்கிற சங்கடங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** ஆட்சேபகரமான வார்த்தைகளைச் சொல்லும்போது நீங்கள் வெளியே வந்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன். ஒரு கட்சிக் கூட்டத்திற்குப் போகிறேன். அங்கே அவர்கள் ஏதாவது சொன்னால் அதற்கெல்லாம் ஆங்காங்கே மறுப்பு சொல்கிற வேலை எனக்கு இல்லை. மறுப்புச் சொல்லவோ, ஏன் இப்படிப் பேசுகிறீர்கள் என்று கேட்கவோ எனக்கு சபாநாயகர் என்ற முறையிலே அங்கெல்லாம் அதிகாரம் இல்லை. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பேரவைக்குள் மட்டும்தான் நீங்கள் சட்டத்திற்குப் புறம்பாகப் பேசினால் அப்படிப் பேசக்கூடாது என்று சொல்வது என்னுடைய வேலை. ஆனால் போகிற இடங்களில் எல்லாம் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதை ஒருவேளை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது.

நேற்று எல்லாக் கட்சிக்காரர்களும் அலுவல் ஆய்வுக்குழுவில் வேண்டிக் கொண்டார்கள். உங்கள் உணர்வுகளையும் வெளியிட்டீர்கள். இன்னும் இந்த அவையில் நீங்கள் செய்திருப்பது என்னைப் பாதிக்காது, எனக்கு எதிராக அல்ல என்று சொல்லிவிட்டீர்கள். அதற்காக தனிப்பட்ட முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் உணர்வுகளைத் தெரிவித்துவிட்டபடியால், இதோடு அந்த அட்டைகளை நீக்கிவிட்டு சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தாங்கள் விளக்கங்கள் தந்து, வேண்டுகோள் விடுத்ததை மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏற்று, இந்த அவை மரபோடு நடைபெறுவதற்கு வழிவகை செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களும் நானும் ஏற்கனவே எங்களுடைய நிலையைத் தங்களிடம் சொல்லிவிட்டோம். மாண்புமிகு உமாநாத் அவர்களும் தாங்கள் இதை எப்படிச் சமாளிக்க வேண்டுமென்று ஆலோசனை கொடுத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே கூறியதுபோல், உங்களுக்கு எங்களுடைய உணர்வுகளைத் தெரிய வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அட்டைகளை அணிந்திருக்கிறோம். அதற்காக நாங்கள் இதை உடனே கழற்ற வேண்டும், கழற்றிக் கீழே போட வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கட்டளை அல்ல. இப்படிப்பட்ட செயல் ஒரு முன்மாதிரியாக ஆகிவிடக்கூடாது. நேற்று திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதை எல்லாம் 'கண்டிஷன்' என்றா எடுத்துக் கொண்டீர்கள்? இது கண்டிஷன் அல்ல. It is not a condition. It is a request. I am making it perfect. எல்லாக் கட்சிக்காரர்களுமே கேட்டுக்கொண்டார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போதும் எல்லாக் கட்சியினரையும் இதுபற்றி கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சபாநாயகர் என்ற முறையில் நீங்கள் கேட்டுக்கொண்டாலும், It is a condition-precondition,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ, நோ. திரு. உமாநாத், நீங்கள் விளக்கம் சொல்லுங்கள்.

(முற்பகல் 9—20)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்போதும் நான் சொல்கிறேன். நாங்கள் கழட்டிவிட்டுத்தான் பேச வேண்டும், அப்போதுதான் அனுமதிக்கப்படுவோம் என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படித்தான் சொன்னார், துணை ராஷ்டிரபதி டெல்லியிலே என்று சொன்னேன் நீங்கள் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். நான் திரும்பத் திரும்ப சொல்கிறேன், நாடாளுமன்றத்தில்....

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நீங்கள் சொன்னால் போதாது. அதை நாங்கள் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றே நான் அதை எடுத்துக் காட்டினேன். இப்போதும் எடுத்துக் காட்டுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல இன்றையதினம் வரையிலும் இந்த 'பேட்ஜ்' அணிவது என்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். மேற்கொண்டு முடிவுகளை எடுக்கவேண்டியது உங்களைச் சார்ந்தது. நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் நாங்கள் அதை எதிர்நோக்கி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னை ஒரு முடிவெடுக்கும் நிலைக்குத் துரத்தாதீர்கள்.

THIRU V. KRISHNAMOORTHI : What is there? After all the sergeant is going to remove us. Let him come. We are not bothered about it.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே தலையிட்டபோது ஒரு கன்டிஷனாக – அதை எடுத்தால்தான் பேசவே விடுவேன் என்று அறிவித்தது அப்படித்தான் இருந்தது. ஆனால் இப்போது இரண்டாவது சொல்லியபோது 'பிரி கன்டிஷன்' இல்லை. அப்பீல் பண்ணுகிறேன், நீங்கள் காட்ட வேண்டிய உங்கள் எதிர்ப்பைக் காட்டியாகிவிட்டது. ஆகவே 'ரிக்வஸ்ட்' பண்ணுகிறேன், 'அப்பீல்' பண்ணுகிறேன் என்று நீங்கள் கூறி இருப்பதனாலே, நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது 'பிரி கன்டிஷனாக' இருந்தால் 'பிரஸ்டீஜ்' கொஸ்சின் வரும். ஆனால் அவர் 'எம்ஃபாட்டிக்'காக கன்டிஷன் இல்லை. 'பிரி–கன்டிஷன்' வைக்கவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லி 'ரிக்வஸ்ட்' பண்ணுகிறேன், 'அப்பீல்' பண்ணுகிறேன் என்று சொல்கிறபோது, ஒரு பார்ட்டி என்ன முடிவெடுத்தாலும் அதை மறுபரிசீலனை செய்யும் பொறுப்பு இருக்கிறது.

எனவே மாண்புமிகு தலைவர் அவர்கள் அப்பீல் பண்ணியதற்குப் பிறகு, 'ரிக்வஸ்ட்' பண்ணியதற்குப் பிறகு, 'பிரி–கன்டிஷன்' இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, இதிலே 'பிரஸ்டிஜ்' இன்வால்வ் ஆகவில்லை என்று நினைக்கிறேன். மேலும் நாம் சபாநாயகரிடம் அஸ்ஸூரன்ஸ் எதுவும் கேட்க முடியாது. அப்படிக் கேட்பதும் சரியல்ல. சேம்பரில் கேட்பது வேறு. எனவே இந்த அப்பீலையும், ரிக்வஸ்டையும் ஏற்றுக் கொண்டு, எங்களுடைய அப்பீலையும் ஏற்றுக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் தனது முடிவை மறுபரிசீலனை செய்து இந்த பேட்ஜுகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, you have just now stated that it was not a condition for them to function unless they remove the badges. You said it is a request and I am sure my Esteemed Friends, the D.M.K. Leader, Deputy Leader and others will certainly realise the importance of keeping the good tradition in Parliament and Legislature and I would earnestly appeal to them to remove the badges and accept your suggestion that it should not be worn. Thank you.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே இப்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையிலே அவைத் தலைவர் பதவிக்குரிய மரியாதைக்கு எந்தவிதமான பங்கமும் வரக்கூடாது என்பதை இந்தச் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய எல்லா தரப்பினரும் ஏற்றுக் கொள்வார்கள்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அவர்கள் அதை வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள், அவைத் தலைவர் அவர்களுக்கு எதிராக நாங்கள் செய்யவில்லை என்று. எங்கள் உணர்வினை வெளிப்படுத்துவதற்காகத்தான் இதை நாங்கள் செய்தோம் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவைத் தலைவர் அவர்களும் இந்தப் பிரச்சினையிலே அங்கே டெல்லி நாடாளுமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியினைச் சுட்டிக்காட்டி, அங்கே என்ன தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்லி, அதை இங்கே பின்பற்றினால் நலம் என்றும் அதை வற்புறுத்தவில்லை என்றும் சொல்லி இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை சுமுகமாக முடிப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்த நிலையை ஏற்றுக் கொண்டு, அவர்களும் இதிலே ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டு, அவைத் தலைவர் மரியாதையைப் பாதுகாப்பது எல்லோருடைய பொறுப்பு என்பதை வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஆரம்பத்திலே ஒரு நிலை தென்பட்டாலும், இப்போது இது சம்பந்தமாக ஒரு பிரஸ்டிஜ் என்கிற நிலை மாறி, அவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய வேண்டுகோளாக இன்றைய தினம் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு வேண்டுகோள் என்ற முறையிலே வந்திருக்கின்ற நேரத்திலே அவர்கள் எந்த உணர்வுகளைக் காட்டவேண்டும் என்று நின்றார்களோ அந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டு, முடிந்திருக்கின்ற இந்த நிலையில் இந்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்யவேண்டும். இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாக் கட்சித் தோழர்களும் பேட்ஜ் அணிந்து வரவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். இந்தச் சபையைப் பொறுத்த அளவிலே நல்ல ஆரோக்கியமான நிலையிலே இதை நடத்தவேண்டும் என்று நாம் ஒரு கடமையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வேண்டுகோளாக தந்திருக்கின்ற அந்த வேண்டுகோளை மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஏற்றுக்கொண்டு பேட்ஜுகளைக் கழற்றிவிட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் எதற்காக இந்த பேட்ஜுகளை அணிந்தோம் என்பதற்கு உண்டான — மன்றத்தினுடைய, உங்களுடைய கவனத்தைக்

கவரவேண்டும் என்பதற்கான — காரணங்களை எடுத்துச் சொன்னோம். உங்களுடைய கவனம் ஈர்க்கப்பட்டதற்குப் பிறகு பொதுக் கூட்டங்களிலே நான் கலந்து கொள்கிறபோது ஸ்பீக்கராக கலந்து கொள்ளவில்லை என்றும் மற்றவர்கள் பேசுகின்ற பேச்சுக்களுக்கு நான் எப்படி பொறுப்பாளியாக முடியும் என்கிற முறையிலேயும் தாங்கள் விளக்கம் அளித்ததற்குப் பிறகு இந்த மன்றத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் இதைச் சுமுகமான முறையிலே முடிக்கவேண்டும் என்ற ஆலோசனை கூறியதற்கு ஒப்ப இந்த மன்றத்தினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றுகின்ற முறையில் நாங்கள் எங்களுடைய பேட்ஜுகளை எடுத்துவிட்டு இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளில் கலந்து கொள்கிறோம் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்

*வினா எண். 1—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் இயங்குகின்ற யூனிட்டுகள் முழு அளவு மின்சாரத்தைத் தருகின்றனவா ?

(ஆ) இல்லையெனில் முழுத்திறனையும் பெற எடுக்கப்படும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) புதியதாக துவக்கப்பட்ட அனல் மின் உற்பத்தி நிலையங்களைப் பொறுத்த வரை, அவற்றின் தொடக்ககால ஆண்டுகளில், மின் உற்பத்தி எவ்வளவு இருக்க வேண்டும் என மத்திய மின் அதிகாரமன்றம் (Central Electricity Authority) வரையறை செய்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்திப் பிரிவுகளும், பெரும்பாலும் மத்திய மின் அதிகார மன்றம் வரையறை செய்துள்ள அளவைக் காட்டிலும் அதிகமாகவே உற்பத்தி செய்துள்ளன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே முழு அளவிலே மின்சாரம் கிடைப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலே தெரிவித்தார்கள். ஆனால் பல்வேறு நேரங்களிலே நாம் அறிகின்றபோது தூத்துக்குடி அனல்



மின் நிலையம் இயங்குவதற்குத் தேவையான நிலக்கரியில் தட்டுப்பாடு இருப்பதாக பல்வேறு நேரங்களிலே பத்திரிகையிலே அறிக்கைகளாக வந்திருக்கின்றன. ஆகவே தூத்துக்குடி அனல் மின் நிலையம் எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் இயங்குகின்ற வகையில் தேவையான நிலக்கரி ஸ்டாக் செய்யப் பட்டுள்ளதா ? இருக்கின்ற நிலக்கரி எத்தனை மாதங்களுக்குப் போதும் ? இருக்கின்ற ஸ்டாக் காணாது என்றால், அதற்காக அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு தேவைப்பட்ட நிலக்கரியை வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களில் உள்ள நிலக்கரி சுரங்கங்களிலிருந்து ஹால்டியா துறைமுகம் வழியாக இன்று நாம் தூத்துக்குடியில் பெற்றுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய இன்றைய தேவை, 2,20,000 டன் நிலக்கரி. அதற்கு எதிராக நாம் சுமார் 1,50,000 டன் வரையிலும் இன்றைக்குப் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். நிலக்கரி பற்றாக்குறை காரணமாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் உற்பத்தி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக தமிழக அரசு இன்றைக்கு ஒரு நடவடிக்கை எடுக்க முன்வந்திருக்கிறது. கையிருப்பு, பஃபர் ஸ்டாக் என்ற வகையில் வைத்துக்கொள்ள ஐந்து இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தியுள்ளது தொடர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க மீண்டும் மீண்டும் வற்புறுத்தும்.

(முற்பகல் 9.30)

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தற்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகா வாட் அளவிற்கு மூன்று நிலையங்களில் செயல்படுகிறது. தமிழகத்தின் மின்சாரத் தேவையைக் கருதி கூடுதலாக யூனிட்டுகள் ஆரம்பிப்பதற்காக, அதை விரிவுபடுத்துவதற்காக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில்மேலும் அதிக யூனிட்கள் செயல்படுகிற விதத்தில் இன்னும் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை விரிவாக்குகிற வகையில் தமிழக அரசு மத்திய அரசுக்கு 420 மெகா வாட் திறன் கொண்ட அளவிற்கு விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டு மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம். இதில், அண்மையில் கடந்த 3-ம் தேதி நம்பிக்கையூட்டுகிற வகையில் ஒரு கடிதம் மத்திய அரசிடமிருந்து வந்திருக்கிறது. குறிப்பாக 'கோல் லிங்கேஜ்' என்ற வகையில் கலிங்கா நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரி ஒதுக்குவதற்கு மத்திய அரசு

அண்மையில் கடந்த 3-ம் தேதி ஒப்புதல் அளித்து மாநில அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதியையும் வழங்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு —ஏறத்தாழ 278 கோடி ரூபாயாகும் இந்த விரிவாக்கத் திட்டத்திற்கு, எக்ஸ்பான்ஷன் ஸ்கீமிற்கு.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மத்தியக் குழு இந்த நிலையத்தில் எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆலோசனை சொல்லியது? இன்று சராசரியாக எவ்வளவு அந்த மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது? இன்றுள்ள மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக அந்த மின்சார உற்பத்தி நிலையத்தினை மேலும் விரிவாக்குவதற்காக மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த வேலை எப்போது துவக்கப்படும்? நடப்பாண்டிலாவது அந்த உற்பத்தியை வேகப்படுத்த, செயல்திறனை அதிகப்படுத்துவதற்கான விரைவுத் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா அல்லது வாரியத்தினிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, நடப்பிலிருக்கிற அந்த யூனிட்களில் மொத்தமாக இன்று உற்பத்தியாவது மன நிறைவு அளிக்கிற அளவிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதிகப்படுத்துவதற்கு, எக்ஸ்பான்ஷனுக்கு நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதுவும் அவர்கள் அனுமதி கொடுத்த பிறகு (குறுக்கீடு)—முதல் பிரிவில் 210 மெகா வாட், இரண்டாவது யூனிட்டில் 210 மெகா வாட் என்ற வகையில் 420 மெகா வாட் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, ஐந்து இலட்சம் டன் நிலக்கரி எக்ஸ்ட்ராவாக வேண்டுமென்று மத்திய அரசை கேட்டுக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஸ்கீமைப் பொறுத்தவரையில் சாங்க்ஷனும் ஏதோ ஒரு இடத்தினைக் குறிப்பிட்டு அங்கிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். ஏற்கனவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த செஷனில் பூராவும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். ஒதுக்கப்பட்ட நிலக்கரி கூட இங்கே நமக்குக் கிடைப்பதில்லை, ஆகவே நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டே வருகிறது என்று சொல்லி அன்று வாகன்ஸ் இல்லை என்று சொன்னார்கள். ஆக நிலக்கரி கொடுக்கிற இடத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிலக்கரியே கிடைக்காமல் நெருக்கடி ஏற்பட்டிருந்த நிலை மாறி விட்டதா? மத்திய அரசு ஒதுக்கக் கூடிய அந்த நிலக்கரி இப்போது கரெக்ட்டாக கிடைத்து வருகிறதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டது கிடைக்கவில்லை என்பதுதான் நிலைமை. ஒதுக்கப்பட்டது கிடைப்பதற்காகத்தான் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட நிலக்கரி கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அங்கே இயங்கும் அந்த மூன்று ப்ளான்ட்டுகளும் சரியானபடி உற்பத்தி செய்யாததன் காரணமாக கடந்த காலத்தில் எரி எண்ணெய் மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்த எரி எண்ணெய் மூலம் எவ்வளவு செலவாகியிருக்கிறது? நிலக்கரி கிடைக்காத காலத்தில் அந்த எரி எண்ணெய் தொடர்ந்து உபயோகப்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரிக்குப் பதிலாக மாற்றுப் பொருளை உபயோகப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்கிறார்கள், அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Tiru K.S.G HAJA SHAREEF:** Sir, they have fixed the conveyor belt system for transferring coal to the yard. Has it been functioning well. What exactly is the difficulty in not getting required quantity. Is it wagon shortage, is it ship shortage or is it shortage of coal?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி மன நிறைவு அளிக்கின்ற வகையிலே உற்பத்தி செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மழை மன நிறைவு அளிக்கின்ற வகையிலே பெய்து கொண்டிருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மன நிறைவு அளிக்கின்ற வகையிலே மின்சாரத்தை விநியோகம் செய்ய முடியவில்லையே, அதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் பற்றியது. விவசாயிகளுக்கு மின்சாரம் அளிக்கப்படுவதைப் பற்றி தயவுசெய்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் மூலமாகக் கிடைக்கும் மின்சாரத்தை எந்தெந்தப் பகுதிகள் அனுபவிக்க இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா? எந்தெந்த இடங்களுக்கு அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோதையார் மின் திட்டம்.

*வினா எண் 2—திரு. டி. மணி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோதையார் மின் திட்டத்திற்கு குற்றியாற்றிலிருந்து தண்ணீர் பம்பு செய்ய வேண்டிய இயந்திரம் பழுதடைந்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?

(ஆ) இந்த இயந்திரத்தைப் பழுதுபார்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) 1981 ஆம் ஆண்டு சூலை முதல் 13-3-1983 வரை பழுதுபட்டிருந்தது.

(ஆ) இயந்திரம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் செயல் பட்டு வருகிறது.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோதையாறு மின் திட்டத்திலே 1980 லே அந்த இயந்திரம் பழுதடைந்தது. அது எப்போது பழுதுபார்க்கப்பட்டு, முழு அளவில் தண்ணீர் இறைக்க வாய்ப்பிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இயந்திரங்கள் அங்கே இருக்கின்றன. ஒரு இயந்திரம் பழுதுபட்டு விட்டால்கூட, பிறிதொரு இயந்திரம் வாயிலாக உற்பத்தி பாதிக்கப்படாமல், முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, பழுது ஏற்பட்டதால் மின் உற்பத்திக்கு எந்தவிதமான சிரமமும் ஏற்படவில்லை; எந்தவிதமான தடையும் ஏற்படவில்லை.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோதையாறு மின் திட்டத்தில் இயந்திரம் பழுதடைந்தது சம்பந்தமாக, ஏற்கனவே நீண்ட காலத்திற்கு முன்பாக, அதாவது 1980–ல் என்னால் போடப்பட்ட கேள்வி. ஆகவே. இந்த இயந்திரம் பழுது அடைந்ததினால், அங்கு உற்பத்தி தடைபட்டது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் கர்க தகவல் முறையானது அல்ல என்...



இந்தத் தடை நீண்டகாலமாக இருந்து வருகின்றது. துரிதமாக அந்த இயந்திரம் வேலை செய்யக்கூடிய அளவுக்கு, அதன் மூலம் மின்சாரம் பெற்று, மக்கள் நல்ல பயன் பெறக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். இனிமேலாவது துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

சூரிய வெளிச்சத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கான சோதனை.

*வினா எண்3— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய வெளிச்சத்தில் இருந்து மின்சாரம் பெறும் சோதனையை மின்சார வாரியம் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) சூரிய ஒளியில் இயங்கும் கிட்டத்தட்ட 1/3 குதிரைத் திறனுடைய நீரிறைக்கும் பம்பு ஒன்றினை செய்முறை நோக்கத்திற்காக (பைலட் பிராஜக்ட் என்ற வகையில்) தமிழ் நாடு மின் வாரியம் நிறுவியுள்ளது.

(முற்பகல் 9.40)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைப் பெறும் திட்டத்தில் பைலட் ஸ்கீமாக ஒரு முறை வாரியத்தின் மூலமாக நிறுவப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஆராய்ச்சிகளை மின்துறை வாரியமோ, மைய அரசின் துறைகளோ மட்டுமே தற்போது செய்து வருகின்ற நிலையை மாற்றி, தனிப்பட்ட நபர்களோ, அல்லது நிறுவனங்களோ இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு முன் வருவார்களானால். அதைப் பற்றி வாரியத்திற்குத் தெரிவித்தால், அவர்களை ஊக்குவித்து அந்தப் பணிகளை மேற்கொள்ள வாரியம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

[1983 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் வாயிலாக, சூரிய ஒளியில் இயங்கும் நீரிறைக்கும் பம்பு ஒன்றினை புது டெல்லியில் உள்ள கிராமப்புற மின்வசதிக் கழகத்தின் உதவியுடன் சாயிபாபாத்தில் (உத்திரப் பிரதேசம்) உள்ள சென்ட்ரல் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து சுமார் 35,000 ரூபாய் மதிப்புள்ள இந்தக் கருவியினை குறைவான விலைக்கு வாங்கி நிறுவப்பட்டிருக்கிறது. இந்த நீரிறைப்பு அமைப்பு கிராமப்புறச் சூழ்நிலைக்கு உகந்தவாறு இருப்பதால் சென்னையிலிருந்து 27 கி.மீ. தூரத்தில் உள்ள உத்தண்டி என்னும் கிராமத்தில், ஒரு முயற்சி நோக்குடன் நிறுவப்பட்டுள்ளது. இந்த நீரிறைப்பு அமைப்பில் 300 வாட் உச்ச மின் திறன் கொண்ட ஒளி அழுத்த மின் கல அடுக்கும், நேர் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் பம்ப் செட்டும் உள்ளன. இந்த நீரிறைப்பு இயந்திரம் நல்ல சூரிய வெளிச்சத்தில் 8 மணி நேரம் தொடர்ந்து இயங்கினால் 5 மீட்டர் ஆழமுள்ள கிணற்றிலிருந்து சுமார் 35,000 லிட்டர் தண்ணீர் இறைக்கும். இந்த இயந்திரம் நல்ல முறையில் திருப்திகரமாக செயல்பட்டு வருகிறது.

அது மட்டும் அல்லாமல், இந்தத் திட்டத்தை விரிவாக்க வேண்டும், முழுமைபடுத்த வேண்டும் என்பதற்காகத் தொலை நோக்கோடு, சூரிய ஒளியைப் பயன்படுத்தி பல்வேறு சாதனங்களை இயக்க வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மாநில அரசும், மைய அரசும் ஆகிய இரண்டு அரசுகளும் சேர்ந்து மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 8 இடங்களில் குறிப்பாக டையரி இன்டஸ்ட்ரீஸ் துறையிலும், (பால்வளத் துறையிலும்) அதேபோல டெக்ஸ்டைல்ஸ் துறையிலும் இதனைப் பயன்படுத்த நிறுவனங்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஈரோடு பால்வள நிறுவனம், மதுரை பால்வள நிறுவனம், விழுப்புரம் பால் குளிரூட்டும் மையம், சங்கரான்டா பாளையம் பால் குளிருட்டும் நிலையம், ஆம்பூர், பெரியார், தர்மபுரி பால் குளிரூட்டும் நிலையங்கள், மாதவரம் பால்வள நிலையம் ஆகிய 8 இடங்களில் 48 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அத்தோடு ஈரோட்டில் இருக்கிற தமிழ்நாடு நூற்பாலையிலும் சூரிய ஒளி மூலமாக மின்சாரத்தைப் பெற்று தருவதற்கு மாநில அரசு மைய அரசைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது எபாத மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மலைவாழ் பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொண்டு போவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, மாற்று சக்தியாக (alternative energy) நேரிடையாக கிடைக்கின்ற, இந்தச் சூரிய ஒளியில் இருந்து எடுக்கப்படுகின்ற மின்சாரத்தை, மலைப் பகுதிகளுக்குக் கொண்டு போக, மின்சார வாரியம் ஏதாவது சிறப்புத் திட்டத்தை வைத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.



1983 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் இதில் நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்வதைவிட, தமிழக அரசே இதில் முனைப்பாக இருந்து காரியங்களைச் செய்வதற்காக குறிப்பாக நீலகிரி மலைப் பகுதிகள், கல்வராயன் மலைப் பகுதிகள் கொல்லிமலை மலைப் பகுதிகள் போன்ற இடங்களுக்கு, சூரிய ஒளியினுடைய வாயிலாக மின்சாரத்தைத் தட்டு தடங்கல் இல்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக மத்திய அரசுக்கு நாங்கள் எழுதியிருக்கிறோம், அதன் பணிகளைத் துரிதப் படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகி வருகின்ற மின்சாரத் தேவையை சந்திக்கின்ற முறையிலே நம்முடைய நாட்டிலே, மிக எளிதாக சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை எடுக்கின்ற முயற்சியில், சில நாட்களுக்கு முன்னாலே ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த சில பிரதிநிதிகள் வந்து நம்முடைய மின்சாரத்துறை அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிகிறதே, அது வெற்றி அடைந்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை எடுக்கும் பரிசோதனை ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதன் மூலம் கிணற்றிலிருந்து நீர் இறைப்பதற்கு அது பயன் படுத்தப்பட்டதாகவும், மேலும் 8 இடங்களில் பால்வள கூட்டுறவுத் தொழிலில் அதைப் பெரிதும் பயன்படுத்தக்கூடியதாகவும் இருப்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நிலக்கரி, தண்ணீர் போன்றவற்றிலிருந்து தற்போது தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கும், இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கும் எவ்வளவு செலவாகிறது? எதற்குச் செலவு அதிகமாக ஆகிறது என்கிற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஐயம் நியாயமான ஐயம், எனவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது. அந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பது பற்றிய பிரச்னை. கடல் நீர் பிரச்னை என்றால் தனிக் கேள்வி போடவும்.

முந்திரி பயிரிடப்படும் மாவட்டங்கள்.

*வினா எண் 4—திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முந்திரி பயிரிடப் பெறுகின்ற மாவட்டங்கள் யாவை?

(ஆ) அரசின் கட்டுப்பாட்டில் முந்திரித் தொழிற்சாலை ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எங்கு அமைந்துள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) வனத்துறை மற்றும் வனத்தோட்டக் கழகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் திருச்சி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்படுகிறது.

(ஆ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முந்திரி பயிரிடுவது குறைந்துகொண்டே வருகிறது. மற்ற மாவட்டங்களில் முந்திரி தீவிர சாகுபடித் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா? அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் முந்திரி பயிரிட புதிய திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, எங்கெங்கு வாய்ப்புகள் உள்ளனவோ அந்த இடங்களில் முந்திரி பயிரிடுகிற திட்டம் ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் உலக வங்கியினுடைய உதவியோடு தோட்டக்கலைத் துறையும் நம்முடைய தமிழ்நாடு வனத் தோட்டக் கழகமும் ரூபாய் 3,950.46 லட்சத்தில் 49,500 ஹெக்டேர் பரப்பளவில் 5 ஆண்டுக் காலத்தில் முந்திரி மரம் வளர்க்கும் திட்டம் ஒன்றைத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றனவா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, முந்திரிப் பழத்திலிருந்து பென்னி என்று சொல்லப்படுகிற சாராயம் தயாரிக்கப்படுகின்ற தொழிற்சாலையை அரசு நிறுவ இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்குப் பதிலளிக்க இயலும்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது தென் ஆற்காடு மாவட்டத்திலே பயிரிடுவது பற்றிச் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமான முந்திரி பயிர் செய்ய நில வளம் இருந்தாலும் அதிலே அரசு தீவிரமாக கவனம் செலுத்தியிருந்தாலும், அரசாங்கத்தின் மூலமாக ஒரு தொழிற்சாலையை உண்டாக்காமல் இருக்கக்கூடிய நிலைமையைத் தனியார்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதானா? அதிக நிலவளமும் அதிக நிலப்பரப்பும் கொண்டிருக்கின்ற அந்த மாவட்டத்தில் அதிகமான அளவுக்கு முந்திரிச் செடிகளை உண்டாக்கவும் அங்கே தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி முந்திரிப் பயிரைப் பற்றியது. அதற்கான திட்டங்களைப் பற்றியது. அதற்கு நான் பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி அதன் தொடர்பான தொழிற்சாலை பற்றியது. அதற்குத் தனியாக கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தர இயலும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் முந்திரி பயிர் செய்வதற்காக மத்திய அரசாங்கம் 16.92 லட்ச ரூபாய் மானியமாக இந்த மாநிலத்திற்குக் கொடுத்திருப்பதாகவும் அதிலே 2.69 லட்சம் ரூபாய் பயன்படுத்தப்பட்டதாகவும் ரூ. 14.23 லட்சம் பயன்படுத்தப்படவில்லை என்றும் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே 1981—82 ஆம் ஆண்டிற்குச் சம்பந்தப்பட்டது— குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையிலும் 14.23 லட்ச ரூபாய் பயன்படுத்தப்படவில்லையே, அதற்குக் காரணம் என்ன? மாநில அரசு கேட்கவில்லையா? அல்லது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குக் கொடுப்பதாகச் சொன்னதைக் கொடுக்கவில்லையா? அதைக் கொடுக்கத் தவறிவிட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு அறிக்கை யிலே சொல்லப்பட்ட தகவல்களைக் குறிப்பிட்டுக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை மத்திய அரசால் அது தரப்பட்டது என்ற விவரமெல்லாம் இப்போது என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் அப்படி வாங்காததற்கு அல்லது மத்திய அரசு தராததற்கு ஏதாவது அடிப்படைக் காரணம் இருக்கிறதா என்பதை அறிந்து சொல்ல முடியும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, முந்திரி பயிரிட உலக வங்கியிலிருந்து கடன் பெறப்போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பேருந்துகள் விடுவதற்கு உலக வங்கியிலிருந்து கடன் வாங்குகிறபோது பேருந்து கட்டணத்தைக் கூட உயர்த்த வேண்டுமென்ற ஆலோசனை முதற்கொண்டு உலக வங்கி கூறுகிறதே, அப்படியிருக்கும்போது முந்திரிப் பயிர் கடனுக்கு ஏதாவது நிபந்தனைகள் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, முந்திரிப் பயிரை வளர்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற திட்டங்களைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. உலக வங்கியோடு இந்தத் திட்டங்களைப் பற்றிய ஒப்பந்தங்கள் முடிவடைகிற நிலையிலே அவர்கள் என்ன என்ன நிபந்தனைகள் போடுகிறார்கள் என்பதெல்லாம் தெரியும். இருந்தாலும் முந்திரிப் பயிருக்கு அளிக்கப்படுகிற உதவி என்பது தொழில் வளர்ச்சிக்காக வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்காக அளிக்கப்படுகிற உதவியாகத்தான் இருக்கும்.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: தலைவர் அவர்களே, முந்திரி அதிகமாக சாகுபடி செய்யப்படுகிற திருச்சி மாவட்டத்திலே குறிப்பாக தரமான முந்திரி பயிர் செய்யப்படுகின்ற ஆண்டி மடம், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் முந்திரித் தொழிற் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? உள்ளது என்றால் அது குறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

வடாற்காடு, சேலம், தருமபுரி பகுதிகளுக்கான தனி வானொலி நிலையம்.

*வினா எண் 5—திரு. பெ. சு. திருவேங்கடம்: மற்றும் திரு. சி. கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, சேலம், தருமபுரி பகுதிக்கு தனி ரேடியோ நிலையம் அமைக்க மாநில அரசு, மத்திய அரசை கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு, சேலம், தருமபுரி பகுதியிலுள்ள மக்கள் பயன்படக் கூடிய அளவில் வானொலி நிலையம் அமைக்க வேண்டுமென கோரிக்கையை 3-7-82-ல் புதுடெல்லியில் நடைபெற்ற செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில், இம்மாநில செய்தித் துறை அமைச்சரால் வலியுறுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடத் திலே வற்புறுத்தியதற்குப் பிறகு மத்திய அரசு அளித்த பதில் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் இருந்த மத்திய செய்தி ஒலி பரப்புத்துறை அமைச்சர் அவர்கள் 31–1–1983 அன்று எழுதி யுள்ள கடிதத்தில் இது குறித்து பரிசீலிப்பதாக தெரிவித்து இருக் கிறார்கள். இப்போது பொறுப்பு ஏற்றுக் கொண்டு இருக்கும் அமைச்சருக்கும் மீண்டும் அதைப்பற்றி நாம் வலியுறுத்தி தெரிவித்து இருக்கிறோம்.

திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே அப்படி ரேடியோ நிலையம் அமைக்கின்றபோது எந்த இடத்திலே அமைப்பது என்பதை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்குச் சொல்லியுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதிலே ஒன்று ஜவ்வாது மலை ஏலகிரிமலை பகுதியில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக தமிழ் நாட்டினுடைய ஒரு பகுதி வட ஆற்காடு மாவட்டத்தில் தொடங்கி சேலம் வரையில் நம்முடைய ஒலிபரப்பு நிலையத்தினுடைய வாய்ப்புக்களைப் பெறாமல் அந்த மக்கள் நீண்ட காலமாக பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்போது அவர்கள் ஏதாவது செய்திகள் வானொலி மூலம் கேட்க வேண்டுமென்றால் பெங்களூர் ஸ்டேஷனைத்தான் வைக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டி யிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசு அதைக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்ட பிறகு இந்த 3,4 மாவட்டங்களில் மையமாக, ஒரு இடமாகப் பார்த்து அதை வைப்பதுபற்றி அரசு அவர்களுக்குப் பரிந்துரைக்கும்.

வடாற்காடு மாவட்டத்தில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 6—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் சந்தன ஆயில் தொழிற்சாலை அமைக்க இடம் பார்க்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி தாலுக்காவில் உள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் சந்தன எண்ணெய் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் தெக்குப்பட்டு கிராமத்தில் பணிகள் ஆரம்பித்து நடைபெற்று வருவதாக அறிவித்தார்கள். அதை அமைப்பதற்கு எந்த எந்த இடங்கள் எத்தனை இடங்கள் பார்க்கப்பட்டன? எந்த அடிப்படையில் அந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூரை ஒட்டி இருக்கின்ற சுற்றுப் பகுதியில் இதற்காக இடம் பார்வையிடப்பட்டது. இந்த எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது தகுதியான நீர் ஆகும். அப்படி தகுதியான குடிநீர் கிடைக்கிற இடமாகப் பார்க்க முயற்சிகள் செய்து பல பரிசோதனைகள் செய்ததற்குப் பிறகு, இந்த தெக்குப்பட்டு கிராமம் அதற்கு சரியான இடம் என்று அவர்கள் சொன்னதற்குப் பிறகு, அந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் இரண்டு. என்னுடைய தொகுதியிலே சந்தனம் விளைவதாக இருந்தாலும் அடுத்த தொகுதியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக, என்னுடைய தொகுதியிலே ஒரு இடத்திலும், தெக்குப்பட்டு என்ற இடத்திலும் துவக்குவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் நோக்கத்தோடு என்னுடைய தொகுதியில் ஆரம்பிக்கப்படவில்லையென்று கருதுகிறேன், அது ஆரம்பிக்கப் பட்டதால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியிலே மாத்திரம் சந்தன மரங்கள் விளையவில்லை என்பதும் தமிழகத்தினுடைய பல பகுதிகளிலேயும் சந்தன மரங்கள் இருக்கின்றன என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியைப் பற்றி நம்முடைய உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அவருடைய பகுதியிலேயும் சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆகவே, எந்தத் தொகுதியிலே மரம் வளர்கிறது, எந்தத் தொகுதியிலே சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிப்பது என்பது பிரச்னை அல்ல. எந்த இடத்திலே அதற்கான அடிப்படை வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் இப்பொழுது இந்தத் திட்டம் அந்த இடத்திலே ஆரம்பிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அது எந்தத் தொகுதியிலே வருகிறது என்று கூட அல்ல. வாணியம்பாடி தாலுகாவில் உள்ள தெக்குப்பட்டு என்றுதான் சொன்னேன். ஆகவே, அது அந்தத் தொகுதிக்கு மட்டும் சொந்தமானது அல்ல; தமிழ் நாட்டிற்கே சொந்தமானது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் கொஞ்சம் விவரமாகவும் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

வனத்துறை அலுவலர்களுக்கு வயர்லெஸ் கருவி வழங்கும் திட்டம்.

*வினா எண் 7—திரு. சி. சிவப்பிரகாசம், திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனக்காடுகளில் நடைபெறும் திருட்டைத் தடுக்க வனத்துறை அலுவலர்களுக்கு வயர்லெஸ் கருவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; (அ) ஆம்.

(ஆ) இது பற்றிய ஆய்வு முடிந்ததும் விரைவில் செயல்படுத்தப்படும்

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை அலுவலர்களால் பயன்படுத்தப்படும் ஜீப், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களுக்கும் இந்த வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

[1983 அக்டோபர் 25

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மிக விலை உயர்ந்த மரங்கள் வளர்கின்ற
வளர்க்கப்படுகின்ற பகுதிகளிலும் குறிப்பாக கடத்தலுக்கு
வாய்ப்பிருக்கிற, மற்ற மாநிலங்களுடைய எல்லை ஓரங்களிலும்,
இப்படிப்பட்ட வயர்லெஸ் சாதனங்கள் பொருத்தப்பட்ட
வாகனங்களைப் பயன்படுத்துவதைப் பற்றி அரசு பரிசீலித்துக்
கொண்டிருக்கிறது. அந்தப் பரிசிலனை முடிந்ததற்குப் பிறகு,
எந்த எந்த வாகனங்களில் அது பொருத்தப்படும் என்பது
முடிவு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே,
வயர்லெஸ் கருவி வழங்குவதைப் பற்றி நாங்கள் கேட்
டிருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில்
உள்ளது. ஆய்வு முடிந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்
படும் என்று சொன்னார்கள். சந்தன மரம் அரசுக்கு வருவாயமாக
வருவாய் தரக்கூடிய மரமாக இருக்கிறது. ஏராளமான மரங்கள்
திருடும் போகின்றன. அதுபற்றி இந்த மன்றத்திலும்
பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, உடனடியாக
ஆய்வு செய்து, வயர்லெஸ் வழங்குவதோடு மட்டுமல்ல, பல
அதிகாரிகளுக்கு ஜீப் போன்ற வாகனங்கள் கூட இல்லையென்று
எங்களிடத்திலே சொல்கிறார்கள். ஆகவே, அவைகளைத்
தேவையான அளவுக்கு வாங்கிக் கொடுத்து, திருடு போகின்ற
மரங்களைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா
என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, அரசு இதிலே தீவிரமாக கவனம் செலுத்தி,
ஆய்வுகள் அநேகமாக முடிவடைந்த நிலையிலே இருக்கின்றன.
காவல் துறையோடு தொடர்பு கொண்டு இந்தத் திட்டம்
நிறைவேற்றப்பட இருக்கிற காரணத்தால், அதை எப்படி
நிறைவேற்றுவது என்பதற்கான சாத்தியக் கூறுகள் தீவிர
பரிசீலனையில் இருந்து வருகின்றன. மேலும் மாண்புமிகு
உறுப்பினர்கள் தெரிவித்ததைப் போல், முன்னாலே, வனத்
துறையிலே, காடுகளிலே, பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு
இப்படிப்பட்ட வாகன வசதிகள் குறைவாக இருந்தன. ஆனால்,
கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜீப் போன்ற வாகனங்களும்,
ரேஞ்சர்கள் போன்றவர்களுக்கு மோட்டார் சைக்கிள் போன்ற
வாகனங்களும் அரசின் செலவிலேயே வழங்கப்படுகின்றன.
அதோடு அவர்கள் வாங்குவதற்கும் உதவிகள்செய்யப்படுகின்றன.
இப்படிப் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் அவர்கள்
துரிதமாக செயல்பட வாகனங்கள் வழங்குவதற்கு இப்பொழுது
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த
வயர்லெஸ் கம்பியில்லா சாதனம் அமைப்பதையும் மிக விரைவிலே
நடத்தி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் இந்தச் சாதனம்
பொருத்தப்பட்ட வாகனங்கள் இப்பொழுதே அங்கே பணி
யாற்றிக் கொண்டு வருகின்றன.



1983 அக்டோபர் 25]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குமரி
மாவட்டத்திலே வீரப்புலி ரிசர்வ் பாரஸ்டிலே அதிகமான
சந்தனத் தடிகள்கடத்திச் செல்லப்படுகின்றன என்பது அமைச்சர்
அவர்களுக்கு நன்கு தெரியும். அப்படியிருந்தும் அந்தக்
கடத்தலைத் தடுக்க வேகமாக ஓட்டிச் செல்லக்கூடிய ஜீப்போ
மற்ற வாகன வசதிகளோ வேண்டுமென்று கேட்டும் பிறகும்அவை
இன்னும் அளிக்கப்படவில்லையென்ற காரணத்தால் அப்படிப்
பட்ட திருட்டுக்களைத் தடுக்க முடியவில்லையென்பது அமைச்சர்
அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, திருட்டைத் தடுக்க
விரைவிலே அவர்களுக்கு வாகனம் அளிக்க ஏற்பாடுசெய்யப்படும

(முற்பகல் 10-'0)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம்
பேரவையின் அனுமதியுடன் நீட்டிக்கப் பெறுகிறது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட
கேள்வியின் முதல் பகுதி கொஞ்சம் சந்தேகத்தோடு
ஆட்சேபணைக்குரியது. அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த பகுதி
யிலேயிருந்து மரங்கள் கடத்தப்படுவது அமைச்சருக்குத்
தெரியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த வகையிலும்
பொருள் கொள்வதற்கு அது வாய்ப்பாக அமைந்து விடும்.
அப்படி திருடப்படுகிறது, கடத்தப்படுகிறது என்று செய்திகள்
அடிக்கடி உறுப்பினர் அவர்கள் மூலமும், மற்றவர்கள் மூலமும்
அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. அதையொட்டி
நடவடிக்கைகள் அவசர நிலைமையில் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. அங்கே அப்படி வாகன வசதிகள் இல்லையென்
பதால் அலுவலர்களால் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்க
முடிவதில்லை என்று என்னிடத்திலே இப்போது குறிப்பு
இல்லை. அப்படி அதுபோன்று இருக்குமானால் தீவிரமாக
அரசு அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வயர்லெஸ் கருவிகள் வழங்குகின்ற
நிலைமைகள் பற்றிய ஆய்வு முடிந்து விட்டன என்று அமைச்சர்
அவர்கள் அறிவித்தார்கள். வடஆற்காடு மாவட்டத்திலே
ஜவ்வாது மலை போன்ற பகுதிக்கு இப்படிப்பட்ட வண்டிகள்
உண்டா? தேவையான அளவிற்கு வண்டிகள் வழங்குவதற்கு
அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, முதலிலே 11 நிலையான இடங்களில் இப்படிப்
பட்ட நிலையங்கள் அமைப்பதற்கு, அந்த கருவிகள் பொருத்
தப்படுவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முதல்
கட்டமாக வடஆற்காடு, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்
ளில் ஆய்வுகள் முடிவு பெற்று விட்டன. ஆகவே மேல்
டவடிக்கைகள் விரைவிலே எடுக்கப்படும்.

[1983 அக்டோபர் 52

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. வினாக்கள்-விடைகள் பட்டியலிலே எஞ்சியிருக் கின்ற வினாக்கள் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பிலே அச்சிடப்பெறும்.

திரு என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் நேரத்தை சரியாக 10-00 மணிக்கு முடித்து, எஞ்சியிருக்கின்ற வினாக்கள் பின்னால் அச்சிட்டுக் கொடுக்கப்படும் என்ற முடிவு எப்போது எடுக்கப்பட்டது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த முறை எப்போதுமே இருக்கிற ஒன்றுதான். இன்றைக்கு இன்னும் 13 கேள்விகள் இருக்கின்றன. இன்றைக்கு இலங்கை பிரச்னை பற்றிய முக்கிய மான தீர்மானமும் வருகின்றது. அலுவல் ஆய்வுக் குழுவிலே இந்த பிரச்னை பற்றி மூன்று நாட்களுக்கு மேல் பேசவேண்டு மென்று எல்லோரும் விரும்பினார்கள். ஆகவே கேள்வி நேரத்தில் மூன்று நாட்கள் நான் கொஞ்சம் கறாராக இருந்தாலொழிய இந்த பிரச்னைக்கு தக்க நேரம் ஒதுக்க முடியாது. இலங்கை பிரச்னையின் முக்கியத்துவத்தை கருதி தான் அதிக நேரம் வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டார் கள். அப்படி அந்தப் பிரச்னைக்கு அதிக நேரம் வேண்டா மென்றால் இப்போது கேள்வி நேரத்தை தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம்.

திரு. என்.எஸ். வி. சித்தன்; மாண்புமிக்க தலைவர் அவர்களே, தாங்கள் சொல்கிற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில் கேள்வி நேரத்தை இப்படித் திடீரென்று முடித்துக் கொள்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்தில் ஒரே கேள்வியோடு ஒரு மணி கேள்வி நேரம் முடிந்து விடும். நீங்கள் பார்லிமெண்டிற்கு ஒருமுறை செல்ல வேண்டும்.

திரு என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இலங்கை பிரச்னைக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்பதால் எஞ்சி யிருக்கின்ற கேள்விகளை இன்னொரு நாளில் எடுத்துக் கொள் ளுங்கள். ஏனென்றால் எங்களுக்கு அமைச்சர்களிடத்திலிருந்து பதில்களைப் பெற வேண்டும். தாங்கள் சொல்கிற முறையில் வினாக்கள்-விடைகள் அச்சிட்டு கொடுக்கப்படுமே தவிர நாங்கள் துணைக் கேள்விகள் கேட்க முடியாது. ஆகவே எஞ்சியிருக்கிற வினாக்களை இன்னொரு நாளைக்கு ஒத்தி வைத்து துணைக் கேள்விகள் கேட்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து இந்த கோரிக்கையை தாங்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நாடாளுமன்ற நடைமுறையைப் பற்றி குறிப்பிட்டீர்கள். நாடாளுமன்றத்தில் அப்படி தான் நடக்கிறது, ஒத்துக்கொள்கிறேன்... ..........



1983 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னதுகூட இலங்கை பிரச்னையை ஒட்டி தீர்மானம் வர இருப்பதால் மூன்று நாட்களுக்குத்தான் இந்த முறை என்று சொல்லியிருக்கிறேன். அது முக்கியமான பிரச்னையென்பதால் அனைத்துத் தலைவர் களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பளித்தாக வேண்டும். எல்லோரும் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வார்கள். இப்போது இன்னும் 13 கேள்விகள் பாக்கியிருக்கின்றன. அனைத்துக் கேள்விகளையும் எடுத்துக் கொள்வது என்றால் இன்னும் ஒரு மணி நேரம் அதற்காக ஒதுக்கியாக வேண்டும். அவ்வாறு நடத்த வேண்டுமா? அல்லது இந்த மூன்று நாட்களுக்கு மட்டும் பத்து மணியோடு நிறுத்தி வரைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்கிறீர்களா? சட்டப்படி பத்து மணி வரையில்தான் கேள்வி நேரம் என்று சொன்னாலும்கூட, நான் அப்படியுள்ள சட்டத்தைப் பற்றி இப்பொழுது பேசவில்லை. இந்த மூன்று நாட்களுக்கு இருக்கின்ற முக்கியத்துவத்தைக் கருதி அப்படிச் செய்தால் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி.

திரு. என். எஸ். வி. சித்தன் : பாக்கியுள்ள கேள்விகளை அச்சடித்துக் கொடுப்பதற்குப் பதிலாக பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: இந்த மூன்று நாட்களும் அதி முக்கியத்துவம் வாய்ந்த நாட்களாகும். ஆனால் இங்கு கடைப்பிடிக்கின்ற வழக்கம் என்னவென்றால், இன்றைக்கு எடுக்க முடியாத கேள்வி களை இன்னொரு நாளைக்குப் போடுவது என்பதுதான் கன்வென்ஷன் ஆகும். அந்த மரபைக் கடைப்பிடியுங்கள். இன்றைக்கு இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, அந்தக் கேள்விகளை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் சொல்வது மாதிரி, இந்த மூன்று நாட்களின் முக்கியத்துவத்தைக் கருதி, மீதியிருக்கின்ற கேள்விகளை இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைக்குள் எதிர்க்கட்சிகள் வரிசையில் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னை ஒன்றை நான் எழுப்ப விரும்பு கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள்

எதிர்க்கட்சியாக இதுவரையில் பணியாற்றி வந்தோம்.
இன்றையதினம் நாங்கள் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலை
யிலிருந்து தங்களுடைய சர்க்குலரின் மூலமாக இரண்டாவது
இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறோம்.

இந்த மன்றத்திலேயும் சரி, மற்ற மன்றங்களிலேயும் சரி,
என்ன முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்றால், மன்றத்திலே
ஓட்டளிக்கக்கூடிய உரிமை படைத்த உறுப்பினர்கள் இருக்
கிறார்களே, அவர்களுடைய எண்ணிக்கையை வைத்துத்தான்
அந்தக் கட்சியைப் பற்றிய நிலையை எடுப்பது வழக்கம்.
இந்த மன்றத்திலே எம். எல். சி. யாக இருக்கின்ற அமைச்சர்
களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் ஓட்டு போடு
வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. எம்.எல்.சி.யாக இருக்கின்ற
அமைச்சர்களும் அட்வகேட்-ஜெனரலும், அவர்கள் விரும்பினால்
பேசலாம், ஆனால் அவர்களுக்கு வோட்டுப் போடக்கூடிய
உரிமை கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களுடைய
எண்ணிக்கையைப் பொறுத்த வரையில்,
தலைவரும், எங்களுடைய துணைத் தலைவரும் எங்களுடைய
பிரச்னை காரணமாக ராஜினாமா செய்த பிறகு இலங்கைப்
குறைந்திருக்கிறது. அதே சமயத்தில் 31-ஆகக்
சேர்ந்த உறுப்பினர்களின் காங்கிரஸ் கட்சியைச்
வகையில் அவர்கள் 32 பேர்களாக எண்ணிக்கையைப் பொறுத்த
உறுப்பினருக்கு ஓட்டுப் போடுகின்ற இருந்தாலும்கூட ஒரு
தால் ஓட்டுப் போடக்கூடிய உரிமை இல்லாத காரணத்
ஆகத்தான் இருக்கிறது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 31
உறுப்பினர் மீது எந்தக் அவர்கள் கட்சியைச் சார்ந்த
அவர்கள் வழக்கு போட்டு, காரணத்திற்காக குமரி அனந்தன்
இருக்கிறது என்ற அது இப்பொழுது சுப்ரீம் கோர்ட்டில்
விரும்பவில்லை. விவரத்திற்குள் நான் செல்ல

எம். எல். சி. யாக இருக்கின்ற அமைச்சர்களானாலும் கூட
டிவிஷன் வருகின்ற நேரத்தில் அவர்கள் எழுந்து வோட்டளிக்கக்
கூடிய வோட்டிங்ரைட் இல்லாத காரணத்தினால் அவர்
களை இந்த மன்றத்தின் உறுப்பினர்களாகப் பார்ப்பது மரபு
அல்ல. நாங்களும் 31 பேர்களாக இருக்கிறோம்: அதைப்
போல மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜாசெரீப் அவர்களின்
தலைமையிலுள்ள கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப்
பொறுத்தவரையில், வோட்டிங் ரைட் இல்லாத ஒரு உறுப்பினர்
போக மீதி 31-ஆகத்தான் இருக்கிறது. அப்படியிருக்கின்ற
நிலைமையில், ஏங்கள் எங்களை ஏன் இந்தப் பகுதிக்கு அனுப்
பினீர்கள்? இதில் காட்டக்கூடிய அவசரம் ஏன்? லாட்டரி
போட்டுப் பார்த்தீர்களா? என்ன காரணத்திற்காக எங்களை
இந்தப் பகுதிக்கு அனுப்பியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.



திரு. ஹாஜாசெரீப் அவர்களைப் பொறுத்த மட்டும் உச்சநீதி
மன்றத்தில் வழக்கு இருப்பதால், டிபேட்டிலே அவர்கள் பங்கு
கொள்ளலாம். அட்வகேட்-ஜெனரலும் பங்கு கொள்ளலாம்:
எம். எல். சி. யாக இருக்கின்ற அமைச்சர்கள் பங்கு கொள்ள
லாம். ஆனால் வோட்டுப் போடும் சமயத்தில் அவர்கள்
பங்கு கொள்ளக் கூடாது. வோட்டிங் ரைட்ஸ் இல்லாதவர்கள்
உறுப்பினர்களாகக் கருதப்பட முடியாத நிலைமை இருக்கின்றது.
ஆகவே, நாங்களும் 31 பேர்களாக இருக்கிறோம்; அவர்களும்
31 பேர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது
பேரவைத் தலைவர் அவர்கள் எங்களை எப்படி இந்தப் பகுதிக்கு
அனுப்பினீர்கள் என்பதற்கான தங்களுடைய முடிவான பதிலை
நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 10–10)

திரு. என். இட்டப்பா ; தலைவர் அவர்களே, ஒரு
பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் கேட்பது வேறு ஒரு
பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு பிரச்சினை என்றால்
பிறகு பேசுவதற்கு வாய்ப்பு தருகிறேன். இப்போது மாண்புமிகு
உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பிரச்சினையைக்
கிளப்பி இருக்கிறார்கள். இதிலே சட்ட சம்பந்தமான
பிரச்சினை இருக்கின்றது. அவற்றை எல்லாம் பார்த்துவிட்டு
பின்னர் நான் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. ப. உமாநாத் : தலைவர் அவர்களே, நீங்கள்
இப்போது ஆ சர்வேஷன் கொடுப்பீர்கள் என்று நினைத்தேன்.
ஆனால் உடனடியாக ஆப்சர்வேஷன் கொடுக்கவில்லை என்பதால்
சொல்கிறேன். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஒரு
பார்ட்டியினுடைய ஸ்ட்ரெங்த்தை டிசைட் பண்ணுகின்றபோது,
அதாவது ரூலிங் பார்ட்டியினுடைய ஸ்ட்ரெங்த்தையே டிசைட்
பண்ணுகின்றபோது, இங்கே பேசுவதற்கு உரிமை உள்ள,
உட்காருவதற்கு உரிமை உள்ள எம். எல். சி. போன்றவர்களைக்
கணக்கெடுப்பதில்லை. அதே மாதிரி ஒரு பார்ட்டியினுடைய
ஸ்ட்ரெங்த்தை டிசைட் பண்ணுகின்றபோது, பேச்சுரிமை இருந்
தாலும், அவையின் நடவடிக்கைகளிலே பார்ட்டிசிபேட் பண்ணு
வதற்கு உரிமை இருந்தாலும் வோட்டிங் ரைட் இல்லை என்று
சொன்னால் 31 வோட்ஸ் என்பதுதான் ஸ்ட்ரெங்த். அதைப்
பொறுத்தவரை. எனவே அந்தப் பக்கத்திலும் வோட்டிங்
ரைட்ஸ் இருப்பவர்கள்தான் ஸ்ட்ரெங்த். இந்தப் பக்கத்திலும்
வோட்டிங் ரைட்ஸ் இருப்பவர்கள்தான் ஸ்ட்ரெங்த். 31 வோட்ஸ்
என்பதுதான் ஸ்ட்ரெங்த். எனவே இங்கே சம்பளமும் வாங்க
முடியாது. வேறு ஒன்றும் செய்ய முடியாது. வோட்டிங்
ரைட்ஸ் இல்லை. கோர்ட் ஸ்டே கொடுத்திருக்கின்றது.
இவ்வளவு கண்டிஷன்ஸ் இந்த ஸ்டேயிலே வருவதால் இந்த

கொஸ்டின் வெரி சீரியஸ் கொஸ்டின். வோட்டிங் ரைட் என்கிற பிரச்சினை வருகின்ற காரணத்தால் இதனை கம்பேர் பண்ணிப் பார்க்க வேண்டி இருக்கின்றது. ஆளுகின்ற கட்சியாக இருந்தாலும் அதையும் கம்பேர் செய்து பார்க்கின்றபோது அங்கே மினிஸ்டர்ஸ்—ஆக இருப்பவர்களில் மற்றவர்களுக்கு இருக்கக் கூடிய உரிமை எம். எல். சியாக இருப்பவர்களுக்கு இருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். They are not taken into account for the strength of the Party. அந்த முறையில் இது சீரியஸ் பாயின்ட். இம்பார்ட்டன்ட் பாயின்ட். எனவே இதை சீரியஸாகக் கவனித்து தாங்கள் ரூலிங் கொடுக்கவேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்கள் சட்டப் பிரச்சினை பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். அவர்கள் சட்டம் படித்தவர்கள். எனக்கு சட்டம் தெரியாது என்றாலும் நேற்றையதினம் நான் ஒரு பத்திரிகையிலே பார்த்தேன். இப்போது இங்கே அமைந்திருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களைப் பாராட்டி இதே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களுடைய கட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 32. எங்களுக்கு முன்னாலே எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 31. எங்களுடைய கட்சியின் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வழக்கு இன்றைக்கு டெல்லியிலே உச்சநீதிமன்றத்திலே இருந்து கொண்டிருக்கின்றது. அந்த வழக்கிலே இடைக்காலத் தீர்ப்பு அளிக்கின்ற நேரத்திலே எங்களுடைய கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் ஃபுல் ஃப்ளெஜ்ட் மெம்பர் ஆஃப் தி ஹவுஸ் என்று கொடுத்திருக்கிறார்கள். இந்த அவையில் எல்லா வகையிலும் முழு உறுப்பினராகப் பணியாற்ற முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே எதிர்க்கட்சி என்பதைப் பொறுத்த வரையில் எண்ணிக்கையினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தாங்கள் எடுத்த முடிவு சரியான முடிவு என்பதுதான் எங்களுடைய கட்சியின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பு பின்னர் தெரிவிக்கப்படும் என்று ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் ; மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனையிலே மேலும் ஒரு தெளிவு ஏற்படுவதற்காக ஒரு விஷயத்தை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே ஆங்கிலோ-இந்திய பிரதிநிதியாக ஒரு அம்மையார் அவர்கள் நியமன உறுப்பினராக



ஆளும் கட்சித் தரப்பிலே வீற்றிருக்கிறார்கள். ஆனால் அவருக்கு ஓட்டுரிமை என்பது இல்லை. ஆளும் கட்சியின் எண்ணிக்கையை நீங்கள் கணக்கிடும் போதும் அவர்களைச் சேர்த்து எண்ணுவது இல்லை. ஆகவே, இங்கே ஓட்டுரிமை இல்லாத உறுப்பினரை எண்ணிக்கைக் கணக்கில் சேர்ப்பது இல்லை. ஆகவே, இந்த அம்சத்தையும் தாங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுப்பிய பிரச்சினையை பரிசீலிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நான் தெரிவிக்க விரும்புவது திராவிட முன்னேற்றக் கழகம் 31 ஓட்டுகள் போடமுடியும். காங்கிரஸ் கட்சியும் 31 வோட்டுகள்தான் போடமுடியும். உயிர் இருந்தாலும், ஓட்டுரிமை இருந்தால் தான் கணக்கில் கொள்ள முடியும். அது இல்லை என்கிறபோது நீங்கள் இப்படி அவசரப்பட்டு இந்த இடமாற்றம் செய்தது சரியல்ல. இரண்டும் 31, 31 என்று இருக்கிறபோது, இந்த இடமாற்றம் செய்தது சரியல்ல என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. K. SOURIRAJAN: Hon. Speaker, Sir, as per the submission of Thiru V. Kirshnamurthy, Deputy Leader of the D. M. K. the voting strength of the D. M. K. party in the House is 31 and that the strength of the Congress party is 31 and he asked how the Speaker can decide on this issue. It is always the prorogative of the Hon. Speaker to decide குறுக்கீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் ஆங்கிலத்தில் என்ன சொன்னார் என்றால்—அப்படிப்பட்ட ஒரு முடிவு எடுப்பதற்கு சபாநாயகருக்கு உரிமை இருக்கிறது என்பதாகும். இதற்காக ஏன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்?

திரு. ரா. உமாநாத்: இதை ஒரு கோபப் பிரச்னையாக நாங்கள் கருதவில்லை. சில பாயின்ட்ஸ் நாங்கள் ரெய்ஸ் செய்து இருக்கிறோம். He is taking the umbrella under your power.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து என்னுடைய தீர்ப்பு *பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன்.

---

*26-10—1983 அன்று தீர்ப்பு வழங்கப்பெற்றது.

## 3. தகவல்கோரல்

(அ) சட்டமன்ற நடவடிக்கைகளை செய்தித்துறை மூலமாக படம் எடுப்பது.

திரு. கோவைத்தம்பி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் கொடுமையைக் கண்டித்து, தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். தமிழக மக்கள் ஈழத்து மக்கள் மீது மிகவும் பாசம் கொண்டு இருப்பதால், தமிழக மக்களின் பிரதிநிதியாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகின்ற இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் நடக்கின்றபோது, தமிழக செய்தித் துறையின் மூலமாக, இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளைப் படம் எடுத்து மக்களுக்குக் காட்டும் முயற்சியில் இந்த அரசு ஈடு படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10·20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்திப்படம் எடுப்பதை யோ, பத்திரிகையில் போடுவதையோ நான் தடை செய்ய வில்லை. ஏற்கனவே அத்தகைய முறையை நான் அனுமதித்து இருக்கிறேன்.

(ஆ) அரசினர் தனித் தீர்மானத்தை அச்சிட்டுக் கொடுப்பது

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்னை எவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்த பிரச்னை? இந்த தீர்மானத்தில் (அ), (ஆ), (இ) என்று (ஔ) வரையில் போட்டு, பிறகு (க), (ங), (ச) என்றெல் லாம் போடப்பட்டிருக்கிறது. இதை யார் படிப்பது? இதன் முக்கியத்துவத்தைக் கருதி, இதை பிரிண்ட் செய்து வைத்திருந் தால் என்ன? சைக்ளோஸ்டைல்போட்டிருப்பதால் பலயிடங்களில் எரேஸாகியிருக்கிறது. எனவே, உடனடியாக இதைப் பிரிண்ட் செய்து கொடுத்து எங்களுடைய கண்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்ணாடி போட்டால்கூடப் படிக்க முடியாத அளவிற்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; கண்ணாடி போட்டுப் பாருங்கள். தாங்கள் இப்போது போட்டிருப்பது படிக்கின்ற கண்ணாடியாகத் தெரியவில்லையே.

## 4. அறிவிப்புகள்

### (அ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 24–10–1983 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் பற்றிய நிகழ்ச்சி நிரலின் விவரம்.

| | |
|---|---|
| 25–10–1983 (செவ்வாய்க்கிழமை)<br>26–10–1983 (புதன்கிழமை) | இலங்கைத் தமிழர் குறித்த அரசினர் தீர்மானத்தின் மீது விவாதம். |



| | |
|---|---|
| 27–10–1983 (வியாழக்கிழமை) | 1. 1983–84–ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.<br>2. 1975–76, 1976-77 மற்றும் 1977-78 ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அளித்தல்.<br>3. இலங்கைத் தமிழர் குறித்த அரசினர் தீர்மானத்தின் மீது விவாதமும், பதிலுரையும் (கடைசி நாள்). |
| 28–10–1983 (வெள்ளிக்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 29–10–1983 (சனிக்கிழமை) | தனியார் அலுவல்கள் |
| 30–10–1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 31–10–1983 (திங்கட்கிழமை) | 1. 1983-84 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>2. ஷை நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>3. 1975–76, 1976–77 மற்றும் 1977–78 ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>4. ஷை நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.<br>5. அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 1–11–1983 (செவ்வாய்க்கிழமை)<br>2-11-1983 (புதன்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

(பேரவைத் தலைவர்) [1983 அக்டோபர் 25

பேரவை 2–11-1983 அன்று ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 8–11–1983 அன்று கூடும்.

பேரவை வழக்கம்போல் காலை 9·00 மணிக்குக் கூடும்.

(ஆ) டாக்டர் மு. கருணாநிதி, திரு. க. அன்பழகன் பதவி விலகல் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பெற்றமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; சென்னை, அண்ணா நகர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களும், சென்னை, புரசைவாக்கம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்களும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பதவியினின்றும் 18–8–1983 முதல் விலகிக் கொண்டுள்ளார்கள் என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் 190-வது பிரிவு, 3(பி) உட்பிரிவின்படி. அப்பதவி விலகல்கள் அத்தேதியிலிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்பெற்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இந்தப் பேரவையின் 7-வது கூட்டத்தொடரில் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

திரு. எஸ். ஜகத்ரட்சகன்

திரு. மா. சின்னராசு

திருமதி டி. யசோதா

திரு. பாபு ஜனார்த்தனன்

திரு. என். வரதராஜன்

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



1983 அக்டோபர் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு 1983 (ஆ.இ.)
மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவை தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் தொடர்ச்சி

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு 1983

மண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

திரு. ஏ.உமாநாத்; தலைவரவர்களே, இந்த சட்டமுன் வடிவை இன்ட்ரொடியூஸ் செய்வதில் எனக்கு பலமான எதிர்ப்பு இருக்கிறது. ஆர்டினன்ஸ் இஷ்யூ பண்ணும் அதிகாரத்தை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்திருக்கிறது. அதன் அடையாளம்தான் அவசரச் சட்டம் பிறப்பித்து, அதை ரீப்பிளேஸ் செய்யக்கூடிய இந்த பில். சாதாரணமாக அரசுக்கு பணம் வேண்டுமென்றால் பட்ஜெட் செஷனில் ஹவுசில் வைத்து சாங்ஷன் செய்வார்கள். அதற்குப் பின்னால் தேவை என்றால் அடுத்த செஷனில் சப்ளிமென்டரி பட்ஜெட் என்ற முறையில் அவர்கள் கொண்டுவருவார்கள். ஆனால் இப்போது உள்ள நிலைமை என்னவென்றால் சட்டசபையைக் கூட்டாமலேயே, அதன் அனுமதியைப் பெறாமலேயே அரசு தானாகவே, அவசரச் சட்டத்தின் மூலம் பணம் எடுப்பது ஒரு பழக்கமாகிவிட்டது. கடந்த சட்டசபையிலே இது மாதிரி வந்தபோது நான் அதைக் கடுமையாக எதிர்த்தேன். அதற்குப் பிறகு இப்போது 2 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன. ஒன்று 50 கோடியை 100 கோடியாக ஆக்கலாம் என்று. அது ஜூலை மாதம் 4ந்தேதி வந்திருக்கின்றது. இன்னொன்று 1½ மாதம் கழித்து 100 கோடியை 150 கோடியாக ஆக்கவேண்டும் என்று வந்திருக்கின்றது. இப்படிப்பட்ட பழக்கம் இருக்குமானால் இங்கே சட்டசபையே தேவையில்லை என்று செய்வதாகும்.

[திரு. ரா. உமாநாத்] [1983 அக்டோபர் 25

I am seriously on that point. It should not be allowed to be introduced

அதற்குடைய அனுமதி இல்லாமலேயே போகும். இது சர்வாதிகார செயலாகும். எதிர்பாராச் செலவினம் என்பதற்குப் பல்வேறு அதிகாரங்கள் உள்ளன.

முதல் ஆர்டினன்ஸ் வறட்சி நிவாரணத்திற்குப் பணம் தேவை எனவே 50 கோடியை 100 கோடியாக ஆக்கவேண்டும் என்பதாகும். எப்போது வந்திருக்கின்றது? மே மாதம் 16ந் தேதி. ஆனால் அதற்கு சில நாட்களுக்கு முன்புதான் சட்ட சபை பட்ஜெட் கூட்டம் முடிந்திருக்கின்றது. வறட்சி பற்றி எல்லோரும் சொல்லி இருக்கிறோம். பணம் போதாது, அதிகம் தேவை என்று சொல்லி இருக்கிறோம். அதுதான் உண்மையான காரணம் என்றால் மே 16ந்தேதி வறட்சியின் பேரால், நம்மை கேட்காமல் எடுத்தால் என்ன அர்த்தம். அடுத்து 1½ மாதங்கள் கழித்து அதாவது ஜுலை 4ந்தேதி சாராய வியாபாரத்தை நாங்கள் நேரடியாக எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லி ஆர்டினன்ஸ் கொண்டு வந்திருக்கிறார்கள். ரெகுலராக செஷன் நடத்துவது என்பது இங்கே வழக்கமாக இருக்கிறது என்று சொன்னால் இந்த 'புரோமல்கேஷன் ஆப் ஆர்டினன்ஸ்' என்பதற்கே இடம் இருக்காது. ஆனால் சட்டசபையைக் கூட்டுவது என்பதற்கு பதிலாக ஆர்டினன்ஸ் போடுவது என்ற பழக்கம் இருக்கிறது. சட்ட சபையை ரெகுலராக கூட்டும் பழக்கம் இல்லாத காரணத்தினால் இதைச் செய்கிறீர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். More or less they are running an Ordinance Raj இதனால் எனக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது. 100 கோடியை 150 கோடியாக ஆக்குகிறபோது அதில் 1984ம் ஆண்டு மார்ச்சு 31 முடிய என்று போடப்பட்டிருக்கிறது. முதல் ஆர்டினன்ஸ் ஒரு குறுகிய காலத்திற்குப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆர்டினன்ஸ் 1984 மார்ச்சு 31 முடிய என்று போட்டிருப்பது எனக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது மார்ச்சு 1984 முடிய என்றால் அதை ஏன் இப்போது எடுக்க வேண்டும். அதற்கு இடையிலே செஷன் இல்லையா? கூட்டத்தை கூட்டமாட்டீர்களா? இங்கே எனக்கு ஏற்பட்டுள்ள அச்சம் என்னவென்றால், 'மிட்-டெர்ம்' எலக்ஷன் வரும் என்று பொதுவாக நாட்டிலே ஒரு பேச்சு இருக்கிறது. அந்த எலக்ஷனின் போது தகாத முறையிலே ஓட்டு கேட்பதற்கு அவர்களுக்கு ரோடு போடுவதற்கு, தண்ணீர் கொடுப்பதற்கு பம்ப் செட்டுகள் போடுவதற்கு, இப்படிப்பட்ட தகாத வேலைகளுக்கு பணம் தேவைப்படும் என்பதற்காக இந்த மாதிரி ஆர்டினன்ஸ் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதனாலேதான் 1984 மார்ச்சு முடிய என்று போட்டிருக்கிறீர்களோ என்று எண்ண வேண்டி இருக்கிறது.



1983 அக்டோபர் 25] [திரு. ரா. உமாநாத்]

This is very unfair. I Strongly protest aaainst it. எனவே இதைத் தடுப்பதற்காக இந்த பில்லை இன்ட்ரடியூஸ் பண்ண விடக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். I stornly object it.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரச் சட்டமும் சட்டத்திற்கு உட்பட்டுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த எதிர்பாராச் செலவின நிதி திருத்த சட்டமுன்வடிவும் சட்டத்திற்குட்பட்டுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுபற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்கான விளக்கங்களை தருவதற்கான பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது.

அவர்கள் சொன்னதைப்போல் 1984லே தேர்தல் வருவதாகத் தெரியவில்லை. வராது என்று பலபேர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வரும் என்றும் பல பேர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் வருவதாகத் தெரியவில்லை. 1985லே வரும் என்றுதான் அதற்குரியவர்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதைக் கொண்டு வருவதற்கு நாங்கள் தயாராக இல்லை. எனவே இந்தச் சட்டமுன்வடிவை எடுத்துக் கொண்டு அது ஆய்வுக்கு வரும்போது அதற்கான முழு விளக்கங்களையும் சொல்கிறேன் என்றுச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

*(முற்பகல் 10-30)*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(இ). இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்தம்—செல்திறன்) சட்ட முன்வடிவு, 1983.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்தம்—செல்திறன்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) சென்னை பல்கலைக் கழகம் மற்றும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு' 1983.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. அரசினர் தனித் தீர்மானம்:

### இலங்கைவாழ் தமிழர் பிரச்சினை குறித்து:

**திரு. அ. ரகுமான்கான்:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அரசின் சார்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்கே ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய நாவலர் அவர்கள் கொண்டு வருகிறார்கள். இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி அமைச்சர்கள் பல பேர்களுக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அப்படி கருத்து வேறுபாடுகள் இருக்கிற நேரத்திலே முதல்வர் அவர்கள் இதைக் கொண்டு வந்து முன்மொழிந்தால் நலமாக இருக்கும். (குறுக்கீடுகள்). நான் முடித்துவிடுகிறேன். ஆகையினாலே நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே வருகை தந்து, மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் அவர்கள் முன்மொழிந்தால் சரியாக இருக்கும். நாவலர் அவர்கள் பேசி, பிறகு அது என்னுடைய கருத்து அல்ல என்ற முறையில் வந்து விட்டால், இந்த விவாதமே பயனற்று போய்விடும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** முதல்வர் அவர்கள் சார்பில் தீர்மானத்தை மொழிய மற்ற அமைச்சர்களுக்கும் உரிமை உண்டு. அவை முன்னவர் அவர்களுக்கும் உரிமை உண்டு. ஆகவே, இந்தப் பிரச்சினையிலே சந்தேகம் வரவேண்டியதில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைவாழ் தமிழர்கள் பிரச்சினைக் குறித்து நான் தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறேன். அமைச்சரவையில் உள்ள அவ்வளவு உறுப்பினர் களும், ஆளும் கட்சியிலே உள்ள அவ்வளவு உறுப்பினர்களும், ஏன் இந்த அவையிலே உள்ள 234 உறுப்பினர்களும் ஒப்புக் கொள்ளக்கூடிய முறையிலே இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து கருத்து வேறுபாடு இல்லை. வேண்டுமானால் ஒருவருக்கொருவர் உணர்ச்சிகளிலே வேறுபாடு காட்டலாமே தவிர, கருத்திலே, கொள்கையிலே, கோட்பாடிலே திட்டவட்டமாக வேறுபாடுகள் இல்லை என்று சொல்லி, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:—

(அ) கடந்த சூலைத் திங்கள் முதல் தொடர்ந்து, இலங்கை வாழ் தமிழர்களான ஈழத் தமிழர்கள், இந்தியப் பரம்பரை வழிவந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோர்க்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல், துயரிழைத்தல் போன்ற கொடுஞ்செயல்களை அறிந்து இப்பேரவை மிக்க அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது.

(ஆ) மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்துவரும் சிங்கள இன வெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்திவரும் இலங்கை இராணுவத்தினர்—காவல்துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இலங்கையில் நடைபெற்றுவரும் நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான, சனநாயகப் பண்பற்ற, மனிதாபிமானமற்ற முறையில் நடைபெற்றுவரும் கொடுமைகளை எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில், சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுக் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொது வேலை நிறுத்தம்—கடையடைப்புச் செய்தும், அமைதி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டும், கோரிக்கைகள் எழுப்பியும் தங்கள் உள்ள உணர்வை ஒருமித்த முறையில் எழுப்பிய பொது மக்களுக்கும் பல்வேறு துறையினர்க்கும், அனைத்து அரசியல் கட்சியினர்க்கும், எல்லா அமைப்பினர்க்கும் இப்பேரவை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கைவாழ் தமிழர்களின் துயர்களை எல்லா வகைகளிலும் துடைக்கவும், தமிழக மக்களின் ஒருமித்த உணர்வுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் ஆதரவோடு எடுத்த நடவடிக்கைகளை இப்பேரவை பாராட்டி வரவேற்பதோடு, தமிழக மக்களின் உணர்வை ஏற்று, இலங்கைவாழ் தமிழரின் ஆதரவையும் மதிப்பையும் பெற்று, ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன்வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(உ) இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும், இப்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான கட்டத்தில், தங்களுக்கு நிலையான வாழ்வுரிமையையும், பாதுகாப்பையும், இந்திய அரசின் முயற்சியாலும், செல்வாக்காலும், நியாயவுணர்வாலும், நடவடிக்கையாலும் மட்டுமே பெறமுடியும் என்று தெளிவாகவும், திண்மையாகவும் கருதுவதால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காலத் தாழ்வுக்கு இடமேற்படாமல், உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இப்பேரவை கேட்டுக் கொள்வதோடு இலங்கைவாழ்த் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இன்னல் ஏற்படாதவாறு பேச்சு வார்த்தையை விரைவுபடுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இப்பேரவை வற்புறுத்துகிறது.

(ஊ) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இனம்—மொழி— வரலாறு—நாகரிகம்—பண்பாடு—உறவு—தொடர்பு போன்றவற்றில் நீண்ட நெடுங்காலமாகவே பிணைப்பு இருந்து வருவதாலும், அண்டை நாட்டினரும், அகில உலக நாட்டினரும் கவலைப் படுவதற்குரிய தன்மையில் இலங்கையில் சிறுபான்மையோரின் அடிப்படை மனிதவுரிமைகளுக்கு அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாலும், இந்திய மக்கள்—இந்திய தூதுவரகம்—இந்திய வங்கிகள்—இந்தியச் சுற்றுலாப் பயணிகள் கடுமையாகத் தாக்கப் பட்டிருப்பதாலும், இந்திய அரசு இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியது நியாயமான செயலாகும் என்பதை இப்பேரவை இந்திய அரசுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

(எ) உலக நாடுகளில் வாழும் சிறுபான்மையோரின் நலங் காக்கும் பொறுப்பையும், அவர்களுக்கு நிலையான வாழ்வளிக்கும் பொறுப்பையும், அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிற ஐக்கிய நாடுகள் அவை. இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினையை நிலையாகத் தீர்க்கும் பொருட்டு, உடனடியாகத் தன் முழுச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, நியாயத்தை நிலைநாட்ட முன் வரவேண்டும் என்று இப்பேரவை வற்புறுத்துகிறது. ஐக்கிய நாடுகள் அவையில் முக்கியமான வகையில் அங்கம் பெற்றுள்ள இந்திய அரசு இதனை வலியுறுத்துமாறு இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.





(ஏ) இலங்கையில் ஆயுதவலிவாலும், அடக்குமுறை களாலும், வன்முறைச் செயல்களாலும், தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அரசு ஆயத்தம் செய்து வருவதையும், திருக்கோணமலைப் பகுதியை நிலையான கப்பற் படைத் தளமாக ஆக்கிக் கொள்ள முயலுவதையும், அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு. வென்பர்ஜெர் இலங்கை அரசுடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி யிருப்பதையும் கண்டு இப்பேரவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கை வாழ் தமிழர்க்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்வராமல் தமிழினத்தின் அழிவுக்குக் காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன் வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப் பதோடு, ஆயுதம் வழங்குவது—கடற்படைத் தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

(ஐ) இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலங் கருதித் தமிழக அரசாலும், இந்திய அரசாலும் அனுப்பிவைக்கப் பெறும் உணவுப் பொருள், உடைகள், உடைமைகள், மருந்துகள் போன்றவைகள் உரியவர்க்குப் போய்ச் சேரவைப்பதற்கு இந்திய அரசு ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ அல்லது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ, அல்லது இந்திய தூதுவராலயத்தின் மூலமோ தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

(ஒ) உரிமை வேட்கையோடு அறப்போர் நடத்தும் இலங்கைவாழ் தமிழர்களின் குடியுரிமை—வாக்குரிமை—தொழி லுரிமை—வாழ்வுரிமை போன்றவற்றை அடியோடு பறிக்கும் வகையில் இலங்கை அரசால் கொண்டு வந்து சட்டமாக்கப் பட்டுள்ள காட்டுமிராண்டி சட்டத்தை இப்பேரவை வன்மை யாகக் கண்டிப்பதோடு, அதனைப் பின் பெறச் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

(ஓ) இலங்கையிலுள்ள தமிழர் தலைவர்கள் நிபந்தனை யற்ற முறையில் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு, தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் ஒளிவு-மறை வில்லாமல் வெளியிட வாய்ப்பளித்து, நல்லுறவு அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையில் தீர்வு காண, இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயலவேண்டும் என்று இப்பேரவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது.

(ஔ) இலங்கை வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்று அவதிப் படுவோர்க்கும், சொத்துக்களை இழந்து நலிப்போருக்கும் இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும் என்று இப்பேரவை வற்புறுத்துவதோடு, அதற்கான உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

(க) தமிழ்மக்களின் உள்ளக் குமுறலையும், எண்ணங் களையும், கோரிக்கைகளையும், ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்துவைக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில், தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தமிழக ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சரவையின் உறுப்பினரான மாண்புமிகு மின்துறை அமைச்சரை இந்தியக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, அனுப்பி வைத்த இந்தியப் பேரரசையும, அனைத்து நாடுகளும் அறியும்வண்ணம், ஐந்து கோடித் தமிழ் மக்களின் உணர்வை, ஐக்கியநாடுகள் அவையில் வெளிப்படுத்திய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும் இப்பேரவை பாராட்டுகிறது.

(ங) நிலையான வாழ்வுரிமைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அறவழியில் அறப்போர் நடத்திடும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இப்பேரவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றி பெறவேண்டும் என்று விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ச) இந்தத் தீர்மானத்தில் மேலே குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை இந்தியப் பேரரசின் மூலம் நடைமுறைப்படுத்து வதற்கான எல்லாவித முயற்சிகளையும், முறைப்படி மேற் கொள்ளுமாறு, இப்பேரவை தமிழக அரசைக் கேட்டுக்கொள் கிறது.

(முற்பகல் 10-40)

**திரு. எல். இளையபெருமாள்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், முக்கியமான விஷயத்தை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் மொழிகின்றபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லாதது வருந்தத்தக்கது. ஆகவே எங்கே இருந்தாலும் அவர்களை அழைக்கவேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவர் அவர்களே, முன்னவர் மொழிந்த தீர்மானத்திலே (ஏ) என்ற இனத்தின் கீழே ஒரு சிறு திருத்தம். அதில் 'தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்' என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக 'தமிழர் இனத்தையே அழிக்கும் கொடுஞ்செயலில்' என்று இருக்க வேண்டும். ஏன் என்றால் பணி என்று சொன்னால் நல்ல காரியங்களைச் செய்வது என்பதுதான். அழிப்பது என்பது நல்ல காரியமல்ல, கெட்ட செயல்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, செயல் என்பதும் பணி என்பதும் ஒன்றுதான். அது பயன்படுத்தப்படுகிற போக்கைப் பொறுத்து இருக்கிறதே தவிர வேறுபாடு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வண்ணாரப்பேட்டை யிலும், கொருக்குப் பேட்டையிலும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் சென்றிருப்பதன் காரணமாக காலதாமதமாக வருவதாக குறிப்பு வந்திருக்கிறது. (குறுக்கீடு) இப்போது அவர்களே வந்துவிட்டார்கள். அவர்கள் இல்லா விட்டாலும்கூட இந்த அவையிலே நடைபெறுகிற குறிப்புகள் அத்தனையும் குறைகள் அத்தனையும் பெறுகிற வாய்ப்பும் அதற்காக இறுதியிலே உரையாற்றுகிற வாய்ப்பும் அவர்களுக்கு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசு கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தில் மிகத் தெளிவாக நிலைமைகள் விளக்கப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு உணருவார்கள். இலங்கையில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கிற சொல்லொணாக் கொடுமைகளைக் கண்டும் கேட்டும் உலகத்திலே இருக்கிற ஜனநாயகப் பண்புடைய ஜனநாயக வாதிகள் உள்ளம் குமுறுகிறார்கள் என்ற நிலையிலே குறிப்பாக இந்தியப் பெருமக்களும் மிகக் குறிப்பாக தமிழகத்திலே வாழ்கிற 5 கோடித் தமிழ் மக்களும் உள்ளம் குமுறி தங்களுடைய உணர்வுகளைச் சென்ற பல திங்கள்களாக காட்டிக்கொண்டு வருகிறார்கள் என்பதைப் பேரவை உணரும். தமிழகத்திலே வாழ்கிற 5 கோடி மக்களும் இலங்கை வாழ் தமிழர்கள் பாதுகாக்கப் பெறவேண்டும், நிலைத்த வாழ்வு அவர்கள் பெறவேண்டும், அடிப்படை உரிமைகள் அத்தனையையும் பெறவேண்டும், சம வாழ்வு வாழவேண்டும் என்கின்ற நோக்கத்திலே இருக்கிறார்கள் என்பதிலே யார் ஒருவருக்கும் வேறுபாடு இருப்பதாக நாம் கருதவில்லை. அந்த வகையில் தமிழகத்திலே இருக்கிற 5 கோடி பேர்களும் கருத்து வேறுபாடு கொள்ளாது அவர்களின் உணர்வுகளை எடுத்துக்காட்டி, எப்படியும் இந்தப் பிரச்சினை தீரவேண்டும் என்பதில் அக்கறை காட்டிக் கொண்டு வந்திருக் கிறார்கள்.

இதிலே பல தடவைகள் அனைத்துக் கட்சிகளும் அனைத்துப் பொதுமக்களும் இன்றைக்கு ஒருங்கிணைந்து நின்று கருத்துக்களை வலியுறுத்தி உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற அளவுக்கு மத்திய அரசு இதிலே தலையிட வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, உலகத்திலே இருக்கிற ஜனநாயக நாடுகளும் இதற்குப் பக்கத் துணையாக இருக்கவேண்டுமென்பதையும் எடுத்துச்சொல்லி, ஐக்கிய நாடுகள் சபை இதிலே ஈடுபாடு காட்டவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்கள் தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்பவும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்பவும் முயற்சி களுக்கு ஏற்பவும் தங்களுடைய உணர்வுகளைத் தனித்தனியாகவும்

காட்டியிருக்கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் இணைந்தும் தனித்தனியாகவும் காட்டி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றவர்களும் உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற துன்பங்கள் போக்கப்பட வேண்டும் என்பதிலே சிறிதுகூட மாறுபாடு இல்லாத அளவுக்கு இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு வந்திருக்கிறது என்பதையும் நன்றாக அறிவோம். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த நோக்கத்திலே எல்லோரும் ஒருமித்த அடிப்படையிலே கருத்துக்களை வெளியிட வேண்டும். அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே நம்மிடத்திலே அரசியல் மாச்சரியங்கள் ஒன்றிரண்டு இருந்தாலும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒருவரையொருவர் தாழ்த்தியோ குற்றஞ் சாட்டியோ பேசாமல் இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் ஒருமித்த குரலை எழுப்பவேண்டும், ஒருமித்த உணர்வைக் காட்ட வேண்டும். அதன் மூலமாக அரசின் அடிப்படையில் மக்கள் அடிப்படையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள் உதவி செய்கிறார்கள், ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்ற நிலை ஏற்படுமானால் அது மேலும் நமக்கு வலிவூட்டுகிறது என்பது மட்டும் அல்லாமல் இந்தப் பிரச்னையிலே அவதியுற்று அல்லல் படுகின்ற இலங்கை வாழ் தமிழர்களுக்கு வாழ்வு ஏற்படுவதற்கு வழி கோலுவதாக அமையும். அந்த வகையில் தான் நாம் பிரச்னைகளை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தப் பேரவையில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்லவும், தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் அதன் மூலம் வற்புறுத்த வேண்டிய கருத்துக்களை வற்புறுத்தவும் இந்த தீர்மானம் வழி வகுக்கிறது என்பதை நான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சனையில் அடிப்படையாக சில பல நிலைமைகளை மட்டும் நான் தெளிவாக்க விரும்புகிறேன். உலகத்தில் இருக்கிற எந்த ஒரு நாட்டிலும் சிறுபான்மையினர் என்ற ஒரு பகுதியினர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒன்று மொழியால் சிறுபான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள், இனத்தால் சிறுபான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள், நிறத்தின் அடிப்படையில் சிறுபான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள், சமய அடிப்படையில் சிறுபான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள், ஜாதி அடிப்படையில் சிறுபான்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். உலகத்தினுடைய எந்த ஒரு நாட்டை கவனித்தாலும் சிறுபான்மையினர் என்ற தன்மையில் இன அடிப்படையிலோ மொழி அடிப்படையிலோ ஜாதி, மத அடிப்படையிலோ அல்லது வேறு பல பொருளா



தாரத்தை எடுத்துக் கொண்டாலும்கூட ஏழை பணக்காரன் என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்றுகூட வரும். அந்த வகையில் வருகின்ற போது சிறுபான்மையோர் நலன்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பது உலகம் முழுவதும் இருக்கின்ற நியதி ஆகும்.

ஜனநாயகத்தினுடைய மிக மிகப் பெரிய பண்பு பெரும்பான்மையோர் கையில் ஆளுகின்ற பொறுப்பு ஒவ்வொரு நாட்டிலும் வருகிறது என்றாலும்கூட பெரும்பான்மையோர் கையில் ஆளுகின்ற பொறுப்பு வருகின்ற நிலையில் அந்த அந்த நாட்டிலும் சிறுபான்மையோர் இருக்கத்தான் செய்வார்கள். ஆகவே சிறுபான்மையோருக்கு உரிய உரிமைகள் மதிப்புகள் அளித்து நல்ல வாழ்வுக்கு ஆதரவு அளித்து அவர்களுக்கு முழு வாழ்வும் தருகின்ற பண்பை பெரும்பான்மையோராக வருகின்றவர்கள் ஏற்றுக் கொள்கின்ற அத்தகைய சூழ்நிலை தான் ஜனநாயகத்தில் மதிக்கப்படுகின்ற பண்பாக உலகத்தில் இருக்கிறது.

ஆகவே வலிவு உள்ளவர்கள் வலிவு இழந்தவர்களுக்கு ஆதரவாக நின்று தங்களுடைய வலிவின் மூலமாக வலிவு இழந்தவர்களை அழிக்கும் முயற்சியில் இருந்து காப்பாற்றவேண்டும். மனித சமுதாயம் கொண்டு இருக்கிற பண்பும் அது தான். நீண்ட பல காலமாக ஜனநாயக வாதிகள் வற்புறுத்தி வருகின்ற ஒரு கொள்கையாக இருக்கிறது. அதைத்தான் மனிதப் பண்பில் அக்கறைகொண்ட சான்றோர்களும், ஆன்றோர்களும் தொடர்ந்து வற்புறுத்தி கொண்டு வருகின்ற தன்மையை நாம் பார்க்கிறோம். அந்த வகையில் பார்க்கின்றபோது இலங்கையில் இழைக்கப்பட்டு வந்த இழைக்கப்பட்டு வருகின்ற அத்தகைய கொடுமைகள் எல்லோருடைய உள்ளத்தையும் உலுக்கக்கூடியதாகும் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. ஜனநாயகப் பண்பில் மனிதப் பண்பில் அக்கறை உள்ளவர்கள் அத்தனை பேரும் இந்த மனிதப் பண்புக்கு மறுப்பாகச்செயல்படுகின்ற செயல்களை தடுத்துநிறுத்த வேண்டும். வாழ்வு உரிமை அளிக்கப்படவேண்டும். குடியுரிமை வழங்கப்படவேண்டும். சம வாழ்வு ஏற்படுத்தி தக்க அளவுக்கு பெரும்பான்மையோர் சிறுபான்மையோரை மதித்து நடக்க வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்த வேண்டிய கடமை உலகத்தில் இருக்கிற அத்தனை நாடுகளுக்கும் இருக்கிறது. மிக குறிப்பாக அண்டை நாடாக விளங்குகிற தொடர்பு உடைய நாடாக விளங்குகிற பல்வேறு வகைகளில் உறவு கொண்டு நட்பு கொண்டு வாழ்கின்ற நாடாக விளங்குகிற இந்தியாவுக்கு உண்டு. அதை விட இன்னும் மிக முக்கியமாக 5 கோடி தமிழர்கள் வாழ்கின்ற நமக்கு இன்னும் வரலாற்றுத் தொடர்பு மூலமும், மொழித் தொடர்பு மூலமும், கலாச்சாரத் தொடர்புமூலமும் நாகரீகத் தொடர்பின்மூலமும் பல கொள்வினை கொடுப்பனை மூலமும் உறவுத் தொடர்பின்மூலமும் மேலும் பல்வேறு வகைகளில் தொடர்பு கொண்டு இருக்கின்ற மக்களுக்கு ஏற்பட்டதால் தமிழகத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும் கொதிப்படைகிறார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 26

அவர்கள் இதிலே நல்லதொரு விளைவைக் காண வேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்பதிலே வியப்பொன்றும் இல்லை. அந்த அளவுக்குத் துக்கமும் துயரமும் தமிழக மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் வெளிப்படுத்தித் தீர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 10-50)

இலங்கையைப் பொறுத்த வரைக்கும் நாம் பார்ப்போமானால் 1981–வது ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்கெடுப்பின்படி (சென்ஸஸ்) அந்த நாட்டினுடைய மொத்த மக்கள் தொகை 1 கோடியே 49 இலட்சம் என்று வருகிறது. அந்த 1 கோடியே 49 இலட்சம் பேர்களில் சிங்களவர்கள் 1 கோடியே 10 இலட்சம் பேர்கள் என்றும், இலங்கை வாழ் தமிழர்கள் 19 இலட்சம் பேர்கள் என்றும் இலங்கை மூர்கள் என்று சொல்லப்படுகின்ற வர்கள் 11 இலட்சம் என்றும், இந்திய வழி தமிழர்கள் 8இலட்சம் பேர்கள் என்றும் பிற பகுதியை, பிற நாட்டைச் சேர்ந்தவர்கள், மலாய் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் 1 இலட்சத்து 11 ஆயிரம் பேர்கள் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் சிங்களவர்களுக்கு அடுத்தவர்களாக சிறுபான்மை யினர்களாக, தமிழர்கள், அங்கே வாழ்கிறார்கள்.

அங்கே ஏற்பட்டிருக்கிற மாச்சரியங்களை, தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டு வருகிற கொடுமைகளை, உள்ளபடியே தமிழகம் மிக நன்றாக அறியும். இப்பொழுது உச்ச கட்ட அளவிலே, 1983–வது ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து நடை பெற்று வருகின்ற இந்தக் கொடுமைகள் இதுவரையிலும் காணாத அளவுக்கும், இதுவரையில் நடைபெறாத அளவுக்கும், கொடூரம் நிறைந்ததாகவும், கொடுமைகள் வாய்ந்ததாகவும் இருந்த காரணத்தால்தான் தொடர்ந்து கொடுமைகள் இழைக்கப்பட்டு இழைக்கப்பட்டு, அவதிகளுக்கு உள்ளாக்கப்பட்டு, உள்ளாக்கப் பட்டு, பல்வேறு துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டு, ஆளாக்கப்பட்டு, இழப்புகளுக்கும் பாதுகாப்பற்ற நிலைமைகளுக்கும் ஆளாகி வருந்துகின்ற மக்களுக்கு இனி நிரந்தரமான, நிலையான தீர்வு ஏற்பட வேண்டுமென்ற உணர்வு எல்லா மக்களுக்கும் ஏற்பட்டிருக் கிறது. அதைத்தான் இந்திய அரசும் மற்றவர்களும், தமிழக அரசும், தமிழகத்திலே இருக்கிற பெருமக்களும் மற்றவர்களும், வற்புறுத்தி வருகின்ற தன்மையை நாம் பார்க்கிறோம்.

ஜூலைத் திங்கள் 23, 24 ஆம் நாட்களில் இலங்கையில் தமிழர் களுக்கு எதிராக சிங்கள வெறியர்களால், இந்தக் கிளர்ச்சிகள், கலவரங்கள் மூண்டன என்பதும், உள்ளபடியே கலவரத்தை அடக்க வழி வகுத்திருக்க வேண்டிய இராணுவத்தினரும், ஒரு ஜனநாயக நாட்டில் கலவரத்தை அடக்க வேண்டிய காவல் துறையினரும் அந்தக் கலவரத்திற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதும், சிங்கள வெறியர்களுக்குத் துணை போயிருந்தார்கள் என்பதும் மிகமிக வருந்தத்தக்கூடிய ஒன்றாகும். குடத்து நீர் வெதும்பினால் குளத்து நீரைக் கொண்டு வரலாம். குளத்து நீர்



1983 அக்டோபர் 25] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

வெதும்பினால் ஏரி நீரைக் கொண்டு வரலாம். ஏரி நீர் வெதும்பினால் கடல் நீரைக் கொண்டு வரலாம். கடல் நீரே வெதும்பினால் என்ன செய்வது என்று சங்க காலத்திலே ஒரு புலவன், ஒரு தலைவன், தலைவியிடத்திலே சொல்வதாகக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறான். கடல் நீரே வெதும்பினால் அதற்கு வள்வு நீர் இல்லது போலவும் என்று கூறுகின்ற அளவுக்கு, ஆளுகின்ற அரசைச் சேர்ந்த அடக்க வேண்டிய இராணுவமே, அடக்க வேண்டிய காவல் துறையினரே, இந்த வெறிச் செயல் களில் ஈடுபட்டு விடுவார்களானால், இலங்கையில் அதனை அடக்குவதற்கு எந்தச் சக்தியும் இல்லையென்ற நிலை ஏற்பட்டு விட்ட பிறகு, மனித உரிமைகளைக் காப்பாற்றுகின்ற சக்தி இலங்கைக்குள்ளே ஏற்படவில்லை, இல்லையென்றால், இலங்கைக் குள்ளே மனித உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய, மனிதப் பண்பைக் காப்பாற்ற வேண்டிய சக்தி இல்லையென்றுதான் ஆகிறது. கலவரத்திற்கு எதிராக இருக்க வேண்டியவர்களே, அதற்கு உடந்தையாக ஆகிவிட்டார்கள்.

அது மட்டுமல்ல, இராணுவத்தினர் மீறி நடக்கிறார்கள், காவல் துறையினர் மீறி நடக்கிறார்கள் என்ற அளவோடு மட்டும் அல்லாமல், அங்கே இருக்கிற அமைச்சரவையைச் சேர்ந்த சில அமைச்சர்களே தூண்டிவிடுகிறார்கள், அங்கே இருக்கிற அதிபரே அதற்குத் துணையாக இருக்கிறார் என்ற செய்திகள் வருகிற பொழுது, இலங்கையினுடைய எல்லைக்குள் அதிகாரத்தை வைத்து, ஆதிக்கத்தை வைத்து, செல்வாக்கை வைத்து அடக்கு வதற்கான சக்தி இல்லையென்ற சூழ்நிலை வருகின்றபொழுது, மற்றவர்கள் எல்லாம் குரல் கொடுக்க வேண்டிய இன்றி யமையாமை, தன்மை, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் ஏற்பட்டிருக்கிறது. ஜூலை 23, 24-லே தொடங்கிய கலவரம், இரண்டு மூன்று நாட்களிலே பரவலாகப் பரவி, தமிழர்கள் வாழ்கிற பகுதிகளிலே கொடுமைகள் இழைக்கப்பட்ட வரலாற்றை, செய்திகளை நாம் எல்லாம் நன்கு உணர்வோம். உடனே, ஜூலை 25 ஆம் தேதியே, நமது தமிழக முதல்வர் அவர்கள், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மூலம், இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பும், வாழ்வும் அளிப்பதற்கான முயற்சிகளை, இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியப் பிரதமருக்கு, தமிழக மக்களின் சார்பாக, தமிழகத்திலே வாழ்கிற அத்தனை பேர்களின் சார்பாக, தந்தி அனுப்பி னார்கள்.

ஜூலை 27 ஆம் தேதி, இங்கு அமைச்சரவை கூடியபொழுது இலங்கையிலே ஏற்பட்டுள்ள கொடுமைகளைத் தமிழக மக்களின் சார்பாக, இந்த அமைச்சரவை கண்டிக்கிறது என்று கண்டனம் தெரிவிக்கின்ற அளவுக்குக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி அந்தக் கண்டனத் தீர்மானத்தின் நகல்களை மத்திய அரசுக்கும், உரியவர்களுக்கும், தமிழக அரசின் சார்பாக நாம் அனுப்பி யிருக்கிறோம். அடுத்து, அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டி, எல்லோரும் ஒருமித்த முடிவின் அடிப்படையிலே செயலாற்ற வேண்டுமென்று கருதி

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 அக்டோபர் 25

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜூலை 28 ஆம் தேதி அனைத்துக்
கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள். சட்டமன்றப்
பேரவை, சட்டமன்றப் பேரவையில் இருக்கின்ற அனைத்துத்
தலைவர்கள் மட்டுமல்லாமல், சட்டமன்றத்திற்குள் வராத
அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அத்தனைத்
தலைவர்களுடைய ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையிலும்
கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழக மக்களின்
சார்பாக ஒருமித்த குரலை எழுப்புவதற்கான தீர்மானங்கள்
ஜூலை 28 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்திலே நிறைவேற்றப்
பட்டன. அதுமட்டுமல்லாமல் தமிழக மக்கள் அத்தனை
பேரும் கொதித்திருக்கிறார்கள் என்பதை உணர்த்தவும், தமிழக
மக்கள் அத்தனைபேரும் இலங்கையில் நடைபெறுகிற செயல்களை
கண்டிக்கிறார்கள் என்பதை உணர்த்தவும் கடை அடைப்பு
செய்வதென்றும், பொது வேலை நிறுத்தம் செய்வ
தென்றும் அரசு அலுவலகங்கள், அரசுத் துறைகள்
அத்தனையும் அன்றைக்கு அடைக்கப்படும் என்றும், பொதுத்
துறை, தனியார் துறை, மற்றைய துறைகள் எல்லாம் அடைக்கப்
படும் என்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் முழு
ஒத்துழைப்பின் அடிப்படையிலே அந்தத் தீர்மானம் வந்து.
இப்போது செயல்வடிவிலே கொண்டு வருவதற்காக ஆகஸ்ட்
இரண்டாம் தேதி வைக்கப்பட்டது. அப்படி நடைபெற்ற
கண்டன பொது வேலை நிறுத்தம், கண்டன கடை அடைப்பு
போன்றவைகளிலே மத்திய அரசும் கலந்து கொண்டது.

1981—லே இம்மாதிரி கொடுமைகள் இலங்கையிலே ஏற்பட்ட
போது நாம் அதை கண்டிப்பதற்காக ஊர்வலங்களை
நடத்தினோம்; கண்டன கூட்டங்களை நடத்தினோம்; கண்டனத்
தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றினோம் என்றாலும்,
அப்போதும் ஒரு நாள் பொது வேலை நிறுத்தத்தை, பொது
கடை அடைப்பை தமிழக முழுவதும் செய்து காட்டினோம்.
அப்போது கூட இந்திய அரசினுடைய அலுவலகங்கள் மூடப்
படுகிற சூழ்நிலை ஏற்படவில்லை. இப்போது ஏற்பட்டிருக்கிற
சூழ்நிலைகளினுடைய அடிப்படையில். இதுவரையில் ஈடுபடாத
இந்திய அரசு கூட ஈடுபட்டு, பொது வேலை நிறுத்தத்திலே
மத்திய அரசினுடைய அலுவலகங்கள் மூடப்படும் என்று சொல்லி
ரெயில்கள் ஓடாது என்று சொல்லி, மற்ற போக்குவரத்துக்கள்
ஆகாய விமானங்கள் நடைபெறாது என்று சொல்லி, அந்த
வகையிலே அவர்களும் ஈடுபடுத்திக் கொண்டு, கண்டனத்திற்காக
நடைபெறுகின்ற பொது வேலை நிறுத்தத்திலே, கடை
அடைப்பிலே நாங்களும் பங்கு கொள்கிறோம் என்ற உணர்வோடு
இந்திய அரசும் இதிலே கலந்து கொண்டது.

ஆகஸ்ட் 3 ஆம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய
கூட்டத்தை மீண்டும் கூட்டி மேற்கொண்டு எடுக்கப்பட
வேண்டிய நடவடிக்கைகள் முறைப்படி எடுக்கப்பட்டன.
அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட
முடிவிற்கிணங்க, தலைவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து ஒரு
மெமோராண்டம், ஒரு மனுவைத் தயாரித்து, அதை இந்திய
பிரதமரிடத்திலே கொடுத்து, தமிழக மக்களுடைய ஒருமித்த
உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டுமென்ற முடிவிற்கிணங்க



1983 அக்டோபர் 25] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

குறிப்பிட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் அத்தனை
பேரும் மாண்புமிகு முதல்வருடைய தலைமையின் கீழே மனு
ஒன்றை தயாரித்து நம்முடைய உள்ளக் குமுறல்கள் அத்தனை
யையும், அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே
எடுக்கப்பட்ட முடிவுகளை அடிப்படையாக வைத்து அந்த மனு
உருவாக்கப்பட்டு அதைக் கொண்டு போய் பிரதமர் அவர்கள்
கையிலே கொடுத்து நம்முடைய வேண்டுகோளை, கோரிக்கை
களை எடுத்துத் தெரிவித்து வந்தார்கள். அவற்றையெல்லாம்
சரிசெய்து பார்த்த இந்திய பிரதமர் அவர்கள் அதுபற்றி ஆவன
செய்யப்படும் என்று எடுத்துச் சொன்னதோடு மட்டுமல்லாமல்
இப்போது எந்த நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமோ அந்த
முயற்சியிலே ஈடுபட மத்திய அரசு தக்க நடவடிக்கைகளை
மேற்கொள்ளுமென்ற அளவிற்கு அவர்கள் பதில் கூறியிருக்
கிறார்கள்.

அதற்குப் பிறகு ஆகஸ்ட் 6 ஆம் தேதி மீண்டும் அனைத்துக்
கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை மீண்டும் முதலமைச்சர்
அவர்கள் கூட்டி, இருக்கிற நிலைமைகளுக்கேற்ப, எந்தெந்த
வகையிலே இலங்கையிலே அவதிப்படுகிற தமிழர்களுக்கு உதவி
செய்வது என்பதற்கெல்லாம் தீர்மானம் போட்டு, அதற்கான
வகையிலே நிதி திரட்டி வைப்பதென்றும் முடிவு செய்த அதே
நேரத்தில் மத்திய அரசும் நிதி திரட்டுகிற முயற்சியிலே ஈடுபடுகிற
ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே இலங்கை வாழ் தமிழர்
களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, அதற்கென்று மாண்புமிகு
முதல்வர் அவர்கள் நிதி திரட்டுகிற வகையிலே, எடுத்த எடுப்பிலே
தமிழக அரசின் சார்பிலே 15 லட்சம் ரூபாயைத்தந்து, அது மட்டு
மல்லாமல் மத்திய அரசிலே இந்தியப் பிரதமர் அவர்கள் துவக்கி
யிருக்கிற நிதிக்கு தமிழக அரசின் சார்பிலே 10 லட்சம் ரூபாயைத்
தமிழகம் வழங்கும் என்று எடுத்துச் சொல்லி, அந்த வகையிலே
நிதி திரட்டுகிற முயற்சிகள் வருகின்றன. பிற நாடுகளிலேயிருந்து
நிதி திரட்டுகிற முயற்சியிலே மத்திய அரசு ஈடுபட்டிருப்பதாக—
அந்த குழுவிலே நான் ஒரு உறுப்பினராக இருப்பதின் காரணமாக
அந்தக் கூட்டத்திற்கு சென்ற போது தெரிய வந்தது—பிரதமர்
என்ற முறையில் அவர்கள் வேறு சில நாடுகளுக்கு வேண்டுகோள்
விடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில
அரசாங்கங்களுக்கும் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்
கிறார்கள். எல்லா மாநிலங்களும் தங்களால் இயன்ற
அளவிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சிலபல வேற்று
நாடுகள் கூட, இலங்கை வாழ் தமிழர்களுக்கு உதவி அளிக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு நிதி அளித்துக் கொண்டு வருகிற
தன்மையையும் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தன்மைகள்
பாதிக்கப்பட்டிருக்கிற, வாழ்விழந்து வாழ்கின்ற அவர்களுக்கு
வாழ்வு தர செலவு செய்யப்படும் என்ற அளவிற்கு அதற்கான
முயற்சிகளை மத்திய அரசு செய்து கொண்டு வருகிறது.
இந்தப் பிரச்னை தொடர்ந்து வருகிறது என்பதை எடுத்துச்
சொல்லும் பொழுது, திடீரென்று இது ஏற்பட்டது அல்ல
என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு

உணர்வார்கள். அந்த அடிப்படையிலே நிலையான தீர்வு காண வேண்டும் ; நிலையான வாழ்வு காண வேண்டுமென்ற முறையில் இலங்கைத் தமிழர்கள் அத்தனை பேரும் இன்றைக்குத் துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

1948 ஆம் ஆண்டு இலங்கை விடுதலை பெற்றது பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருந்து. 1948 இல் ''சிலோன் குடியுரிமைச் சட்டம்'' என்ற சட்டத்தை, உடனேயே, செப்டம்பர் மாதத்திலேயே அவர்கள் கொண்டு வந்து நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அதுவரையில் வாக்குரிமை, சொத்துரிமை, சட்டப் பாதுகாப்பு போன்ற உரிமைகளுடன் இலங்கை குடிமக்களாக வாழ்ந்த பல இலட்சம் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த தமிழர்கள் குடியுரிமையை இழந்தார்கள். 1948 ஆம் ஆண்டிலேயே தமிழர் களுடைய உரிமைகளையும், மற்றவைகளையும் அழிக்கின்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டு விட்டார்கள் என்பதற்கு அடையாளமாகத்தான் அந்த ''சிலோன் குடியுரிமைச் சட்டம்' வந்தது. அதன் மூலமாக அங்கிருந்த தமிழர்களுடைய வாக்குரிமை போயிற்று; சொத்துரிமை, சட்டப் பாதுகாப்பு உரிமை போன்றவையெல்லாம் போனதற்குப் பிறகு இலங்கையிலே வாழ்கின்ற—மலைப் பகுதியிலே வாழ்கின்ற தோட்டத் தொழிலா ளர்களின் சார்பாக அதற்கு முன்பு ஏழு உறுப்பினர்கள் இருந்த பாராளுமன்றத்திலே இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு ஒரே யொருவர்தான் வர முடிந்திருக்கின்ற அளவிற்கு அதனுடைய எண்ணிக்கையைக் குறைத்து சிங்களவர்களுடைய ஆதிக்கத்தை அதிகப்படுத்துவதற்கு அப்பொழுதிருந்தே திட்டமிட்டிருக் கிறார்கள். அப்பொழுதே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தக் குடியுரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், பாராளு மன்றத்திலே பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அதைப்பற்றி பாராளுமன்றத்தினுடைய அரசுகள் அவையிலே பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> ''காரணங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அந்தச் சட்டத்திற்கு நியாயமான காரணங்கள் எதுவுமே கிடையாது. சில கட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய அரசியல் இலாபம்தான் அந்தச் சட்டத்திற்கான காரணமாக இருக்க முடியும்.''

என்று இந்தியப் பாராளுமன்றத்திலே தன்னுடைய உணர்வை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களே அப்பொழுதே எழுப்பி யிருக்கிறார்கள்.

1949 இல் இந்திய–பாகிஸ்தான்வாசிகளின் குடியுரிமைச் சட்டம் என்றும், சிலோன் நாடாளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டம் என்றும் இந்தியப் பரம்பரை வழிவந்த தமிழர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. மலை வாழ் தமிழர்கள் அதனால் தாங்கள் தேர்ந்தெடுக்கின்ற உறுப் பினர்களின் எண்ணிக்கையையும் இழந்தார்கள்.



1954 இல் தமிழ், சிங்களம் அகிய இரண்டும் இலங்கையின் ஆட்சிமொழியாகும் என்று அப்பொழுது பிரதமராக இருந்த கொத்தலவாலே யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற கூட்டத்திலே உறுதிமொழி தந்துவிட்டுச் சென்றதற்குப்பிறகு சிங்களவர் களுடைய கடும் எதிர்ப்பும், சிங்கள வெறியர்களின் கடும் எதிர்ப்பும் இருந்ததன் காரணமாக அப்படி வாக்குறுதி கொடுத்ததைக்கூட நிறைவேற்ற முடியாத அளவிற்கு, சிங்களமும் தமிழும் ஆகிய இரண்டும் இலங்கையினுடைய ஆட்சிமொழியாக ஆகும் என்று வாக்குறுதி அளித்ததைக்கூட நிறைவேற்ற முடியாத அளவிற்கு அந்த வாக்குறுதி கைவிடப்பட்டது.

1956 இல் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டம் வந்தது. சிங்களம் கற்காத தமிழர்கள் எல்லாவகையிலும் அழிக்கப்பட்டார்கள் என்ற வரலாற்றையெல்லாம் பேரவையைச் சார்ந்த உறுப்பினர்கள் நன்கறிவார்கள்.

1957 இல் சிங்களம் மட்டுமே என்ற அந்தக் கொள்கையை எதிர்த்துத் தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் தலைமையில் அறப்போராட்டம் நடைபெற்றது. அந்த அறப்போராட்டத்தின் காரணமாக ''பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கை'' ஒன்று ஏற்பட்டது. அந்த உடன்படிக்கையிலேகூட வடக்கு, கிழக்கு மாநிலங்களிலே தமிழிலே நிர்வாகம் நடத்துவது என்றும், அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குக் கூடுதல் அதிகாரம், பொறுப்புகளைத் தருவது என்றும் 'பண்டாரநாயகா செல்வநாயகம் உடன்படிக்கை' சொன்னாலும் கூட, பிறகு சிங்களவர்களின் வெறிச் செயல்களின் காரணமாகவும், எதிர்ப்பு களின் காரணமாகவும், புத்த பிட்சுகளின் எதிர்ப்பின் காரண மாகவும், அந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வரமுடியாத அளவிற்கு ஆளாகி, அப்படிச் செய்து கொண்டிருந்த உடன் படிக்கையை நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

1960 இல் இலங்கை நீதிமன்றங்களில் சிங்களம் மட்டுமே பயன்படுத்தப்படும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1964 இல் லால்பகதூர் சாஸ்திரி–திருமதி மண்டாரநாயகா உடன்பாடு ஏற்பட்டு, 1981-க்குள் ஆறு இலட்சம் தமிழர்களை வெளியேற்றுவது என்றும், மூன்றே முக்கால் இலட்சம் தமிழர் களை மட்டுமே நாடு உடையவர்களாக ஆக்குவது என்றும் ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு அதிலேயும் முழுவதையும் அனுப் பாமல், அனுப்ப வேண்டுமென்றால் அவர்களுக்கு இவ்வளவு பணம் கொடுத்தனுப்ப வேண்டும்: சொத்து கொடுத்தனுப்ப வேண்டுமென்றெல்லாம் உடன்படிக்கையில் இருக்கிறது. அந்தப் பணமும் இல்லாமல், சொத்தும் இல்லாமல், அனுப்ப வேண்டிய வர்கள் அத்தனை பேர்களையும் அனுப்பாமல். பல பேர்களை அந்தக் காலம் கடந்த நிலையிலே, அங்கேயே நாடற்றவர்களாக ஆக்குகின்ற சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

1965 இல் தமிழரின் குறைபாடுகள் சிலவற்றை நீக்க பிரதமர் டட்லி சேனநாயகா தமிழர் தலைவர்களோடு சேர்ந்து உடன்படிக்கை செய்து கொண்டாலும்கூட, அந்த உடன்படிக்கையும்கூட நடைமுறைக்குக் கொண்டுவரப்படாத முடியாத அளவிற்கு சிங்களவர்களின் வெறித்தனமும், வெறிச் செயலும் எதிர்ப்புப நடைபெற்று அந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வரவில்லை.

1970 இல் கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் தமிழ்க் கல்விப் பயிற்சிக்குத் தீங்கிழைத்ததன் காரணமாகத் தமிழ் மாணவர்களுடைய எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றவைகளில் பெரும் தொல்லை கொடுக்கப்பட்டது என்பதையும் அறிவோம்.

1971 இல் அரசமைப்புச் சட்டத் திருத்தம், புத்த மத ஆதிக்கத்திற்கு இடம் தந்து, சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழியாக இருப்பதற்கு ஆக்கம் தருகின்ற அளவிற்கு அந்த அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

1975 இல் தேயிலைத் தோட்டங்களை அரசுடைமையாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு தமிழ்த் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குதல்; சிங்களவர்களை வேலைக்கு வைத்தல் என்று, நாடற்றவர்களாக முதலில் ஆக்கப்பட்ட தமிழர்களை இந்தச் சட்டத்தின் மூலமாக வேலையற்றவர்களாகவும் ஆக்குகின்ற அளவிற்கு—நாடற்றவர்கள் மட்டுமல்லாமல் வேலையற்றவர்களாகவும் ஆக்குகின்ற போக்கும் கூட அங்கே ஏற்பட்டது.

1978–லே அரசியல் அமைப்புச் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி முறை வருகின்ற தன்மையிலும் கூட சிங்களமே ஆட்சி மொழியாகும். சிங்கள ஆதிக்கத்திற்கு அதிக இடம் தருகின்ற அளவுக்கு 1981-லே காரணம் சொல்லாமல் கைது செய்கின்ற சட்டம், சுடுவதற்கான சட்டம், விசாரணை இல்லாமல் சுடப்பட்டவர்களை எரிப்பதற்கோ, அல்லது புதைப்பதற்கோ உரிமை வழங்குகின்ற சட்டம், அதுமட்டுமல்லாமல் பேச்சுரிமை, குடியுரிமை, தொழில் உரிமை, வாக்குரிமை ஆகியவற்றை எல்லாம் பறிக்கிற சட்டங்களை எல்லாம் கொண்டு வந்து இப்போது இவ்வளவு கலவரம் நடக்கின்ற அளவுக்கு வந்திருக்கின்றது என்றால் இது எதைக் காட்டுகின்றது என்று சொன்னால் இதற்கு ஒரு நிரந்தர நிலைமையைக் காண வேண்டும். தொடர்ந்து அவர்களுடைய நல்வாழ்வுக்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் எல்லாம் தடுக்கப்படுகின்றன என்ற உள்ளக்குமுறல் இருக்கின்ற காரணத்தாலே தான் இந்தத் தடவை மிக அதிகமாக ஈடுபட வேண்டிய கட்டம் மற்றைய நாடுகளுக்கும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் அவைக்கும் இன்னும் அறிப்பாக இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அத்தனை பேரும் வற்புறுத்தி வருகிறார்கள்.



1956–ல் சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழி என்று சட்டம் வந்தபோது தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். தமிழர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டன. ஆகவே 1958-லே பண்டா-செல்வம் உடன்படிக்கையை எதிர்த்து சிங்களர்கள் கலவரம் செய்தனர். அதிலே தமிழர்கள் கொல்லப்பட்டார்கள், உடைமைகள் அழிக்கப்பட்டன. இன வெறி ஓய்ந்ததற்குப் பிறகு நெருக்கடி நிலையும் கூட கொண்டுவரப்பட்டது.

1961-ல் ஆட்சிமொழிக் கொள்கையை எதிர்த்து திரு. செல்வநாயகமும் மற்ற தமிழர் தலைவர்களும் அமைதியான சத்தியாகிரகத்தில் காந்திய வழியில் நின்றனர். போலீஸார் தாக்கினர். மண்டை உடைந்து திரு. அமிர்தலிங்கம் போன்றவர்கள் எல்லாம் ரத்தம் சொட்டக்கூடிய சூழ்நிலை இருந்தது. கடும் போராட்டம் நடந்தது. தடியடிப் பிரயோகம் பாராளுமன்ற வாயில் அருகே நடந்தது. தமிழர் பகுதிகளில் ராணுவ ஆட்சி போடப்பட்டது. சிறுபான்மையோரான தமிழர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இது 1961-லே நடைபெற்றது. நீதிபதிகளின் குழு ஆதாரங்களுடன் பின்பு ஒரு அறிக்கையை அளித்தது.

1971-ல் திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சியின் கீழ் சிங்களர்களின் தாக்குதல் துவங்கியது. வடக்கு, கிழக்கு மாநிலங்களில் ராணுவ ஆட்சி வந்தது. விசாரணை இல்லாமல் வதை செய்யும் சட்டம் போடப்பட்டது. 1974-ல் ஜனவரி 10 ஆம் தேதி கூடிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலவரம் செய்யப்பட்டது. வந்திருந்த பிரதிநிதிகள் மீது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அதிலே 9 தமிழர்கள் உயிர் இழந்தார்கள். 1976-ல் புத்தளம் என்ற ஊரில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது போலீஸார் சுட்டனர். மண்டியிருந்த 7 பேர்கள் மண்ணில் பிணமாகச் சாய்ந்தனர். தீவின் பல்வேறு பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் கண்டனம் காட்டியதன் காரணமாக பலவிதமான தாக்குதல்களுக்கு அவர்கள் ஆளாயினர் என்ற வரலாறுகள் எல்லாம் வருகின்றன.

1982-ல் நாச வேலைகளைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் 8 கிறிஸ்துவ பாதிரிகள் கைது செய்யப்பட்டனர். விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டனர். 1982 கிறிஸ்துமஸ் துக்க நாளாகக் கிறிஸ்துவரால் கொண்டாடப்படுகின்ற அளவுக்குக் கூட வெறுப்புணர்ச்சி வந்தது.

இன்றைக்கு இருக்கின்ற திரு. ஜெயவர்த்தனே அவர்கள் 1977-83-க்கு இடையிலே தமிழர்களுடைய ஆதரவுடன் ஆட்சி அமைக்கின்ற வாய்ப்பைப் பெற்றார். 1977, 1979, 1981, 1983 ஒன்று இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அடுத்தடுத்து இன வெறி படை எடுத்து இலங்கை வாழ் தமிழர்களை அல்லல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 25

படுத்தியது. ரத்த வெறியாட்டத்திற்கு அங்கே மந்திரிகளும்
ஆதரவு தருகிறார்கள்' அரசாங்கமும் ஆதரவு தருகின்றது,
போலீஸும் ஆதரவு தருகின்றது என்ற கொடுமை வளர்ந்து
இருக்கின்ற காரணத்தால நாம் சிந்திக்க வேண்டியவர்ளாக
இருக்கிறோம். உள்ளபடியே இந்திய அரசு பண்டித நேரு
அவர்கள் காலத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி, இப்போது
திருமதி இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருக்கும்
போதும் சரி பிற நாடுகளினுடைய உள்விவகாரத்தில் அதனுடைய
உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடவில்லை. இது பொதுவாக
எல்லா நாடுகளிலும் கொள்ளப்படுகின்ற பொதுவான கொள்கை.
அதே மாதிரி நம்முடைய நாட்டுப் பிரச்சினையிலும் வேறு எந்த
நாடும் தலையிடக் கூடாது. ஏனென்றால் அது நம்முடைய
பிரச்சினை.

ஆனால் இப்போது நடைபெற்றிருப்பது உள்நாட்டுப்
பிரச்சினை என்ற அளவுக்கு நிற்குமேயானால் யாரும் கவலைப்
பட்டிருக்க மாட்டார்கள். இந்தப் பிரச்சினை உள்நாட்டுப்
பிரச்சினையை மீறி நிற்கின்றது. சாதாரணமான கலவரம்,
சாதாரணமான சட்டதிட்டங்கள் அடக்குமுறைகள் என்றால்
அது உள்நாட்டுப் பிரச்சனையாக இருக்கலாம். ஆனால் ஒரு
இனமே அழிக்கப்படுகின்றது. இனவெறி செயல்கள் நடைபெறு
வதன் காரணமாக தங்களுடைய மெஜாரிட்டி வலிமை வைத்துக்
கொண்டு, ஆட்சி வலிமை வைத்துக்கொண்டு பலாத்கார
வலிமை வைத்துக்கொண்டு, ராணுவ வலிமை வைத்துக்
கொண்டுஒரு இனத்தைஅழிக்கின்ற முயற்சியில் ஒரு நாடு ஈடு
படுகின்ற போது நாணயத்தை நிலைநாட்ட விரும்புகின்ற,
நீதியை நிலை நாட்ட விரும்புகின்ற நேர்மையை நிலை நாட்ட
விரும்புகின்ற உலக நாடுகள் எல்லாம் அதிலே தலையிட்டுத்தான்
தீரவேண்டிய ஒரு அவசியம் ஏற்படுகின்றது. ஆகவே இது தலை
யீடு ஆகாது. நீதியை நிலை நாட்டுவதாகும். நேர்மையை நிலை
நாட்டுவதாகும். அது உள்நாட்டுப் பிரச்சினையிலே நாம் தலை
யிடுவதாக ஆகாது. அதை விட மற்றைய நாடுகள் எல்லாம்
இதிலே அக்கறை செலுத்தி நீதியை நிலை நாட்டவேண்டும்.
ஐக்கிய நாடுகள் அவை ஏற்பட்டதன் காரணமே உலக நாடு
களுக்குப் பாதுகாப்பைத் தர; ஐக்கிய நாடுகள் அவை ஏற்பட்ட
தன் காரணமே உலகநாடுகளுக்கிடையிலே சண்டை மூளாமல்
இருக்க; ஐக்கிய நாடுகள் அவை ஏற்பட்டதன் காரணமே அணு
ஆயுதப் போர்கள் காரணமாக உலக மக்கள் அழிந்தொழியாமல்
பொருளாதாரம் நசிந்து போகாமல் காப்பாற்ற, ஐக்கிய நாடுகள்
அவையின் முக்கிய நோக்கமே அடிப்படை உரிமைகளை
மனிதனுக்கு வழங்க; ஐக்கிய நாடுகள் அவை எற்பட்டதன்
காரணமே சிறுபான்மையினர் பெரும்பான்மையோரால்
கொடுமைப்படுத்தப்படாமல் தடுத்து நிறுத்துகின்ற முயற்சிகள்
ஏற்படுத்துவதற்கு. ஆகவேதான் ஐக்கிய நாடுகள் அவை இதிலே
ஈடுபடவேண்டும். ஐக்கிய நாடுகள் அவை ஒரு சமாதானப்
படையை அனுப்பவேண்டும். ஐக்கிய நாடுகள் அவை பொறுப்பு
ஏற்கவேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறோம். உலக
நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டிலே ஐக்கிய நாடுகள் அவை
நுழைகிறது என்றால் அது ஒரு நாட்டிலே இன்னொரு நாடு
தலையிடுகிறது என்பதாகாது.



1983 அக்டோபர் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஐக்கிய நாடுகள் அவை தன்னுடைய கடமையைச் செய்
கிறது என்று தான் ஆகும். ஐக்கிய நாடுகள் சமாதானப் படை
ஒரு நாட்டிற்குப் போகிறது என்று சொன்னால், அங்கே
அமைதியை நிலை நாட்ட விரும்புகிறது; அங்கே உரிமையை
வழங்கக் கருதுகிறது என்று சொன்னால், வன்முறை செயல்களில்
ஈடுபடும் பெரும்பான்மையோரை அந்தச் செயலில் இருந்து தடுக்க
நினைக்கிறது என்று சொன்னால், அது ஐக்கிய நாடுகள் அவைக்கு
எல்லா நாடுகளும் சேர்ந்து கொடுத்த உரிமையை ஐக்கிய
நாடுகள் அவை பயன்படுத்துகிறது என்பதாகும். ஐக்கிய நாடுகள்
அவை அப்படிச் செய்தால் அது தலையிடுவதாக ஆகாது.
ஏனென்றால், ஐக்கிய நாடுகளின் பொறுப்பில் அது ஒன்று.
ஐக்கிய நாடுகளின் கடமைகளில் அது ஒன்று. அந்த வகையிலே
ஐக்கிய நாடுகள் அவை தன்னுடைய கடமையைச் செய்ய
தன்னுடைய முழு செல்வாக்கைப் பயன்படுத்துகிறது என்பதாகும்.
அப்படிப்பட்ட முறையில் தன்னுடைய முழு அதிகாரத்தையும்
காலத்தாழ்வுக்கு இடம் இல்லாத அளவிற்கு பயன்படுத்த
வேண்டும் என்று தான் நாம் கோருகிறோம்.

(முற்பகல் 11—10)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் குழு பிப்ரவரியில் கூடும்,
அதற்குப் பிறகு தான் இதைப்பற்றித் தீர்மானிக்கும் என்று
சொன்னால் அதற்கிடையிலே எவ்வளவோ விபரீதமான
செயல்கள் எல்லாம் கூட இலங்கையிலே நடந்து முடிந்து, அழிந்து
ஒழிந்து போய்விடும். ஆகவேதான், ஐக்கிய நாடுகளின் அவை
தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி இதிலே ஈடுபட
வேண்டும் என்பதை இந்தத் தீர்மானத்திலே நாம் வலியுறுத்தி
யிருக்கிறோம். அதற்கான முயற்சியில் அது ஈடுபடவேண்டும்
என்று கூறியிருக்கிறோம். ஜூலை மாதம் 21-ஆம் தேதி
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதம
அமைச்சருக்கு அனுப்பிய தந்தியில் கூட ஐக்கிய நாடுகள் அவை
தலையிடுவதன் பேரில் தான் அங்கே ஒரு அமைதி சூழ்நிலையை
ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் அந்தத் தந்தி
யின் மூலமாக எடுத்து வைத்தார்கள்.

ஆனால், இந்தியா தலையிட வேண்டும் என்பதற்காக பல்வேறு
காரணங்கள் இருக்கின்றன. அங்கே ஈழத் தமிழர்கள். ஈழத்திலே
வாழ்கின்ற இலங்கை வாழ் இந்தியப் பரம்பரையிலே வழிவந்த
தமிழர்கள், அங்கே தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்ற
வர்கள், தமிழ் பேசும் முஸ்லீம்கள் ஆகியவர்கள் மட்டுமல்லாமல்
அங்கே இந்தக் கலவரங்களின் மூலமாக இந்தியாவுக்குச்
சொந்தமான இரண்டு வங்கிகளும் தாக்கப்பட்டு இருக்கின்றன.
இந்திய தூதுவராலயம் தாக்கப்பட்டு இருக்கிறது இந்தியக்
குடியுரிமை பெற்று அங்கே வியாபாரம் செய்கிறவர்கள் அநேகம்
பேர் தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்திய
பிரஜையாக இருந்து, அங்கே வாணிபம் பெறும் உரிமையைப்
பெற்றுப் போய் இருக்கிறவர்கள். இன்னும் சிலபேர் அந்த
நாட்டை சுற்றிப் பார்க்கும் சுற்றுலாப் பயணிகளாக இந்தியக்
குடியுரிமை பெற்றவர்கள் சென்று இருக்கிறார்கள். அவர்கள்
எல்லாம் தாக்கப்பட்டு இருக்கிறபோது, இந்தியா அதை அதட்டிக்

கேட்க அதிலே தலையிட, அந்த மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க உரிமை இருக்கிறது என்ற முறையிலேதான் எல்லோரும் அதை வற்புறுத்தி வருகிறார்கள். அந்த முறையிலேதான் இந்திய அரசும் அதிலே ஈடுபடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறது.

அது மட்டுமல்லாமல், உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர்.வி. கிருஷ்ணய்யர் அவர்கள் கூட இலங்கை வாழ் தமிழ் மக்கள் பிரச்சனை பற்றி குறிப்பிடும்போது தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள இந்தியர்கள் தாக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. அதைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்க முடியுமா? முடியாது. இந்தியர்களுடைய சொத்துக்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு. இனப்படுகொலை செய்து வரும் அரசு என்று இஸ்ரேலிய அரசு குற்றம் சாட்டப்பட்டாலும், அமெரிக்காவில் உள்ள யூதர்கள் இஸ்ரேலுக்கு நவீன தளவாடங்களை அனுப்பு என்று சொல்கிறார்கள். இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர் பாதிக்கப்படும்போது நான் ஏன் தலையிடக்கூடாது. தலையிட முடியும். தலையிட்டே ஆக வேண்டும். இந்திய அரசு தலையிட்டே தீரும் என்று திட்டவட்டமான கருத்தை அவர்கள் சொல்லியிருப்பது மட்டுமல்லாமல் இலங்கையில் சிங்களவர்கள் நடத்தியுள்ள படுகொலைகள், கொள்ளைகள் அராஜகங்கள் ஆகியவற்றின் தடயங்கள் அழிக்கப்படுவதற்கு முன்பு உலக நாடுகளின் நீதிபதிகளைக் கொண்ட குழு ஒன்று உடனடியாக நேரில் சென்று விசாரணை நடத்த வேண்டும்; அந்த விசாரணையில் கிடைக்கும் உண்மைகளை உலகத்தின் முன் வைத்து உலக நாடுகளின் கருத்தைத் திரட்ட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, தனி நாடு கேட்பது பற்றி விமர்சிக்க நமக்கு உரிமையில்லை. அவர்கள் எத்தனையோ பேர்களைப் பலி கொடுத்து தியாகங்கள் பல புரிந்து இருக்கிறார்கள். தனி நாடு வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி முடிவு எடுக்க வேண்டியது அவர்கள்தான். ஆனால் மனித உரிமைகள் தடுக்கப்படுவதற்கு எதிராக உலக நாடுகளின் கருத்தைத் திரட்டுவது தான் நம்முடைய முக்கியமான கடமையும், பொறுப்புமாகும் என்று உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த முறையிலே தான் ஏற்கனவே கூட இப்படிப்பட்ட பிரச்னை வந்தபோது அந்த உணர்வை பலரும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்னை முன்பு ஒரு முறை வந்தபோது, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தனிப்பட்ட குற்றங்கள் வீட்டிற்குள்ளே — 4 சுவற்றிற்குள்ளே நடைபெறலாம். பொதுமக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் ஒரு நாட்டின் எல்லைக் கோட்டிற்குள் நடந்தேறலாம். எல்லைக்கோடுகள் புனித



மானவை என்று நாட்டுக்குள் நடைபெறும் அநீதிகளைக் கண்டிக்க உலகம் தயங்குமானால் மனித குலம் முன்னேற வழியில்லாமல் போய்விடும். அது கொடுங்கோன்மைக்கு பெரிய சாசனம் வழங்கியதாக அமையும் என்று திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற கொடுமைகள் பற்றி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து 1960 மார்ச் 21-ம் நாள் பாராளுமன்றத்தில் பேசுகிறார். சார்பில்லா லங்கா நகர அமைப்பு ஆகிய இடங்களில் போலீசாரால் சுடப்பட்டு இறந்த ஆப்பிரிக்க மக்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தபோது, ''நடைபெற்ற கோரச் சம்பவங்களை இந்த அவைக் கண்டிக்கிறது; பிறந்த நாட்டின் உரிமைகள் பறிக்கப்பட்டு, இனவெறியால் நசுக்கப்பட்டு, போலீசார் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி துன்புறும் ஆப்பிரிக்க மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை இந்த அவை தெரிவித்துக் கொள்கிறது'' என்று இந்த உணர்விலே ஈடுபாடு கொண்டு, விளக்கங்கள் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமில்லாமல் மேலும் அவர்களே, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடக்கூடாது என்பதும், நமது நாட்டு உள் விவகாரத்தில் வேறு ஒரு நாடு ஈடுபடுவதை நாம் விரும்ப மாட்டோம் என்பதும் சாதாரணமாக எல்லோரும் கடைபிடிக்கின்ற சில கொள்கைகளாகும். சில சமயங்களில் அசாதாரணமான நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டால் அந்த நேரத்தில் சாதாரணமாக கடைபிடிக்கும் முறைகளைக் கடைபிடித்தால் நமது உள்ளக் குமுறல்களை சரியாக வெளிப்படுத்த முடியாமல் போய்விடும். சரியாக மக்கள் எண்ணங்களை, உணர்வுகளை பிரதிபலிக்கவே இந்த அவை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைப்போடுவது சாதாரணமான முறை இல்லை. என்றாலும் நடைபெற்றுள்ள கோரச் சம்பவம் மீது நாட்டில் எழுந்துள்ள அழுத்தமான உணர்ச்சியை வெளியிடுவதற்கு இந்த நாடாளுமன்றத்திற்கு ஒரு வாய்ப்பு தேவை என்ற காரணத்தாலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் என்றுகூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏன் நான் இவற்றையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த அளவுக்கு நாட்டிலே மனிதாபிமானம் கெடும்போது, உரிமை பறிக்கப்படும்போது அதிலே தலையிடுகின்ற இத்தகைய பெரும் பொறுப்பு அத்தனை பேர்களுக்கும் இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த வகையிலே தான் மத்திய அரசுக்கு நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லும்போது எடுக்கவேண்டிய நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கும் என்று சொல்லி, நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அரசினர் தனித் தீர்மா...



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 25

அந்த வகையிலேதான் ஜயவர்த்தனேயுடன் நேராகப் பேசு
வதற்கு வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் அவர்களை
அனுப்பி வைத்ததற்குப் பிறகு, திரு. பார்த்தசாரதி அவர்களை
அனுப்பி வைத்ததற்குப் பிறகு, ஈழநாட்டைச் சேர்ந்த தமிழர்
தலைவர்கள் அமிர்தலிங்கம் சிவ. சிதம்பரம் மற்றும்
தொண்டைமான் உட்பட அத்தனை பேர்களும் இப்பாடு ப்பட்ட
நடவடிக்கையை இந்திய அரசு எடுத்த பிறகுதான் அங்கே
கொடுமை குறைந்திருக்கிறது; இல்லை என்றால் இன்னும் அதிக
மாக கூட நடந்திருக்கும் என்று குறிப்பிட்டார்கள். ஆக இந்த
முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம், இந்த முயற்சி வெற்றி
பெறவேண்டும்; எங்களுக்கு நிலையான, நிலைத்த பாதுகாப்பு
ஏற்படுவதற்கான முயற்சிகளை எடுத்துவரும் இந்திய அரசை
பாராட்டுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை
அனுப்பி வைத்ததற்கு நாங்கள் முழு ஆதரவு தருகிறோம் என்ற
உணர்வை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்திய பேரரசு நமது உணர்வுகளைப் புரிந்துகொண்டு
ஆகஸ்ட் 2-ந் தேதி நம்முடன் கலந்துகொண்டு, நாம் எப்படிப்
பட்ட கண்டனத்தை வெளியிட்டோமோ அந்தக் கண்டனத்
திற்கு ஆதரவு தந்தது மட்டுமல்ல; ஜயவர்த்தனேவுக்கு கண்டனம்
தெரிவிக்கின்ற வகையில் 9-8-1983 அன்று, இலங்கையில் வீடு
களை இழந்து வெறும் கையுடன் அனாதைகளாக இருக்கும்
தமிழர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்கிறது இலங்கை
அரசு, ஜயவர்த்தனே இதற்கு உத்தரவு போட்டிருக்கிறார்,
இதை இந்திய அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்ற
அளவுக்கு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய உணர்வுகளை போது
மான அளவுக்கு அகில உலக அரங்கில் வெளியிடக்கூடியப்
பணிகளை இந்திய அரசு செய்துவருகிறது. அதை விரைவாகச்
செய்யவேண்டும். அதற்காக நாம் மத்திய அரசை தொடர்ந்து
வலியுறுத்தி வருகிறோம். இந்தியப் பிரதமர் அவர்கள் சுதந்திர
தினத்தன்று பேசும்போது, ''இலங்கையின் உள்நாட்டு விவகாரங்
களில் தலையிட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இல்லை
ஆனால் அங்கே வன்முறை காரணமாக இந்திய மக்கள், குறிப்
பாக இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைப்
பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது'' என்று சொல்லி
யிருக்கிறார்கள். அங்கே நடைபெறுகின்ற வன்முறையால்
இந்தியர்கள் பலியாகி வருகிறார்கள். அதைப்பார்த்துக்
கொண்டு, கவலைப்படாமல் இருக்க முடியாது, கடுமையான
கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சொல்லக்
கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.



1983 அக்டோபர் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

''நமக்கும் இலங்கைக்கும் நல்ல நட்பு நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அங்கே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பாதகம் ஏற்படாமல் உதவுவது மிகமிக முக்கியம். ஆகவே இந்தப் பிரச்சனையில் யாரும் உணர்ச்சிவசப்பட வேண்டாம்'' என்று தெரிவித்திருக்கிறார்கள். பாராளு மன்றத்தில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசும்போது கூட நம்முடைய எண்ணத்தை வலியுறுத்தி, ''இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெறும் சம்பவத்தைப் பார்த்துக்கொண்டு இந்தியா கண்ணை மூடிக்கொண்டு இருக்காது. மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடாது. ஆனால் இப்படிப்பட்ட நடைமுறைகளை இந்தியா கண்டித்து வந்திருக்கிறது'' என்றும் மிகுந்த வேதனையோடு பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11–20)

''மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடவில்லை. அதேசமயம் மக்கள் மனிதாபிமானம் இன்றி அடக்கப்பட்டால், ஒடுக்கப்பட்டால் அதை இந்தியா எப்போதும் கண்டித்து வந்திருக்கிறது என்று குறிப்பிடுவது மட்டுமல்ல. நமது அண்டை நாடுகளில் நடக்கும் இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய நாட்டையும் பாதிக்கக்கூடிய அளவிலே இருக்கின்றது. ஆகவே நாம் தலையிட்டுத் தீரவேண்டி இருக்கிறது'' என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதற்கான முறைகளிலேதான் நாம் இந்த மன்றத்திலே நிறைவேற்றுகின்ற இந்தத் தீர்மானம் மேலும் நல்ல நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பயன்படும் என்பது மட்டுமல்ல. வேறு பல சூழ்நிலைகளையும் உருவாக்குவதற்கு நமக்குப் பயன்படும்.

அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட முயற்சிகளைக் கூட இலங்கையிலே வாழ்கின்ற தமிழர் தலைவர்களும் மற்றவர்களும் இந்திய அரசு எடுத்துக் கொள்கின்ற முயற்சிகளையும், மாநில முதல்வர்களும் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகளையும். மாநிலத்திலே வாழுகின்ற அத்தனை தமிழர்களின் சார்பாக, அத்தனை அரசியல் கட்சிகளின் சார்பாக, அரசு எடுத்துக் கொள்கிற முயற்சிகளையும் அவர்கள் பாராட்டி அதற்கு முழு ஆதரவையும் தெரிவிக்கின்ற வகையில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இலங்கையில் உள்ள 16 தமிழ் எம்.பி-க்கள் கூட தந்தி ஒன்றை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி ''இலங்கையில் நடைபெறுகிற கொடுமைகளைத் தடுத்து நிறுத்த சர்வதேச அமைதிப் படையை உடனே அனுப்புங்கள்'' என்று 16 உறுப்பினர்களும் கூட கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கிறார்கள். இதை எல்லாம் உடனடியாக செய்யவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படையில்தான் செய்கிறோம்.

இந்திராகாந்தி அம்மையார் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சி
மாநில அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சி, இங்கே
இருக்கின்ற அரசியல் கட்சிகள் அத்தனையும் எடுத்துக் கொண்டு
இருக்கின்ற முயற்சி, தமிழ் மக்கள் அத்தனை பேர்களும்
ஒருமித்துக் காட்டுகின்ற உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, நன்றி
தெரிவித்து பாராட்டி அந்தத் தலைவர்கள் தங்களுடைய முழு
ஒத்துழைப்பையும். ஆதரவையும் தருகின்ற அளவுக்குக் கூட
தந்திருக்கிறார்கள். அதைப்போல பலரும் எடுத்துத் தெரிவித்து
இருக்கின்ற கருத்துக்களை இங்கே நன்றி உணர்வோடு நாம்
காணலாம்.

அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வரும்
மற்றவர்களும் சேர்ந்து, இந்திராகாந்தி அம்மையாரிடம்
கொடுத்த மெமொரண்டத்தில் கடைசியில்

'This delegation is conscious of the various examples like the step taken the world over in respect of the Palestenian Refugees and the steps taken by India in respect of the suffering of the people of Bangladesh .In a similar way, before it is too late, the Government of India must immediately act to protect the suffering Tamilians in Sri Lanka of Indian origin whether they are citizens of Sri Lanka Indian or stateless persons the members of this delegtion are fully aware of the concern shown by the Honourable Prime Minister in this matter and the trust that she and the Government of India will undertake the earnest eforts to protect the endangered lives of the helpless Tamil in Sri Lanka. They also wish to assure her on behalf of the people of Tamil Nadu of the fullest co-operation in taking all necessary expeditious mesurers to serve the Tamils in Sri Lanka''.

என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பாக கொடுத்த
மனுவிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் யோசனையின் பேரில்
ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபை கூடுகின்றபோது,
இந்தியாவின் சார்பாக பல பேர்கள் உறுப்பினர்களாகத்
தேர்ந்தெடுக்கப்படுகிறபோது, இந்தத் தடவை பிரதமா
இந்திராகாந்தி அவர்களே சென்று இந்தியாவினுடைய வெளி
நாட்டு விவகார அமைச்சர் அவர்களும் சென்று 5, 6 பேர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் செல்கின்ற
காலத்தில், அதிலே இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினை
களைத் திட்ட வட்டமாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்லு
வதற்கும், அதை உணர்த்துவதற்கும், தமிழகத்தைச் சேர்ந்த
ஒருவரை அனுப்புவது தலை சிறந்தது என்ற முதலமைச்சரின்
வேண்டுகோளை ஏற்று—சாதாரணமாக டெல்லியிலே உள்ள



பாராளுமன்ற உறுப்பினர்களைத்தான் பொதுவாக அனுப்பு
வார்கள்—அப்படியே அனுப்பினாலும் கூட, ஆளும் கட்சியைச்
சேர்ந்த உறுப்பினர்களைத்தான் அனுப்புவார்கள்—நம்முடைய
மின்துறை அமைச்சர் அவர்களை தமிழகத்தின் சார்பாக அந்தக்
குழுவிலே அனுப்பி அங்கே போய் அவர்கள் பங்குக் கொள்ளும்
படியாகச் செய்திருக்கிறார்கள். அதையும் நீங்கள் செய்தித்
தாள்களின் வாயிலாக அறிவீர்கள்.

அங்கே இலங்கையினுடைய வெளிநாட்டு விவகார
அமைச்சர், ஹமீது பேசுகின்றபோது கூட, அவர் ஐக்கிய நாடு
களின் அவையி உள்ளே பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்த
காலத்தில் உடனடியாக பத்திரிகை நிருபர்களை அழைத்து தக்க
மறுப்புகளையும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்
அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்பு, ஐக்கிய
நாடுகள் அவையிலே பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்ட போது கூட—
மூன்று முறை பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்டபோது தெளிவாக
எடுத்துக் காட்டி இருக்கிறார். ஐ. நா, சபையில் ஒரு நாட்டின்
உறுப்பினர் பேசி, அதை மறுத்துப் பேசுகின்ற அளவுக்கு
பாதிக்கப்பட்ட நாட்டினர் முன்வருவார்களானால், மீண்டும்
அவர்களுக்கு வாய்ப்புத் தந்து மறுத்துச் சொல்வதற்கு இடம்
தருவார்கள்.

அப்படி இலங்கை பிரதிநிதியாக இருப்பவர் ''அங்கே எதுவும்
நடைபெறவில்லை, சிறு கலவரம்தான் நடைபெற்றது. அதை
அடக்கிவிட்டோம், ஒடுக்கிவிட்டோம், பாதகம் எதுவும் இல்லை.
அவர்களுக்கு நல்வாழ்வு தந்து வருகிறோம் என்று இருக்கின்ற
உண்மையை எல்லாம் மறுத்துப் பேசியபோது, அங்கே
என்னென்ன நடைபெற்றது எனபதை தெளிவாக எடுத்து
சொல்லி, இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி
பாரதப் பிரதமர் இந்திரா காந்தி, மற்றும் இந்தியாவினுடைய
கருத்துக்களையும், மற்றவர்களுடைய கருத்துக்களையும்
எடுத்துச் சொல்லி தனைத் தெளிவுபட விளக்கி இருக்கிற
பாங்குகளையும் நீங்கள் தெளிவாகக் காணலாம்.

ஆகவே அதன் மூலமாக ஏற்பட்டிருக்கிற விளைவு அங்கே
இருக்கிற 158 நாடுகள் இந்தப் பிரச்சினையைப் பற்றி ஐக்கிய
நாடுகள் சபையிலே இருந்து கேட்டு, அவர்கள் உணர்ந்து
கொள்ளுகின்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக ஒரு கோடி பேர்களிடமிருந்து கையெழுத்து வாங்கி
ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுபோய்க் கொடுத்ததையும்
அதை ஐக்கிய நாடுகள் சபை வாங்கி வைத்துக்கொண்டு மனித
உரிமைகள் கழகத்தின் மூலமாக அதைப் பரிசீலிப்பதற்காக
எடுத்துச் செல்வதும், ஆக, ஒவ்வொரு கட்சிக்காரர்களும்
தங்கள் தங்கள் உணர்வை எடுத்துச் சொல்லி இருப்பதும்,
அதன் மூலமாக அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்
கான முயற்சிகளில் எல்லாத் தரப்பினரும் எல்லா வகை
களிலும் தங்களுடைய எண்ணங்களை வெளியிடவேண்டிய

தன்மையினுடைய அடிப்படையிலேதான் இருக்கிறார்கள் ஆகவே அந்தத் தன்மையிலே இப்போது, இந்தியா ஒரு சமரச முயற்சியின் அடிப்படையிலே, பேச்சு வார்த்தை என்ற அந்த அடிப்படையிலே முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

இந்தியா—பாகிஸ்தான் பிரச்சினைகூட பேச்சு வார்த்தை மூலமாகத்தான் முடிவுற்றது. ஒரே இந்தியாதான் வேண்டும், பிளவுபட்ட இந்தியா கூடாது என்கிற திட்டவட்டமான திடமான கொள்கையை அண்ணல் காந்தி அடிகள், மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள், வல்லபாய் பட்டேல் போன்றவர்கள், கொண்டிருந்த நிலையிலேயும் கூட, வேறு வழியில்லாமல், கடைசியில் பேச்சு வார்த்தையின் மூலமாகத்தான் தீர்வு வந்திருக்கின்றது. முகமது அலி ஜின்னாவும், அண்ணல் காந்தியடிகளும், மவுண்ட் பாட்டன் அவர்களின் தலைமையின் கீழ் உட்கார்ந்து பேசி ஒரு முடிவு காணுகின்றபோது, வேறு வழியே இல்லை என்ற போது, ஒரே இந்தியாதான் வேண்டுமென்று கேட்ட அண்ணல் காந்தி அடிகள் கூட, வேறு வழியே இல்லாமல் - ராஜாஜி சொன்னார்: ''வேட்டி கிழிந்து இருக்கிறது, அடிக்கடி கிழிந்து வருகிறது; கிழிந்து விட்டதை இரண்டாகக் கிழித்து விட்டேன், இப்போது தனி துண்டாக பயன்படுகின்றது'' என்ற ஒரு உவமையைச் சொல்கிறபோது—ராஜாஜி அவர்கள் ஒரு பார்முலாவைச் சொல்லி, அது 'ராஜாஜி பார்மூலா' என்று ஏற்பட்டு அந்த பார்முலாவினுடைய அடிப்படையில் அண்ணல் காந்தி அடிகள் பேசி முடிவு எடுத்தபோது, கடைசியில் பாகிஸ்தான் பிரிவினையை ஒப்புக் கொண்டு. கடைசியில் இந்தியாவிற்கு விடுதலை, பாகிஸ்தானுக்கு விடுதலை என்று ஒரு கட்டத்திற்கு வரும்போது, எதன் மூலம் இது ஏற்பட்டது என்றால் உணர்ச்சியைத் திரட்டி, மக்களை ஒன்று திரட்டி போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மற்றவைகள் எல்லாம் பயன்படுகின்றன என்றாலும், ஒரு நிலையான திட்டவட்டமான, தெளிவான முடிவைக் காண பேச்சு வார்த்தையால்தான் முடியும் என்ற அளவுக்கு இந்தியாவிற்குச் சுதந்திரம் ஏற்பட்ட போதும் சரி, அந்தச் சுதந்திரத்தை அனுபவித்து வருகிற நம்மாலும் சரி, பேச்சு வார்த்தையிலே தான் பிரச்சினை தீரும். ஆகையினாலே ஜி. பார்த்தசாரதி அவர்கள் அங்கே இருக்கிற ஆளும் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், தமிழர்கள் தலைவர்கள் போன்றவர்களை எல்லாம் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும், அந்தப் பேச்சு வார்த்தை ''வட்ட மேஜை மாநாடு நடத்துவதன் மூலம் நடத்த வேண்டும்'' என்ற ஒரு கருத்தை முதலிலே ஜெயவர்த்தனே ஏற்றுக்கொண்டார். வட்ட மேஜை மாநாடு கூட்டினால் கருத்துக்களைப் பரிமாற வசதி உண்டு. வட்ட மேஜை என்று சொல்வதற்குக் காரணமே சமத்துவமாக உட்கார்ந்தால்தான் உட்காருகிற மேஜை வட்டமாக இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது—அது ரெக்டாங்குலராகக்கூட இருக்கும், நான்கு முனையாகக் கூட இருக்கும். அந்தக் கான்பிரன்ஸுக்கு என்ன பெயர் என்றால் வட்ட மேஜை மாநாடு என்று பெயர். வட்ட மேஜை, வட்டம் என்று வரும்போது அதற்குத் தலைப்பு, இறுதி, முடிவு, பின், முன், எதுவும் கிடையாது. யார் எங்கே உட்கார்ந்தாலும், அவர்கள்கூட



136052

தலைவர்கள்- வட்டத்திலே எங்கே வேண்டுமானாலும் உட்காரலாம். ஆகவே வட்டத்திற்கு ரவுண்ட் டேபிள் கான்பரென்ஸ் என்று பெயர் கொண்டு வந்ததற்குக் காரணமே ரவுண்ட் டேபிள் கான்பரென்ஸ் இங்கிலாந்திலே கூடியபோது நம்முடைய அண்ணல் காந்தியடிகள் மற்றவர்கள் போனபோது ரவுண்ட் டேபிள் என்னும்போது, சமத்துவமாக உட்காருகிறார்கள் என்றுதான் அர்த்தம். பேச்சு வார்த்தை சமத்துவமாக துவங்குகிறார்கள் என்றுதான் அர்த்தம். வட்ட மேஜை மாநாடு என்று போட்டுவிட்டு ஜெயவர்த்தனே ஒரு கண்டிசன் போட்டு, நீ நாட்டுப் பிரிவினையை கேட்காமல் வந்து உட்கார்ந்து பேச வேண்டுமென்று ஒரு கண்டிசன் போட்டால் அது வட்ட மேஜை ஆகாது, கோணல் மேஜையும் ஆகாது. ஆகவேதான் வட்ட மேஜையில் கருத்துக்களை நிறைவேற்ற வேண்டும் என்றால் கண்டிசன் போடக் கூடாது. உட்கார்ந்து பேசும்போது அவர்கள் தங்களுடைய உரிமைகளைக் கேட்க முழு உரிமை உண்டு. அவர்கள் என்ன கேட்க வேண்டும் என்று சொல்ல நமக்கு உரிமையில்லை. இன்னின்னார் இன்னின்னதான் கேட்க வேண்டும் என்று சொல்ல நமக்கு உரிமையில்லை. அதுமட்டுமல்லாமல், கேட்கிற உரிமையை தடுக்கவும் நமக்கு உரிமையில்லை. நமக்கு இருக்கிற உரிமை எல்லாம் அவர்களுக்கு வாழ்வு அளிக்க, நிலையான வாழ்வு அளிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பது தான். என்ன வேண்டும் என்று கேட்க இந்த இலங்கை வாழ் தமிழர்களுக்கு உரிமை உண்டு. இந்திய வழி தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. இந்திய வழி வந்த தமிழர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் வட்ட மேஜை மாநாட்டிலே வந்து உட்காருகிறபோது என்னென்ன வேண்டும் என்று முழுத்தன்மையோடு எடுத்து வைக்க தமிழர்களுடைய கட்சிகளின் தலைவர்களுக்கு முழு உரிமையுண்டு. அதேமாதிரி, தோட்டத் தொழிலாளர்களுக்கும் தங்களை எது பாதுகாக்கும் என்று முழு உரிமையுண்டு. அதைக் கேட்பதும் கேட்காததும் அதற்குப் பதில் சொல்வதும், விளக்கம் சொல்வதும், சொல்லாததும். அவர்களை கன்வின்ஸ் பண்ணுவதும், பண்ணாததும், உட்கார்ந்து பேசுவதும் அவர்களைப் பொறுத்துதான் இருக்கிறது. அதற்குப் பிறகு அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான். ஆகவே இதற்கு அடிப்படை வட்ட மேஜை. வட்ட மேஜை என்றால் சமத்துவம் வேண்டும். ஆகவே கண்டிசன் கூடாது என்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம். இந்தியாவின் சார்பாகவும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. நாம் மட்டுமல்ல. அங்கே எதிர்க்கட்சியாக இருக்கிற, முன்னாள் பிரதமராக இருந்த பண்டாரநாயகா அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். வட்ட மேஜை மாநாடு என்று கூட்டிவிட்டு, தமிழர்களுடைய தலைவர்களுக்கு நிபந்தனை போடுவது என்பது

(முற்பகல் 11-?0)

சரியல்ல. நிபந்தனை இல்லாமலேயே அவர்களைக் கூப்பிட்டுப் பேசவேண்டும். முக்கிய பிரச்சினைகளை விட்டுவிட்டு வா என்று சொல்லக்கூடாது. வந்து உட்கார்ந்த பிறகு இதை, இதை விட்டு

விடுஎன்று இவர்களும் கேட்கலாம். விடமாட்டேன் என்று அவர்களும் சொல்லலாம் அல்லது எதை எதை விட்டு விடலா என்று பேசி முடிவெடுக்கலாம். அது, பேச்சு வார்த்தையை நடத்தியபிறகு வரவேண்டிய முடிவே தவிர, பேச வரும் போதே நிபந்தனைகள் கூடாது என்ற விதியை பொதுவாக நாம் ஏற்றிருக்கிறோம்.

ஆகவே, இந்த அவையிலே எடுத்துச் சொல்கிற ஒருமித்த கருத்துக்கள் மூலமாக இலங்கை தமிழ் மக்களுக்கு நிலையான வாழ்வு ஏற்படுத்தி, நீதியான வாழ்வு ஏற்படுத்தி வட்ட மேஜை மாநாடு மூலமாக இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தரவேண்டிய உரிமைகளையும் தந்து, இந்திய வழி வந்த தமிழ் மக்களுக்கு தரவேண்டிய உரிமைகளையும் தந்து, ஒரு சுமூகமான சமூக நிலை ஏற்படுமானால், அது எல்லா வகையிலும் மகிழ்ச்சி தரும். அவர்கள் என்ன கேட்க வேண்டும் என்று சொல்லவும் நமக்கு உரிமையில்லை. கேட்கக் கூடாது என்று சொல்லவும் உரிமை யில்லை. ஆனால் எப்படிப்பட்ட வாழ்வு அமையவேண்டும் என்று சொல்ல நமக்கு நியாயம் உண்டு அந்த நியாயத்தின் அடிப்படையில் தான் நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

ஆகவே, அங்கேயிருக்கிற அத்தனை தமிழர்களும், நிம்மதி யான வாழ்வு பெறுகிறோம், அமைதியான வாழ்வு பெறு கிறோம், முழுமையான வாழ்வு பெறுகிறோம், குடி உரிமையைப் பெறுகிறோம், சிறுபான்மையினருடைய அத்தனை சலுகை களையும், உரிமைகளையும் பெறுகிறோம் என்ற மனநிறைவோடு வாழத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய அங்கே இருக்கிற அரசும் முன் வரவேண்டும். அதற்காக அந்த அரசை வலியுறுத்த வேண்டிய பெரும் பொறுப்பு இந்திய அரசுக்கும் இருக்கிறது. இந்திய அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்தியப் பெருங்குடி மக்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது, என்றாலும் தமிழக மக்களுக்கு சிறப்பாக அந்தப் பொறுப்பு உண்டு. தமிழக மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்த அவைக்கு இன்னும் சிறப்பான பொறுப்பு உண்டு என்ற முறையிலேதான், இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஒருமித்த எண்ணத்தில் நிறைவேற்றித் தருவதன் மூலமாக நல்லச் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று பேரவையில் இருக்கிற எதிர்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்கள் அத்தனை பேரையும், ஆளும் கட்சியின் சார்பாக அமைச்சரவையின் சார் பாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, தீர்மானத்தை முன் மொழிகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழிந்திருக்கும் இத்தீர்மானத்திற்கு திருத்தம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்க வேண்டும். விதி 192-ன் படி,
After a resolution, has been moved any Member may, subject to all the restrictions regarding the admissibility of resolutions move an amendment to such resolution.
என்று தெளிவாக 192-லேயே போடப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு முன்னதாகவே ரெசல்யூஷனில் அமென்ட்மென்ட் கொடுக்கப்படவேண்டும். ஒரு நாளைக்கு பின்னாலே கொடுப் பதில் சபாநாயகர் தான் தீர்மானிக்க வேண்டும். இதுவரையில் நான் ஒருவன்தான் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறேன். லிஸ்டிலேயும் அது வந்தாகிவிட்டது. முன்னவர் அவர்கள் முன் மொழிந்து விட்டார்கள். அமென்மென்ட்டும் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு, சர்குலேட் ஆகிவிட்டது. ஆகவே, ரெசல்யூஷன் முன் மொழிந்த பின்னாலே அமென்ட் மென்ட்டை மூவ் பண்ணி நான்தான் பேசவேண்டும். இதில் தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமென்ட்மென்ட்டை நீங்கள் மட்டும் கொடுக்கவில்லை. நிறையபேர்கள் கொடுத்திருக் கிறார்கள். திரு. நெடுமாறன் கொடுத்திருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் கொடுத்திருக் கிறார்கள். திரு. அம்பிகாபதியும் கொடுத்திருக்கிறார்....

திரு. அ. ரகுமான்கான்: எல்லாவற்றையும் லிஸ்டிலே போட்டு மூவ் பண்ணுவதற்கு அனுமதிக்க வேண்டியதுதானே?

திரு. என். எஸ். வி. சித்தன்: எங்கள் கட்சியிலும் கொடுத் திருக்கிறோம். கொடுக்காதவர்களும் கொடுப்பதற்குத்தான் இன்று பிற்பகல் 3 மணி வரையில் தாங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : திருத்தம் நான் ஏற்கெனவே
கொடுத்துவிட்டதால் அதை இப்போது மூவ் பண்ண அனுமதி
தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 மணி வரைக்கும் திருத்
தங்கள் கொடுக்கலாம் என்று நான் அறிவித்து இருக்கிறேன்
3 மணிக்குப் பிறகு அவைகள் எல்லாம் முறையாக எடுத்துக்
கொள்ளப்பெறும். (குறுக்கீடு). வோட்டெடுப்பின்போது திரு
ரகுமான்கானின் திருத்தம் முதலில் வரும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான
பிரச்சினை. சட்டப்படி திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு
நாள் முன்னதாக கொடுக்க வேண்டுமென்ற முறைப்படி கொடுத்
திருக்கிறார்கள். அதை தாங்கள் சர்க்குலேட் செய்திருக்கிறீர்கள்
இது முக்கியமான பிரச்சினை என்பதால் சபாநாயகர் அவர்கள்
எதிர்க்கட்சிகள் எல்லாம் திருத்தங்கள் கொடுப்பதற்கு அனு
மதித்திருக்கிறீர்கள். சபாநாயகர் அவர்கள் நினைத்தால் 'பில்'
போய்க்கொண்டிருக்கும்போதுகூட திருத்தம் கொடுக்க அனு
மதிக்கலாம். நான் தங்களுக்கு இருக்கிற அந்த உரிமையை
மறுக்கவில்லை. திரு. ரகுமான்கான் கொடுத்தது சப்ஸ்டிட்யூட்
கரக்ட், திருத்தம் கொடுக்க பல எதிர்க்கட்சித் தலைவர்கள்
விரும்பினார்கள், அதனால் ரிலாக்ஸ் பண்ணுகிறேன் என்று
சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரும்பிக் கொடுத்தேன்
என்று தாங்கள் புது விளக்கத்தைச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு)
திரு. ரகுமான்கான் திருத்தம் கொடுத்தது உண்மை. அதைப்
பரிசீலனை செய்கிற உரிமை எனக்கு உண்டு. அது என் பரி
சீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்
இப்போது மணி 11½ ஆகிறது. இரண்டரை நாட்களுக்குள்
எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசவேண்டும். கட்சிகளிலே
பல பேர்கள் பேச வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். ஆகவே
நேரத்தை நிர்ணயிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்
கட்சிகளின் தலைவர்களுக்குப் பேச வழிவிட்டு உறுப்பினர்கள்
எப்படிப் பேசுவது என்பதை அவரவர்கள் கட்சிகள் முடிவு
செய்து கொள்ளவேண்டும். நான் கட்சிகளுக்கு நேரத்தை
ஒதுக்கிக் கொடுக்கிறேன். 3 நாட்களுக்குள் இந்த விவாதத்தை
முடித்தாக வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இங்கே கொண்டு
வரப்பட்டிருக்கின்ற இலங்கை வாழ் தமிழர்கள் பற்றிய தீர்
மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்
துக்களைச் சொல்லக் கடமைபபட்டிருக்கிறேன். குறிப்பாக
இங்கே பேசிய மாண்புமிகு முன்னவர் அவர்கள் 1948 ஆம்
ஆண்டிலிருந்து எந்த அளவுக்கு இலங்கையிலே வாழ்கின்ற
தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றெல்லாம்



சொன்னார்கள். அவற்றையெல்லாம் விட இன்றைக்கு உச்ச
கட்டமாக கடந்த ஜூலைத் திங்கள் இலங்கையிலே வாழ்கின்ற
தமிழர்கள் மீது அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இனப்
படுகொலை, 'ஜெனோசைட்' என்ற பெயரில் கொலைகள்,
கொள்ளைகள், கற்பழிப்புகள், தீவைப்புகள், சூறையாடுதல்
போன்ற கொடுஞ் செயல்களைப் புரிந்து சிங்கள வெறியர்
களும் அவர்களுக்குத் துணை போன இராணுவம் மற்றும்
காவல் துறைகளும் இலங்கை அரசும் அதன் அதிபரான
ஜெயவர்த்தனேயும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்
களுக்குத் துணை போகின்ற வகையில் இருந்த இலங்கைப்
பிரதமர் பிரேமதாசாவும் அமைச்சர் செசில் மேத்யூவும் தான்
இதற்குமூலக்காரணமாக இருந்து மூல வித்திட்டார்கள் என்று
சொன்னால் பிழையாகாது. அங்கே ஏழை மக்கள் சாதாரண
மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். சிறுவர்கள், பச்சிளம்
குழந்தைகள்கொல்லப்பட்டார்கள், இளம்பெண்கள் மட்டுமல்ல,
வயது முதிர்ந்த தாய்மார்கள் கூட கற்பழிக்கப்பட்டார்கள்.
உள்ளபடியே இதுபோன்ற சம்பவங்கள் உலகத்திலே வேறு
எங்கும் நடந்திருக்காது என்று சொல்லத்தக்க அளவுக்கு
தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்
டார்கள் என்பதை கண்டிக்கும் முறையில் தமிழ்நாடு பூராவும்
ஏன். இந்தியத் துணைக் கண்டம் பூராவும் மிகுந்த கலவரத்
திற்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகி வெறுப்பை தெரிவிக்கின்ற
வகையில் பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வெளிக்கடை சிறையில் அடைக்கப்பட்ட தமிழர்கள், 52
பேர்கள், சிங்கள வெறியர்களால் அவர்கள் வெறுப்பை உணர்த்
துகின்ற முறையில் கொடுமை செய்யவேண்டுமென்ற நோக்கத்
தோடு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்த விடுதலை
புலிகள் குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்ற இளைஞர்கள்
52 பேர்கள் சிறைச்சாலையிலே அவர்கள் நிராயுத பாணி
களாக இருந்தபோது கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்,
இப்படிப்பட்ட சம்பவம் உலகத்திலே வேறு எந்த நாட்டி
லேயும் நடந்ததாக சரித்திரம் இல்லை என்பதிலே யாரும்
கருத்து வேறுபாடு கொள்ளமுடியாது. இதுபோன்ற கொடு
மைகள் நிறுத்தப்பட வேண்டும், அங்குள்ள தமிழ் மக்களுடைய
பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்தியாவில்
உள்ள அரசியல் கட்சிகளிடையே கருத்து வேறுபாடு எதுவும்
இல்லை. அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, அவைகளின் தலை
வர்களும சரி, சாதாரண மக்களும் சரி, அவர்களிடத்திலே
எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை, இருக்கப்போவதும்
இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையை எப்படி சாதிப்பது
எப்படி தீர்ப்பது என்பதிலே பல்வேறு கட்சிகளுக்கு பல்வேறு
எண்ணங்கள் இருக்கும், அதைத்தான் நாம் சமீபத்திலே
பார்க்கிறோம். இலங்கை சம்பவங்களைக் கண்டிப்பதில்
தமிழனாகப் பிறந்தவன் எவனும் பின்தங்கமாட்டான் என்பது
மட்டுமல்ல, மனிதன் என்பவன் எவனும் இச்செயல்களைக்
கண்டிக்காமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் கடந்த ஜூலை மாதம் 23-ம் தேதி சென்னைக்கு வருகை தந்த எங்களுடைய தலைவி பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இதைப் பற்றி பேசுகின்ற நேரத்தில இலங்கையில் அண்மையில் நிகழ்ந்து வரும் சம்பவங்களை கண்டித்து இலங்கை தமிழர்கள் இந்திய வம்சா வழித் தமிழர்கள் பாதிக்கப்படுவதை கண்டித்து பாரதம் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கிறது என்று சொன்னார்கள். இலங்கையில் நாளுக்கு நாள் நிலமை மோசம் அடைந்து வருவதை அறிந்த பிரதமர் ஜூலை மாதம் 28ம் நாள் இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்தாலும் அதில் இந்தியா தலையிடாமல் இருக்க முடியாது என்ற அடிப்படையில் நிலைமை...கள் மோசம் ஆவதை தடுத்து நிறுத்தவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனேயுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்களை இலங்கைக்கு தனி விமானத்தில் அனுப்பி வைத்தார்கள். அவர் சென்று வந்ததன் பலன் நாம் அப்போது உணர முடியவில்லை. ஆனால் இன்றைக்கு இலங்கை எதிர் கட்சித் தலைவர் 'டல்ப்' கட்சியின் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் இருக்கக்கூடிய சர்வதேச நண்பர்கள் சங்கம் நடத்திய கூட்டத்தில் பேசியபோது இலங்கையில் இனப் படுகொலை நடந்தபோது இந்திய அரசு கவலை தெரிவித்தது நிலைமையை நேரில் பார்த்து வர வெளிநாட்டு அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர் அப்படி செய்து இருக்காவிட்டால் வெறியாட்டம் நீடித்திருக்கும் தமிழ்மக்கள் பூண்டோடு கொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்டு இருப்பார்கள் என்று சொன்னார்கள். அதிலிருந்து திரு நரசிம்மராவ் அவர்கள் இலங்கைக்கு அப்போது சென்று வந்ததன் பலனை நாம் இன்றைக்கு உணர முடிகிறது.

(முற்பகல் 11-40.)

அதுமட்டும் அல்ல திரு. நரசிம்மராவ் அவர்கள் இலங்கைக்கு அப்போது சென்று வந்ததால் தான் அங்குள்ள தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு காரணமாக இருந்து இருக்கிறார் என்பதை நிச்சயமாக நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல நம்முடைய இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்கள் கொழும்புக்கு சென்று வந்த பிறகு தான் எதிர்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய 'டல்ப்' கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய திரு. அமிர்தலிங்கம் அவர்களும் அவரைப் போல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்றைக்கு இந்தியா வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள்.





இந்தச் சூழ்நிலையில் தமிழக முதல்வர் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித்தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி இலங்கை பிரச்சனைப் பற்றி விவாதித்து முடிவில் பிரதமர் அவர்களை நேரில் சந்திப்பது என்ற முடிவை எடுத்து நேரிலும் சந்தித்தார்கள். இலங்கைப் பிரச்சினையில் திருமதி இந்திரா காந்தியோடு பேச்சுவார்த்தை நடத்திய நேரத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை பார்த்து இந்தியா கவலைக் கொள்கிறது என்று சொன்னதற்கே இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தியா உள்நாட்டு பிரச்சனையில் தலையிடுகிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆதலால் நாம் இதில் நிதானத்தோடு செயல்பட வேண்டும் என்றும் அங்கு வாழும் தமிழ் மக்களின் நிலைமையை மேலும் மோசம் அடையாமல் செய்வதற்கு தமிழகத்தில் உள்ள மக்களும்அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும் எந்த நிகழ்ச்சியும் செய்துவிடக் கூடாது என்றவேண்டுகோளை வைத்து அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு வந்தார்கள்.

மறுநாள் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய வெளிநாட்டு இலங்கை வெளிநாட்டு அமைச்சர் திரு அமீது அவர்களும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில் இந்திராகாந்தி அவர்கள் அமைச்சர்கள் மாநாட்டில் பேசும் போதுகீழ்க்கண்டவாறு சொல்கிறார்.

பாரதம் எப்போதும் அண்டை நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாது என்றாலும் பல்வேறு இனமக்களையும் பல்வேறு மத சார்புடைய மக்களையும் அவர்கள் இணைத்தாலும் சரித்திர நட்புறவோடும் தெற்கு ஆசியாவில் வாழும் மக்களின் பிரச்சனையை கண்டும் கேட்டும் தனக்கு எதுவுமே ஏற்படாதது போல் பாவனை செய்து கொண்டு இருக்க விரும்பவில்லை என்று இந்தியாவின் நிலைமையை மிக தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். காரணம் இந்தியாவின் பக்கத்து நாட்டில் நடைபெறுகின்ற இனப்படு கொலையை காணாதது போல் நாம் நடித்துக்கொண்டு இருக்க முடியாது என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற வகையில் தான் அவருடைய கருத்து அமைக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மத்திய அரசு உணவுப் பொருட்கள் மற்றும் துணிமணிகள் மற்றும் மருந்துகள் இவைகள் விமானங்கள் மூலமாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், கொழும்புப் பகுதியிலே உள்ள தமிழர்கள் பாதுகாப்பான யாழ்ப்பாணப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக நமது அரசு தன்னிடம் உள்ள இரண்டு கப்பல்களை அனுப்பி வைத்து அந்த மக்கள் யாழ்ப்பாணம் பகுதிக்குச் செல்ல வழிவகைகள் செய்யப்பட்டன.

அதே நேரத்தில் நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மத்திய அரசின் சார்பில், இலங்கைத் தமிழர் நிவாரண நிதி என்ற பெயரில் ஒரு நிவாரண நிதியை ஏற்படுத்தி, அதற்கு இந்திய அரசின் 'பிரைம் மினிஸ்டர்ஸ் ரிலிப் பண்டிலிருந்து

ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளார்கள் அதே போல், தமிழக முதலமைச்சர் அவர்களும் இலங்கையிலே வாழ்கின்ற பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே இலங்கைத் தமிழர் நிவாரண நிதி என்ற பெயரில் ஒரு நிதியை ஏற்படுத்தியிருப்பதற்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், ஆகஸ்ட் 2-ஆம் நாளன்று தமிழகம் முழுவதும் வேலைநிறுத்தம் செய்வது என்று அனைத்துக் கட்சிகள் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவிற்கேற்ப ஆகஸ்ட் 2-ஆம் தேதியன்று, தமிழ்நாட்டிலே உள்ள கடைகள் வியாபார ஸ்தலங்கள், போக்குவரத்துகள், தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டு, நிறுத்தப்பட்ட நேரத்தில், மத்திய அரசாங்கம் அதில் பங்கு பெற வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற கொலைகளையும், கொள்ளைகளையும் கண்டிக்க வேண்டுமென்ற உணர்வோடு, மத்திய அரசாங்கமும் அந்த முழு பந்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அன்றையதினம் மாநிலத்தில் உள்ள அனைத்து, மத்திய அரசு அலுவலகங்களும் மூடப்பட்டன. மாநிலத்திற்குள் ஓடுகின்ற, மாநிலத்திற்கு வருகின்ற அனைத்து இரயில்களும் நிறுத்தப்பட்டன. மேலும், விமான சர்வீசுகள் கூட நிறுத்தப்பட்டன. சரித்திரம் காணாத வகையில் மாநில அரசாங்கம் நடத்தும் எந்தப் பந்திலும் கலந்து கொள்ளாத மத்திய அரசாங்கம், அன்றைக்குத் தமிழக மக்களுடைய உணர்வைப் புரிந்து, அந்தப் பந்திலே கலந்து கொண்டு, சரித்திரத்திலே முக்கிய இடம் பெற்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

அடுத்து, ஆகஸ்ட 5-ஆம் தேதி அன்று திராவிட முன்னேற்றக் கழகம் தனியாக ஒரு போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்தது. மாநில முதலமைச்சர் அவர்களும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கூட போர்ராட்டத்தைக் கைவிடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தும் அவர்கள் அன்றையதினம் போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்தனர். அதை நடத்தும்பொழுது, மாநிலத்திலே ஏற்படுகின்ற சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள், இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது நமக்கிற அனுதாபத்தை மாற்றி விடக் கூடாது, பிரச்னைகளை திசை திருப்பி விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி, அதன் மூலமாக மத்திய அரசாங்கம் தொடர்ந்து மீண்டும் 5-ஆம் தேதியன்றும் தமிழகத்தினுடைய அனைத்து இரயில் சர்விஸ்களையும் ரத்து செய்தது மிக முக்கியமான விஷயம். காரணம், இரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெறுமானால், அதிலே வன்முறைகள் ஏதாவது ஒரு வகையிலே தலைதூக்குமானால், பல்வேறு வகையான புதிய பிரச்னைகள் தோன்றி, அந்தப் பிரச்னைகளின் மூலமாக, இலங்கையிலே உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு



நாம் அனுதாபம் தெரிவிக்கின்ற அந்தப் பிரச்னையில் நம்முடைய கவனம் எல்லாம் திசை திரும்பிவிடுமோ என்ற அச்சம்தான். அதற்காக முயற்சி எடுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல், ஆகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி இலங்கை எதிர்க்கட்சியினுடைய தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் டெல்லிக்குச் சென்று நம்முடைய இந்தியாவினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களோடும், மத்திய அரசாங்கத்தினுடைய மற்ற பல்வேறு அமைச்சர்களோடும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். இலங்கையிலே உள்ள சூழ்நிலைகள் குறித்தும், அரசியல் நிலவரங்கள் குறித்தும், அவர்களுடைய தேவைகளைக் குறித்தும், நமது அரசாங்கம் எந்த அளவுக்குப் பங்கேற்க வேண்டுமென்பது குறித்தும், பல்வேறு வகையான விளக்க உரைகளை நடத்தினார்கள்.

16-ம் தேதி, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியவுடன் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையிலே 'நானோ' என்னுடைய கட்சியோ, அரசோ, இனப்படு காலையைக் கண்டனம் செய்யத் தவறியதில்லை. அதே சமயம் நாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்சி அரசுப் பொறுப்பில் இருக்கும் நாங்கள் பேச வேண்டியிருக்கிறது. தமிழக சகோதர, சகோதரிகளுக்குக் கூறிக்கொள்வேன், நிலைமையை உன்னிப்பாக நாங்கள் கவனித்து உறுதியாக நிலைமையைச் சமாளிப்பதில் கவனமாய் இருப்போம்' என்று கூறினார். ஆக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வைப் புரிந்து கொள்வதில் மட்டுமல்ல, இலங்கையிலே வாழ்கின்ற மக்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான இந்தச் சொற்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அதைப் போல், இலங்கையிலே நடைபெறுகிற சம்பவங்கள் தமிழ்நாட்டை மட்டும் பாதிக்கவில்லை, இந்திய துணைக் கண்டத்தையே பாதித்திருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே இன்றைக்கு நம் இந்தியத் துணைக் கண்டத்தையே எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதற்கு ஒரு சான்றுதான், நமது இந்திய நாட்டினுடைய தூதுக் குழுவில் சென்றுள்ள மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஐக்கிய நாடுகள் சபையில் பேசுகின்ற சமயத்தில் இங்கே எந்த அளவு அந்தப் பிரச்னை பாதித்திருக்கிறது என்பதை மிகத் துல்லியமாகவும், தீரமாகவும், தீவிரமாகவும் உறுதியாகவும் எடுத்து வைத்திருக்கிறார். அந்த அளவு கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையினுடைய நிரந்தரப் பிரதிநிதியாக இருக்கிற திரு. பொன்சேகா கூறிய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கிற வகையில் இந்தியாவில் இலங்கைப் பிரச்னை எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கு [illegible]

அந்தச் சான்றுகள் மூலமாக, இன்றைக்கு அது தமிழ்நாட்டை
மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தையே பாதித்திருக்
கிறது என்பதை நாம் உணர்கிறோம். அதற்கேற்பத்தான்
இந்தியாவிலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள், அது
ஜனதா கட்சியாக இருந்தாலும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியாக இருந்தாலும் சரி, சி.பி.ஐ. ஆக இருந்தாலும் சரி,
பாரதீய லோக்தளமாக இருந்தாலும் சரி, அனைத்துக் கட்சி
களும் கட்சி வேறுபாடின்றி இந்தியாவினுடைய, இந்திய
அரசாங்கத்தினுடைய பிரதமர் எடுத்திருக்கிற நடவடிக்கையை
முழுமையாக ஆதரித்திருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். அது தமிழ்நாட்டினுடைய பிரச்னை
என்று சொல்லி இருப்போமேயானால் மத்தியில் இருக்கக்கூடிய
அல்லது இந்தியாவினுடைய மொத்தக்கட்சிகளின் தலைவர்களும்
கருத்துத் தெரிவிப்பதற்குப் பதிலாக அவர்கள் சும்மா இருந்
திருக்கக் கூடும். ஆனால் இது இன்றைக்கு இந்தியாவைப்
பாதிக்கிறது; தமிழ்நாட்டு மக்களைப் பாதிக்கின்றது. பக்கத்திலே
ஒரு நாட்டிலே இனப்படுகொலை நடக்கின்றது; இதைக் கண்
டிப்பதிலே நாம் நிச்சயமாக முன் வரவேண்டும் என்பதற்காகத்
தான் பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்களுடைய கண்
டனத்தை வெளிப்படையாக, கடுமையாகச் சொல்லியிருப்பதை
காண்கின்றோம். ஆகவே இன்றைக்கு கேட்டுக்கொள்ள விரும்பு
வதெல்லாம், இதை தமிழ்நாட்டினுடைய பிரச்னை என்பதற்குப்
பதிலாக, இந்தியாவினுடைய பிரச்னையென்று எடுத்து வைப்
போமானால் உலக நாடுகள் அதை மிக உன்னிப்பாக கவனித்து
எந்த அளவிற்கு அது 70 கோடி மக்களுடைய பிரச்னையாக
இருக்கிறது என்பதைக் கவனித்து அதற்கு ஆதரவான நட
வடிக்கையை மேற் காள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அது
மட்டுமல்லாமல் இலங்கையில் வாழ்கின்ற பல இலட்சக்கணக்
கான தமிழர்கள் தங்களுக்குப் பின்னால் வெறும் ஐந்து கோடி
மக்கள் மட்டும் இல்லை; 70 கோடி இந்திய மக்களே இருக்
கிறார்கள் என்று உள்ள பூர்வமாக உணர்கின்ற நிம்மதி,
நம்பிக்கை அவர்களுக்கு கிடைக்கும் என்பதை நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11—50)

இராணுவத்தை இலங்கைக்கு இந்தியா அனுப்ப வேண்டு
மென்று கேட்கப்படுகிறது. இங்கே கூட அதற்கான ஒரு
தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே எனக்கு கருத்து
வேறுபாடு இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். இராணுவத்தை அனுப்புவதா,
வேண்டாமா என்பது மத்திய அரசாங்கம் எடுக்கிற முடிவு.
ஆனால் நான் கேட்க விரும்புவது இலங்கையிலிருந்து தமிழ்
நாட்டிற்கு வருகிற தலைவர்கள், அமிர்தலிங்கம் அவர்களா
னாலும் சரி, அல்லது தொழிலாளர் காங்கிரசினுடைய
தொண்டமான் அவர்களானாலும் சரி, மற்றும் விடுதலைப்புலிகள்
என்று சொல்லப்படுகிறவர்களானாலும் சரி, அல்லது போராட்ட
வர்கள் என்று சொல்லப்படுகிறவர்களானாலும் சரி, யாராவது
ஒருவர் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களைக் காப்பதற்கு
இந்தியா இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று கோரிக்கை



வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அங்கே பாதிக்கப்பட்டி
ருக்கிற மக்கள் எங்களுக்கு இராணுவத்தின் மூலமாகத்தான் பாது
காப்பு கிடைக்கும்; இராணுவத்தின் மூலமாகத்தான் எங்களுக்கு
நிவாரணம் கிடைக்கும் என்று சொல்லி இருப்பார்களென்று
சொன்னால் அது வேறு விவகாரம். ஆனால் இராணு
வத்தின் மூலமாக அதற்கான தீர்வை காண முடியாது என்பதை
நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். வங்காள தேசத்தைப் பற்றிச்
சொல்கிறார்கள். வங்காள தேசம் பொறுத்தவரையில் தேர்ந்
தெடுக்கப்பட்ட அரசாங்கம் அங்கே அமைக்க வேண்டுமென்ற
சூழ்நிலை இருந்தது. அவாமி லீக் அங்கே வெற்றி பெற்றது.
ஷேக் முஜிபுர் ரெக்மான் வெற்றி பெற்றார். அவர் ஆட்சிப்
பீடத்திலே அமரக் கூடாது என்பதற்காக அவரை சிறையிலே
பிடித்து தள்ளினார்கள். அங்கே 99 சதவீத மக்கள் அவாமி
லீக்கை ஆதரித்தவர்கள். இந்திய இராணுவம் தலையிட வேண்டு
மென்று அவர்கள் விரும்பினார்கள். இந்திய இராணுவம்
தலையிட்டு அவர்களுடைய ஜனநாயகத்தை பாதுகாக்க
வேண்டும், குடி உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற
கோரிக்கைகளை வைத்தார்கள். மக்கள் ஆதரவு கொடுத்தார்கள்.
இந்திய இராணுவம் வருவதற்கான வழியை அவர்கள் அமைத்துக்
கொடுத்தார்கள். ஆனால் இங்கே அந்த நிலைமைகள் இல்லை.
நம்முடைய இராணுவம் செல்லுமேயானால் அதனுடைய
விளைவுகள் எப்படியிருக்குமென்று நாம் சொல்ல முடியாது.
ஆகவே இராணுவத்தை அனுப்புவதென்பது மிகவும் சிக்கலான
பிரச்னை. அது மத்திய அரசாங்கம் உரிய நேரத்தில் எடுக்க
வேண்டிய முடிவு என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இந்திராகாந்தி அவர்கள் இந்தியாவி
னுடைய தூதுவராக திரு. பார்த்தசாரதி அவர்களை அனுப்பி
வைத்தார்கள். திரு. பார்த்தசாரதி சென்றதன் பலனை உடனடி
யாக நாம் அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால் அது முடியாத
காரியம். காரணம் இலங்கைப் பிரச்னை என்பது மிகவும்
சிக்கலான பிரச்னை. நம்முடைய மாண்புமிகு முன்னவர்
அவர்கள் சொன்னதைப்போல எல்லோருக்கும் சமமான
உரிமைகள் கொடுத்து, சமமான அந்தஸ்து கொடுத்து பேச்சு
வார்த்தை நடத்தி வைக்க வேண்டும் என்பதுதான் திரு. பார்த்த
சாரதியின் பிரதான நோக்கம். என்னென்ன கோரிக்கைகள் நிறை
வேற்றப்படும், என்னென்ன கோரிக்கைகளுக்கு அரசாங்கம்
செவி சாய்க்க வேண்டுமென்று கட்டளை இடுவதற்கல்ல. முதல்
கட்டமாக எல்லா தரப்பினரையும் ஒட்டுமொத்தமாக பேச்சு
வார்த்தை மேஜையில் கொண்டுவந்து உட்காரவைக்க வேண்டு
மென்பதுதான் அவருடைய பிரதான நோக்கமாக இருக்கின்றது.
அதுமட்டுமல்லாமல் அவர்கள் சில வழிமுறைகளைச் சொல்லி
யிருக்கிறார்கள். இந்தியாவைப் போன்று ஒரு சோஷியல்
செட்டப் இருக்க வேண்டும். அங்கே மாநிலங்கள் உரிமைகளைப்
பெற வேண்டும். மாநிலங்களுக்கு சம உரிமையைக் கொடுத்து
அதன் மூலமாக அவர்களுடைய பிரச்னைகளை அவர்களே

தீர்த்துக் கொள்வதற்கான வழியை இந்தியாவினுடைய மாநிலங் களைப் போல அவர்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதேபோல சட்டம் ஒழுங்கு பிரச்னையை அந்த மாநிலங்களின் அரசாங்கமே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் போல பல்வேறு பிரச்னைகளை அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அதனுடைய முடிவுகள் எப்படி வரும் என்று நமக்குத் தெரியாது. ஜெயவர்த்தனே அவர்கள் நம்முடைய பார்த்தசாரதியை வரக்கூடாது என்று தடை விதித்து விட்டார்கள் என்று பேச்சு உண்டு. ஆனால் இன்றைக்கு காலையிலே செய்தி வந்திருக்கிறது. நம்முடைய தூதராக இலங்கையிலே இருக்கக் கூடியவர் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருக்கிற நேரத்தில், இலங்கை ஜனாதிபதி நம்முடைய தூதராக, இந்தியாவின் தூதராக பார்த்தசாரதி அவர்கள் மீண்டும் வருவதற்கு வழி ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இன்றைக்கு காலையில் செய்தித்தாள்கள் மூலமாக நாம் செய்தி அறிந்திருக்கிறோம். ஆகவே, மீண்டும் பார்த்தசாரதி இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தையை ஆரம்பித்து பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழியை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் உண்டு.

தமிழ்நாட்டு மக்களும், இந்திய அரசும் நிதானத்தோடும், இராஜ தந்திரத்தோடும் நடந்துகொண்டு இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதுதான் நம்முன் உள்ள முக்கிய மான பிரச்னையாக இருக்கிறது. அவசரப்பட்டோ, உணர்ச்சி வசப்பட்டோ நடவடிக்கைகளை எடுத்தால், அதன் காரணமாக சிக்கல்கள் ஏதேனும் ஏற்பட்டால், அது இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை மட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள இந்திய வம்சா வழியினர் என்று சொல்லப்படுபவர்களையும் பாதிக்கும். இன்னும் சொல்லப்போனால் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலேயும், பிஜி நாடு, ஆப்பிரிக்கா கண்டம், மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலேயும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ளவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக அங்கே வாழ்கின்ற மக்கள் பாதிக்கப்படக் கூடாது. அந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பெரும் செல்வாக்குடன் வாழ்கிறார்கள். மந்திரிகளாக பலபேர் அங்கே இருக்கிறார்கள். இந்திய வம்சா வழியைச் சேர்ந்த நாயர் அவர்கள்தான் சிங்கப்பூரில் ஜனாதிபதியாக இருக்கிறார். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் இரண்டு மூன்று தமிழர்கள்—இந்திய வம்சா வழியில் வந்தவர்கள் மலேஷியாவில், பிஜி நாட்டில் அமைச்சர் களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவ்வாறு நல்ல முறையிலே அங்கே இருப்பதற்கு தமிழ்நாட்டிலே இருப் பவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறின்றி இங்கே ஏற்படும் பிரச்னையின் காரணமாக அங்குள்ள தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டு அகதிகளாக, தங்கள் சொத்துக்களை இழந்து, கோடீஸ்வரர்களாக இருந்தவர்கள் கோவணாண்டிகளாக இங்கே வந்து அரசாங்கத்திலிருந்து 10 ரூபாயோ, 15 ரூபாயோ



கிடைக்குமா என்று எதிர்பார்க்கின்ற நிலைமைக்கு அவர்களைத் தள்ளாமல் இருக்க வேண்டியது நம்முடைய முக்கியமான கடமையாகும்.

அந்த வகையில் நமது முதலமைச்சரவர்களை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் அவருடைய அணுகு முறை மிகவும் நிதானத்துடனும், இராஜதந்திரத்துடனும் அமைந்து பிரச்னைகளைச் சிக்கலாக்காமல் இருக்கிறது. இவ்வாறு அணுகி இந்தப் பிரச்னையில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டு வருகின்ற முதலமைச் சரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ளவில்லையென்றால், வெறும் உணர்ச்சிகளுக்கு நாம் ஆளாகியிருந்தால் பிரச்னை சிக்கலானதாக ஆகியிருக்கும். கொழும்புத் திட்டத்தின் மூலமாக மாணவர்கள் படிக்கின்ற பிரச்னையில், மலேஷிய நண்பர்கள் சொன்னார்கள். உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடு கிறது என்று அந்த நாட்டின் அரசாங்க அதிகாரிகள் சொல்லும் நேரத்தில் நம்முடைய அரசாங்கம் பதில் சொன்னது, உள்நாட்டு விவகாரத்தில் நாங்கள் தலையிடவில்லை என்று பதில் சொல்லியது. கொழும்புத் திட்டத்தின் மூலமாகப் பரிவர்த்தனை என்ற அடிப்படையில் இங்கேயுள்ள மாணவர்கள் வெளிநாட்டில் சென்று படிக்கவும், அங்கேயுள்ள மாணவர்கள் இங்கே வந்து படிக்கவும் உள்ள முறையில் மலேஷியத் தமிழர்கள் படிக்கி றார்கள், அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம், உள்நாட்டுப் பிரச்னையில் தலையிடவில்லை என்று சொல்லியதை அந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. எனவே, சிறு பிரச்னைக்குக்கூட உணர்ச்சிவசப்பட்டால் மற்ற நாடுகளிலே உள்ள தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம்தான் நமக்கு ஏற்படுகிறது. ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிக்கலான பிரச்னையில் நிதானத்தோடு நடந்து கொண்டு நாம் தீர்வு காண வேண்டும்.

இலங்கைப் பிரச்னைபற்றி பலரும் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறார்கள். இலங்கையிலே இருக்கின்ற நாடற்றவர்கள், பிரஜா உரிமையில்லாதவர்கள், இந்தியாவிலேயிருந்து இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சென்று அங்கே குடியமர்ந்தவர்கள் வறண்டு கிடந்த அந்தப் பூமியைச் செழிப்பாக்கி, வளமான நாடாக்கி, பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த அந்த நாட்டை பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் உருவாக்கிக் கொடுத்த அந்தத் தோட்டத் தமிழர்களைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அவர்களது உரிமை 1948—ஆம் ஆண்டில் பறிக்கப்பட்டதாக மாண்புமிகு முன்னவரவர்களும் இங்கே சொன்னார்கள். அது உண்மை. 1948-ஆம் ஆண்டில் அவர்களது உரிமை பறிக்கப்பட்டது. பத்தாவது வகுப்புக்கு மேல் அவர்கள் படிக்க முடியாது; சொத்து வைத்துக்கொள்ள முடியாது; அவர்களுக்கு வேலைவாய்ப்பும் இல்லை; தோட்டத் தொழி

லாளியின் மகன் தொழிலாளியாகத்தான் பணியாற்ற முடியுமே
தவிர ஆசிரியராகப் போகவோ அல்லது வேறு வேலைக்குப்
போகவோ முடியாது. இதுபோன்ற கட்டுப்பாட்டினால் அவர்கள்
சித்திரவதைக்கு உள்ளாகியிருந்தார்கள். இங்கே அவைகளையும்
பரிவோடு பார்த்து காப்பாற்ற வேண்டும்.

தனி ஈழம் கேட்பதா இல்லையா என்பது வேறு பிரச்னை:
தனி ஈழத்தில் பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள்
போய்ச் சேர முடியுமா, வாழ முடியுமா, பிழைக்க வழியிருக்
கிறதா? உணர்ச்சிவசப்பட்டு தமிழ் ஈழம் வேண்டுமென்று
கேட்டால், பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்களும்,
நாடற்றவர்கள் என்று சொல்லப்படுகின்ற ஐந்து இலட்சம்
பேர்களும், இங்கேயிருந்து வியாபாரம் செய்யப்போன ஒரு
இலட்சம் போகளும் என்ன நிலைமைக்கு ஆளாவார்கள்? தனி
ஈழத்தில் அவர்களுக்கு இடமிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். உணர்ச்சிக்கு இடம் கொடுத்து, தனி ஈழம்
தான் எங்கள் பிறப்புரிமை என்று கேட்டால், அவ்வாறு பிரித்துக்
கொடுத்துவிட்ட பிறகு மெஜாரிட்டியாக இருக்கின்ற சிங்களவர்
களின் மத்தியில் இந்தத் தோட்டத் தொழிலாளர்களை வைத்து
விட்டால் அவர்களுடைய உயிருக்கு பாதுகாப்பு உண்டா?
அவர்களுடைய சொத்துக்களுக்கு பாதுகாப்பு உண்டா? உடைமை
களுக்கு பாதுகாப்பு உண்டா? கற்புக்கு பாதுகாப்பு உண்டா?
எதுவுமே இல்லை.

(நண்பகல் 12-00)

ஆகவே, மெஜாரிட்டி இந்திய வம்சாவழித் தமிழர்கள்
ஒட்டுமொத்தமாக இருந்தால்தான் சிங்களவர்கள் ஓரளவுக்குப்
பயப்படுவார்கள், அவர்கள் ஓரளவுக்கு அச்சப்படுவார்கள்
என்பதை நாம் உணர வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள்
அங்கே இருந்து வெளியேறி வருகின்ற வாய்ப்பு உண்டா?
அவர்களை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியுமா? அகதி
களாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் திட்டவட்டமாக
இந்திரா காந்தி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய
மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் சொல்லி இருக்கி
றார்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் நம்முடைய பொருளா
தாரம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, அவர்களை நாம் ஏற்றுக்
கொள்கிறோம் என்று சொன்ன மறு நிமிடமே அவர்களை
வெளியேற்றுகின்ற முயற்சியிலே சிங்களர்கள் ஈடுபடுவார்கள்,
அராஜகத்திலே ஈடுபட ஆரம்பித்து விடுவார்கள்.

மலேசியா நாட்டில் இருக்கக்கூடிய மலாயாக்காரர்களுக்கும்,
சீனர்களுக்கும் தகராறு நடந்தது. அதுவும் இனக் கலவரம்தான்.
ஆனால் அதே நேரத்தில் அவர்களை அகதிகளாக நாங்கள்
ஏற்றுக் கொள்கிறோம் என்று சீனா சொல்லவில்லை.
அவன் அந்த மண்ணிலேதான் பிறந்தான், அந்த மண்ணிலே
தான் வாழ்ந்தான், அந்த மண்ணிலேதான் திருமணமும் செய்து
கொண்டான், எனவே அவன் அங்கேயேதான் சாக வேண்டும்.



அவனுக்கு எங்கள் நாட்டிலே இடம் இல்லை. தார்மீக
ஆதரவைத்தான் எங்களால் தரமுடியும் என்று சீனா கூறியது.
வேறு எந்த உதவியும் செய்ய முடியாது என்று சொல்லியது.
அதன்பிறகு என்ன ஆயிற்று? அந்த மக்கள் ஒற்றுமையாக
இப்போது மிகவும் சுபிட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
எனவே அதனை நாமும் கடைப்பிடிக்க வேண்டும். இன்றைக்கு
இருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்க
வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைக்
கவனிக்க வேண்டும். அவர்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும்.
சொத்துரிமை மட்டுமல்ல, படிப்புரிமை மற்றும் அனைத்து
ஜீவாதார உரிமைகளும் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும்; அதுதான் இப்போது நாம் செய்யவேண்டிய மிக
முக்கியமான கடமையாகும். ஆனால் இன்றைக்கு தனி ஈழம்
தான் பிரச்சினை என்று தமிழ்நாட்டில் பேசுகிறார்கள். நான்
கேட்கிறேன். இலங்கையில் உள்ளவர்களுக்கு தனி ஈழம்
வேண்டுமா வேண்டாமா என்பதுதான் பிரச்சினையா? ஒரு
மிக முக்கியமான தலைவர், இலங்கை ஐக்கிய விடுதலை
முன்னணித் தலைவர் திரு. சிவ. சிதம்பரம் அவர்கள் அக்டோபர்
13-ஆம் தேதி செய்தியாளர்களிடத்திலே பேசும்போது ஒன்றைச்
சொன்னார்கள். "சென்ற பொதுத் தேர்தலிலே தமிழ் ஈழ
விடுதலையை முன் வைத்துத்தான் போட்டியிட்டு வெற்றி
பெற்றோம், இப்போது திரு ஜெயவர்த்தனே அவர்கள் மாற்று
யோசனையாக ஒன்றைச் சொன்னால் அதை மக்கள் முன்
வைத்து அவர்களுடைய தீர்ப்பைப் பெறுவோம்" என்று சொல்லி
இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தீவிரவாதிகள் என்று சொல்லக்
கூடியவர்களே, அதாவது தமிழ் ஈழம் ஒன்றுதான் வழி என்று
சொல்லக் கூடியவர்களே இன்றைக்கு ஒரு சாம்ப்ரமைஸ் என்ற
தீர்மானத்தின் அடிப்படையில் வேறு வழி ஒன்றை இலங்கை
ஜனாதிபதி அவர்கள் சொல்வார்களேயானால் அதை நாங்கள்
பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று சமரச அடிப்படையில்
வந்திருக்கின்ற நேரத்தில் தனி ஈழம் என்ற உறுதியான
நடவடிக்கை மூலமாகத்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும்
என்று இங்கே பேசுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும்
என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற சூழ்நிலையில் தனி ஈழம் ஒன்றுதான்
வழி என்று சொல்லி தமிழ்நாட்டிலே வெறி எண்ணங்களை
வளர்த்து அதன் மூலமாக ஒரு பிரிவினை வாதத்தை முன்
வைத்து மற்றும் அதற்கான காரண காரியங்களில் மக்களை
ஈடுபடுத்தலாம் என்று நம்புகின்றவர்கள் தயவுசெய்து பிரிவினைக்
கான வித்தை போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கி
றேன். இந்தியாவின் ஒருமைப்பாட்டினைக் காப்போம் என்று
தான் நாம் உறுதிமொழி எடுத்திருக்கிறோம். அதனை அழகாக
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில்
சொல்லி இருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் மாநாட்டில் கலந்து
கொள்ளவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்
களுக்கு கடிதம் வந்து அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள்
பதில் எழுதியபோதும் அதிலே மிக அழகாக எழுதியிருக்
கிறார்கள். பல தலைவர்களும் அது குறித்து கடிதம் எழுதி
இருக்கிறார்கள்.

யிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் வாயிலாக அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியாவின் ஒருமைப் பாட்டினைப் பற்றி ஆணித்தரமாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவின் சமஷ்டி அமைப்பின் மூலமாக வெளிநாடுகளில் இந்தியாவின் மதிப்பை உயர்த்த முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, பிரிவினை விதையினை யாரும் தயவு செய்து விதைக்கவேண்டாம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது தெளிவாகச் சொன்னார்கள். ஐக்கிய நாட்டுச் சபையின் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று சொல்லி பல்வேறு பிரச்சினைகளும் ஐக்கியநாட்டுச் சபையின் மூலமாகத் தான் தீர்க்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். எனவே ஐக்கிய நாட்டுச் சபையின் மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப் பட்டால் நம்மைவிட மகிழ்ச்சிக்குரியவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் ஐக்கிய நாட்டுச் சபையால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்றாகி அது ஒரு விவாத மேடையாக சமீப காலத்தில் இருந்து வருகின்றது. பாரசீக நாட்டிலே உள்ள உண்மையான அரபு மக்களை அந்த இடத்தை விட்டு வெளியே போகச் சொல்லிவிட்டு இன்றைக்கு அவர்களை நாடற்றவர்களாக ஊர் ஊராக பிச்சைக்காரர்களாக அலைய விட்டுவிட்டு அந்த இடத்தில் இஸ்ரேல்காரர்கள் வந்துவிட்டதா காரணத்தால் இன்றைக்கு பாரசீக மக்கள் மிகப்பெரிய போராட்டத்தை நடத்துகின்றார்கள். அந்தப் பிரச்சினையில் ஐக்கிய நாட்டுச் சபையால் தீர்வு காண முடியவில்லை.

அதேபோல் இன்றைக்கு சௌத் ஆப்பிரிக்கா—அபார்தீட்—இன வெறியைக் கிளப்பி விடுகின்ற அரசாங்கம் என்று இருந்த போதிலும், உலகத்திலே உள்ள ஜனநாயக நாடுகள் அதை எதிர்க்கும் சூழ்நிலையில்கூட, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆதரிக்கின்ற சூழ்நிலையில் அதைக் கண்டிப்பதற்கு முன் வராத சபைதான் ஐ.நா.சபை. காஷ்மீர் பிரச்னை 1947 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டபோதிலும், 35—36 ஆண்டுகள் ஆகி விட்டபின்னாலும், இன்றைக்கும் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் இருக்கும் சபைதான் இந்த சபை. ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் என்று சொன்னால் வரவேற்போம். ஆனால் அதனால் முடியாது என்பதுதான் நம்முடைய கருத்து. ஏன் அதைக் கொண்டு சென்றார்கள் என்று சொன்னால், உலக நாடுகளின் ஆதரவு நமக்குக் கிடைக்கும் என்பதால்தான் அங்கே கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் இந்த இலங்கை தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரே வழி இந்தியப் பிரதம அமைச்சர் அவர்கள் மூலமாகத்தான் முடியும் என்பதை நான் சொல்லவில்லை, ஸ்ரீலங்காவில் இருந்து வருகின்ற தலைவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகச் சொல்கிறார்கள். [illegible]



ஒட்டுமொத்தமான கருத்து—இலங்கைப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய தகுதி படைத் தலைவர் இந்திரா காந்தி மட்டும் தான், இந்திய அரசு மட்டும்தான். ஆயினும் மற்றவர்களுடைய ஆதரவை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்திரா காந்தி அவர்களின் 'தகுதியை, மதிப்பை, மரியாதையை குறைத்துப் பேசுவதோ அல்லது அவர் செயல் இழந்துவிட்டார் என்று சொல்வதோ அல்லது அவர் பலத்தை குறைக்கவோ, அதன் மூலம் அரசியல் லாபம் பெறவோ யாராவது விரும்புவார்களானால், அது ஜெயவர்த்தனே அவர்களுக்கு பலம் கொடுப்பது போல் ஆகும். இந்திரா காந்தியை கண்டிப்பதன் மூலம் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைப்பது சற்று கடினமான காரியம் என்பதை நான் இங்கே உணர்த்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்திரா காந்தியை எந்த அளவிற்கு நாம் பலவீனப்படுத்துகிறோமோ, குறைத்து மதிப்பிடுகிறோமோ, அவர் செல்வாக்கைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறோமோ அது ஜெயவர்த்தனேவிற்கு, அவருடைய கரத்தை வலுப்படுத்துவதற்கு ஒப்பாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அதற்கு உதாரணங்கள் சொல்ல வேண்டுமானால், ஏராளமான உதாரணங்களைச் சொல்லமுடியும். இனப்படு கொலை நடந்து கொண்டு இருந்த நேரத்தில் கூட இலங்கையின் ஜனாதிபதி அவர்கள் பல்வேறு நாடுகளுக்கு தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பினார். அமெரிக்காவுக்கு அனுப்பினார், பிரிட்டனுக்கு அனுப்பினார், வங்காளத்திற்கு அனுப்பினார், பாகிஸ்தானுக்கு அனுப்பினார், ப்ரான்ஸிற்கு அனுப்பினார், எனக்கு ஆதரவு தாருங்கள், எனக்கு இராணுவ உதவி தாருங்கள் என்று கேட்டு அனுப்பினார். சில நாடுகள் அதை வெளிப்படையாகச் சொன்னது. அவர் கேட்டது உண்மை என்று சொன்னது. மற்ற சில நாடுகள் சொல்லாமல் இருக்கின்றன. ஆனால், அதற்குள்ளே ஜெயவர்த்தனே அவர்கள் நான் இராணுவ உதவி கேட்கவில்லை, பொருளாதார உதவிதான் கேட்டேன் என்று அறிக்கை வெளியிட்டார். அதை மறுத்து சில நாடுகள், அவர் இராணுவ உதவிதான் கேட்டார் என்று கூறின. அந்த வகையில் இன்றைக்கு செய்திகள் வருவதை நாம் பார்க்கிறோம்.

அமெரிக்காவின் இராணுவ அமைச்சர்—வெஸ்டிகன் என்பவர்—சைனாவுக்குச் சென்றவர், பக்கத்தில் உள்ள பாகிஸ்தானுக்கு 1500 மைல் கடந்து நேரடியாகச் செல்வதற்குப் பதிலாக, 15000 கிலோமீட்டர் பயணம் செய்து ஜெயவர்த்தனே அவர்களுடன் பேச்சு நடத்திவிட்டு, பின்னர் ராவல்பிண்டிக்குச் செல்வதைப் பார்த்தோம். அங்கே ஜெயவர்த்தனே அவர்களோடு இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் மூலமாக திருகோணமலையை அமெரிக்காவுக்கு தாரை வார்க்கும் திட்டம் உருவாக்கப்படுகிறது. அங்கே இராணுவத் தளம் அமைக்கவும், இராணுவ ஆயுதங்களைக் குவிக்கவும், அதன் மூலமாக அங்கே வாழும் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி நொறுக்கவும் இது பயன் பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அது செயல்பாட்டுக்கு வர இருக்கிறது.

(திரு. நா. சுந்தரராஜ்) [1983 அக்டோபர் 25

அமெரிக்காவை உலகத்தில் உள்ள மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று மற்றவர்கள் சொன்னாலும் கூட, அந்த ஏகாதி பத்தியத்தின் மூலமாக உதவி பெற்று எந்த நாடும் வளர்ந்ததாகச் சரித்திரம் இல்லை; அதனிடம் உதவி பெற்று பொருளாதாரத்தில் வளர்ந்ததாகவும் சரித்திரம் இல்லை; அமெரிக்கா எங்கே தலை யிட்டாலும், அங்கே வன்முறை வெறியாட்டம் தொடங்கும். எங்கே அமெரிக்கா தலையிட்டாலும் அங்கே பாசிச உணர்வுதான் தலைதூக்கும்.

அதற்கு ஒரு உதாரணம். அமெரிக்காவின் ஆதரவு பெற்ற பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு தெளிவு தரும். அங்கே எதிர்க்கட்சித் தலைவரை அந்த நாட்டின் ராணுவமே அவர் விமானத்தை விட்டு இறங்கும் நேரத்தில் சுட்டுக் கொன்ற செய்தியைப் பார்க்கிறோம். அதற்கு அமெரிக்காவின் ஆதரவு உண்டு. அதேபோல் எங்கெங்கே சிறுபான்மை மக்கள் விழித்தெழுந்து உணர்வுகளைக் காட்டி, உணர்வுகளை வெளிப் படுத்தி, உரிமைகளைக் கேட்கின்ற நிலைமையேற்படுகிறதோ, அங்கெல்லாம் அதை தடுத்து நிறுத்தும் முதல் சக்தியாக அமெரிக்கா செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆகவே அமெரிக்கா நாட்டை நாம் கண்டித்தாக வேண்டும் என்பதிலே நிச்சயமாக யாரும் பின்வாங்கவில்லை. அதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்து இருப்பதற்காக நான் நிச்சயமாக அவருக்கு நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சீனாவின் வெளிவிவகார அமைச்சர் சிலோன் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்காவின் நண்பன், சீனா. சீனாவும் அமெரிக்காவும் கூட்டு சேர்ந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராக ஒரு பெரும் சதித் திட்டத்தைத் தீட்டுகின்ற சூழ்நிலையைத்தான் நாம் காண முடிகிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்தியாவைச் சுற்றி பகைமை நாடுகள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. இந்தியாவைச் சுற்றி பகைமை வளர்ந்து கொண்டு வருகிறது. இந்தியாவை எந்த நேரத்தில் தாக்கலாம் என்று அவைகள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றன. ஒரு பக்கத்தில் பாகிஸ்தான், மற்றொரு பக்கத்தில் வங்கதேசம், மற்றொரு புறத்தில் சைனா, மற்றொரு புறத்தில்— இன்றைக்கு புதிதாக அமெரிக்கா சீனாவோடு கூட்டு சேர்ந்து இருக்கின்ற இலங்கை. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவில் மிகப் பெரிய அபாயத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பு கிறார்கள். அதை தடுத்து நிறுத்துவதற்கு தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்திரா காந்தி அவர்களின் கரத்தை மட்டுமல்ல, இந்தியப் பிரதமர் அவர்களின் கரத்தையும், வலுப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1983 அக்டோபர் 25]

(பிற்பகல் 12-10)

திரு. என் சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசக்கூடிய திரு. சுந்தரராஜ் அவர்கள் மற்ற விஷயங்களை எல்லாம் சொல் கிறார்கள். இப்போதுதான் நமக்கும் சீனாவுக்கும் இடையேயுள்ள எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு டெல்லியிலே பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர் சார்ந்திருக்கிற கட்சிதான் இந்திய அரசை நடத்துகிறது. அவர்கள் சுமுகமாக பிரச்னையைத் தீர்க்க முயற்சி செய்கின்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் இப்படிப் பேசுவது சரிதானா? அது அவருடைய கட்சியின் உண்மையான அபிப்பிராயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : நான் சீனாவைப்பற்றிப் பேசியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் வருத்தப்படுகிறார்கள். சீனாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்குப் போகும் நோக்கம் என்ன?

திரு. என். சங்கரய்யா : அவர் சரியாக பத்திரிகைகளைப் படிக்கவில்லை என்று கருதுகிறேன். இந்தியாவுக்கு வருகின்ற சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கும் செல்லலாம். இலங்கைக்கு எல்லா நாட்டினரும் செல்கிறார்கள். அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரிடம் போய் இராணுவ உதவி கேட்கிறார்கள் என்றால், அமெரிக்கா திரிகோணமலையைத் தன்னுடைய இராணுவத் தளமாக ஆக்குவதை ஆட்சேபிக்கலாமே தவிர எந்த நாடும் இலங்கைக்குச் செல்லக்கூடாது என்று சொல்ல உரிமை இல்லை. இன்றைக்கு அமெரிக்கா இலங்கை அரசுக்கு உதவி அளிப்பதைப் போல சீனாவுக்கு அளித்திருக்கிறதா? இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையில் தேவையற்ற விரோதத்தை அவர் உருவாக்கிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தேவையற்ற விரோதத்தை உருவாக்க வேண்டாம் என்பதிலே அக்கறையோடு இருக்கிறோம். இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயின் சகோதரர் சீனாவுக்குச் சென்றபோது இந்தப் பிரச்னை குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். ''இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் வேறு நாடுகள் தலையிடு மானால் அதை சீன அரசு வன்மையாகக் கண்டிக்கும்'' என்று சீனா செய்தி வெளியிட்டது திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : நன்றாகத் தெரியும். இப்போது நான் இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது என்று சொல்லவில்லை. வேறு நாடுகள் தலையிட்டால் சீனா கண்டிக்கும் என்று சொல்லியிருக்கிறது. நாம் இருக்கிற பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டுமேயன்றி பிரச்னையை உருவாக்கக்கூடாது. எந்த நாட்டுக்காரர்களும் இலங்கைக்குச் சென்று வரலாம். அதைத் தடை செய்ய யாருக்கும் உரிமை இல்லை. அந்த முறையில் சீன அமைச்சரும் செல்லலாம். அதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் ; சீன நாட்டின் பிரச்னையைப்பற்றி மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அமெரிக்க இராணுவ அமைச்சர் இலங்கை செல்கிறார். அதைத் தொடர்ந்து சீன வெளிவிவகார அமைச்சர் திரு. வெங்க் செல்கிறார். அதனுடைய நோக்கம் என்ன என்பதைப்பற்றி நான் சந்தேகப்படுகிறேன். அங்கே பிரச்னையைத் தீர்ப்பதில் அவர்கள் உதவுவதாக இருந்தால் நமக்கு அதுபற்றி அக்கறை இல்லை. ஆனால் அவர்கள் பேசுவதன் மூலம் அங்கே பதட்டமான விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்; இந்திய மக்களும் தமிழ் மக்களும் அஞ்சுகிறோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்னையிலே இந்திய அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது. மனிதாபிமான முறையில் தேவையான நடவடிககைகளை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கைகளை பிரதம அமைச்சரும் இந்திய அரசும் எடுத்து வருகிறார்கள். அவர்களுக்குஉறுதுணையாக இருந்து, அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு மனிதாபிமானத்தோடு ஆதரவு தருகிற தமிழக அரசையும், முதலமைச்சரையும், அமைச்சரவையையும் நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் சில கருத்து வேறுபாடுகள் ஒரு சில அமைச்சர்களிடமிருந்து வெளிப்படுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சரவையில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லாமல், அனைவரும் ஒரே கருத்துடையவர்களாக இருக்க வேண்டும்; ஒன்றுபட்டவர்களாக இருக்க வேண்டும், அதன் மூலம் அவர்களுடைய செல்வாக்கை மேலும் உயர்த்த வேண்டும். ஒரு சிலர் மாறுபட்ட கருத்தை தெரிவிப்பதாக இருந்தால் அது இந்த அரசின் நடவடிக்கையை சந்தேகப்படுவதாக அமைந்துவிடும். எனவே இருக்கின்ற பிரச்னைகளை உணர்ந்து, அனைவரும் ஒன்றுபட்டு, ஒரு சுமூகமான முடிவு ஏற்பட துணையாக நிற்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் உலக நாடுகளுடைய அனுதாபத்தைப் பெறும் வகையில் ஈழத் தமிழர்களுக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறதே ஒழிய, இங்கே பேசுகின்றவர்கள் பேச்சு உலக நாடுகளுடைய அனுதாபத்தைப் பெறுகின்ற வகையில் இருக்க வேண்டுமே தவிர, இங்கே சீனாவைப் பற்றியோ அமெரிக்காவைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ பேசுவது, உலக நாடுகளுடைய அனுதாபத்தைப் பெறாது என்று நான் கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று இலங்கை தமிழர் பிரச்னை குறித்து இங்கே அரசாங்கத்தின் சார்பாக ஒரு தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டசபை கூடுவதற்கு



முன்பாகவே 14 நாட்களுக்கு முன்பாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இலங்கை தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை, மனித உரிமைகள் பறிப்பு இவைகளுக்கு எல்லாம் இந்தப் பேரவை கண்டனம் தெரிவிக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் பெயராலே ஒரு தனி நபர் தீர்மானம் கொடுத்திருந்தேன். அந்தத் தனி நபர் தீர்மானம் இப்போது அரசாங்கத் தீர்மானமாக மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இலங்கையிலே நடைபெற்ற சம்பவங்கள் பற்றி நான் எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். தமிழச்சிகள் கற்பழிக்கப்பட்டார்கள். 1,000 கோடிக்கு மேலே சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. அங்கே ரத்தம் ஆறாக ஓடிக் கொண்டிருக்கிறது. துப்பாக்கிக் குண்டுகளின் துந்துபி முழக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை இன்று மயான பூமியாக இருந்து கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிற நேரத்திலே ஆந்திராவிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் என். டி. ராமராவ் அவர்கள் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்தார். கேரளத்திலே கருணாகரன் தீர்மானம் கொண்டு வந்தார். கர்நாடகத்திலே தீர்மானம் கொண்டு வந்தார்கள். அமெரிக்கா திரிகோணமலையைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள், அந்த ஏகாதிபத்திய நடவடிக்கையைக் கண்டிப்பது வேறு; ஆனால் அமெரிக்காவிலே உள்ள ஒரு மாநிலம் இலங்கையிலே இனப்படுகொலை நடக்கிறது என்பதைக் கண்டித்து, அவர்களுடைய செனட் அவையிலே தீர்மானமாகக் கொண்டு வந்து கண்டித்து அமெரிக்க முதலாளிகள் இலங்கையிலே போட்டிருக்கிற மூலதனங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அது மட்டுமல்ல; இங்கிலாந்து நாட்டிலே ஹவுஸ் ஆப் காமன்ஸ், ஜெயவர்த்தனே லண்டன் வருகிறார். அவர் இங்கே வரக்கூடாது என்று அவர்கள் தீர்மானம் போட்டார்கள். இவ்வளவு பெரிய சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாமன்றங்கள், இந்தியாவிற்கு வெளியே இருக்கக்கூடிய மன்றங்கள், உலகத்திலே இருக்கக்கூடிய மன்றங்கள் உலகத்திலே இருக்கக்கூடிய பத்திரிகைகள் எல்லாம் இவைகளை கண்டித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் நான் கேட்கிறேன், உங்களுக்கு சட்டசபையைக் கூட்டுவதற்கு இவ்வளவு கால தாமதம் ஏன்? இந்த கண்டன தீர்மானத்தைப் போடுவதற்கு இவ்வளவு கால தாமதம் ஏன்? நான் கேட்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்னையிலே அக்கறை இருப்பதாகச் சொல்கிற உங்களுக்கு சட்டசபையைக் கூட்டி மக்களுடைய பிரதிநிதித்துவ சபையாக இருக்கக்கூடிய தமிழர்களுடைய குரலை எதிரொலிப்பதற்குப் பதிலாக ஏகோபித்து, காலங்கடந்த முயற்சியாக இந்த பிரச்னையில் அக்கறை

உடையவர்களாக இருக்கிறோம் என்று நீங்களும் கொண்டு
வந்திருப்பதை வன்மையாக நான் முதலில் கண்டிக்கிறேன்
இரண்டாவதாக நான் இங்கே சொல்ல விரும்புவது மிக முக்கிய
மான இன்னொரு பிரச்னையாகும். அருமைச் சகோதரர்
சுந்தரராஜ் அவர்கள் முதல்வருக்கு பாராட்டு தெரிவித்தார்.
இந்திரா காங்கிரஸ் சார்பாக முதல்வர் திரும்ப பாராட்டுச்
சொல்ல வேண்டாமா? பிரதமர் இந்திரா காந்திக்கு வாழ்த்துச்
சொல்லியிருக்கிறார். எப்படி சொல்கிறார்? ஆக்கப்பூர்வமான,
நிறைவான, இயன்ற நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க முன்
வந்த இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன் என்று இந்த தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்
கிறார்கள்.

நான் கேட்கிறேன், இங்கே பிரதமர் ஆக்கப்பூர்வமான
நடவடிக்கைகளை எடுத்திருக்கிறாரா? சர்வ கட்சித் தலைவர்களை
அழைத்துக் கொண்டு முதல்வர் டெல்லிக்குப் போனாரே,
மகஜர் கொடுத்தாரே, அந்த மகஜரிலே என்ன சொல்லப்பட்டிருக்
கிறது? அந்த மகஜரிலே ஐ.நா.மன்றத்திலே இந்தப் பிரச்னை
எழுப்பப்பட வேண்டுமென்ற கருத்து தெளிவாக சொல்லப்
பட்டிருக்கிறதே, அதை நான் இங்கே வாசிக்கிறேன். The issue has
to be immediaetlyraised in the United Nations and the Security Council
பாதுகாப்பு மன்றத்திலே, ஐ.நா.மன்றத்திலே இந்தப் பிரச்னை
எழுப்பப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது
மட்டுமா சொல்லப்பட்டிருக்கிறது நீங்கள் கொடுத்த மகஜரிலே?
ஐ.நா. மன்றம் இலங்கைக்கு சமரசப் படையை அனுப்ப வேண்டு
மென்று சொல்லப்பட்டிருக்கிறது. பங்களாதேஷ் பிரச்னையை
அணுகியது போல, பாலஸ்தீன அகதிகள் பிரச்னையை அணுகியது
போல மத்திய சர்க்கார் இந்திரா காந்தி அம்மையார் இதை
அணுக வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்,
நீங்கள் சர்வ கட்சித் தலைவர்களை மக்களுடைய வரிப்பணத்திலே
டெல்லிக்குக் கூப்பிட்டுக் கொண்டு போனீர்கள். அங்கே கொடுத்த
மகஜரிலே இருப்பதை அந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை
இந்திரா காந்தி அம்மையார் எடுத்திருக்கிறார்களா? நான் கேட்க
விரும்புகிறேன். எவ்வளவு காரியங்களை இங்கே சொல்லியிருக்
கிறீர்கள். இதிலே இந்திரா காந்தி அம்மையார், இந்தியப்
பிரதமர் ஐ.நா. மன்றத்திலே இதுவரைக்கும் இலங்கைத் தமிழர்
பிரச்னை குறித்துப் பேசியிருக்கிறாரா? அணு ஆயுதப்
குறைப்பைப் பற்றி பேசியிருக்கிறார். உலக சமாதானத்தைப்
பற்றி பேசியிருக்கிறார். இலங்கையிலே தமிழச்சிகள் கற்பழிக்கப்
படுகிறார்களே, தமிழர்கள் சொத்து சூறையாடப்படுகிறதே,
அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களே,
நம்முடைய பிரதமர் அது குறித்து ஐ.நா. மன்றத்திலே ஒரு
வார்த்தை பேசியிருக்கிறாரா? அப்படிப் பேசாமல் இருந்த
இந்திராகாந்தி அம்மையாருக்கு நீங்கள் வாழ்த்துச் சொல்வதற்கு
உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?
சொல்கிறேன். இன்றைக்கு இதே இந்திரா இன்னமும்
அராபத்தினுடைய விவகாரத்தை—1947-க்கு அம்மையார்
முன்னாலே





இஸ்ரேலே கிடையாது. அமெரிக்காவும், இங்கிலாந்தும், யு.என்.
தீர்மானம் மூலமாக பாலஸ்தீனர்களின் தலைநகரமாக இருந்த
ஓல்ட் பாலஸ்தீனத்தை அவர்கள் பிடித்து இப்போது இருக்கிற
இஸ்ரேல் என்று பெயரிட்டுக் கொடுத்தார்கள். அராபத் தனி
நாடு கேட்கிறார். அராபத் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு
பலாத்கார முறையிலே எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று
கேட்கிறார். நான் கேட்கிறேன். இந்திரா அம்மையார் இந்தப்
பிரச்னையை பற்றி ஐ.நா.மன்றத்திலே பேசுகிறார். தனி நாடு
கோரிக்கையை ஆதரித்துப் பேசுகிறார்.

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல, இஸ்ரேலுக்கும் நமக்கும் எல்லைத் தகராறா?
கிடையாது. ஆனால் அராபத்திற்காக இந்தியத் தூதுவர்
இஸ்ரேலுக்குப் போகக்கூடாது, இஸ்ரேல் தூதுவர் இந்தியாவில்
இல்லை. யாருக்காக? இஸ்ரேலுக்கும் நமக்கும் தகராறா?
கிடையாது. அராபத்திற்காக, பாலஸ்தீனர்களுடைய
சுதந்திரத்திற்காக.

அது மட்டுமல்ல, ஆசிய விளையாட்டுப் போட்டி டெல்லியிலே
நடைபெற்றது. அந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில்
இந்திரா அம்மையார், பாரதப் பிரதமர் அவர்கள் உலகத்தில்
உள்ள எல்லா நாட்டு விளையாட்டு வீரர்களையும் அனுமதித்தார்,
ஆனால் இஸ்ரேல் நாட்டு வீரர்களை மட்டும் விளையாட
அனுமதிக்கவில்லை. யாருக்காக? அராபத்திற்காக?

அதுமட்டுமல்ல. ஒரு மாதத்திற்கு முன்பாக டெல்லியிலே
எனர்ஜி கான்பரென்ஸ் நடந்தது. உலகத்திலே உள்ள அத்தனை
விஞ்ஞானிகளும் கலந்துகொள்ள அனுமதித்த இந்திரா காந்தி
அம்மையார் இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகளை மட்டும் கலந்து
கொள்ள அனுமதிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதி ரீகனே
இதைக் கண்டித்திருக்கிறார். நான் கேட்கிறேன். இந்த
அராபத்தைப் பற்றி இந்திரா அம்மையார் அவர்கள் பேசுகிறார்.
கங்கள் கொண்டு போய்க் கொடுத்த. இங்கிருந்த அனைத்துக்
நீட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு போய் கொடுத்த
மகஜரிலே இதைப் பற்றி ஐ.நா. மன்றத்திலே பேசுங்கள் என்று
சொன்ன பிறகும் இதுவரையிலும் பேசவில்லை அதற்காக ஒரு
கண்டனம் தெரிவிப்பதற்கு உங்களால் முடியவில்லை. கண்டனம்
தெரிவிப்பதற்குப் பதிலாக வாழ்த்துவதா? இதற்காக இந்தச்
சர்க்கார் முதலில் பதில் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல. இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களாக
இருந்தாலும் சரி, தமிழகத்திலே இருப்பவர்களாக இருந்தாலும்
சரி, நாம் எல்லாம் வெளிநாட்டுக்குப் போகிறோம். இங்கே
உறுப்பினர்கள் எல்லோரும் போய்வந்தவர்கள்தான். ஆனால்
தென் ஆப்பிரிக்காவிற்குப் போகமுடியாது. பாஸ்போர்ட்
தென் ஆப்பிரிக்காவிற்கும் நமக்கும் என்ன எல்லைத்
கிடையாது.

தகராறா? கிடையாது. என்ன காரணம்? என்று கேட்டால், தென் ஆப்பிரிக்காவிலே இருக்கக்கூடிய நிறவெறியைக் கண்டித்து நீக்ரோக்களுக்காக இந்தப் பிரச்சினையை இந்திரா அம்மையார் ஐ.நா. மன்றத்திலே பேசினார்கள். தூதுவர்கள் அங்கே இருக்கக் கூடாது. இங்கேயும் இருக்கக் கூடாது. ராஜாங்க உறவு எல்லாம் விட்டுவிட்டார்கள். ஐ.நா. மன்றத்திலே இந்தப் பிரச்சினை குறித்து, தென் ஆப்பிரிக்காவின் நிறவெறியைக் கண்டித்து இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பேசினார்கள். நான் கேட்கிறேன். தென் ஆப்பிரிக்கா நாட்டுக்குள்ளே இருக்கிற கருப்பு ரோஜாக்களுக்காக, நீக்ரோக்களுக்காகப் பேசுகிற இந்தியப் பிரதமர், நம்முடைய சகோதரிகள் கற்பழிக்கப்படுகிறார்களே, நம்முடைய தமிழர்களின் சொத்துக்கள் வீதிகளிலே தீக்கிரையாக்கப்பட்டு, அழிக்கப்பட்டபோது, ராணுவமும் போலீசும் கொலை வெறிச் செயலைச் செய்தபோது, ஒரு வார்த்தை கண்டித்துப் பேசியது உண்டா? ஐ.நா.விலே பேசியது உண்டா?

Thiru K. S. G. HAJA SHAREEF: Sir, what the Hon. Member is saying is absolutely wrong and against all canons of correctness. Srimathi Indira Gandhiji, the Prime Minister of India, has condemned what was taking place in Ceylon and she has condemned in very strong terms and I can prove that because of her attitude and actions the cartridge was stopped in the middle; otherwise, it would have gone to a long extent.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு). இந்த மன்றத்திலே நாம் எடுத்து வைக்கின்ற வாதங்கள், பேசுகின்ற கருத்துக்கள் அத்தனையும், இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு துணை செய்வதாகவும். மாநில அரசு மத்திய அரசின் நடவடிக்கைகள் அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க உறுதுணையாக இருக்கவேண்டுமே தவிர, அங்கே இருக்கின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், இன்னும் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் துணையாக இருக்கின்ற கருத்துக்களை தயவுசெய்து சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரதப் பிரதமர் எந்தெந்த முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த முறைகளில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எங்கெங்கே கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்ற முழு விபரமும் என்னிடம் சொல்வதற்குத் தயாராக உள்ளது. அதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு ஐக்கிய நாட்டிலே பாரதத்தின் குரலாக இந்த அமைச்சரவையிலே பிரதிநிதியாக இருப்பவர் பேசியிருக்கிறார். பல்வேறு கட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். ஆகையினாலே நீங்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் கண்டித்துப் பேசவில்லை என்று சொன்னதை நான் வன்மையாக மறுத்து கண்டிக்கிறேன். (குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பினர் பேசும்போதும் குறுக்கிட வேண்டாம். அவரவர்கள் பேசும்போது பதில் சொன்னால் போதும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானம் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை இலங்கைப் பிரச்சினையிலே பிரதமர் இந்திரா அம்மையார் எடுக்கிறார், ஆகையினாலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்று வாசகம் வருகிறது. அப்படி எதுவும் நடைபெறவில்லை. அது தவறு, என்று நான் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன்.

இரண்டாவது, சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் இந்திரா காந்தி அம்மையாரைப் பார்க்கப்போனது எதற்காக? ஐ.நா. மன்றத்திலே இந்தப் பிரச்னையை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இது போன்ற பிரச்னை ஏற்பட்டபோது, ஐ.நா. மன்றத்திலே அதை விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

எங்கள் தலைவர், கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1963 ஆம் ஆண்டு, தூத்துக்குடியில் நடைபெற்ற கட்சிப் பொதுக் குழுவிலே—அப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்த இனப் படுகொலைகள் நடந்து கொண்டிருந்த கால கட்டம்—அதனை ஐ.நா. மன்றத்திலே கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். உங்களுடைய கோரிக்கையும் அதுவேதான். ஆனால் உங்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே. ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல; தீர்மானத்தையே போட்டிருக்கிறது இந்திரா காங்கிரஸ் கட்சி. ஒரு முழு பக்க விளம்பரமும் கொடுத்திருக்கிறது.

அந்த விளம்பரத்தில் வேடிக்கை என்னவென்றால், இலங்கை வாழ் மக்களின் பிரச்னையை ஐ.நா. மன்றத்திலே பேசவேண்டும் என்று, முதலமைச்சர் அவர்கள் தயாரித்த மகஜரில் சர்வகட்சி மகஜரில், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, மரியாதைக்குரிய தலைவர் பழனியாண்டி அவர்களும் கையெழுத்து இட்டிருக்கிறார்கள். பழனியாண்டியே சொல்கிறார், இந்திரா அம்மையாரை, ஐ.நா. மன்றத்திலே பேசுங்கள் என்று. ஆனால் பேசவில்லை. பிறகு எப்படி நீங்கள் வாழ்த்துச் சொல்லலாம். இதை ஐ.நா. மன்றத்திலே கொண்டு போவதினாலே பயனே இல்லை என்ற கருத்தை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்குப் பிறகும் அந்த அம்மாவை நீங்கள் பாராட்டுவதிலே நியாயம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1983 அக்டோபர் 25

ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள்
பொதுக் கூட்டத்திலே சொன்னது போல், இந்திரா காங்கிரஸ்
கட்சி ஒரு ஜோக்கர், அதை தி.மு.க. இதுவரையில் பயன்படுத்
தினார்கள். இப்போது நாங்கள் பயன்படுத்துறோம் என்று
சொன்னது போல பயன்படுத்துகிறீர்களோ என்னவோ எனக்குத்
தெரியவில்லை நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு
இந்தப் பிரச்னையில், ஐ.நா. மன்றத்திலே உள்ள சமரசப் படை
களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்து சர்வ கட்சி
மகஜரில் இருக்கிறதா இல்லையா? அதிலே ஐ.நா.விலே இருக்கக்
கூடிய சமரசப் படை இலங்கை செல்லவேண்டும் என்று வலியுறுத்தி
யிருக்கிறார்களா இல்லையா? ஆனால் அப்படி இருந்தும் அதனை
இந்திரா அம்மையார் ஏற்றுக் கொண்டார்களா?

1953 ஆம் ஆண்டு ஐ.நா. மன்றத்தினுடைய சமரசப்படை
கொரியாவிற்கு போயிருக்கிறது. 1947 ஆம் ஆண்டு, ஐ.நா.
மன்றத்தினுடைய சமரசப்படை இந்தோநேசியாவிற்குப்
போயிருக்கிறது. 1960 ஆம் ஆண்டு, ஐ.நா. மன்றத்தினுடைய
சமரசப்படை காங்கோவிற்குப் போயிருக்கிறது. சைப்பிரசுக்குப்
போயிருக்கிறது. ஆனால் உங்களுடைய கோரிக்கைக்கு அந்த
அம்மையார் பாராமுகமாக இருந்து விட்டார்களே, அதை வீண்
என்று சொல்லிவிட்டார்களே, அதற்குப் பிறகும் அந்த
அம்மையாருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்று
கிறீர்களே, அதனுடைய மர்மம் என்ன? இரகசியம் என்ன?
உங்களுக்கு எதிராக போடப்பட்டிருக்கிற கமிஷனை திரும்பப்
பெறவேண்டும் என்பதற்காகவா? அல்லது தேர்தலை ஒட்டியா?
எனக்கு விவரங்கள் தெரியவில்லை. அதைத்தான் நான் மனதாரக்
கண்டிக்கிறேன்.

அகில இந்திய இந்திரா காங்கிரசினுடைய பொதுச்
செயலாளர் திரு. ஸ்டீபன் அவர்கள் என்ன சொல்லியிருக்
கிறார்கள் என்றால், இதில் கடுமையாக ஈடுபட்டால் மேற்கு
வள நாடுகள் வலுப்பெற்றுவிடும், உலக யுத்தம் வந்துவிடும்
என்று பேசியிருக்கிறார்கள். யார்? இந்திரா காங்கிரசினுடைய
பொதுச் செயலாளர். ஆகவே நான் உங்களிடத்திலே கேட்க
விரும்புவது, பிரதம அமைச்சர் அவர்களுக்கு கண்டனம் தெரிவிப்ப
தற்கு பதிலாக நன்றி சொல்லியிருப்பது ஏன்? அதைத்தான்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்கிறேன்,
கண்டிக்கிறேன்.

அடுத்து இன்னொன்று. பார்லிமெண்டிலே இதுவரைக்கும்
இதற்காக கண்டனத் தீர்மானம் போடப்பட்டிருக்கிறதா
என்றால், இல்லை. ஏன் போடப்படவில்லை? போடுவதற்கு
என்ன அச்சம்? பங்களாதேஷ் விவகாரத்திலே பார்லிமெண்டிலே
கண்டனத் தீர்மானம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள்.
அந்த விவகாரங்களுக்கெல்லாம் தீர்மானம் போடும்போது,
இதிலே ஏன் போடவில்லை. அது மட்டும் அல்ல, பண்டிட்
ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது, தென்
ஆப்பிரிக்காவில் ஒரு சின்ன கிராமத்தில், போலீசாரால் சுடப்



1983 அக்டோபர் 25] [திரு. அ. ரகுமான்கான்]

பட்டு, அங்கே இருந்த விடுதலை வீரர்கள் சிலர் செத்துப் போய்
விட்டார்கள் என்பதற்காக, பார்லிமெண்டிலே கண்டனத்
தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள், 1960
ஆம் ஆண்டு மார்ச் மாதம்.

ஆனால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்
பட்டிருக்கிறார்கள், எங்களுடைய ரத்தம் அங்கே ஆறாகப்
பெருகி ஓடுகிறது போராடிய தமிழர்கள் அடியோடு அழிக்கப்
பட்டும், வேரறுக்கப்பட்டும் விட்டார்கள். அந்த இலங்கை
வாழ் தமிழர்களுக்காக பார்லிமெண்ட்டிலே ஒரு வார்த்தை
கண்டனத் தீர்மானம் உண்டா? ஏன் போடவில்லை? என்ன
காரணம்? இங்கே இருக்கிற என் அருமை சகோதர உறுப்பினர்
களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து சிந்தித்துப்
பாருங்கள். அதைக் கண்டிக்கிற துணிவு உங்களுக்கு
வேண்டாமா?

அடுத்து, ஜெனிவாவிலே ஒரு மாநாடு நடைபெற்றது. என்ன
மாநாடு என்று கேட்டால், ஹியூமன் ரைட்ஸ் கமிஷனுடைய ஒரு
சப்கமிட்டி மாநாடு. இப்போது ஐ.நா. கமிட்டியிலே நம்முடைய
பிரதிநிதியாக மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன்
அவர்கள் கலந்து கொண்டார். அது மாதிரி இதுவும் ஜெனிவா
விலே நடைபெற்ற ஒரு கமிட்டி. அந்தக் கமிட்டியிலே எல்லா
நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டார்கள். நார்வே
நாட்டுப் பிரதிநிதியும், பாகிஸ்தான் நாட்டுப் பிரதிநிதியும், மற்ற
நாட்டுப் பிரதிநிதியும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே இலங்கையில்
எல்லோரும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.
நடைபெற்ற இனப் படுகொலையை வன்மையாகக் கண்டித்து,
தீர்மானம் போட்டு, ஹியூமன் ரைட்ஸ் கமிஷனுக்கு இதை
நாங்கள் கொண்டு போவோம் என்று சொன்னபோது,
இந்தியாவின் பிரதிநிதி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

(பிற்பகல் 12-30)

அவ்வளவு வேகம் காட்டக் கூடாது. அது தேவையில்லை
என்று அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள். ஆகையினால் நான்
கேட்கிறேன், அவர்களுடைய கடந்த கால நடவடிக்கைகள்
எல்லாம் இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சினையிலே ஆக்கப்
பூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை. ஜெயவர்த்தனேயோடு
டெலிபோனிலே பேசினார்கள், ஜெயவர்த்தனேயினுடைய
தம்பிக்கு விருந்து கொடுத்தோம், திரு. நரசிம்மராவ் அவர்களை
அனுப்பி வைத்தோம், வட்ட மேஜை மாநாடு போடுகிறோம்,
சதுர மேஜை மாநாடு போடுகிறோம். இதை சுமுகமாகத்
தீர்க்க வேண்டும், உலக யுத்தம் வந்துவிடும் என்பது எல்லாம்
இங்கே தமிழகமே திரண்டெழுந்து கொதித்து எழுந்து இந்தப்
பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அண்ணா அவர்கள் முழங்கினார்
களே 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்று, அதுபோன்று
தனித் தமிழ்நாடு இங்கே உருவாகிவிடும் என்ற அச்சத்தின்
காரணமாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி வேறு வழி

யில்லாமல் அற்ப சொற்பமான சின்னஞ்சிறு சாதாரணமான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்களே தவிர இது பிரச்சினைக்குத் தீர்வு ஆகாது. அதை இந்த சர்க்கார் கண்டித்து இருக்கவேண்டும். ஆனால் நீங்கள் கண்டிக்கத் தவறிவிட்டீர்கள்.

அடுத்து இராணுவம் சம்பந்தமாக அருமை சகோதரர் திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசினார்கள். நான் கேட்கிறேன், இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பச் சொல்வது அக்ரஷன் என்பதற்காக அல்ல, ஏகாதிபத்திய நாடுகள் காலனியாக்கு வதற்காக ஏகாதிபத்திய வேட்டையிலே நின்றுகொண்டிருக் கின்றனவே அந்தக் காரியத்தைச் செய்வதற்காக அல்ல. இன்றைக்கு இலங்கையிலே இருக்கக்கூடிய நிலை 'ரெஸ்டோரேஷன் ஆப் பீஸ்' அமைதியை நிலை நாட்டுவதற்காக வேறு வழி யில்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறானே இலங்கை வாழ் தமிழன், அவனைக் காப்பாற்றுவதற்காக. 1971 ஆம் ஆண்டு பண்டாரநாயக பிரதமராக இருந்தபோது அங்கே இதுபோன்று உள்நாட்டுக் கலவரம் வந்தது. அந்த உள்நாட்டுக் கலவரம் சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் அல்ல, அங்கே இருக்கக்கூடிய சிங்கள மிதவாத இயக்கம் அல்ல, பலாத்கார இயக்கம் ஒரு பெரிய கலவரத்தை உருவாக்கியபோது பண்டாரநாயகா இந்தியாவின் இராணுவத்தைக் கேட்டார். இந்தியாவின் இராணுவம் அங்கே போய் அடக்கியது. நான் கேட்கிறேன். கோவாவிற்கு இந்தியா இராணுவத்தை அனுப்பியதே, யார் கேட்டது? நான் கேட்க விரும்புகிறேன். அடைந்தால் பாகிஸ்தான் இல்லையேல் கபார்கான் என்று கூறி காயிதேமில்லத் முகமது அலி ஜின்னா சாகிப் பாகிஸ்தானை வாங்கிக் கொடுத்ததற்குப் பிறகு முஜ்பீர் ரகுமான் பிரிவினை கேட்டாரா? 6 அம்சக் கோரிக்கையை வைத்தார். தனி நாடு கேட்டாரா? பிரிவினை கேட்க வைத்தது யார்? தனி நாடு கேட்க வைத்தது யார்? அகதிகள் தொல்லை என்று சொல்லி இராணுவத்தை அனுப்பியது யார்? இந்திய சர்க்கார் இல்லையா? பிரதமா இல்லையா? அது உள்நாட்டுக் கலவரம் இல்லையா? மாநில சுயாட்சி கேட்ட முஜ்பீர் ரகுமானை பிரிவினை கேட்க வைத்து இராணுவத்தை அனுப்பியது இந்திரா காந்தி இல்லையா? நான் கேட்கிறேன், அங்கே அவர்கள் இராணுவத்தை அனுப்பியது நியாயந்தானா?

அது மட்டுமல்ல. அங்கே இருக்கிற கான் அப்துல் கபார் கான் சிறைச்சாலையிலே இருக்கிறார், அவர் பக்தூனிஸ்தான் கேட்கிறார், தனிநாடு கேட்கிறார். பக்தூனிஸ்தான் கேட்கக்கூடிய கானை இந்திராகாந்தி இந்தியாவுக்கு அழைத்து வரவில்லையா? அவருக்கு இங்கே பண முடிப்பு தரவில்லையா? பக்தூனிஸ்தான் தனிநாடு கோரிக்கையை இந்திரா காந்தி ஆதரிக்கவில்லையா? இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்கிறபோது ஏகாதிபத்திய ஆசையின் காரணமாக சொல்லப்படுவது அல்ல.

அது மட்டுமல்ல, இலங்கையிலே உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகம் தாக்கப்படுகிறது. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் தாக்கப் படுகிறது. சிரிமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தின்படி



இருக்கிற நம்முடைய இந்தியப் பிரஜைகள் தாக்கப்பட்டிருக் கிறார்கள். இந்திய ஆபீஸ் தாக்கப்பட்டு இருக்கிறது, சுற்றுலாப் பயணிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியர்கள் அநியாயமாக இலங்கையில் கொல்லப்பட்டிருக்கிறார்களே, அந்த ஒரு காரணம் போகாதா இராணுவத்தை கொண்டுபோய் நிலையைச் சரி செய்வதற்கு? வேறு என்ன காரணம் வேண்டும்?

சைப்ரஸிலே கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் மன வருத்தம் ஏற்பட்டபோது, கலவரம் ஏற்பட்டபோது, சைப்ரஸிலே வாழ்கின்ற துருக்கியர்களுக்காக அவர்களைக் காப்பாற்று வதற்காக துருக்கி இராணுவத்தை அனுப்பவில்லையா? அங்கே அவர்களுக்கு என்று ஒரு தனிநாட்டை உருவாக்கிக் கொடுக்க வில்லையா? ஆகவே இராணுவத்தை அனுப்புவது கூடாது என்று சொல்கிற காரியம் தவறான காரியம்.

இங்கே அகில இந்திய அண்ணா தி.மு.க. சகோதரர்களைப் பொறுத்தமட்டில் பிரச்சினை சிக்கலாக இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொல் கிறார் இதிலே இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள் பல்வேறு அபிப்பிராயங்களில் இருக்கிறார்கள். தொண்டமான் ஒரு அபிப்பிராயத்தில் இருக்கிறார், அமிர்தலிங்கம் ஒரு அபிப் பிராயத்தில் இருக்கிறார், விடுதலை புலிகள் ஒரு அபிப் பிராயத்தில் இருக்கிறார்கள். முதலிலே அவர்கள் ஒரு மித்த கருத்தோடு ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று கேட்கிறார். நான் கேட்கிறேன் இதிலே உங்களுக்குள் கருத்து ஒன்றாக இருக்கிறதா? நான் கேட்க விரும்புகிறேன்: ஈழத் தனிநாடு நீங்கள் ஆதரிக்கிறீர்களா? இல்லையா?

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : திரு. ரகுமான்கான் அவர்கள் யாருக்காக பரிந்து பேசுகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. சிலோன் மக்களுக்காகப் பரிந்து பேசுகிறாரா அல்லது இந்திராகாந்தியை எதிர்க்க வேண்டும் என்று பேசுகிறாரா? சிலோனில் இருந்து இங்கு வந்த எல்லா தலைவர்களும் இந்திரா காந்தி அவர்கள் எடுத்த முயற்சி மிகவும் சரியான முயற்சி என்றும் பாதுகாப்பு அவர்களுக்கு வந்து இருக்கிறது என்றும் அதன் காரணமாகத்தான் அவர்கள் அடிபடுவது நின்று இருக் கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இங்கே இவர் அதற்கு நேர்மாறாக பேசுகிறார். இவர் பேசுவது அங்கே சிலோனில் சிக்கல் வந்து தூண்டுவது போல் இருக்கும். இன்னும் சிலோனில் இருக்கக்கூடிய மக்களை அழிக்கக்கூடிய ஒரு நிலைமையை இவர் உருவாக்கி வருகிறார். தயவுசெய்து அதை நிறுத்த வேண்டும் என்று நான் திரு. ரகுமான்கான் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய அருமை சகோதரர் ஹாஜா செரீப்பாய் அவர்கள் இங்கே பேசுகிறபோது யாருக்காக பேசுகிறேன் என்று கேட்கிறார்கள். நான் யாருக்காக பேசு கிறேன் என்பதைக்கூட தெளிவாக்கிக் கொள்ளாதவர்கள்

இன்றைக்கு இந்திரா காங்கிரஸில் இருக்கிறார்கள் என்பது தான் என்னைப் பொறுத்தவரை உள்ள வருத்தம். காரணம் இலங்கை தமிழர்களுக்காகத்தான் பேசுகிறேன். அவர்கள் எங்களவர்கள். எங்கள் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள். ஆகையால் அவர்கள் இன்றைக்கு ஒரு சிங்களத் தீவிலே சிங்கள வெறியர்களால் சிங்கள ராணுவத்தினரால். . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாருக்காக பேசுகிறார்கள் என்கிற சந்தேகத்தை இந்திரா காங்கிரஸ் தலைவர் அவர்கள் கிளப்பினார்கள். அதற்கு மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் நாங்கள் தமிழர்களுக்காக பேசுகிறோம் என்று சொன்னார்கள். அதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் நாம் பேசுகிற பேச்சு இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு தேடித் தருகின்ற பேச்சாக இருக்கவேண்டுமே தவிர அவர்களுக்கு இருக்கின்ற ஆதரவை இருக்கின்ற அளவுக்கு நாம் உணர்ச்சி வயப்பட்டோ ஆத்திரப்பட்டோ பேசி அவர்களுக்கு கிடைக்கின்ற ஆதரவை, அவர்களுக்கு கிடைக்கின்ற பாதுகாப்பை இழக்கின்ற முயற்சியில் நாம் ஈடுபடுவோமானால் நாம் மகத்தார விரும்புகிற ஒரு நல்ல நோக்கம் நிறைவேறுவதற்கு மிகவும் கடினமாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே, சித்திரவதை அனுபவித்துக்கொண்டு இருக்கிற இலங்கை வாழ் தமிழர்கள் இன்றைக்கு தங்களுடைய வாழ்க்கையின் வசந்தத்தை இழந்து எப்படியும் இலங்கை தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று துடித்துக்கொண்டு இருக்கிறார்கள் அந்த விடுதலைப் புலிகள்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முஜ்பீர் ரஹ்மான்பிரிவினை கேட்க யார் காரணம் என்று மறைமுகமாக சொன்னதை உண்மையிலேயே நான் வேதனையோடு குறிப்பிட ஆசைப்படுகிறேன். வங்கத்திலே ஒரு பிளவு உண்டாக்குவதற்கு இந்திய அரசு தான் காரணம் என்பதை உலக நாடுகள் அறியக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமையை இங்கே பேச்சாக, கருத்தாக கொண்டு இருப்பது நம்முடைய குறிப்புகளில் இருக்கலாமா என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் குரலை, இலங்கை தமிழர்கள் குரலை தான் நான் இங்கே எதிரொலித்துக் கொண்டு இருக்கிறேன். இலங்கையில் உள்ளவர்கள் ஒத்த கருத்து உடையவர்களாக இருக்கவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது நல்ல கருத்து தான். ஆனால் இங்கே அமைச்சர்கள் இருக்கிறார்கள்



உங்களுக்குள் இந்தப் பிரச்சனை குறித்து ஒத்த கருத்து உண்டா? இல்லையா? அதை நான் முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம் ராணுவத்தை அனுப்பக்கூடாது, போர் வந்து விடும், என்று போரைப் பற்றி தெரியாதவர்கள் குண்டு போட்டுவிடுவான், உலகம் அழிந்துவிடும்—ராஜ ராஜன் காலத்திலேயா வாழ்கிறோம்—என்று யாருக்கும் தெரியாத இந்த உண்மையை அமைச்சர் வீரப்பன் அவர்கள் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கல்லூரியில் படித்த என்னுடைய இனிய நண்பர் இன்னும் உணர்வுடைய அமைச்சர் மதிப்பிற்குரிய காளிமுத்து அவர்கள் இங்கே பேசுகிறார், மத்திய அரசு தமிழர்களைக் காப்பாற்ற ராணுவத்தை அனுப்பியிருக்கவேண்டும். ராணுவம் அனுப்பினால் உலக யுத்தமாக மாறிவிடுமா? திரிகோண மலையில் அமெரிக்கா தளம் இருக்கிறது. ஆகவே அமெரிக்கா இலங்கையின் உதவிக்கு வரும் என்கிறார்கள். ஜெயவர்த்தனே ஆத்திரத்தில் ராமேஸ்வரத்தை தாக்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நாம் திருப்பி தாக்கினால் அமெரிக்கா உதவிக்காக வரத் தானே செய்யும். மத்திய அரசு ராணுவத்தை அனுப்பாமல் தேசீய ஒருமைப்பாடு என்று கூறுவது கேலி கூத்தாக உள்ளத்தில் ஒன்றுபடாத உதட்டோடு தவழும் போலி பூச்சாக கபட நாடகமாகத்தான் இருக்கும். மத்திய அரசு போற்றத்தக்க நிதானத்துடன் நடந்து கொள்வதாக பாராட்டு வேறு கிடைக்கிறது. உங்களைப் பார்த்துதான் சொல்கிறார். அது மட்டும் அல்ல— இது பாராட்டு அல்ல மத்திய அரசுக்கு ஏற்பட்ட களங்கம். இலங்கை கலவரம் உள்நாட்டு விஷயம் என்று சொல்லும் மத்திய அரசு அங்கே தமிழர்கள் தனி நாடு கேட்கக் கூடாது என்று புத்திமதி கூறுகிறது. உள்நாட்டு பிரச்சனை என்றால் இந்தப் புத்திமதியை சொல்வது ஜெயவர்த்தனே கையை பலப்படுத்த உதவும். இவ்வாறு பேசியிருப்பது அமைச்சர் திரு. காளிமுத்து. ஒரு திருமண வீட்டிலே முதல் அமைச்சர் சொல்கிறார், என்னுடைய சம்மதத்தின் பேரில், அமைச்சர் சொல்லிவிட்டுத்தான் பேசுகிறார், என்று. அப்படி என்னிடம் சொல்லிவிட்டு ஒத்த கருத்தாக இருந்தால், பிரதமரைக் கண்டித்திருக்க வேண்டாமா? ராணுவத்தை அனுப்பாதது தவறு, ராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்க வேண்டாமா? கேட்டால் நாவலர், அவர் உணர்ச்சியுள்ளவர், உணர்ச்சியைக் காட்டினார், நான் அப்படித்தான் இருப்பேன் என்று ஒருவேளை, சொல்லக் கூடும்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கருத்து வேறுபாடு வேறு; உணர்ச்சி வேறுபாடு வேறு. நான் எப்படி என்பதை இந்த நாடு நன்கு அறியும். 40 ஆண்டுக்காலமாக நன்றாக அறியும். ரகுமான்கானை விட உணர்ச்சி உள்ளவனா, அறிவு கொண்டவனா, ஆற்றல் எழுச்சி கொண்டவனா, என்பதை நாடு மிகத் தெளிவாக அறியும். அதைப்பற்றி எனக்குக் கொண்டவனா, அதிலே அவர் சந்தேகப்பட்டாலும்,

கவலை இல்லை ஆனாலும் இப்பொழுது நான் சொல்வது, ஒப்பீனியன் என்பது வேறு, உணர்ச்சி என்று சொல்கின்ற தன்மைகள் வேறு. கடைசியிலே அது குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு பொதுக்குழு என்ன முடிவு எடுக்கிறதோ அதுதான் முடிவு. முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறாரோ அதுதான் முடிவு. மற்ற வகைகளிலே, அவர்களுடைய ஒப்பீனியன் மாறலாம். அப்படி பார்த்தால், டாக்டர் கலைஞருடைய கருத்துக்கும் ரகுமான்கானுடைய கருத்துக்கும் வேறுபாடுகளை நான் தேடிப் பார்த்தால் 4 நாட்களில் எடுத்துக் கொடுக்க முடியும். ஆகவே, ஒப்பீனியன் மாறத்தான் செய்யும். உணர்ச்சி மாறத்தான் செய்யும். அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முடிவு எது என்று கேட்டால், முதலமைச்சர் சொல்வதுதான் முடிவு. கழகத்தினுடைய முடிவு எது என்று கேட்டால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்ன சொல்கிறாரோ அதுதான் முடிவு. கட்சியினுடைய தலைவர் என்ன சொல்கிறாரோ அது தான் முடிவு. இந்திரா காங்கிரசினுடைய முடிவு, இந்திரா காந்தி என்ன சொல்கிறாரோ, அதனுடைய கட்சித் தலைவர் என்ன முடிவு சொல்கிறாரோ, அதுதான் முடிவு. எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அது பொருந்தும். திராவிட முன்னேற்றக் கழகம் என்றால், அதனுடைய தலைவர் என்ன சொல்கிறார் என்பதுதான் முடிவாக எடுத்துக் கொள்ளப்படுகிறதே தவிர, ஒவ்வொருவரும் சொல்வதை முடிவு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன் : நாவலர் சொல்கிற மாதிரி ஒவ்வொரு கட்சியிலும் ஒருவருக்கொருவர் கருத்துக்கள் வேறுபடலாம். ஆனால், அந்தக் கட்சியினுடைய இறுதி முடிவு வேறு என்று சொன்னார். இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் திரு. தொண்டமான் ஒரு கட்சி, திரு. அமிர்தலிங்கம் ஒரு கட்சி, விடுதலை வேட்கை புலிகள் ஒரு கட்சி. ஆகையினாலே, அவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையாக இருந்தால் சரி. ஆனால், அதிலே அவர்களுடைய கொள்கை ஒவ்வொரு கொள்கையாக இருக்கிறது. இங்கே உங்களுக்கு ஒரு கொள்கை, காங்கிரசுக்கு ஒரு கொள்கை. அப்படி இருக்கும்போது, அதில் எது நியாயம், எது நேர்மை, எது தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் என்பதைப் பொறுத்து, அப்படிச் சொல்லப்படுவதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, சில பேர் சொன்னதை எடுத்துக் கொள்ள முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இரண்டு மூன்று கட்சிகள் இருக்கின்றன. அவர்களுக்குத் தனித் தனி கருத்துக்கள் இருக்கின்றன. தனித்தனி கருத்துக்கள் கொள்ள அவரவர்களுக்கு உரிமை உண்டு. **தனி ஈழம் வேண்டுமென்று கேட்க, தமிழர் விடுதலை கட்சிக்கு முழு உரிமை**



உண்டு. சம வாழ்வு **வேண்டுமென்று** கேட்க, தொழிலாளர் கட்சித் தலைவருக்கு உரிமை உண்டு. இன்னதுதான் கேட்க வேண்டுமென்று வற்புறுத்த நமக்கு உரிமையில்லை. கிடைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புவது வேறு. ஆனால் இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் பிரச்னையாக இருப்பதாலும், கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் இந்தத் தமிழர்கள் என்று வேறுபாடு காணாமல் அவ்வளவு தமிழர்களும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருப்பதனாலும் கூடுமான வரையில் ஒருமித்த கருத்தாக எல்லா தலைவர்களும் வற்புறுத்துவது நல்லது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அவையிலே கூட நான் பேசும்பொழுது குறிப்பிட்டேன், நாம் அனைவரும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமென்று. இங்கே இருக்கிற ஒவ்வொரு கட்சியும் தனித்தனிக் கருத்துக்கள் கொண்டிருந்தாலும் இந்தப் பிரச்னையிலே ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் 3,4 தடவை அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். அப்பொழுது கூட ஒரு வேண்டுகோளை விட்டாரே தவிர, அப்படி ஒரு நிலை ஏற்பட வேண்டுமே தவிர, அது கட்டளையாக ஆகாது என்று தெரிவித்தார்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் மீது நான் எப்போதுமே மரியாதை வைத்திருப்பவன். அதிலே சந்தேகமே வேண்டாம். ஆனால், நான் கொள்கை அடிப்படையிலே விளக்கம்—— சந்தேகப்—— கேட்கிறேன். தவறாகக் கருத வேண்டாம். உணர்ச்சிகள் என்பது வேறு, கருத்துக்கள் என்பது வேறு என்று சொல்கிறபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்துவாக இருந்தாலும், அதைப்போலவே அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஸாக இருந்தாலும். இன்னும் சிலராக இருந்தாலும் அவர்கள் சொல்கின்ற கருத்துக்கள், உணர்ச்சிகள் இரண்டையும் பார்க்கின்றபொழுது, உணர்ச்சிகள், கருத்துக்கள் அதிகமாக இருக்கலாம், குறைவாக இருக்கலாம். ஆனால், கருத்தே முரண்படுகிறது என்பதுதான் நான் இங்கே சொல்ல விரும்புவது. உதாரணமாக, ஈழத் தனி நாடு வேண்டுமென்ற கொள்கை உங்கள் கட்சியாலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா? இல்லையா? ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பது தான் உங்களுடைய அதிகாரபூர்வமான அறிவிப்பு என்று நான் கருதுகிறேன். நம்புவதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன.

இரண்டாவது இராணுவத்தை அனுப்பி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது ஒரு கருத்து. ஆனால் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்ற கருத்து உங்களுக்கு இருக்குமானால் கூட்டங்களிலே பேசியிருக்கலாம். கட்டுரைகளில் எழுதியிருக்கலாம்; கட்சியிலே தீர்மானம் போட்டிருக்கலாம்; மகஜரிலே குறிப்பிட்டிருக்கலாம். எதுவும்

இல்லை. ஆகையால் அந்தக் கொள்கை உங்களுக்கு இல்லை,
ஆகவே தான் நான் இங்கே சொல்ல வருகிறேன், உங்களுடைய
அடிப்படை கருத்துக்களே பிரதமர் இந்திரா அம்மையார் எந்த
கைட்-லைன்ஸ் கொடுக்கிறார்களோ, அதைப்பின்பற்றி நடப்பது.
அது உள்நாட்டு விவகாரம், ஈழத் தனிநாடு கேட்கக் கூடாது;
வட்ட மேஜை மூலமாகவே பேசி முடித்து விடலாம்; பிரச்னையை
முடித்து விடலாம் என்று ஹிஸ் மிஸ்ட்ரஸ் வாய்ஸ்: அம்மை
யாருடையவாய்ஸை நீங்கள் பிரதிபலிப்பதற்காக இருக்கிறீர்கள்
என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து ஏற்பட்டு
விடக் கூடாது என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன்.
ஈழ நாடு கேட்கக் கூடாது என்று நான் சொல்லவே இல்லை.
ஈழ நாடு கேட்க அவர்களுக்கு முழு உரிமை உண்டு.
சம வாழ்வு கேட்க அவர்களுக்கு உரிமை உண்டு.
நாளை உட்கார்ந்து வட்ட மேஜை மாநாட்டிலே பேசி ஒரு
சமரச முடிவிற்கு வந்தாலும் நீங்கள் கட்டாயம் ஒற்றுமையாய்
போகக் கூடாது. நீங்கள் ஈழ நாடு கட்டாயம் கேட்டுத் தான்
தீர வேண்டுமென்று இங்கேயிருந்து அவர்களை அதட்டவும்
முடியாது; உருட்டவும் முடியாது; ஆகவே அவர்களுக்கு அந்த
உரிமை உண்டு. அவர்கள் கேட்கக் கூடாது என்று சொல்ல
நமக்கு உரிமை இல்லை. அவர்களைத் திருப்திபடுத்த வேண்டிய
பொறுப்பு சமரச மாநாட்டிலே கேட்கிறவர்களுக்கு இருக்கிறது.
அதற்குப்பிறகு என்ன விளைவு ஏற்படுகிறது என்பதை பார்த்து
சமவாழ்வு கேட்கிற தமிழர்களுக்கு முழு வாய்ப்பும் தந்து, ஈழ
நாடு தனியாகப் பிரித்து கொடுக்கிற சமரச முடிவு ஏற்படுமே
யானால் அதிலே நாம் குறுக்கே நிற்கப் போவதுமில்லை.
ஈழ நாட்டையும் தந்து, அங்கே வாழ்கிற தொழிலாளர்களைக்
காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதை வரவேற்
போமே தவிர அதை எதிர்க்கிற போக்கோ, அதை எதிர்க்கிற
தன்மையோ இல்லை என்பதைத் தான் சொல்கிறேன். அவர்
களுக்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதைத் தான்
திரும்ப திரும்ப சொல்கிறேனே தவிர, கொடுக்கக் கூடாது
என்பது எங்களுடைய நோக்கமல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
ஈழ நாடு கோரிக்கையை உங்களுடைய இயக்கம் ஆதரித்து ஒரு
தீர்மானம் போட வேண்டும், நாங்கள் போட்டிருப்பதைப் போல,
என்று உங்களை வேண்டுகிறோம். அதுமட்டுமல்ல அதற்கு
மாறாக நீங்கள் இருக்கிறீர்கள். அங்கே ஸ்பெஷல் பொலிட்டிக்கல்
கமிட்டியில் மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள்
என்ன தெரிவித்து இருக்கிறார்கள்? அதற்குக்கூட நீங்கள் பாராட்டி
வாழ்த்து தெரிவித்திருக்கிறீர்கள். அவர்கள் பேசியிருப்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் முடித்து
விடுகிறேன். நம்முடைய அமைச்சர் பண்ருட்டியார் அவர்களுக்கு



வாழ்த்து அனுப்பியதற்குக் காரணம், இலங்கைத் தமிழர்கள்
பிரச்னையிலே போர்க் குரல் கொடுப்பார்; நியாயம் கேட்டு
வாதாடுவார் என்பதற்காக; இங்கே பிரதமர் இந்திரா அம்மை
யார் என்ன சொல்கிறார்களோ அதைத் தான் சொல்கிறார்,
We confine ourselves only to the extent of flow of refugees from Sri
Lanka—நாங்கள் இலங்கையிலேயிருந்து இந்தியாவிற்கு வருகிறார்
களே அகதிகள், அவர்களைப் பொறுத்த அளவிலேதான் எங்கள்
சிந்தனை, பிரச்னை, எங்கள் கவலை. அடுத்துச் சொல்கிறார்,
We neither criticise the policies of Sri Lanka nor criticise the actions
of the Government of Sri Lanka. இலங்கைத் தமிழர்களுக்கு
எதிராக, அங்கே பிரிவினைத் தடைச்சட்டம் கொண்டு வந்து
மரண தண்டனை, குடி உரிமைச் சட்டம் பறிக்கப்படும் என்று
சொன்னார்களே. . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் கலந்து
கொண்ட கூட்டம் பொலிட்டிக்கல் அபேர்ஸ் கமிட்டி. விவாதம்
நடந்தது அகதிகளைப் பற்றி. ஆகவே அகதிகளைப் பற்றி
தான் பேச வேண்டும். அதோடு நிறுத்திக் கொள்கிறேன் என்று
அதை மட்டும் பேசியிருக்கிறார். ஆகவே கட்டுப்பாடுகளுக்கு
உட்பட்டு சிறந்த முறையிலே பேசியிருக்கிறார் என்பதுதான்
வரவேற்கத்தக்கதே தவிர, நினைத்ததை எல்லாம் பேசுகிற
அளவிற்கு அங்கே கமிட்டிகள் நடத்திக் கொண்டிருக்க
வில்லை.

(பிற்பகல் 12-50)

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
நாங்களும் ஐ. நா. கமிட்டிகளை அறிந்தவர்கள்தான்.
ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷனை அறிந்தவர்கள்தான். ஆகவே
இலங்கை தமிழர்களுக்காக கோடிக்கணக்கான மக்களிடத்திலே
கையெழுத்து வாங்கி நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.

We also requested that in the light of the genocide, the happening in
Sri Lanka make it impossible for the Tamil people of the Island to
live along with Sri Lanka people. The United Nations should call
upon the Government of Sri Lanka to hear the traditional Tamils and
to allow their claims, so that the Tamil people in Sri Lanka can exercise
their right of self-determination, which is granted under the Human
Rights Commission, of which Sri Lanka is also a party. As such the
Tamils in Sri Lanka should be heard under the auspices of the United
Nations. இதை மனித உரிமைக்கழகத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில்
நாங்கள் சொல்லியிருக்கிறோம். தமிழர்களும், சிங்களவர்களும்
ஒன்றாக வாழ முடியாது; ஜெயவர்த்தனேயிடத்தில் நியாயம்
கிடைக்காது; எனவே அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை
வழங்கப்பட வேண்டும் என்று ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷனிலே கூட
சொல்கிறோம். ஹ்யூமன் ரைட்ஸ் கமிஷன்
சப்-கமிஷனாக இருந்தாலும் சொல்லுகிறோம். மரியாதைக்குரிய

அமைச்சர் பண்ருட்டியார் " In fact even in my inte vention I had made it very clear that we do not propose. we do not intend to interfere in the internal affairs of Sri Lanka " என்று சொல்லிவிட்டு, அவரைப் பொறுத்தவரையில் அதி தீவிர வாதிகளுக்கு, விடுதலைப் புலிகளுக்குத் தஞ்சம் கொடுக்கவில்லை; பிரிவினையை ஆதரிக்கவில்லை, உள்நாட்டு விவகாரத்திலே தலையிடவில்லை என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். இது முரண்பட்ட கருத்தாக இல்லையா? இது இலங்கைவாழ் தமிழர் களுக்கு உதவி செய்யுமா என்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

நம்முடைய நாவலர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையிலுள்ள நிலைமைகளைப்பற்றி உலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டு மென்பதற்காகத்தான் எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தார்கள். அதைப் பற்றியும் கூட கிண்டலும் கேலியும் செய்தவர்களும் இருக்கிறார்கள். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்து விட்டதால் யாரும் அஸ்தமனமாகிவிட மாட்டார்கள். ஒரு கட்சி தேர்தலில் வெற்றி பெறலாம் அல்லது தோல்வி பெறலாம்; ஒருவர் பதவியில் இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் தந்தை பெரியார் அவர்களோ, ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களோ எந்தப் பதவியிலும் இல்லை. பதவியினாலேதான் தலைவர்கள் கவுரவிக்கப்படுகிறார்கள் என்பது அல்ல.

1957 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் 15 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடன் இருந்தார்கள். அப்பொழுது ஹாஜாபாய் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவா இருந்தார்? என்றாலும் அண்ணா அவர்கள் ஒரு சகாப்தமாகவே விளங்கினார்கள். எனவே, தமிழின மக்கள் தலைவர்களைப் பதவிகளை வைத்துக் கணக்கிடவில்லை.

தமிழக அரசாங்கத்தால் நடத்தப்படுகிற " தமிழரசு " பத்திரிகையில் வந்திருக்கின்ற ஒரு விஷயத்தைத் குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாநாட்டில், உங்களுடைய சர்க்காரைப்பற்றி விமர்சிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார் கலைஞர் அவர்கள். ஏனென்றால், இலங்கை தீப்பற்றி எரிகிறது, எனவே ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று சொன்னார். பேரணி நடத்தினோம்; மத்திய அரசாங்க அலுவலகங்களின் முன்னால் ஆர்பாட்டம் நடத்தினோம். இவைகளெல்லாம் உங்களுக்கு எதிராக நாங்கள் நடத்தவில்லை. பார்லிமெண்டின் முன்னால் எம். பி. க்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இலங்கையின் அரசியல் சட்டப் பிரிவை எரித்தோம். இரயில் நிறுத்தப் போராட்டம் என்று அறிவித்தோம். திரு. சுந்தரராஜன்



அவர்கள்கூட இந்தச் சர்க்காரும் பங்கு கொண்டு பந்த் நடந்த இந்த நேரத்தில் இரயிலை நிறுத்தி விட்டார்களேஎன்று சொன்னார்கள் ஏன் உத்திரப்பிரதேசத்திலேயும், பீகாரிலேயும், வங்கத்திலேயும், பஞ்சாபிலேயும் இரயில் களை நிறுத்தவில்லையா? பஞ்சாபிலே அகாலிகளின் இரயில் நிறுத்தப் போராட்டத்தின்பொழுது நடந்ததை நினைத்துப் பார்த்து, இங்கேயிருப்பவர்களைத் தமிழ் அகாலி களாகக் கருதி தமிழ்நாட்டில் சிக்கல் ஆகிவிடக்கூடாது என்பதற்காக இங்கே இரயில்களை நிறுத்திவிட்டார்கள். நாங்கள் அந்த இரயில் நிறுத்தப் போராட்டத்தை உங்களுக்கு எதிராகச் செய்வதாகச் சொல்லவில்லை. நாங்கள் பலாத்காரம் செய்ய வில்லை. ஒரு அடையாளத்திற்காகத்தான் சொன்னோம். இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்னைகளைப்பற்றி மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கட்டும் என்பதற்காக அந்தப் போராட்டத்தை நாங்கள் அறிவித்தோம். ஆனால் எங்கள் தொண்டர்கள் ஆயிரம் பேர்களைக் கைது செய்கிறீர்கள். பிறகு இந்திரா காந்தி அம்மையார் இரயில்கள் ஓடுவதை நிறுத்தப் போகிறார் என்று செய்தி வந்தவுடன் முதலமைச்சர் சொல்கிறார், நான் சொல்லித் தான் இந்திரகாந்தி அம்மையார் இரயிலை நிறுத்தினார் என்று

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட குறுக்கீடு கூடாது என்ற கொள்கை உடையவன்தான் நான். உறுப்பினர்கள் தங்கள் இஷ்டம்போல் கருத்துகளை வழங்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். இருந்தாலும் தவறான கருத்து பரப்பப்பட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான் நான் இப்பொழுது வருகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் என்னைப் பொறுத்த வரையில் ராஜினாமா பண்ணி இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். அவர்கள் இங்கே இருந்திருக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவராக இங்கே இருந்து இப்படிப்பட்ட பிரச்சினைகளில் முழுப் பங்கும் கொண்டு பணியாற்றவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். அவர்களுக்குத் தியாக உணர்வு இல்லை என்றோ தூய்மைத் தன்மை இல்லை என்றோ கருத வில்லை. அவர்களைப் பற்றி நாடறியும். ஏற்கனவே இருக்கின்ற வரலாறும் அறியும். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் ராஜினாமா பண்ணியிருக்கக்கூடாது என்பதுதான். எப்படி அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் இருந்து பணியாற்று கிறார்களோ அப்படி அவர்களும் இருந்து பணியாற்றவேண்டும். அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

இரயில் நிறுத்தத்தைப் பொறுத்தவரையில் இரண்டாம் நாளே எல்லோரும் சேர்ந்து நிறுத்தியதன் காரணத்தால் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே முதல்வர் அவர்களும் மற்ற

கட்சித் தலைவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். ஆர்ப்பாட்டம் வேண்டுமானால் நடத்துங்கள், இரயில் நிறுத்தம் வேண்டாம் என்று மற்ற கட்சிக்காரர்கள் கேட்டார்கள். ஆனால் திட்டமிட்டபடி அமைதியாக இரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். அப்படியானால் இந்த ரெயிலைத்தான் நிறுத்துவோம் என்றாவது சொல்லுங்கள் என்றார்கள். அப்போது கட்சி எடுக்கின்ற முடிவுப்படி நடப்போம் என்று சொன்னார்கள். தீர்மானத்தின் முடிவுக்கேற்ப நடப்போம் என்று சொன்னார்கள். ஆகவே மறியல் என்று வருகின்றபோது சட்டப்படி கைது செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். ஊர்வலங்கள் போன்றவைகளைப் பொறுத்தவரையில் அதற்கான அனுமதிகள் தரப்படுகின்றன. ஆனால் மறியல் என்று எங்கே வந்தாலும் சட்டப்படி அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கின்றது. அந்நடவடிக்கை இரயிலை நிறுத்துகிறபோதும் எடுக்கப்படலாம். முன்கூட்டியே கைது செய்வது என்பது ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப செய்யப்படுவது தான். முதலமைச்சரோ, மற்றவர்களோ அவ்வாறு கூறுவதல்ல. ஆகவே எந்த ஒரு போராட்டத்தை யார் நடத்தினாலும் இன்னும் சொல்லப்போனால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவரிடத்திலே காவல் துறை இருந்தபோது போராட்டங்கள் என்று நடத்தப்பட்டபோது ஆயிரம் பேர், 500 பேர் என்று ஆங்காங்கே கட்சித் தொண்டர்களை மற்றும் தீவிரவாதிகள் என்று கருதப்படக்கூடியவர்களைக் கைது செய்வது என்பது நடந்திருக்கின்றது. எனவே கட்சிக்காரர்களில் தீவிரவாதிகள் என்பவர்களைக் கைது செய்வது என்பது ஒரு பழக்கம். அவர்களுடைய உரிமையைக் கெடுக்கவேண்டும் என்பதல்ல. உரிமைகளைத் தடுக்கவேண்டும் என்பதல்ல. மறியல் என்று வருகின்றபோது சட்டத்தைப் பிரயோகப்படுத்தவேண்டிய அவசியம் அரசுக்கு வருகின்றது. எனவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கைது செய்ய வேண்டும் என்பது நோக்கமல்ல என்ற விளக்கத்தை மட்டும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்** : துணைத் தலைவர் அவர்களே, சர்வ கட்சிக் கூட்டத்திற்கு நான் போய் இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அதையெல்லாம் எல்லோரும் பேப்பரிலே பார்த்துவிட்டார்கள். எல்லோருக்கும் தெரியும். எனவே இங்கே சொல்ல வேண்டாம்.

**திரு. துரைமுருகன்** : வெளிநடப்பு என்பது எவ்வாறு செய்ய வேண்டி வந்தது என்பதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றியும் சொல்லிவிடுகிறேன். முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கட்சித் தீர்மானப்படி நடப்போம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் சொன்னார், என்னுடைய



வேண்டுகோளை எதிர்க் கட்சித் தலைவர் மறுத்து விட்டார் என்று. அவ்வாறு மறுத்துவிட்டார் என்று சொன்னதால் நாங்கள் இந்தக் கூட்டத்திலே இல்லை என்று சொன்னார்கள்.

**திரு துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் சொல்கிற மாதிரி எந்தெந்த இரயிலை நிறுத்தப் போகிறீர்கள், எப்போது நிறுத்தப் போகிறீர்கள் என்று கலைஞர் அவர்களிடம் கேட்டார்கள். கலைஞர் அவர்கள் கட்சியிலே முடிவு எடுத்திருக்கிறோம், எனவே அது குறித்து கட்சியினைக் கேட்டுத்தான் சொல்வேன் என்று சொன்னார்கள். இரயில் நிறுத்தப் போராட்டம் அமைதியாக நடக்கும் என்று நாவலர் அவர்களிடம் சொன்னார்கள் *** *** (கூச்சல், குழப்பம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : * * * அவர்கள் சம்பந்தப்பட்டது எல்லாம் நீக்கப்படுகிறது. மேலும் ஆல் பார்ட்டி மீட்டிங் பற்றி எல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : துணைத் தலைவர் அவர்களே, ஏன் கைது செய்தார்கள் என்பதற்கு விளக்கம் சொல்வதற்குத்தான் அதைக் கோடிட்டுக் காட்டினேனே தவிர, வேறு அல்ல. அதிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது கூட நீங்கள் யோசித்து முடிவு சொல்லுங்கள் என்று கூடச் சொன்னார்கள். யோசித்து, நாளைக்கு முடிவு சொல்லுங்கள் என்று கூடச் சொன்னார்கள். ஆனால், கலைஞர் அவர்கள், இல்லை, நாங்கள் எடுத்த முடிவுப்படி (குறுக்கீடு) அது வேறு விவகாரம். கலைஞர் ஏன் அந்த முடிவு எடுத்தார் என்று அந்தப் பிரச்னைக்கு நான் போகவில்லை. கலைஞர் ஒரு முடிவு எடுக்க உரிமை இருக்கிறது. கலைஞர் அந்த முடிவை எடுப்பதற்கும் உரிமை இருக்கிறது. ஏன் அந்த முடிவை எடுத்தார் என்ற பிரச்னைக்கு நான் போகவில்லை. ஏன் கைது செய்தார்கள் என்பதற்குத்தான் நான் விளக்கம் சொன்னேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கலாம். இப்போது திரு. ரகுமான்கான் பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், நடமாடும் பல்கலைக்கழகம் அவர்களே குறுக்கிட்டுச் சொல்லியிருக்கிற போது, அதற்கு நான் பதில் சொல்லக் கூடாதா?

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விளக்கங்கள் சொல்வதற்காகத்தான் நான் குறுக்கிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களின் உள்ளத்தையும், அவர்களுடைய கருத்துக்களையும் ஐயப்பாட்டிற்கு இடம் இல்லாமல் நான் தெரிந்து கொண்டு இருப்பதால், மேற்கொண்டு விளக்கங்கள் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சியின் சார்பாக ஒருமித்த கருத்தின் அடிப்படையில் ஒரு கருத்து இலங்கைத் தமிழர் பிரச்னையில் இருக்கவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சர்வக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள் என்றாலும், நம்முடைய இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் இலங்கை தூதுவரகத்திற்கு முன்னால் அவர்களுடைய கட்சியின் அடிப்படையில், அவர்களுடைய துயரங்களைத் தெரிவிப்பதற்காக, அவர்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதற்காக ஊர்வலமாகச் சென்று மகஜரைக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய முறை. அதே போல், தியாகப்படையின் தலைவராக நம்முடைய அருமை சகோதரர் திரு. நெடுமாறன் அவர்கள் எதற்கும் தயாராக 5,000 பேரோடு இராமேஸ்வரத்தைக் கடந்து இலங்கைக்குப் போவதாகச் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு கட்சியும் அவரவர்களுடைய முறைகளிலே, அவரவர்களுடைய உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு அடையாளமாகப் போனார்கள், ஆனால் நான் சொல்வது எல்லாம் தியாகப் படையோடு சென்ற நம்முடைய அருமை சகோதரர் திரு. நெடுமாறன் அவர்களையும், குமரி அனந்தன் போன்றவர்களையும் இங்கே கிண்டலும், கேலியும் செய்யாமல் அவர்களுடைய உணர்வுகளை மதித்து இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில் அவர்கள் ஆற்றிய பணிக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்ற முறையில் இந்தத் தீர்மானத்திலே எதுவும் சேர்க்கப்படவில்லை. மணியடிக்கப் பெற்றது. ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் 45 நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்னும் ஒரு உறுப்பினர் பேச இருப்பதால், சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** அதேபோல், கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் ஏறத்தாழ 25 ஆண்டுக்காலம் இந்த மன்றத்திலே பணியாற்றியிருக்கிறார்கள். முதலமைச்சராக, அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்குத் தங்களது பதவிகளை ராசினாமா செய்து இருக்கிறார்கள். அதற்குக்கூட ஒரு பாராட்டு இல்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் தன்னைத்தானே இந்த இலங்கைத் தமிழர் பிரச்னையிலே கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்திலே பாராட்டிக்கொண்டு இருக்கிறார். பரவாயில்லை.



கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) 'தமிழரசு' என்கிற பத்திரிகை அரசால் வெளியிடப்படுகிற பத்திரிகை. மக்களுடைய வரிப் பணத்தைக்கொண்டு இதற்குச் செலவிடப்படுகிறது. எங்களுடைய வரிபணமும் சேர்ந்துதான் இதற்குச் செலவாகிறது. இதிலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து கலைஞர் போராட்டங்கள் நடத்துகின்ற காரணத்தால் தமிழக சர்க்காருக்கு இலங்கைப் பிரச்னையில் சிக்கல் உண்டாகிறது. இந்தப் போராட்டங்களால் எந்தப் பலனும் வராது என்று பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன் என்று பேசிக்கொண்டே இருப்பது சரியல்ல. முடித்துவிட்டு உட்காருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன் நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இதைச் சொல்கிறேன். தப்பான கருத்து அல்ல. தமிழரசு பத்திரிகையில் ஸ்ரீமாவோ பண்டார நாயகாவோடு கலைஞர்கள் எல்லாம் படம் பிடித்திருக்கிறார்கள். ஜயவர்த்தனேயுடன்1978—ம் ஆண்டு உங்கள் மந்திரிசபை ஆட்கள் இருக்கிறார்களே, ஏன் இந்த லாவாணிக் கச்சேரி? ஆக இலங்கைத் தமிழர் பிரச்னையில் நீங்கள் முறையாக இல்லை; சரியாக இல்லை. எனவே இரட்டை இலைகளின் இரட்டை வேடம் இந்தத் தீர்மானம் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

* **திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1841 ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டிலிருந்து நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டு இலங்கையில் குடிபுகுந்த இந்திய வம்சாவழி தமிழர்களுக்கும் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கையிலே குடியேறிய ஈழத் தமிழர்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டு, சமுதாய உணர்வுகள் மறுக்கப்பட்டு, இன்றைய தினம் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்பு, தீ வைப்பு ஆகிய கொடுமைகள் ஆட்சி பீடத்தில் இருக்கிற ஜயவர்த்தனே அரசு உதவியுடன் இராணுவத்தாலும் போலீசாலும் நடந்து வருகின்ற அத்தகைய கோர நிகழ்ச்சிகளைத் தமிழ் உணர்வு படைத்த தமிழர் கூட்டம் அத்தனையும் கண்ணீர் சிந்தி, இன்று வேதனையோடு அதுபற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

இன்றையதினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். கேரளா தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. ஆந்திரா கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது, கர்நாடகம் கண்டன தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது ஆனால் தமிழ்நாட்டில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு. இவ்வளவு தாமதமா என்று கேட்டார்.

9—7-1977—ம் ஆண்டு ஒரு தீர்மானமும் 21-8—1981 ஆம் ஆண்டிலே ஒரு தீர்மானத்தையும் போட்ட பெருமை எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இதே மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டவர் எங்கள் புரட்சித் தலைவர். ஆறு ஆண்டுக்காலம் ஆட்சிப் பீடத்தில் இருந்து இரண்டு முறை இதே மாமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றிய பெருமைக்குச் சாந்தக்காரரான எங்கள் புரட்சித் தலைவரைப்பார்த்து ஏழு ஆண்டுக்காலம் ஆட்சிப் பீடத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு தீர்மானத்தைக்கூட போடாமல் இன்றைய தினம் தீர்மானத்தைக் கொண்டு வருவதிலே தாமதமா என்று கேட்பதற்கு அடிப்படை உரிமையே கிடையாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் சொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் இலங்கைத் தமிழர்கள் கொள்ளையால், கொலையால், கற்பழிப்பால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலை தெரிந்தவுடனே, எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஒன்றுபட்ட தமிழ் இனமே கட்சியை மறந்து வா, அரசியல் உணர்வுகளை விலக்கிவிட்டு வா, ஒன்று சேருவோம்; இலங்கைக் கொடியவனான ஜயவர்த்தனேயை கண்டிப்போம் என்று சொல்லி அனைத்துக் கட்சித் தலைவர்களையும்பலமுறை சந்தித்தார்கள். பலமுறை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள்; தீர்மானத்தை நிறைவேற்றினார் கள். பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரைச் சந்திப்போம் என்று சொல்லி, அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்றார்கள். இந்தியப் பிரதமரைச் சந்தித்தார்கள். ஆகஸ்ட் 2-ம் தேதி ஜயவர்த்தனே அரசின் கொடுமைகளைக் கண்டிப்பதற்கு தமிழ்மக்கள் அத்தனைபேரும் அர்த்தால் நடத்துவார்கள், அதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டார்கள். பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

(பிற்பகல் 1.10)

1981 ஆம் ஆண்டு இதைப்போன்று ஒரு அர்த்தால் நடைபெற்ற நேரத்தில் நமக்கு மத்திய அரசு ஆதரவு தராமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய நிலைமையை உணர்ந்து ஆதரவு தந்தார்கள். அன்றையதினம் விமானம் பறக்காது, இரயில் ஓடாது, மத்திய அரசு நிறுவனங்கள் அனைத்தும் செயல்படாது என்று சொல்லுகின்ற அளவுக்கு ஆணை பிறப்பித்த காரணத்தால் தமிழ்நாட்டில் தமிழன் மூச்சு விடவே மறந்தான் என்று சொல்லுகின்ற அளவுக்கு அமைதி நிலவியது. ஒன்று சேர்ந்து தமிழர் கூட்டம் எழுந்து விட்டது; ஆகையால் இலங்கைத் தமிழர் பாதுகாக்கப்படுவர் என்று ரஷ்ய நாட்டுப் பத்திரிகை பிராவ்தா பாராட்டியது. லண்டன் எக்கனாமிக்





பாராட்டியது, 'ஏஷியா வீக்' பாராட்டியது. உலக நாடுகள் எல்லாம் ஒன்று திரண்டு ஒற்றுமையோடு வாழுகின்ற உணர்ச்சி வயப்பட்டு தமிழனைப் பாராட்டுகின்ற நேரத்தில், 2 நாட்களுக் குள்ளாக 5-ந் தேதி திருப்பியும் ரயில் நிறுத்தப் போராட்டம் என்று அறிவிப்பு வருகிறது. சாகின்ற இலங்கைத் தமிழர் களுக்கு ஒன்றுபட்டான் இந்தத் தமிழன் என்று உணர்ச்சியில் பூரித்த தமிழன் இதயத்தில் வேற்றுமையோ, பிளவோ என்று சொல்லுகின்ற அளவுக்கு அன்றையதினம் 5-ந்தேதி இரயில் நிறுத்தப் போராட்டம் என்று அறிவிக்கப்படுகிறது. இங்கே அருமை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மத்திய அரசை புரட்சித் தலைவர் தனது அணுகுமுறையால் செயல்பட வைத்தார். ஐந்தாம் தேதி ரெயில் நிறுத்தப்போராட்டம் நடந்திருக்குமென்றால் இங்கே சில கொலைகள் தமிழர்கள் இறந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருந்து இருக்கலாம். அப்படி இறந்தால் இலங்கையை யும், இங்கேயும் ஒப்பிட்டு அரசியல் இலாபம் தேட வேண்டிய சூழ்நிலை உருவாகும். இந்த நிலையை மாற்றிட வேண்டு மென்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அணுகுமுறையை இந்திய நாட்டின் தலைவி பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் ஏற்றுக் கொண்டார் ரயில்கள் ஓடாது என்று அன்றும் அறிவித்தார். அதே போல தான் உடனடியாக வெளி விவகார அமைச்சரை இலங்கைக்கு அனுப்புங்கள் என்று பாரத பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் எங்கள் தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டார். நரசிம்மராவ் இலங்கைக்குச் சென்றதால் தான் அங்கே அமைதி ஏற்பட்டது. படுகொலை நிறுத்தப்பட்டது என்பதை யார் ஏற்றுக்கொள்ள வேண்டுமோயார் ஒத்துக் கொள்ள வேண்டுமோ அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் பார்த்தசாரதி வருகையால் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை ஓரளவிற்கு இன்றையதினம் நிம்மதி அடைந்திருக்கிறது என்பதை அமிர்தலிங்கம் அவர்கள் பாராட்டினார். ஏன் தொண்டமான் அவர்களும் பாராட்டினார். இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவிற்கு தமிழக அரசும், மத்திய அரசும் இலங்கைப் பிரச்சினையில் தாராளமாக அக்கறைக் கொண்டு இன்றையதினம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அமிர்தலிங்கம் பாராட்டுகின்ற நேரத்தில், தொண்டமான் பாராட்டுகின்ற நேரத்தில், அந்தப் பாராட்டுதல் இதற்கு முன்னாலே ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்கள் செய்யவில்லை என்பதைக் குறிப்பிடுவதால் அவர்கள் தானாக கோபம்கொள்ளக்கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1973-74—ல் இலங்கையில் இதே பிரச்னை வந்தது. அங்கே உலகத் தமிழர் மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்த நேரத்தில் ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்களுக்கு உணர்ச்சி வந்ததா

என்றால் உணர்ச்சி வரவில்லை. இந்தக் கட்சிக்கும் மாநில
அரசிற்கும், அயல் நாட்டு வி·காரத்திற்கும் தொடர்பு இல்லை
என்று சொல்லப்பட்ட தமிழ்நாட்டில் எங்கள் கட்சி மட்டும்
அல்ல ஆட்சிக்கும் தொடர்பு உண்டு என்று கண்டனம்
தெரிவித்தார். எங்கள் புரட்சித் தலைவர்அவர்கள், ஆட்சியை
இலங்கைத் தமிழர்களின் துயர் துடைப்பதற்காக இன்றைய
தினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பயன்படுத்தி
வருகிறார் என்பதை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்
கிறேன். மத்திய அரசிடம் முறையிடலாம், ஆனால் தட்டிக்
கேட்க வ யில்லை என்று சொன்ன 1973-74 ஆம் ஆண்டு
அரசியல் நிலை மாறி, இன்று மத்திய அரசை வற்புறுத்தி,
மத்திய அரசை இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கின்ற
வழித்தடத்தில் இறக்கி விட்ட பெருமை எங்கள் புரட்சித்
தலைவருக்கு உண்டு.

கருப்புக் கொடி காட்டியவர்களை கைவிலங்கிட்டு சிறைக்
கூடத்துக்கு அழைத்துச் சென்று 1973–74 ஆம் ஆண்டு ஆட்சிக்
காலத்தில்நடந்த கொடுமைகள் மாறி, மக்களால் தேர்ந்தெடுக்
கப்பட்டதமிழக முதல்வர் புரட்சித் தலைவரிலிருந்து, அவர்
கீழே இருக்கின்ற அமைச்சர்கள்,தேர்ந்தெடுக்கப்பட்டசட்டமன்ற
உறுப்பினர்களிலிருந்து லட்சோப லட்சம் கட்சித் தொண்டர்கள்
வரை கருப்புச் சட்டை அணிந்து ஜெயவர்த்தனேயின்
கொடுமையைக் கண்டிப்பார்கள் என்றும் இலங்கையில் உயிர்
துடித்துச் செத்த இலங்கைத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்து
வார்கள் என்றும் ஆணை பிறப்பித்து செயல்படுத்திய பெருமை
எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்குண்டு. அயல் நாட்டு
விவகாரத்தில் தலையிட முடியாது என்ற நிலை மாறி,
ஜெயவர்த்தனே அயல் நாட்டு உதவியை நீநாடினால்இலங்கையின்
சுதந்திரமே பறிபோகும் என்று எச்சரித்தார் எங்கள் புரட்சித்
தலைவர் இலங்கை அரசுக்கு எதிராக நடந்த தமிழர்களைப்
பிடித்துக் கொடுத்த காலமெல்லாம் மாறி இன்றையதினம்
இலங்கைத் தமிழர்களுக்குக் குரல் கொடுக்கும், இலங்கைத்
தமிழர்கள் இங்கே வந்தால் அவர்களுக்கு நாங்கள் அடைக்கலம்
கொடுக்காமல் வேறு யார்அடைக்கலம் கொடுக்க முடியும் என்று
உரிமை குரல் எழுப்புகின்ற உன்னதத் தலைவராக எங்கள்
புரட்சித் தலைவர் செயல்படுகிறார் என்பதை இந்த
நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குட்டிமணி
உயிரோடு இருந்திருந்தால் இன்று தமிழ்நாட்டில் அவர்
பாதுகாப்போடு இருந்திருப்பார் என்பதையும் நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரிகோண மலையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கிறார்கள்
அங்கே அந்தத் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்க,
வேண்டும் என்று சிங்கள வெறியர்களைப் புகுத்த வேண்டும்:
அதன் மூலம் திரிகோண மலையில் டிக்கோ—கார்சியாவில்
அமெரிக்கா கப்பல் படைதளம் வைத்திருப்பதைப் போல



திரிகோண மலையில் வைப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும்
என்று வருகின்ற முயற்சியை இன்றையதினம் முறியடித்து
காட்டிய அளவுக்கு இன்றையதினம் லட்சக்கணக்கான பேர்
களைத் திரட்டி, பேரணி அமைத்து, வல்லரசை மோதுகின்ற
அளவுக்கு நேரடியாகச் சென்று மனு கொடுத்த பெருமை எங்க
ளுடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்களுக்கு உண்டு.
ஏனென்றால் இந்திய நாட்டில் ஹ்யூமன் ரைட்ஸ் மனித
உரிமையைப் பாதுகாப்பதற்கு நாங்கள் இருக்கிறோம் என்று
வல்லரசுகளின் தலைமையான அமெரிக்கா நாடு இன்றையதினம்
மந்திரம் சொல்கிறது; தோத்திரம் பாடுகிறது. ஆனால்
நீ தான் உரிமைகளை பறிக்கிறாய் என்று சொல்கின்ற அளவுக்கு
ஊர்வலம் நடத்தி, மனுவை கொடுத்த பெருமை எங்களுடைய
புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை நான் இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இலங்கைத்
தமிழர்கள் பிரச்சினையில் பாரதப் பிரதமர் எடுத்த நிலை
இன்றையதினம் பாராட்டப்படுகிறது. ஏன்என்றால் அவர்களு
டைய அணுகுமுறையை யார்ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப்
பார்க்க வேண்டும். திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஏற்றுக்
கொண்டார்கள். திரு. சரண்சிங் அவர்கள் ஏற்றுக் கொண்
டார்கள். திரு. ராஜேஸ்வரராவ் அவர்கள் ஏற்றுக் கொண்
டார்கள். திரு. வாஜ்பாய் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.
திரு. நம்பூதிரிபாடு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்,
என்றுமே இந்திய அளவில் இந்திரா காங்கிரசோடு ஒன்று
சேராத, ஒத்து வராத கட்சிகள் எல்லாம் அரசியலை
மறந்தன, தமிழர்கள் உணர்வைக் கண்டன. மனிதப்படு
கொலையை தடுத்து நிறுத்த வேண்டியது மனித சமுதாயத்தில்
எழ வேண்டிய நியாயமான உணர்வுகள் என்பது தெரிந்தன.
ஆதலால்தான் ஜனதாவும் ஏற்றுக்கொண்டது. பாரதிய ஜனதா
வும் ஏற்றுக் கொண்டது. லோக்தளமும் ஏற்றுக்கொண்டது.
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஏற்றுக் கொண்டது, இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக் கொண்டது. ஆனால் ஒரே
ஒரு கட்சி, படை எடு என்று சொல்கிறது. ராணுவத்தை
அனுப்பு என்று சொல்கிறது. மனிதப் படுகொலையைக்கூட
மனிதாபிமானமற்ற உணர்வுகளால் அரசியலாக்குகின்றார்கள்
என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன்.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அருமை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது,ராணுவத்தை
அனுப்புவதற்கு நீங்கள் ஏன் சொல்லவில்லை
என்று கேட்டார். நான் கேட்கிறேன். கோடி கையெழுத்துப்
பெற்றதாக நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அது உண்மையா,
இல்லையா என்பது விவாதம் அல்ல. ஆனால் கோடி கையெழுத்
திட்டு ஐக்கிய நாட்டுச் சபைக்கு அனுப்பிய அந்த மனுவில்
இந்தியாவுக்கு அறிவுரை சொல்லி ராணுவத்தை அனுப்பு என்று
நீங்கள் எழுதி அனுப்பியிருக்கிறீர்களா, நீங்கள் அதைக்
கேட்டிருக்கிறீர்களா என்பதை நான் இந்த நேரத்திலே
கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்.

திரு. வ். கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ஐக்கிய
நாட்டுக்கு வேண்டுகோள் விட்டு, கையெழுத்து வாங்கி
அனுப்பிய இடத்திலே மிலிட்டரி இல்லை. இந்தியாவிலேதான்
மிலிட்டரி இருக்கிறது. ஐக்கிய நாட்டிலே இல்லை. பிரதமருக்குக்
கொடுக்கின்ற மனுவிலே வேண்டுமானால் அதைச் செய்யுங்கள்
என்று சொல்லலாம். ஆனால் ஐக்கிய நாடு இந்தியாவினுடைய
மிலிட்டரியை கண்ட்ரோல் பண்ணுவதில்லை, என்பதை நான்
உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாற்றுத் தலைவர் அவர்களே,
இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்காக
இன்று உலகமே கண்ணீர் சிந்துகிறது. ஐக்கிய நாட்டு சபைக்கு
இதை அனுப்பினால் இந்தப் பிரச்சினை தீருமா? என்று
கேட்கின்ற கட்சிக்கு நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன்.

1947 ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச்னை ஐக்கியநாட்டுக்குச்
சென்றது. முடிவு வந்ததா? 1948 ஆம் ஆண்டு பாலஸ்தீனப்
பிரச்சினை ஐக்கிய நாட்டு சபைக்குச் சென்றது.
முடிவு வந்ததா? 1974 ஆம் ஆண்டு சைப்ரஸ் பிரச்சினை
ஐக்கிய நாட்டுக்குச் சென்றது. அதிலே முடிவு தெரிந்ததா?
1980 ஆம் ஆண்டு ஈரான்-ஈராக் பிரச்சினை ஐக்கிய நாட்டுக்குச்
சென்றது, முடிவு தெரிந்ததா, என்று கேட்கின்றவர்களை நான்
கேட்கிறேன். அந்தப் பிரச்சினை வேறு இந்தப் பிரச்சினை
வேறு. ஏன் என்றால் ஈரான்–ஈராக் பிரச்சினையாக இருந்
தாலும் சரி, சைப்ரஸ் பிரச்சினையாக இருந்தாலும் சரி,
பாலஸ்தீனப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, காஷ்மீர்
பிரச்சினையாக இருந்தாலும் சரி, உலக நாடுகள் ஒன்று
சேர்ந்து ஒவ்வொரு நாட்டு பிரச்னைக்கு முழுமையாக இது
சரி என்று வாதாடவில்லை. ஆனால் இன்றையதினம் இலங்கைப்
பிரச்னையில், ஜெயவர்த்தனே செய்கின்ற வன்முறைகளுக்கு
உலக நாடுகள் எதுவுமே ஜெயவர்த்தனே செய்வது சரி
என்று சொல்லவில்லை. ஆதலால், இதுவரையிலும், 1947,
48, 74, 80-ல் கொண்டு போன பிரச்னைகளைக் காட்டிலும்
இந்தப் பிரச்னை முற்றிலும் மாறுபட்டது. இது ஒரு மனித
படுகொலை. உலகமே பரிதாபப்படுகிறது என்பதற்கு நான்
சில ஆதாரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இன்றையதினம் கொடுமை செய்கின்ற ஜெயவர்த்தனே
அவர்களே, நீங்கள் வன்முறையைத் தூண்டி ஆட்சியை நடத்தி
இலங்கை வாழ் தமிழர்களின் உயிரைக் குடித்து விட்டீர்கள்.
ஆகவே லண்டன் மாநகருக்கு வரக்கூடாது என்று இங்கிலாந்து
ராணி அவர்கள் தடை விதித்து இருக்கிறார்கள். அதே போல்
தான் உலக வங்கி சொல்கிறது, தமிழர்களின் சொத்தை
பறிமுதல் செய்தால் விபரீதம் நடக்கும் என்று உலக வங்கி
சொல்லியிருக்கிறது. சர்வதேச நிதி நிறுவனம் சொல்கிறது.



தமிழர்களின் பிரச்னையில் தொடர்ந்து வன்முறையில்
நடவடிக்கைகள் நீடிப்பீர்களே யானால், உகண்டாவிற்கு
கிடைத்த கதி தான் உங்களுக்கும் என்று சர்வதேச
நிதி நிறுவனம் இலங்கை அரசை எச்சரிக்கிறது. ஐக்கிய
நாட்டு சபையின் மனித உரிமையைப் பாதுகாக்கும் கமிஷனின்
கூட்டம், ஜெனிவாவிலே நடைபெற்ற போது, அதிலே
நார்வே நாட்டு உறுப்பினர், ஆங்ஜொான் அவர்கள்
சர்வதேச சமுதாயமே பாதிக்கப்பட்டு விட்டது. ஆதலால்
உடனடியாக இதை விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷனை
அங்கே அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார். அதேபோல
சட்டப்பிரிவு பிரதிநிதி பெண் பிரதிநிதி ஆமியாங் அவர்கள்
மனித உரிமைக் கமிஷனின் பிரதிநிதியை உடனடியாக
இலங்கைக்கு அனுப்ப வேண்டும். மனித உரிமைகள் எந்த
அளவுக்கு பாதிக்கப்பட்டு உள்ளன. மீறப்பட்டு உள்ளன
என்பதை அவர்கள் தெரிந்து, அந்த மனித உரிமைக் கழகத்
திற்கு அவர்கள் தகவல் தர வேண்டும் என்று, சட்டப்பிரிவு
பெண் பிரதிநிதி ஆமியாங் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல அசோசியேஷன் ஆப் இன்டர் நேஷனல்
ஜூரிஸ்டுகள் இதனைக் கண்டித்து தீர்மானம் போட்டிருக்கிறார்
கள். ஐக்கிய நாட்டு கமிஷனின் கூட்டத்திலும் இதை
அவர்கள் எடுத்துச் சொல்லி குற்றம் சாட்டியுள்ளனர்.
யாரையாவது போலீசை வைத்தோ, ராணுவத்தை வைத்தோ
சுட்டுக் கொலை செய்தால். பிரேத பரிசோதனைக்கூட
தேவையில்லை,விசாரணை இல்லாமல் புதைக்கலாம் என்பது
வேறு எந்த நாட்டிலும் உலகத்தில் எங்கேயுமேஇல்லாத நிலை,
அதிர்ச்சியைத் தருகிறது. ஆகவே, இது கண்டிக்கத் தக்கது.
காட்டுமிராண்டித்தனமானது என்று அசோசியேஷன் ஆப்
இன்டர்நேஷனல் ஜூரிஸ்டுகள் கண்டித்திருக்கிறார்கள்.

வன்முறையில் ஈடுபட்ட போலீசாரும் ராணுவத்தினரும்
தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் கண்டிக்கப்
படுதற்கு பதிலாக பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்
கிறார்கள். அது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. கடுமையாக
கண்டிக்கப்பட வேண்டியது என்று இன்றையதினம் அசோசியே
ஷன் ஆப் இன்டர்நேஷனல் ஜூரிஸ்டுகள் கண்டித்திருக்கிறார்கள்.
இலங்கையில் நடைபெறுகிற அந்த கொலைவெறி சம்பவங்கள்
இலங்கையில் உள்ள அமைச்சர்களின் தூண்டுதலால் தான்
நடைபெறுகிற என்று அதைச் சித்தரித்திருக்கிறார்கள்.
சிங்கள வெறி பிடித்த கிழவி, வில்லி பண்டார நாயகா கூட.
பிரிவினை தடைச்சட்டத்தை பகிரங்கமாக எதிர்த்திருக்கிறார்.
இந்தச் சட்டம் இலங்கையை இரண்டாகப் பிரிக்கும் என்று
இன்றையதினம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

லண்டன் ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி புஃரொபெசர் டேவிட்
செல்பாரின் அவர்கள் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர்,
சிலோனுக்குச் சென்றபோது, அங்கே நடந்திருக்கிற படுகொலை
யைப் பார்த்து, ஜெயவர்த்தனேயின் நடவடிக்கைகள் காட்டு
மிராண்டித் தனமானது என்று விமர்ச்சித்திருக்கிறார்கள்.
அமெரிக்கத் தூதுவராக இருந்த எம். எஸ். பாட் அவர்கள்
ஜெயவர்த்தனேயின் நடவடிக்கைகள் காட்டுமிராண்டித்தன
மானது, வன்முறையானது என்பதை இன்றையதினம் சித்தரித்
திருக்கிறார்கள்.

உலக நாடுகள் எல்லாம் ஒன்று திரண்டு இந்த இலங்கைத்
தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குரல் கொடுக்கிற
நேரத்தில், அவைகளைப் பயன்படுத்து, இலங்கைப் பிரச்னைக்கு
தீர்வு காண முயற்சிக்கின்றார். உண்மையிலேயே இலங்கைத்
தமிழர் பிரச்னைக்கு தீர்வு பெற வேண்டும் என்று நினைக்கிற
தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். ஆதலால் தான்
பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுடைய உணர்வுகளை
விருப்பங்களை அவர் கேட்கிறார். எது தேவை என்பதை,
எதைச் செய்ய வேண்டும் என்பதை சொல்ல வேண்டியவர்கள்
இலங்கைத் தமிழர்கள்தான் என்கிறார்.

தொண்டைமான் சொல்கிறார், ஈழம் வேண்டாம் என்று.
அமிர்தலிங்கம் ஈழம்தான் வேண்டும் என்று சொல்லவில்லை.
ஈழம் வேண்டும், ஆனால் நிபந்தனை இல்லாமல் பேச்சு
வார்த்தை நடத்தி. அந்த யோசனைகளை மக்கள் முன்
வைத்து முடிவு எடுக்க தயார் என்று சொல்கிறார். உடைய
வருக்கு வருத்தம் உள்ளத்தில்; ஒப்பாரிக்காக வந்தவன்,
ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டுவதைப் போல ஈழம் தான்
வேண்டும் என்று சொல்ல தமிழகத்தில் இருப்பவர்களுக்கு
உரிமை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தொண்டமான்
அவர்கள் ஈழம் வேண்டாம் என்கிறார்கள். அமிர்தலிங்கம்
அவர்கள் ஈழம் தான் வேண்டும் என்று சொல்லவில்லை;
ஈழம் வேண்டும்; ஆனால் நிபந்தனை இல்லாமல் பேச்சு
வார்த்தை நடத்தினால், பேச்சு வார்த்தைக்கு தயார் என்று
சொல்கிறார்கள். ஆகையினால் ஒப்பாரி வைக்காதீர்கள்.
அங்கேயிருக்கிற தமிழர்களுடைய வாழ்வை பறிப்பதற்கு,
இங்கேயிருந்தும் முயற்சிக்காதீர்கள் என்று நான் இங்கே
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவையற்ற வாதங்கள், சர்ச்சைகள், செயல்முறைகள்,
எழுத்துக்கள், பேச்சுக்கள் வேண்டாம். ஏனெனில் அவைகளால்
இன்றையதினம் இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா அவர்களால்
ஐக்கிய நாட்டு சபையில், அதிகமாக குற்றம் சாட்டுவதற்கு
உதவுவீர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். அதை உணர வேண்டும். இதை உணர மறுப்
பீர்களானால், மேலும் சர்ச்சை செய்வீர்களானால் இலங்கைத்
தமிழர்களுடைய பிரச்னைக்கு தீர்வுகாண நீங்கள் உதவவில்லை
என்பதை அது வெட்ட வெளிச்சமாக்கும் என்பதைதெரிவித்துக்
கொள்கிறேன்.



இன்றையதினம் பண்ருட்டியார் அவர்கள் ஐக்கிய நாட்டு
சபையிலே பேசியிருக்கிறார்கள். இலங்கை அரசு ராணுவத்
தையும், போலீசையும் வைத்து தமிழர்களின் உயிரைப்
பறித்ததாக ஐநாவிலேயே சொல்லியிருக்கிறார்கள். இலங்கை
வெளிவிவகார அமைச்சர் ஹமீது அவர்களின் குற்றச்சாட்டை
தகர்த்து எறிந்திருக்கிறார்கள். இலங்கையில் அவதிக்குள்ளான
தமிழர்கள், தாங்க முடியாத வேதனையோடு, இந்தியாவுக்கு
திரும்புவதால், இந்தியா வேதனையை அடையாமல் இருக்க
முடியாது என்ற நியாயமான வாதத்தை ஐக்கிய நாட்டு
சபையிலே வைத்திருக்கிறார்கள். இந்திய அரசியல் தலைவர்
களை விமர்ச்சித்தற்கு இலங்கையின் தாழ்ந்த குணத்தைக்
கடிந்துள்ளார் பண்ருட்டியார். ஐக்கிய நாட்டுக்குச் செல்லும்
இந்தியத் தூதுக்குழுவில் மத்திய ஆளுங்கட்சியில்லாத தமிழக
அமைச்சரான பண்ருட்டியாரை இடம்பெற வைத்த ராஜதந்திரி
எங்கள் புரட்சித் தலைவர். இதனையும் கிண்டல் பேசாதீர்கள்.
உணர்வால் பண்ருட்டியாரின் ஐ. நா. பயணத்தை ஏற்றுக்
கொள்ளாதவர்கள் உணர்ச்சியற்ற தமிழர்கள் ஆகிவிடுவர்.
உள்ளத்தால் பண்ருட்டியாரின் ஐக்கிய நாடுகள் பங்கினால்
விளைந்த சாதனைகளைப் பாராட்டாதவர்கள் கள்ளமனம்
படைத்தவர்கள். இன்று தமிழன் ஒருவன் இந்தியத் தூதுக்
குழுவிற்கு ஐக்கியநாடுகளுக்குச் செல்கின்ற குழுவிற்கு தலைமை
தாங்குகிறார்என்பதை நினைத்துப் பூரிக்காதவன் தமிழனாக
இருந்தால்நோயாளி என்றே பொருள். இலங்கை இராணுவத்
தால்போலீசால், ஜெயவர்த்தனே அரசால் தாக்கி தகர்க்கப்படும்
தமிழன் வாழ்விழந்த நிலையை விளக்கி தன்மான உணர்ச்சி
யோடு ஐக்கிய நாடுகள் சபையில் நீதி கேட்கும் பண்ருட்டி
யாரை அனுப்பிய புரட்சித் தலைவரின் அணுகுமுறையை ஏற்றுக்
கொள்ளாத இதயத்தில் பாதிக்கப்படும் இலங்கைத் தமிழனைப்
பற்றிய கவலை உதயமாக நியாயமில்லை.

இலங்கைத் தமிழன் பிரச்சினைக்குதீர்வுகாணமுடிந்ததுஎன்ற
நிலை உருவாகியே தீரும். இது சத்தியம். ஐக்கிய நாடுகள்
சபை தலையிட வேண்டும், சமாதானப்படை அனுப்பவேண்டும்
என்ற கோரிக்கை வெல்லும். இந்த நேரத்திலே ஒன்றைத்
தெரிவித்துக்கொள்கிறேன், இதனையும கேலி பேசுகின்றவன்
குறுகிய எண்ணம் கொண்டவன், கோமதி படைத்தவன்,
கொஞ்சு தமிழ் காவியங்கள், பாவியங்கள் மீது ஆணை,
ஆயிரக்கணக்கான சிங்கத் தமிழர்கள் உயிரிழந்ததால் அவதியுறும்
அவர்கள் குடும்பங்கள் இடும் சாபத்தால் அரசியல் வாழ்விழந்து
சீரழிவான். இதனை ஏற்றுக் கொள்ளாத நெஞ்சம் உணர்வு
இல்லாத வஞ்சக நெஞ்சம், ஆனால் கச்சேரிக்குப் போகிறார்
என்று சொல்கிறார்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று
இங்கே அமைச்சரவையில் வீற்றிருக்கிற ஒரு அமைச்சரை
கச்சேரிக்குச் செல்கிறார் என்று சொல்கிறார்கள்.

கொடியோன் ஜெயவர்த்தனே அரசால் இலங்கையில்
நடைபெறும் மனிதப் படுகொலையை நிறுத்த கட்சி மறந்து
அரசியல் உணர்வு இழந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக

நிற்போம். ஒற்றுமையோடு உதவுவோம், ஒன்றுபட்டு செயல்படுவோம் தமிழர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்போம் அதுவே தமிழ் உணர்வு, அதுவே தமிழக உணர்வு எனக்கூறி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈர நெஞ்சத்தோடு, இதய சுத்தியோடு செயல்படும் முதல்வர் புரட்சித் தலைவர் பணி வெல்லட்டும், பாரதப் பிரதமர் திருமதி இந்திராவின் பணி சிறக்கட்டும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 26-10-1983 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

158. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில்திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 16-2-1983 ஆம் நாளிட்ட 301 ஆம்எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 4/.939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

159. பெரியார் மாவட்டத்தில் வேளாண் விளைபொருள் அங்காடிக் குழுக்கள் அமைப்பது குறித்து வேளாண்மைத் துறையின்14-7-1983 ஆம் நாளிட்ட 1304 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

160. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை விற்றல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 9-3-1983 ஆம் நாளிட்ட 377 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

161. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கை (சிவில்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



162. தமிழ்நாடு அரசின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதிஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

163. தமிழ்நாடு அரசின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகளை (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

164. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

#### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

19. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, (ஆங்கிலம்)

20. 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டத்தை அதிகார முறையில் வெளியிட்டதை அவசியமாக்கிய சூழ்நிலைகளை விளக்கி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளைச் சேர்ந்த 282 ஆம் விதியின் கீழ் அளிக்கப்படும் விவர அறிக்கை:

சென்னை-600 008
136052

விடுஎன்று இவர்களும் கேட்கலாம். விடமாட்டேன் என்று அவர்
களும் சொல்லலாம் அல்லது எதை எதை விட்டு விடலா
என்று பேசி முடிவெடுக்கலாம். அது, பேச்சு வார்த்தையை
நடத்தியபிறகு வரவேண்டிய முடிவே தவிர, பேச வரும்
போதே நிபந்தனைகள் கூடாது என்ற விதியை பொதுவாக
நாம் ஏற்றிருக்கிறோம்.

ஆகவே, இந்த அவையிலே எடுத்துச் சொல்கிற ஒருமித்த
கருத்துக்கள் மூலமாக இலங்கை தமிழ் மக்களுக்கு நிலையான
வாழ்வு ஏற்படுத்தி, நீதியான வாழ்வு ஏற்படுத்தி வட்ட மேஜை
மாநாடு மூலமாக இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தரவேண்டிய
உரிமைகளையும் தந்து, இந்திய வழி வந்த தமிழ் மக்களுக்கு
தரவேண்டிய உரிமைகளையும் தந்து, ஒரு சுமூகமான சமூக
நிலை ஏற்படுமானால், அது எல்லா வகையிலும் மகிழ்ச்சி தரும்.
அவர்கள் என்ன கேட்க வேண்டும் என்று சொல்லவும் நமக்கு
உரிமையில்லை. கேட்கக் கூடாது என்று சொல்லவும் உரிமை
யில்லை. ஆனால் எப்படிப்பட்ட வாழ்வு அமையவேண்டும் என்று
சொல்ல நமக்கு நியாயம் உண்டு அந்த நியாயத்தின் அடிப்படையில்
தான் நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

ஆகவே, அங்கேயிருக்கிற அத்தனை தமிழர்களும், நிம்மதி
யான வாழ்வு பெறுகிறோம், அமைதியான வாழ்வு பெறு
கிறோம், முழுமையான வாழ்வு பெறுகிறோம், குடி உரிமையைப்
பெறுகிறோம், சிறுபான்மையினருடைய அத்தனை சலுகை
களையும், உரிமைகளையும் பெறுகிறோம் என்ற மனநிறைவோடு
வாழத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய அங்கே இருக்கிற அரசும் முன்
வரவேண்டும். அதற்காக அந்த அரசை வலியுறுத்த வேண்டிய
பெரும் பொறுப்பு இந்திய அரசுக்கும் இருக்கிறது. இந்திய
அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்தியப்
பெருங்குடி மக்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது, என்றாலும்
தமிழக மக்களுக்கு சிறப்பாக அந்தப் பொறுப்பு உண்டு. தமிழக
மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்த அவைக்கு இன்னும்
சிறப்பான பொறுப்பு உண்டு என்ற முறையிலேதான், இந்த
தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை
ஒருமித்த எண்ணத்தில் நிறைவேற்றித் தருவதன் மூலமாக நல்லச்
சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று பேரவையில் இருக்கிற
எதிர்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்கள் அத்தனை
பேரையும், ஆளும் கட்சியின் சார்பாக அமைச்சரவையின் சார்
பாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, தீர்மானத்தை முன்
மொழிகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை
முன்னவர் அவர்கள் மொழிந்திருக்கும் இத்தீர்மானத்திற்கு
திருத்தம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பிற்பகல் 3
மணிக்குள் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தயவுசெய்து என்னுடைய பாயின்ட் ஆப்
ஆர்டரை அனுமதிக்க வேண்டும். விதி 192-ன் படி,
After a resolution, has been moved any Member may,
subject to all the restrictions regarding the admissibility
of resolutions move an amendment to such resolution.
என்று தெளிவாக 192-லேயே போடப்பட்டிருக்கிறது. ஒரு
நாளைக்கு முன்னதாகவே ரெசல்யூஷனில் அமென்ட்மென்ட்
கொடுக்கப்படவேண்டும். ஒரு நாளைக்கு பின்னாலே கொடுப்
பதில் சபாநாயகர் தான் தீர்மானிக்க வேண்டும். இதுவரையில்
நான் ஒருவன்தான் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறேன்.
லிஸ்டிலேயும் அது வந்தாகிவிட்டது. முன்னவர் அவர்கள் முன்
மொழிந்து விட்டார்கள். அமென்மென்ட்டும் ஏற்கெனவே
கொடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு, சர்குலேட் ஆகிவிட்டது.
ஆகவே, ரெசல்யூஷன் முன் மொழிந்த பின்னாலே அமென்ட்
மென்ட்டை மூவ் பண்ணி நான்தான் பேசவேண்டும். இதில்
தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமென்ட்மென்ட்டை நீங்கள்
மட்டும் கொடுக்கவில்லை. நிறையபேர்கள் கொடுத்திருக்
கிறார்கள். திரு. நெடுமாறன் கொடுத்திருக்கிறார். கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் கொடுத்திருக்
கிறார்கள். திரு. அம்பிகாபதியும் கொடுத்திருக்கிறார்....

திரு. அ. ரகுமான்கான்: எல்லாவற்றையும் லிஸ்டிலே போட்டு
மூவ் பண்ணுவதற்கு அனுமதிக்க வேண்டியதுதானே?

திரு. என். எஸ். வி. சித்தன்: எங்கள் கட்சியிலும் கொடுத்
திருக்கிறோம். கொடுக்காதவர்களும் கொடுப்பதற்குத்தான்
இன்று பிற்பகல் 3 மணி வரையில் தாங்கள் அவகாசம்
கொடுத்திருக்கிறீர்கள்.

[1983 அக்டோபர் 25

**திரு. அ. ரகுமான்கரன் ;** திருத்தம் நான் ஏற்கெனவே
கொடுத்துவிட்டதால் அதை இப்போது மூவ் பண்ண அனுமதி
தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** 3 மணி வரைக்கும் திருத்
தங்கள் கொடுக்கலாம் என்று நான் அறிவித்து இருக்கிறேன்
3 மணிக்குப் பிறகு அவைகள் எல்லாம் முறையாக எடுத்துக்
கொள்ளப்பெறும். (குறுக்கீடு). வோட்டெடுப்பின்போது திரு
ரகுமான்கானின் திருத்தம் முதலில் வரும்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான
பிரச்சினை. சட்டப்படி திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு
நாள் முன்னதாக கொடுக்க வேண்டுமென்ற முறைப்படி கொடுத்
திருக்கிறார்கள். அதை தாங்கள் சர்க்குலேட் செய்திருக்கிறீர்கள்
இது முக்கியமான பிரச்சினை என்பதால் சபாநாயகர் அவர்கள்
எதிர்க்கட்சிகள் எல்லாம் திருத்தங்கள் கொடுப்பதற்கு அனு
மதித்திருக்கிறீர்கள். சபாநாயகர் அவர்கள் விரும்பினால் 'பில்'
போய்க்கொண்டிருக்கும்போதுகூட திருத்தம் கொடுக்க அனு
மதிக்கலாம். நான் தங்களுக்கு இருக்கிற அந்த உரிமையை
மறுக்கவில்லை. திரு. ரகுமான்கான் கொடுத்தது சட்டப்படி
கரக்ட், திருத்தம் கொடுக்க பல எதிர்க்கட்சித் தலைவர்கள்
விரும்பினார்கள், அதனால் ரிலாக்ஸ் பண்ணுகிறேன் என்று
சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** விரும்பிக் கொடுத்தேன்
என்று தாங்கள் புது விளக்கத்தைச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு)
திரு. ரகுமான்கான் திருத்தம் கொடுத்தது உண்மை. அதைப்
பரிசீலனை செய்கிற உரிமை எனக்கு உண்டு. அது என் பரி
சீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்
இப்போது மணி $11\frac{1}{2}$ ஆகிறது. இரண்டரை நாட்களுக்குள்
எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசவேண்டும். கட்சிகளிலே
பல பேர்கள் பேச வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். ஆகவே
நேரத்தை நிர்ணயிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்
கட்சிகளின் தலைவர்களுக்குப் பேச வழிவிட்டு உறுப்பினர்கள்
எப்படிப் பேசுவது என்பதை அவரவர்கள் கட்சிகள் முடிவு
செய்து கொள்ளவேண்டும். நான் கட்சிகளுக்கு நேரத்தை
ஒதுக்கிக் கொடுக்கிறேன். 3 நாட்களுக்குள் இந்த விவாதத்தை
முடித்தாக வேண்டும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இங்கே கொண்டு
வரப்பட்டிருக்கின்ற இலங்கை வாழ் தமிழர்கள் பற்றிய தீர்
மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்
துக்களைச் சொல்லக் கடமைபபட்டிருக்கிறேன். குறிப்பாக
இங்கே பேசிய மாண்புமிகு முன்னவர் அவர்கள் 1948 ஆம்
ஆண்டிலிருந்து எந்த அளவுக்கு இலங்கையிலே வாழ்கின்ற
தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றெல்லாம்



சொன்னார்கள். அவற்றையெல்லாம் விட இன்றைக்கு உச்ச
கட்டமாக கடந்த ஜூலைத் திங்கள் இலங்கையிலே வாழ்கின்ற
தமிழர்கள் மீது அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இனப்
படுகொலை, 'ஜெனோசைட்' என்ற பெயரில் கொலைகள்,
கொள்ளைகள், கற்பழிப்புகள், தீவைப்புகள், சூறையாடுதல்
போன்ற கொடுஞ் செயல்களைப் புரிந்து சிங்கள வெறியர்
களும் அவர்களுக்குத் துணை போன இராணுவம் மற்றும்
காவல் துறைகளும் இலங்கை அரசும் அதன் அதிபரான
ஜெயவர்த்தனேயும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்
களுக்குத் துணை போகின்ற வகையில் இருந்த இலங்கைப்
பிரதமர் பிரேமதாசாவும் அமைச்சர் செசில் மேத்யூவும் தான்
இதற்குமூலக்காரணமாக இருந்து மூல வித்திட்டார்கள் என்று
சொன்னால் மிகையாகாது. அங்கே ஏழை மக்கள் சாதாரண
மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். சிறுவர்கள், பச்சிளம்
குழந்தைகள்கொல்லப்பட்டார்கள், இளம்பெண்கள் மட்டுமல்ல,
வயது முதிர்ந்த தாய்மார்கள் கூட கற்பழிக்கப்பட்டார்கள்.
உள்ளபடியே இதுபோன்ற சம்பவங்கள் உலகத்திலே வேறு
எங்கும் நடந்திருக்காது என்று சொல்லத்தக்க அளவுக்கு
தமிழர்கள் கொலை செய்யப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்
டார்கள் என்பதை கண்டிக்கும் முறையில் தமிழ்நாடு பூராவும்
ஏன். இந்தியத் துணைக் கண்டம் பூராவும் மிகுந்த கலவரத்
திற்கும் ஆத்திரத்திற்கும் ஆளாகி வெறுப்பை தெரிவிக்கின்ற
வகையில் பல்வேறு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வெளிக்கடை சிறையில் அடைக்கப்பட்ட தமிழர்கள், 52
பேர்கள், சிங்கள வெறியர்களால் அவர்கள் வெறுப்பை உணர்த்
துகின்ற முறையில் கொடுமை செய்யவேண்டுமென்ற நோக்கத்
தோடு கொல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்த விடுதலை
புலிகள் குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்ற இளைஞர்கள்
52 பேர்கள் சிறைச்சாலையிலே அவர்கள் நிராயுத பாணி
களாக இருந்தபோது கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்,
இப்படிப்பட்ட சம்பவம் உலகத்திலே வேறு எந்த நாட்டி
லேயும் நடந்ததாக சரித்திரம் இல்லை என்பதிலே யாரும்
கருத்து வேறுபாடு கொள்ளமுடியாது. இதுபோன்ற கொடு
மைகள் நிறுத்தப்பட வேண்டும், அங்குள்ள தமிழ் மக்களுடைய
பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்தியாவில்
உள்ள அரசியல் கட்சிகளிடையே கருத்து வேறுபாடு எதுவும்
இல்லை. அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, அவைகளின் தலை
வர்களும சரி, சாதாரண மக்களும் சரி, அவர்களிடத்திலே
எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை, இருக்கப்போவதும்
இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையை எப்படி சாதிப்பது
எப்படி தீர்ப்பது என்பதிலே பல்வேறு கட்சிகளுக்கு பல்வேறு
எண்ணங்கள் இருக்கும், அதைத்தான் நாம் சமீபத்திலே
பார்க்கிறோம். இலங்கை சம்பவங்களைக் கண்டிப்பதில்
தமிழனாகப் பிறந்தவன் எவனும் பின்தங்கமாட்டான் என்பது
மட்டுமல்ல, மனிதன் என்பவன் எவனும் இச்செயல்களைக்
கண்டிக்காமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் கடந்த ஜுலை மாதம் 23-ம் தேதி சென்னைக்கு வருகை தந்த எங்களுடைய தலைவி பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இதைப் பற்றி பேசுகின்ற நேரத்தில இலங்கையில் அண்மையில் நிகழ்ந்து வரும் சம்பவங்களை கண்டித்து இலங்கை தமிழர்கள் இந்திய வம்சா வழித் தமிழர்கள் பாதிக்கப்படுவதை கண்டித்து பாரதம் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கிறது என்று சொன்னார்கள். இலங்கையில் நாளுக்கு நாள் நிலமை மோசம் அடைந்து வருவதை அறிந்த பிரதமர் ஜுலை மாதம் 28ம் நாள் இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்தாலும் அதில் இந்தியா தலையிடாமல் இருக்க முடியாது என்ற அடிப்படையில் நிலைமைகள் மோசம் ஆவதை தடுத்து நிறுத்தவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனேயுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்களை இலங்கைக்கு தனி விமானத்தில் அனுப்பி வைத்தார்கள். அவர் சென்று வந்ததன் பலன் நாம் அப்போது உணர முடியவில்லை. ஆனால் இன்றைக்கு இலங்கை எதிர் கட்சித் தலைவர், டல்ப்' கட்சியின் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் இருக்கக்கூடிய சர்வதேச நண்பர்கள் சங்கம் நடத்திய கூட்டத்தில் பேசியபோது இலங்கையில் இனப் படுகொலை நடந்தபோது இந்திய அரசு கவலை தெரிவித்தது நிலைமையை நேரில் பார்த்து வர வெளிநாட்டு அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர் அப்படி செய்து இருக்காவிட்டால் வெறியாட்டம் நீடித்திருக்கும் தமிழ்மக்கள் பூண்டோடு கொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்டு இருப்பார்கள் என்று சொன்னார்கள். அதிலிருந்து திரு நரசிம்மராவ் அவர்கள் இலங்கைக்கு அப்போது சென்று வந்ததன் பலனை நாம் இன்றைக்கு உணர முடிகிறது.

(முற்பகல் 11-40.)

அதுமட்டும் அல்ல திரு. நரசிம்மராவ் அவர்கள் இலங்கைக்கு அப்போது சென்று வந்ததால் தான் அங்குள்ள தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு காரணமாக இருந்து இருக்கிறார் என்பதை நிச்சயமாக நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல நம்முடைய இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவ் அவர்கள் கொழும்புக்கு சென்று வந்த பிறகு தான் எதிர்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய 'டல்ப்' கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய திரு. அமிர்தலிங்கம் அவர்களும் அவரைப் போல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்றைக்கு இந்தியா வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள்.



இந்தச் சூழ்நிலையில் தமிழக முதல்வர் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித்தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி இலங்கை பிரச்சனைப் பற்றி விவாதித்து முடிவில் பிரதமர் அவர்களை நேரில் சந்திப்பது என்ற முடிவை எடுத்து நேரிலும் சந்தித் தார்கள். இலங்கைப் பிரச்சினையில் திருமதி இந்திரா காந்தி யோடு பேச்சுவார்த்தை நடத்திய நேரத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை பார்த்து இந்தியா கவலைக் கொள்கிறது என்று சொன்னதற்கே இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தியா உள்நாட்டு பிரச்சனையில் தலையிடுகிறது என்று குற்றம் சாட் டப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆதலால் நாம் இதில் நிதானத்தோடு செயல்பட வேண்டும் என்றும் அங்கு வாழும் தமிழ் மக்களின் நிலைமையை மேலும் மோசம் அடையாமல் செய்வதற்கு தமிழகத்தில் உள்ள மக்களும்அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும் எந்த நிகழ்ச்சியும் செய்துவிடக் கூடாது என்றவேண்டுகோளை வைத்து அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு வந்தார்கள்.

மறுநாள் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய வெளிநாட்டு இலங்கை வெளிநாட்டு அமைச்சர் திரு அமீது அவர்களும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில் இந்திராகாந்தி அவர்கள் அமைச் சர்கள் மாநாட்டில் பேசும் போதுகீழ்க்கண்டவாறு சொல்கிறார்.

பாரதம் எப்போதும் அண்டை நாட்டின் உள்நாட்டு விவ காரத்தில் தலையிடாது என்றாலும் பல்வேறு இனமக்களையும் பல்வேறு மத சார்புடைய மக்களையும் அவர்கள் இனைத்தாலும் சரித்திர நட்புறவோடும் தெற்கு ஆசியாவில் வாழும் மக்களின் பிரச்சனையை கண்டும் கேட்டும் தனக்கு எதுவுமே ஏற்படாதது போல் பாவனை செய்து கொண்டு இருக்க விரும்பவில்லை என்று இந்தியாவின் நிலைமையை மிக தெளிவாக எடுத்துச் சொன் னார்கள். காரணம் இந்தியாவின் பக்கத்து நாட்டில் நடை. பெறுகின்ற இனப்படு கொலையை காணாதது போல் நாம் நடித்துக்கொண்டு இருக்க முடியாது என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற வகையில் தான் அவருடைய கருத்து அமைக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மத்திய அரசு உணவுப் பொருட்கள் மற்றும் துணிமணிகள் மற்றும் மருந்துகள் இவைகள் விமானங்கள் மூலமாக இலங் கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், கொழும்புப் பகுதியிலே உள்ள தமிழர்கள் பாதுகாப்பான யாழ்ப்பாணப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக நமது அரசு தன் னிடம் உள்ள இரண்டு கப்பல்களை அனுப்பி வைத்து அந்த மக்கள் யாழ்ப்பாணம் பகுதிக்குச் செல்ல வழிவகைகள் செய் யப்பட்டன.

அதே நேரத்தில் நமது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மத்திய அரசின் சார்பில், இலங்கைத் தமிழர் நிவாரண நிதி என்ற பெயரில் ஒரு நிவாரண நிதியை ஏற்படுத்தி, அதற்கு இந்திய அரசின் 'பிரைம் மினிஸ்டர்ஸ் ரிலிப் பண்டிலிருந்து

ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளார்கள் அதே போல், தமிழக
முதலமைச்சர் அவர்களும் இலங்கையிலே வாழ்கின்ற பாதிக்கப்
பட்ட தமிழர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே
இலங்கைத் தமிழர் நிவாரண நிதி என்ற பெயரில் ஒரு நிதியை
ஏற்படுத்தியிருப்பதற்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதேபோல், ஆகஸ்ட் 2-ஆம் நாளன்று தமிழகம் முழு
வதும் வேலைநிறுத்தம் செய்வது என்று அனைத்துக் கட்சிகள்
கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவிற்கேற்ப
ஆகஸ்ட் 2-ஆம் தேதியன்று, தமிழ்நாட்டிலே உள்ள கடைகள்
வியாபார ஸ்தலங்கள், போக்குவரத்துகள், தொழிற்சாலைகள்
அனைத்தும் மூடப்பட்டு, நிறுத்தப்பட்ட நேரத்தில், மத்திய
அரசாங்கம் அதில் பங்கு பெற வேண்டுமென்ற ஆர்வத்தின்
காரணமாக இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு எதிராக
நடைபெற்ற கொலைகளையும், கொள்ளைகளையும்
கண்டிக்க வேண்டுமென்ற உணர்வோடு, மத்திய
அரசாங்கமும் அந்த முழு பந்தில் தன்னை ஈடுபடுத்திக்
கொண்டது. அன்றையதினம் மாநிலத்தில் உள்ள அனைத்து,
மத்திய அரசு அலுவலகங்களும் மூடப்பட்டன. மாநிலத்
திற்குள் ஓடுகின்ற, மாநிலத்திற்கு வருகின்ற அனைத்து இரயில்
களும் நிறுத்தப்பட்டன. மேலும், விமான சர்வீசுகள் கூட
நிறுத்தப்பட்டன. சரித்திரம் காணாத வகையில்
மாநில அரசாங்கம் நடத்தும் எந்தப் பந்திலும் கலந்து கொள்
ளாத மத்திய அரசாங்கம், அன்றைக்குத் தமிழக மக்களுடைய
உணர்வைப் புரிந்து, அந்தப் பந்திலே கலந்து கொண்டு, சரித்
திரத்திலே முக்கிய இடம் பெற்றது என்று சொன்னால் அது
மிகையாகாது.

அடுத்து, ஆகஸ்ட 5-ஆம் தேதி அன்று திராவிட முன்
னேற்றக் கழகம் தனியாக ஒரு போராட்டம் நடத்துவோம்.
என்று அறிவித்தது. மாநில முதலமைச்சர் அவர்களும், அனைத்
துக் கட்சிக் கூட்டத்தில் கூட போராட்டத்தைக் கைவிடுங்கள்
என்று வேண்டுகோள் விடுத்தும் அவர்கள் அன்றையதினம்
போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்தனர். அதை
நடத்தும்பொழுது, மாநிலத்திலே ஏற்படுகின்ற சட்டம் ஒழுங்குப்
பிரச்னைகள், இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீதிருக்கிற அனு
தாபத்தை மாற்றி விடக் கூடாது, பிரச்னைகளை திசை
திருப்பி விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு, நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்
தோடு பேச்சு வார்த்தை நடத்தி, அதன் மூலமாக மத்திய
அரசாங்கம் தொடர்ந்து மீண்டும் 5-ஆம் தேதியன்றும் தமிழகத்
தினுடைய அனைத்து இரயில் சர்விஸ்களையும் ரத்து செய்தது
மிக முக்கியமான விஷயம். காரணம். இரயில் நிறுத்தப்
போராட்டம் நடைபெறுமானால், அதிலே வன்முறைகள்
ஏதாவது ஒரு வகையிலே தலைதூக்குமானால், பல்வேறு
வகையான புதிய பிரச்னைகள் தோன்றி, அந்தப் பிரச்னை
களின் மூலமாக, இலங்கையிலே உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு



நாம் அனுதாபம் தெரிவிக்கின்ற அந்தப் பிரச்னையில்
நம்முடைய கவனம் எல்லாம் திசை திரும்பிவிடுமோ என்ற
அச்சம்தான். அதற்காக முயற்சி எடுத்த நம்முடைய முதலமைச்
சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல், ஆகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி இலங்கை
எதிர்க்கட்சியினுடைய தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள்
டெல்லிக்குச் சென்று நம்முடைய இந்தியாவினுடைய பிரதமர்
இந்திரா காந்தி அவர்களோடும், மத்திய அரசாங்கத்தினுடைய
மற்ற பல்வேறு அமைச்சர்களோடும் பேச்சு வார்த்தை
நடத்தினார்கள். இலங்கையிலே உள்ள சூழ்நிலைகள் குறித்தும்,
அரசியல் நிலவரங்கள் குறித்தும், அவர்களுடைய தேவைகளைக்
குறித்தும், நமது அரசாங்கம் எந்த அளவுக்குப் பங்கேற்க
வேண்டுமென்பது குறித்தும், பல்வேறு வகையான விளக்க
உரைகளை நடத்தினார்கள்.

16-ம் தேதி, பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் திரு.
அமிர்தலிங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியவுடன்
நாடாளுமன்ற மாநிலங்கள் அவையிலே 'நானோ' என்னுடைய
கட்சியோ, அரசோ, இனப்படு காலையைக் கண்டனம் செய்யத்
தவறியதில்லை. அதே சமயம் நாம் சொல்லும் ஒவ்வொரு
சொல்லும் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏதாவது
பாதிப்பு ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்சி அரசுப் பொறுப்பில்
இருக்கும் நாங்கள் பேச வேண்டியிருக்கிறது. தமிழக சகோதர,
சகோதரிகளுக்குக் கூறிக்கொள்வேன், நிலைமையை உன்னிப்பாக
நாங்கள் கவனித்து உறுதியாக நிலைமையைச் சமாளிப்பதில்
கவனமாய் இருப்போம்' என்று கூறினார். ஆக, தமிழ்நாட்டு
மக்களுடைய உணர்வைப் புரிந்து கொள்வதில் மட்டுமல்ல,
இலங்கையிலே வாழ்கின்ற மக்களுடைய பிரச்னையைத்
தீர்ப்பதில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எவ்வளவு
கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான
இந்தச் சொற்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அதைப் போல், இலங்கையிலே நடைபெறுகிற சம்பவங்கள்
தமிழ்நாட்டை மட்டும் பாதிக்கவில்லை, இந்திய துணைக்
கண்டத்தையே பாதித்திருக்கிறது என்று சொன்னார்கள்.
உண்மையிலேயே இன்றைக்கு நம் இந்தியத் துணைக் கண்
டத்தையே எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதற்கு
ஒரு சான்றுதான், நமது இந்திய நாட்டினுடைய தூதுக் குழு
வில் சென்றுள்ள மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஐக்கிய
நாடுகள் சபையில் பேசுகின்ற சமயத்தில் இங்கே எந்த அளவு
அந்தப் பிரச்னை பாதித்திருக்கிறது என்பதை மிகத் துல்லிய
மாகவும், தீரமாகவும், தீவிரமாகவும் உறுதியாகவும் எடுத்து
வைத்திருக்கிறார். அந்த அளவு கருத்துக்கள் எடுத்து வைக்
கப்பட்டிருக்கின்றன. இலங்கையினுடைய நிரந்தரப் பிரதிநிதி
யாக இருக்கிற திரு. பொன்சேகா கூறிய குற்றச்சாட்டுகளுக்குப்
பதில் அளிக்கிற வகையில் இந்தியாவில் இலங்கைப் பிரச்னை
எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கு
பல்வேறு சான்றுகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே,

அந்தச் சான்றுகள் மூலமாக, இன்றைக்கு அது தமிழ்நாட்டை
மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தையே பாதித்திருக்
கிறது என்பதை நாம் உணர்கிறோம். அதற்கேற்பத்தான்
இந்தியாவிலே இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள், அது
ஜனதா கட்சியாக இருந்தாலும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியாக இருந்தாலும் சரி, சி.பி.ஐ. ஆக இருந்தாலும் சரி,
பாரதீய லோக்தளமாக இருந்தாலும் சரி, அனைத்துக் கட்சி
களும் கட்சி வேறுபாடின்றி இந்தியாவினுடைய, இந்திய
அரசாங்கத்தினுடைய பிரதமர் எடுத்திருக்கிற நடவடிக்கையை
முழுமையாக ஆதரித்திருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். அது தமிழ்நாட்டினுடைய பிரச்னை
என்று சொல்லி இருப்போமேயானால் மத்தியில் இருக்கக்கூடிய
அல்லது இந்தியாவினுடைய மொத்தக்கட்சிகளின் தலைவர்களும்
கருத்துத் தெரிவிப்பதற்குப் பதிலாக அவர்கள் சும்மா இருந்
திருக்கக் கூடும். ஆனால் இது இன்றைக்கு இந்தியாவைப்
பாதிக்கிறது; தமிழ்நாட்டு மக்களைப் பாதிக்கின்றது. பக்கத்திலே
ஒரு நாட்டிலே இனப்படுகொலை நடக்கின்றது; இதைக் கண்
டிப்பதிலே நாம் நிச்சயமாக முன் வரவேண்டும் என்பதற்காகத்
தான் பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்களுடைய கண்
டனத்தை வெளிப்படையாக, கடுமையாகச் சொல்லியிருப்பதை
காண்கின்றோம். ஆகவே இன்றைக்கு கேட்டுக்கொள்ள விரும்பு
வதெல்லாம், இதை தமிழ்நாட்டினுடைய பிர னை என்பதற்குப்
பதிலாக, இந்தியாவினுடைய பிரச்னையென்று எடுத்து வைப்
போமானால் உலக நாடுகள் அதை மிக உன்னிப்பாக கவனித்து
எந்த அளவிற்கு அது 70 கோடி மக்களுடைய பிரச்னையாக
இருக்கிறது என்பதைக் கவனித்து அதற்கு ஆதரவான நட
வடிக்கையை மேற் காள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அது
மட்டுமல்லாமல் இலங்கையில் வாழ்கின்ற பல இலட்சக்கணக்
கான தமிழர்கள் தங்களுக்குப் பின்னால் வெறும் ஐந்து கோடி
மக்கள் மட்டும் இல்லை; 70 கோடி இந்திய மக்களே இருக்
கிறார்கள் என்று உள்ள பூர்வமாக உணர்கின்ற நிம்மதி,
நம்பிக்கை அவர்களுக்கு கிடைக்கும் என்பதை நான் இந்தச்
சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் க மைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-50)

இராணுவத்தை இலங்கைக்கு இந்தியா அனுப்ப வேண்டு
மென்று கேட்கப்படுகிறது. இங்கே கூட அதற்கான ஒரு
தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே எனக்கு கருத்து
வேறுபாடு இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். இராணுவத்தை அனுப்புவதா,
வேண்டாமா என்பது மத்திய அரசாங்கம் எடுக்கிற முடிவு.
ஆனால் நான் கேட்க விரும்புவது இலங்கையிலிருந்து தமிழ்
நாட்டிற்கு வருகிற தலைவர்கள், அமிர்தலிங்கம் அவர்களா
னாலும் சரி, அல்லது தொழிலாளர் காங்கிரசினுடைய
தொண்டமான் அவர்களானாலும் சரி, மற்றும் விடுதலைப்புலிகள்
என்று சொல்லப்படுகிறவர்களானாலும் சரி, அல்லது போராளி
கள் என்று சொல்லப்படுகிறவர்களானாலும் சரி, யாராவது
ஒருவர் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களைக் காப்பதற்கு
இந்தியா இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று கோரிக்கை



வைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. அங்கே பாதிக்கப்பட்டி
ருக்கிற மக்கள் எங்களுக்கு இராணுவத்தின் மூலமாகத்தான் பாது
காப்பு கிடைக்கும்; இராணுவத்தின் மூலமாகத்தான் எங்களுக்கு
நிவாரணம் கிடைக்கும் என்று சொல்லி இருப்பார்களென்று
சொன்னால் அது வேறு விவகாரம். ஆனால் இராணு
வத்தின் மூலமாக அதற்கான தீர்வை காண முடியாது என்பதை
நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். வங்காள தேசத்தைப் பற்றிச்
சொல்கிறார்கள். வங்காள தேசம் பொறுத்தவரையில் தேர்ந்
தெடுக்கப்பட்ட அரசாங்கம் அங்கே அமைக்க வேண்டுமென்ற
சூழ்நிலை இருந்தது. அவாமி லீக் அங்கே வெற்றி பெற்றது.
ஷேக் முஜுபுர் ரெக்மான் வெற்றி பெற்றார். அவர் ஆட்சிப்
பீடத்திலே அமரக் கூடாது என்பதற்காக அவரை சிறையிலே
பிடித்து தள்ளினார்கள். அங்கே 99 சதவீத மக்கள் அவாமி
லீக்கை ஆதரித்தவர்கள். இந்திய இராணுவம் தலையிட வேண்டு
மென்று அவர்கள் விரும்பினார்கள். இந்திய இராணுவம்
தலையிட்டு அவர்களுடைய ஜனநாயகத்தை பாதுகாக்க
வேண்டும், குடி உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற
கோரிக்கைகளை வைத்தார்கள். மக்கள் ஆதரவு கொடுத்தார்கள்.
இந்திய இராணுவம் வருவதற்கான வழியை அவர்கள் அமைத்துக்
கொடுத்தார்கள். ஆனால் இங்கே அந்த நிலைமைகள் இல்லை.
நம்முடைய இராணுவம் செல்லுமேயானால் அதனுடைய
விளைவுகள் எப்படியிருக்குமென்று நாம் சொல்ல முடியாது.
ஆகவே இராணுவத்தை அனுப்புவதென்பது மிகவும் சிக்கலான
பிரச்னை. அது மத்திய அரசாங்கம் உரிய நேரத்தில் எடுக்க
வேண்டிய முடிவு என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இந்திராகாந்தி அவர்கள் இந்தியாவி
னுடைய தூதுவராக திரு. பார்த்தசாரதி அவர்களை அனுப்பி
வைத்தார்கள். திரு. பார்த்தசாரதி சென்றதன் பலனை உடனடி
யாக நாம் அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால் அது முடியாத
காரியம். காரணம் இலங்கைப் பிரச்னை என்பது மிகவும்
சிக்கலான பிரச்னை. நம்முடைய மாண்புமிகு முன்னவர்
அவர்கள் சொன்னதைப்போல எல்லோருக்கும் சமமான
உரிமைகள் கொடுத்து, சமமான அந்தஸ்து கொடுத்து பேச்சு
வார்த்தை நடத்தி வைக்க வேண்டும் என்பதுதான் திரு. பார்த்த
சாரதியின் பிரதான நோக்கம். என்னென்ன கோரிக்கைகள் நிறை
வேற்றப்படும், என்னென்ன கோரிக்கைகளுக்கு அரசாங்கம்
செவி சாய்க்க வேண்டுமென்று கட்டளை இடுவதற்கல்ல. முதல்
கட்டமாக எல்லா தரப்பினரையும் ஒட்டுமொத்தமாக பேச்சு
வார்த்தை மேஜையில் கொண்டுவந்து உட்காரவைக்க வேண்டு
மென்பதுதான் அவருடைய பிரதான நோக்கமாக இருக்கின்றது.
அதுமட்டுமல்லாமல் அவர்கள் சில வழிமுறைகளைச் சொல்லி
யிருக்கிறார்கள். இந்தியாவைப் போன்று ஒரு சோஷியல்
செட்டப் இருக்க வேண்டும். அங்கே மாநிலங்கள் உரிமைகளைப்
பெற வேண்டும். மாநிலங்களுக்கு சம உரிமையைக் கொடுத்து
அதன் மூலமாக அவர்களுடைய பிரச்னைகளை அவர்களே

தீர்த்துக் கொள்வதற்கான வழியை இந்தியாவினுடைய மாநிலங்
களைப் போல அவர்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
அதேபோல சட்டம் ஒழுங்கு பிரச்னையை அந்த மாநிலங்களின்
அரசாங்கமே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் போல
பல்வேறு பிரச்னைகளை அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.
ஆகவே அதனுடைய முடிவுகள் எப்படி வரும் என்று நமக்குத்
தெரியாது. ஜெயவர்த்தனே அவர்கள் நம்முடைய
பார்த்தசாரதியை வரக்கூடாது என்று தடை விதித்து
விட்டார்கள் என்று பேச்சு உண்டு. ஆனால் இன்றைக்கு
காலையிலே செய்தி வந்திருக்கிறது. நம்முடைய தூதராக
இலங்கையிலே இருக்கக் கூடியவர் இலங்கை ஜனாதிபதியைச்
சந்தித்துப் பேசியிருக்கிற நேரத்தில், இலங்கை ஜனாதிபதி
நம்முடைய தூதராக, இந்தியாவின் தூதராக பார்த்தசாரதி
அவர்கள் மீண்டும் வருவதற்கு வழி ஏற்பட்டிருப்பதாகவும்,
அதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்
இன்றைக்கு காலையில் செய்தித்தாள்கள் மூலமாக நாம் செய்தி
அறிந்திருக்கிறோம். ஆகவே, மீண்டும் பார்த்தசாரதி
இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தையை ஆரம்பித்து
பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழியை ஏற்படுத்துவார்கள்
என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் உண்டு.

தமிழ்நாட்டு மக்களும், இந்திய அரசும் நிதானத்தோடும்,
இராஜ தந்திரத்தோடும் நடந்துகொண்டு இந்தப் பிரச்னையைத்
தீர்த்து வைக்க வேண்டுமென்பதுதான் நம்முன் உள்ள முக்கிய
மான பிரச்னையாக இருக்கிறது. அவசரப்பட்டோ, உணர்ச்சி
வசப்பட்டோ நடவடிக்கைகளை எடுத்தால், அதன் காரணமாக
சிக்கல்கள் ஏதேனும் ஏற்பட்டால், அது இலங்கையில் வாழ்கின்ற
தமிழர்களை மட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள இந்திய வம்சா
வழியினர் என்று சொல்லப்படுபவர்களையும் பாதிக்கும். இன்னும்
சொல்லப்போனால் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலேயும்,
பிஜி நாடு, ஆப்பிரிக்கா கண்டம், மலேஷியா, சிங்கப்பூர்
போன்ற நாடுகளிலேயும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ்
நாட்டிலுள்ளவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக
அங்கே வாழ்கின்ற மக்கள் பாதிக்கப்படக் கூடாது. அந்த
நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பெரும் செல்வாக்குடன்
வாழ்கிறார்கள். மந்திரிகளாக பலபேர் அங்கே இருக்கிறார்கள்.
இந்திய வம்சாவழியைச் சேர்ந்த நாயர் அவர்கள்தான்
சிங்கப்பூரில் ஜனாதிபதியாக இருக்கிறார். இன்னும் சொல்ல
வேண்டுமென்றால் இரண்டு மூன்று தமிழர்கள்—இந்திய வம்சா
வழியில் வந்தவர்கள் மலேஷியாவில், பிஜி நாட்டில் அமைச்சர்
களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவ்வாறு நல்ல
முறையிலே அங்கே இருப்பதற்கு தமிழ்நாட்டிலே இருப்
பவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறின்றி
இங்கே ஏற்படும் பிரச்னையின் காரணமாக அங்குள்ள தமிழர்கள்
அடித்து விரட்டப்பட்டு அகதிகளாக, தங்கள் சொத்துக்களை
இழந்து, கோடீஸ்வரர்களாக இருந்தவர்கள் கோவணாண்டிகளாக
இங்கே வந்து அரசாங்கத்திலிருந்து 10 ரூபாயோ, 15 ரூபாயோ



கிடைக்குமா என்று எதிர்பார்க்கின்ற நிலைமைக்கு அவர்களைத்
தள்ளாமல் இருக்க வேண்டியது நம்முடைய முக்கியமான
கடமையாகும்.

அந்த வகையில் நமது முதலமைச்சரவர்களை நான் மனதாரப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் அவருடைய அணுகு
முறை மிகவும் நிதானத்துடனும், இராஜதந்திரத்தினுடனும்
அமைந்து பிரச்னைகளைச் சிக்கலாக்காமல் இருக்கிறது. இவ்வாறு
அணுகி இந்தப் பிரச்னையில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையை
ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டு வருகின்ற முதலமைச்
சரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ளவில்லையென்றால்,
வெறும் உணர்ச்சிகளுக்கு நாம் ஆளாகியிருந்தால் பிரச்னை
சிக்கலானதாக ஆகியிருக்கும். கொழும்புத் திட்டத்தின் மூலமாக
மாணவர்கள் படிக்கின்ற பிரச்னையில், மலேஷிய நண்பர்கள்
சொன்னார்கள். உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடு
கிறது என்று அந்த நாட்டின் அரசாங்க அதிகாரிகள் சொல்லும்
நேரத்தில் நம்முடைய அரசாங்கம் பதில் சொன்னது, உள்நாட்டு
விவகாரத்தில் நாங்கள் தலையிடவில்லை என்று பதில்
சொல்லியது. கொழும்புத் திட்டத்தின் மூலமாகப் பரிவர்த்தனை
என்ற அடிப்படையில் இங்கேயுள்ள மாணவர்கள் வெளிநாட்டில்
சென்று படிக்கவும், அங்கேயுள்ள மாணவர்கள் இங்கே வந்து
படிக்கவும் உள்ள முறையில் மலேஷியத் தமிழர்கள் படிக்கி
றார்கள், அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம், உள்நாட்டுப்
பிரச்னையில் தலையிடவில்லை என்று சொல்லியதை அந்த
அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. எனவே, சிறு பிரச்னைக்குக்கூட
உணர்ச்சிவசப்பட்டால் மற்ற நாடுகளிலே உள்ள தமிழர்களுக்கு
பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம்தான் நமக்கு ஏற்படுகிறது.
ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச்
சிக்கலான பிரச்னையில் நிதானத்தோடு நடந்து கொண்டு நாம்
தீர்வு காண வேண்டும்.

இலங்கைப் பிரச்னைபற்றி பலரும் பல்வேறு கருத்துக்களைச்
சொல்கிறார்கள். இலங்கையிலே இருக்கின்ற நாடற்றவர்கள்,
பிரஜா உரிமையில்லாதவர்கள், இந்தியாவிலேயிருந்து இரு நூறு
ஆண்டுகளுக்கு முன்னால் சென்று அங்கே குடியமர்ந்தவர்கள்
வறண்டு கிடந்த அந்தப் பூமியைச் செழிப்பாக்கி, வளமான
நாடாக்கி, பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த அந்த நாட்டை
பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் உருவாக்கிக்
கொடுத்த அந்தத் தோட்டத் தமிழர்களைப் பற்றியும் நாம்
சிந்திக்க வேண்டும். அவர்களது உரிமை 1948—ஆம் ஆண்டில்
பறிக்கப்பட்டதாக மாண்புமிகு முன்னவரவர்களும் இங்கே
சொன்னார்கள். அது உண்மை. 1948-ஆம் ஆண்டில் அவர்களது
உரிமை பறிக்கப்பட்டது. பத்தாவது வகுப்புக்கு மேல் அவர்கள்
படிக்க முடியாது; சொத்து வைத்துக்கொள்ள முடியாது;
அவர்களுக்கு வேலைவாய்ப்பும் இல்லை; தோட்டத் தொழி

ளாளியின் மகன் தொழிலாளியாகத்தான் பணியாற்ற முடியுமே
தவிர ஆசிரியராகப் போகவோ அல்லது வேறு வேலைக்குப்
போகவோ முடியாது. இதுபோன்ற கட்டுப்பாட்டினால் அவர்கள்
சித்திரவதைக்கு உள்ளாகியிருந்தார்கள். இங்கே அவைகளையும்
பரிவோடு பார்த்து காப்பாற்ற வேண்டும்.

தனி ஈழம் கேட்பதா இல்லையா என்பது வேறு பிரச்னை:
தனி ஈழத்தில் பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள்
போய்ச் சேர முடியுமா, வாழ முடியுமா, பிழைக்க வழியிருக்
கிறதா? உணர்ச்சிவசப்பட்டு தமிழ் ஈழம் வேண்டுமென்று
கேட்டால், பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்களும்,
நாடற்றவர்கள் என்று சொல்லப்படுகின்ற ஐந்து இலட்சம்
பேர்களும், இங்கேயிருந்து வியாபாரம் செய்யப்போன ஒரு
இலட்சம் பேர்களும் என்ன நிலைமைக்கு ஆளாவார்கள்? தனி
ஈழத்தில் அவர்களுக்கு இடமிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். உணர்ச்சிக்கு இடம் கொடுத்து, தனி ஈழம்
தான் எங்கள் பிறப்புரிமை என்று கேட்டால், அவ்வாறு பிரித்துக்
கொடுத்துவிட்ட பிறகு மெஜாரிட்டியாக இருக்கின்ற சிங்களவர்
களின் மத்தியில் இந்தத் தோட்டத் தொழிலாளர்களை வைத்து
விட்டால் அவர்களுடைய உயிருக்கு பாதுகாப்பு உண்டா?
அவர்களுடைய சொத்துக்களுக்கு பாதுகாப்பு உண்டா? உடைமை
களுக்கு பாதுகாப்பு உண்டா? கற்புக்கு பாதுகாப்பு உண்டா?
எதுவுமே இல்லை.

(நண்பகல் 12-00)

ஆகவே, மெஜாரிட்டி இந்திய வம்சாவழித் தமிழர்கள்
ஒட்டுமொத்தமாக இருந்தால்தான் சிங்களவர்கள் ஓரளவுக்குப்
பயப்படுவார்கள், அவர்கள் ஓரளவுக்கு அச்சப்படுவார்கள்
என்பதை நாம் உணர வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள்
அங்கே இருந்து வெளியேறி வருகின்ற வாய்ப்பு உண்டா?
அவர்களை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியுமா? அகதி
களாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் திட்டவட்டமாக
இந்திரா காந்தி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய
மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் சொல்லி இருக்கி
றார்கள். அப்படி ஏற்றுக்கொண்டால் நம்முடைய பொருளா
தாரம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல, அவர்களை நாம் ஏற்றுக்
கொள்கிறோம் என்று சொன்ன மறு நிமிடமே அவர்களை
வெளியேற்றுகின்ற முயற்சியிலே சிங்களர்கள் ஈடுபடுவார்கள்,
அராஜகத்திலே ஈடுபட ஆரம்பித்து விடுவார்கள்.

மலேசியா நாட்டில் இருக்கக்கூடிய மலாயாக்காரர்களுக்கும்,
சீனர்களுக்கும் தகராறு நடந்தது. அதுவும் இனக் கலவரம்தான்.
ஆனால் அதே நேரத்தில் அவர்களை அகதிகளாக நாங்கள்
ஏற்றுக் கொள்கிறோம் என்று சீனா சொல்லவில்லை.
அவன் அந்த மண்ணிலேதான் பிறந்தான், அந்த மண்ணிலே
தான் வாழ்ந்தான், அந்த மண்ணிலேதான் திருமணமும் செய்து
கொண்டான், எனவே அவன் அங்கேயேதான் சாக வேண்டும்.



அவனுக்கு எங்கள் நாட்டிலே இடம் இல்லை. தார்மீக
ஆதரவைத்தான் எங்களால் தரமுடியும் என்று சீனா கூறியது.
வேறு எந்த உதவியும் செய்ய முடியாது என்று சொல்லியது.
அதன்பிறகு என்ன ஆயிற்று? அந்த மக்கள் ஒற்றுமையாக
இப்போது மிகவும் சுபிட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
எனவே அதனை நாமும் கடைப்பிடிக்க வேண்டும். இன்றைக்கு
இருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்க
வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைக்
கவனிக்க வேண்டும். அவர்களுக்கு உரிமை கிடைக்க வேண்டும்.
சொத்துரிமை மட்டுமல்ல, படிப்புரிமை மற்றும் அனைத்து
ஜீவாதார உரிமைகளும் அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும்; அதுதான் இப்போது நாம் செய்யவேண்டிய மிக
முக்கியமான கடமையாகும். ஆனால் இன்றைக்கு தனி ஈழம்
தான் பிரச்சினை என்று தமிழ்நாட்டில் பேசுகிறார்கள். நான்
கேட்கிறேன். இலங்கையில் உள்ளவர்களுக்கு தனி ஈழம்
வேண்டுமா வேண்டாமா என்பதுதான் பிரச்சினையா? ஒரு
மிக முக்கியமான தலைவர், இலங்கை ஐக்கிய விடுதலை
முன்னணித் தலைவர் திரு. சிவ. சிதம்பரம் அவர்கள் அக்டோபர்
13-ஆம் தேதி செய்தியாளர்களிடத்திலே பேசும்போது ஒன்றைச்
சொன்னார்கள். ''சென்ற பொதுத் தேர்தலிலே தமிழ் ஈழ
விடுதலையை முன் வைத்துத்தான் போட்டியிட்டு வெற்றி
பெற்றோம், இப்போது திரு ஜெயவர்த்தனே அவர்கள் மாற்று
யோசனையாக ஒன்றைச் சொன்னால் அதை மக்கள் முன்
வைத்து அவர்களுடைய தீர்ப்பைப் பெறுவோம்'' என்று சொல்லி
இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தீவிரவாதிகள் என்று சொல்லக்
கூடியவர்களே, அதாவது தமிழ் ஈழம் ஒன்றுதான் வழி என்று
சொல்லக் கூடியவர்களே இன்றைக்கு ஒரு சாம்ப்ரமைஸ் என்ற
தீர்மானத்தின் அடிப்படையில் வேறு வழி ஒன்றை இலங்கை
ஜனாதிபதி அவர்கள் சொல்வார்களேயானால் அதை நாங்கள்
பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று சமரச அடிப்படையில்
வந்திருக்கின்ற நேரத்தில் தனி ஈழம் என்ற உறுதியான
நடவடிக்கை மூலமாகத்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும்
என்று இங்கே பேசுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும்
என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற சூழ்நிலையில் தனி ஈழம் ஒன்றுதான்
வழி என்று சொல்லி தமிழ்நாட்டிலே வெறி எண்ணங்களை
வளர்த்து அதன் மூலமாக ஒரு பிரிவினை வாதத்தை முன்
வைத்து மற்றும் அதற்கான காரண காரியங்களில் மக்களை
ஈடுபடுத்தலாம் என்று நம்புகின்றவர்கள் தயவுசெய்து பிரிவினைக்
கான வித்தை போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கி
றேன். இந்தியாவின் ஒருமைப்பாட்டினைக் காப்போம் என்று
தான் நாம் உறுதிமொழி எடுத்திருக்கிறோம். அதனை அழகாக
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில்
சொல்லி இருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் மாநாட்டில் கலந்து
கொள்ளவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்
களுக்கு கடிதம் வந்து அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள்
பதில் எழுதியபோதும் அதிலே மிக அழகாக எழுதியிருக்
கிறார்கள். பல தலைவர்களும் அது குறித்து கடிதம் எழுதி

யிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் வாயிலாக அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியாவின் ஒருமைப் பாட்டினைப் பற்றி ஆணித்தரமாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவின் சமஷ்டி அமைப்பின் மூலமாக வெளிநாடுகளில் இந்தியாவின் மதிப்பை உயர்த்த முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, பிரிவினை விதையினை யாரும் தயவு செய்து விதைக்கவேண்டாம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது தெளி வாகச் சொன்னார்கள். ஐக்கிய நாட்டுச் சபையின் மூலமாகத் தான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று சொல்லி பல்வேறு பிரச்சினைகளும் ஐக்கியநாட்டுச் சபையின் மூலமாகத் தான் தீர்க்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். எனவே ஐக்கிய நாட்டுச் சபையின் மூலம் இந்தப் பிரச்சினை தீர்க்கப் பட்டால் நம்மைவிட மகிழ்ச்சிக்குரியவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் ஐக்கிய நாட்டுச் சபையால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்றாகி அது ஒரு விவாத மேடையாக சமீப காலத்தில் இருந்து வருகின்றது. பாரசீக நாட்டிலே உள்ள உண்மையான அரபு மக்களை அந்த இடத்தை விட்டு வெளியே போகச் சொல்லிவிட்டு இன்றைக்கு அவர்களை நாடற்றவர்களாக ஊர் ஊராக பிச்சைக்காரர்களாக அலைய விட்டுவிட்டு அந்த இடத்தில் இஸ்ரேல்காரர்கள் வந்துவிட்டதா காரணத்தால் இன்றைக்கு பாரசீக மக்கள் மிகப்பெரிய போராட்டத்தை நடத்துகின்றார்கள். அந்தப் பிரச்சினையில் ஐக்கிய நாட்டுச் சபையால் தீர்வு காண முடியவில்லை.

அதேபோல் இன்றைக்கு சௌத் ஆப்பிரிக்கா—அபார்தீட்—இன வெறியைக் கிளப்பி விடுகின்ற அரசாங்கம் என்று இருந்த போதிலும், உலகத்திலே உள்ள ஜனநாயக நாடுகள் அதை எதிர்க்கும் சூழ்நிலையில்கூட, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆதரிக்கின்ற சூழ்நிலையில் அதைக் கண்டிப்பதற்கு முன் வராத சபைதான் ஐ.நா.சபை. காஷ்மீர் பிரச்னை 1947 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டபோதிலும், 35—36 ஆண்டுகள் ஆகி விட்டபின்னாலும், இன்றைக்கும் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் இருக்கும் சபைதான் இந்த சபை. ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் என்று சொன்னால் வரவேற்போம். ஆனால் அதனால் முடியாது என்பதுதான் நம்முடைய கருத்து. ஏன் அதைக் கொண்டு சென்றார்கள் என்று சொன்னால், உலக நாடுகளின் ஆதரவு நமக்குக் கிடைக்கும் என்பதால்தான் அங்கே கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் இந்த இலங்கை தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரே வழி இந்தியப் பிரதம அமைச்சர் அவர்கள் மூலமாகத்தான் முடியும் என்பதை நான் சொல்லவில்லை, ஸ்ரீலங்காவில் இருந்து வருகின்ற தலைவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாகச் சொல்கிறார்கள், அவர்களை...



ஒட்டுமொத்தமான கருத்து—இலங்கைப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய தகுதி படைத் தலைவர் இந்திரா காந்தி மட்டும் தான், இந்திய அரசு மட்டும்தான். ஆயினும் மற்றவர்களுடைய ஆதரவை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்திரா காந்தி அவர்களின் 'தகுதியை, மதிப்பை, மரியாதையை குறைத்துப் பேசுவதோ அல்லது அவர் செயல் இழந்துவிட்டார் என்று சொல்வதோ அல்லது அவர் பலத்தை குறைக்கவோ, அதன் மூலம் அரசியல் லாபம் பெறவோ யாராவது விரும்புவார்களானால், அது ஜெயவர்த்தனே அவர்களுக்கு பலம் கொடுப்பது போல் ஆகும். இந்திரா காந்தியை கண்டிப்பதன் மூலம் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைப்பது சற்று கடினமான காரியம் என்பதை நான் இங்கே உணர்த்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்திரா காந்தியை எந்த அளவிற்கு நாம் பலவீனப்படுத்துகிறோமோ, குறைத்து மதிப்பிடுகிறோமோ, அவர் செல்வாக்கைக் குறைக்க நடவடிக்கை எடுக்கிறோமோ அது ஜெயவர்த்தனேவிற்கு, அவருடைய கரத்தை வலுப்படுத்துவதற்கு ஒப்பாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அதற்கு உதாரணங்கள் சொல்ல வேண்டுமானால், ஏராளமான உதாரணங்களைச் சொல்லமுடியும். இனப்படு கொலை நடந்து கொண்டு இருந்த நேரத்தில் கூட இலங்கையின் ஜனாதிபதி அவர்கள் பல்வேறு நாடுகளுக்கு தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பினார். அமெரிக்காவுக்கு அனுப்பினார், பிரிட்டனுக்கு அனுப்பினார், வங்காளத்திற்கு அனுப்பினார், பாகிஸ்தானுக்கு அனுப்பினார், ப்ரான்ஸிற்கு அனுப்பினார், எனக்கு ஆதரவு தாருங்கள், எனக்கு இராணுவ உதவி தாருங்கள் என்று கேட்டு அனுப்பினார். சில நாடுகள் அதை வெளிப்படை யாகச் சொன்னது. அவர் கேட்டது உண்மை என்று சொன்னது. மற்ற சில நாடுகள் சொல்லாமல் இருக்கின்றன. ஆனால், அதற்குள்ளே ஜெயவர்த்தனே அவர்கள் நான் இராணுவ உதவி கேட்கவில்லை, பொருளாதார உதவிதான் கேட்டேன் என்று அறிக்கை வெளியிட்டார். அதை மறுத்து சில நாடுகள், அவர் இராணுவ உதவிதான் கேட்டார் என்று கூறின. அந்த வகையில் இன்றைக்கு செய்திகள் வருவதை நாம் பார்க்கிறோம்.

அமெரிக்காவின் இராணுவ அமைச்சர்—வெஸ்டிகன் என்பவர்—சைனாவுக்குச் சென்றவர், பக்கத்தில் உள்ள பாகிஸ்தானுக்கு 1500 மைல் கடந்து நேரடியாகச் செல்வதற்குப் பதிலாக, 15000 கிலோமீட்டர் பயணம் செய்து ஜெயவர்த்தனே அவர்களுடன் பேச்சு நடத்திவிட்டு, பின்னர் ராவல்பிண்டிக்குச் செல்வதைப் பார்த்தோம். அங்கே ஜெயவர்த்தனே அவர்களோடு இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் மூலமாக திருகோணமலையை அமெரிக்காவுக்கு தாரை வார்க்கும் திட்டம் உருவாக்கப்படுகிறது. அங்கே இராணுவத் தளம் அமைக்கவும், இராணுவ ஆயுதங்களைக் குவிக்கவும், அதன் மூலமாக அங்கே வாழும் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி நொறுக்கவும் இது பயன் பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அது செயல்பாட்டுக்கு வர இருக்கிறது.

(திரு. நா. சுந்தரராஜ்) [1983 அக்டோபர் 25

அமெரிக்காவை உலகத்தில் உள்ள மிகப்பெரிய ஜனநாயக
நாடு என்று மற்றவர்கள் சொன்னாலும் கூட, அந்த ஏகாதி
பத்தியத்தின் மூலமாக உதவி பெற்று எந்த நாடும் வளர்ந்ததாகச்
சரித்திரம் இல்லை; அதனிடம் உதவி பெற்று பொருளாதாரத்தில்
வளர்ந்ததாகவும் சரித்திரம் இல்லை; அமெரிக்கா எங்கே தலை
யிட்டாலும், அங்கே வன்முறை வெறியாட்டம் தொடங்கும்.
எங்கே அமெரிக்கா தலையிட்டாலும் அங்கே பாசிச உணர்வுதான்
தலைதூக்கும்.

அதற்கு ஒரு உதாரணம். அமெரிக்காவின் ஆதரவு பெற்ற
பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு தெளிவு
தரும். அங்கே எதிர்க்கட்சித் தலைவரை அந்த நாட்டின்
ராணுவமே அவர் விமானத்தை விட்டு இறங்கும் நேரத்தில் சுட்டுக்
கொன்ற செய்தியைப் பார்க்கிறோம். அதற்கு அமெரிக்காவின்
ஆதரவு உண்டு. அதேபோல் எங்கெங்கே சிறுபான்மை மக்கள்
விழித்தெழுந்து உணர்வுகளைக் காட்டி, உணர்வுகளை வெளிப்
படுத்தி, உரிமைகளைக் கேட்கின்ற நிலைமையேற்படுகிறதோ,
அங்கெல்லாம் அதை தடுத்து நிறுத்தும் முதல் சக்தியாக
அமெரிக்கா செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆகவே
அமெரிக்கா நாட்டை நாம் கண்டித்தாக வேண்டும் என்பதிலே
நிச்சயமாக யாரும் பின்வாங்கவில்லை. அதை மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள் செய்து இருப்பதற்காக நான் நிச்சயமாக
அவருக்கு நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சீனாவின் வெளிவிவகார அமைச்சர்
சிலோன் சென்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.
அமெரிக்காவின் நண்பன், சீனா. சீனாவும் அமெரிக்காவும் கூட்டு
சேர்ந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராக ஒரு பெரும் சதித்
திட்டத்தைத் தீட்டுகின்ற சூழ்நிலையைத்தான் நாம் காண
முடிகிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மிகத்
தெளிவாகச் சொன்னார்கள். இந்தியாவைச் சுற்றி பகைமை
நாடுகள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. இந்தியாவைச் சுற்றி
பகைமை வளர்ந்து கொண்டு வருகிறது. இந்தியாவை எந்த
நேரத்தில் தாக்கலாம் என்று அவைகள் எதிர்பார்த்துக்கொண்டு
இருக்கின்றன. ஒரு பக்கத்தில் பாகிஸ்தான், மற்றொரு பக்கத்தில்
வங்கதேசம், மற்றொரு புறத்தில் சைனா, மற்றொரு புறத்தில்—
இன்றைக்கு புதிதாக அமெரிக்கா சீனாவோடு கூட்டு சேர்ந்து
இருக்கின்ற இலங்கை. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவில் மிகப்
பெரிய அபாயத்தை உருவாக்க வேண்டும் என்று விரும்பு
கிறார்கள். அதை தடுத்து நிறுத்துவதற்கு தமிழக மக்கள்
மட்டுமல்ல, இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்திரா
காந்தி அவர்களின் கரத்தை மட்டுமல்ல, இந்தியப் பிரதமர்
அவர்களின் கரத்தையும், வலுப்படுத்த வேண்டும் என்பதுதான்
எங்களுடைய எண்ணம் என்பதை நான் இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.



1983 அக்டோபர் 25]

(பிற்பகல் 12-10)

திரு. என் சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, இந்தத்
தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசக்கூடிய
திரு. சுந்தரராஜ் அவர்கள் மற்ற விஷயங்களை எல்லாம் சொல்
கிறார்கள். இப்போதுதான் நமக்கும் சீனாவுக்கும் இடையேயுள்ள
எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு டெல்லியிலே பேச்சு
வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்
சார்ந்திருக்கிற கட்சிதான் இந்திய அரசை நடத்துகிறது. அவர்கள்
சுமுகமாக பிரச்னையைத் தீர்க்க முயற்சி செய்கின்ற நேரத்தில்
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் இப்படிப் பேசுவது சரிதானா?
அது அவருடைய கட்சியின் உண்மையான அபிப்பிராயம்தானா
என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : நான் சீனாவைப்பற்றிப் பேசியது
குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள்
வருத்தப்படுகிறார்கள். சீனாவின் வெளிவிவகார அமைச்சர்
இலங்கைக்குப் போகும் நோக்கம் என்ன?

திரு. என். சங்கரய்யா : அவர் சரியாக பத்திரிகைகளைப்
படிக்கவில்லை என்று கருதுகிறேன். இந்தியாவுக்கு வருகின்ற
சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கும் செல்லலாம்.
இலங்கைக்கு எல்லா நாட்டினரும் செல்கிறார்கள். அமெரிக்க
பாதுகாப்பு அமைச்சரிடம் போய் இராணுவ உதவி கேட்கிறார்கள்
என்றால், அமெரிக்கா திரிகோணமலையைத் தன்னுடைய
இராணுவத் தளமாக ஆக்குவதை ஆட்சேபிக்கலாமே தவிர எந்த
நாடும் இலங்கைக்குச் செல்லக்கூடாது என்று சொல்ல உரிமை
இல்லை. இன்றைக்கு அமெரிக்கா இலங்கை அரசுக்கு உதவி
அளிப்பதைப் போல சீனாவுக்கு அளித்திருக்கிறதா? இல்லை.
ஆகவே, இந்தப் பிரச்னையில் தேவையற்ற விரோதத்தை அவர்
உருவாக்கிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தேவையற்ற விரோதத்தை உருவாக்க
வேண்டாம் என்பதிலே அக்கறையோடு இருக்கிறோம். இலங்கை
அதிபர் ஜெயவர்த்தனேயின் சகோதரர் சீனாவுக்குச் சென்றபோது
இந்தப் பிரச்னை குறித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.
''இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் வேறு நாடுகள் தலையிடு
மானால் அதை சீன அரசு வன்மையாகக் கண்டிக்கும்'' என்று சீனா
செய்தி வெளியிட்டது திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தெரியுமா
என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : நன்றாகத் தெரியும். இப்போது
நான் இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது
என்று சொல்லவில்லை. வேறு நாடுகள் தலையிட்டால் சீனா
கண்டிக்கும் என்று சொல்லியிருக்கிறது. நாம் இருக்கிற
பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டுமேயன்றி
பிரச்னையை உருவாக்கக்கூடாது. எந்த நாட்டுக்காரர்களும்
இலங்கைக்குச் சென்று வரலாம். அதைத் தடை செய்ய யாருக்கும்
உரிமை இல்லை. அந்த முறையில் சீன அமைச்சரும் செல்லலாம்.
அதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் ; சீன நாட்டின் பிரச்னையைப்பற்றி
மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன். நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புவது, அமெரிக்க இராணுவ அமைச்சர் இலங்கை
செல்கிறார். அதைத் தொடர்ந்து சீன வெளிவிவகார அமைச்சர்
திரு. வெங்க் செல்கிறார். அதனுடைய நோக்கம் என்ன
என்பதைப்பற்றி நான் சந்தேகப்படுகிறேன். அங்கேபிரச்னையைத்
தீர்ப்பதில் அவர்கள் உதவுவதாக இருந்தால் நமக்கு அதுபற்றி
அக்கறை இல்லை. ஆனால் அவர்கள் பேசுவதன் மூலம் அங்கே
பதட்டமான விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சு
கிறேன்; இந்திய மக்களும் தமிழ் மக்களும் அஞ்சுகிறோம் என்று
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்னையிலே இந்திய அரசு விரைவான நடவடிக்கை
களை மேற்கொள்ளும் என்பதில் யாருக்கும் கருத்துவேறுபாடு
இருக்கமுடியாது. மனிதாபிமான முறையில் தேவையான
நடவடிககைகளை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கைகளை
பிரதம அமைச்சரும் இந்திய அரசும் எடுத்து வருகிறார்கள். அவா
களுக்குஉறுதுணையாக இருந்து, அவர்கள் எடுக்கின்றநடவடிக்கை
களுக்கு மனிதாபிமானத்தோடு ஆதரவு தருகிற தமிழக
அரசையும், முதலமைச்சரையும், அமைச்சரவையையும் நான்
பாராட்டுகிறேன். அதேநேரத்தில் சில கருத்து வேறுபாடுகள்
ஒரு சில அமைச்சர்களிடமிருந்து வெளிப்படுவதை என்னால்
புரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சரவையில் கருத்து வேறு
பாட்டிற்கு இடமில்லாமல், அனைவரும் ஒரே கருத்துடையவர்
களாக இருக்க வேண்டும்; ஒன்றுபட்டவர்களாக இருக்க
வேண்டும், அதன் மூலம் அவர்களுடைய செல்வாக்கை மேலும்
உயர்த்த வேண்டும். ஒரு சிலர் மாறுபட்ட கருத்தை
தெரிவிப்பதாக இருந்தால் அது இந்த அரசின் நடவடிக்கையை
சந்தேகப்படுவதாக அமைந்துவிடும். எனவே இருக்கின்ற
பிரச்னைகளை உணர்ந்து, அனைவரும் ஒன்றுபட்டு, ஒரு
சுமூகமான முடிவு ஏற்பட துணையாக நிற்க வேண்டுமென்று
கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம்
உலக நாடுகளுடைய அனுதாபத்தைப் பெறும் வகையில் ஈழத்
தமிழர்களுக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறதே ஒழிய, இங்கே
பேசுகின்றவர்கள் பேச்சு உலக நாடுகளுடைய அனுதாபத்தைப்
பெறுகின்ற வகையில் இருக்க வேண்டுமே தவிர, இங்கே
சீனாவைப் பற்றியோ அமெரிக்காவைப் பற்றியோ, அமைச்சர்
களைப் பற்றியோ பேசுவது,உலக நாடுகளுடைய அனுதாபத்தைப்
பெறாது என்று நான் கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய
துணைத் தலைவர் அவர்களே, இன்று இலங்கை தமிழர் பிரச்னை
குறித்து இங்கே அரசாங்கத்தின் சார்பாக ஒரு தீர்மானம்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டசபை கூடுவதற்கு





முன்பாகவே 14 நாட்களுக்கு முன்பாகவே திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பாக, இலங்கை தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்
பட்ட இனப்படுகொலை, மனித உரிமைகள் பறிப்பு இவைகளுக்கு
எல்லாம் இந்தப் பேரவை கண்டனம் தெரிவிக்கவேண்டும் என்று
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் பெயராலே
ஒரு தனி நபர் தீர்மானம் கொடுத்திருந்தேன். அந்தத் தனி நபர்
தீர்மானம் இப்போது அரசாங்கத் தீர்மானமாக மாற்றப்பட்டிருக்
கிறது. இன்றைக்கு இலங்கையிலே நடைபெற்ற சம்பவங்கள்
பற்றி நான் எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை.
பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள்.
தமிழச்சிகள் கற்பழிக்கப்பட்டார்கள். 1,000 கோடிக்கு மேலே
சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. அங்கே ரத்தம் ஆறாக
ஓடிக் கொண்டிருக்கிறது. துப்பாக்கிக் குண்டுகளின் துந்துபி
முழக்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை இன்று மயான
பூமியாக இருந்து கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிற
நேரத்திலே ஆந்திராவிலே இருக்கக்கூடிய முதலமைச்சர்
என். டி. ராமராவ் அவர்கள் சட்டமன்றத்திலே தீர்மானம்
கொண்டு வந்தார். கேரளத்திலே கருணாகரன் தீர்மானம்
கொண்டு வந்தார். கர்நாடகத்திலே தீர்மானம் கொண்டு
வந்தார்கள். அமெரிக்கா திரிகோணமலையைக் கைப்பற்ற
முயற்சிக்கிறார்கள். அந்த ஏகாதிபத்திய நடவடிக்கையைக்
கண்டிப்பது வேறு; ஆனால் அமெரிக்காவிலே உள்ள ஒரு மாநிலம்
இலங்கையிலே இனப்படுகொலை நடக்கிறது என்பதைக்
கண்டித்து, அவர்களுடைய செனட் அவையிலே தீர்மானமாகக்
கொண்டு வந்து கண்டித்து அமெரிக்க முதலாளிகள் இலங்கையிலே
போட்டிருக்கிற மூலதனங்களைத் திரும்பப் பெற வேண்டும்
என்று தீர்மானம் போட்டார்கள். அது மட்டுமல்ல; இங்கிலாந்து
நாட்டிலே ஹவுஸ் ஆப் காமன்ஸ், ஜெயவர்த்தனே லண்டன்
வருகிறார். அவர் இங்கே வரக்கூடாது என்று அவர்கள் தீர்மானம்
போட்டார்கள். இவ்வளவு பெரிய சம்பவங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. மாமன்றங்கள், இந்தியாவிற்கு வெளியே
இருக்கக்கூடிய மன்றங்கள், உலகத்திலே இருக்கக்கூடிய மன்றங்கள்
உலகத்திலே இருக்கக்கூடிய பத்திரிகைகள் எல்லாம் இவைகளை
கண்டித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் நான் கேட்கிறேன், உங்களுக்கு சட்டசபையைக்
கூட்டுவதற்கு இவ்வளவு கால தாமதம் ஏன்? இந்த கண்டன
தீர்மானத்தைப் போடுவதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன்? நான்
கேட்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்னையிலே அக்கறை
இருப்பதாகச் சொல்கிற உங்களுக்கு சட்டசபையைக் கூட்டி
மக்களுடைய பிரதிநிதித்துவ சபையாக இருக்கக்கூடிய தமிழர்
களுடைய குரலை ஏகோபித்து, எதிரொலிப்பதற்குப் பதிலாக
காலங்கடந்த முயற்சியாக இந்த பிரச்னையில் அக்கறை

உடையவர்களாக இருக்கிறோம் என்று நீங்களும் கொண்டு
வந்திருப்பதை வன்மையாக நான் முதலில் கண்டிக்கிறேன்
இரண்டாவதாக நான் இங்கே சொல்ல விரும்புவது மிக முக்கிய
மான இன்னொரு பிரச்னையாகும். அருமைச் சகோதரர்
சுந்தரராஜ் அவர்கள் முதல்வருக்கு பாராட்டு தெரிவித்தார்.
இந்திரா காங்கிரஸ் சார்பாக. முதல்வர் திரும்ப பாராட்டுச்
சொல்ல வேண்டாமா? பிரதமர் இந்திரா காந்திக்கு வாழ்த்துச்
சொல்லியிருக்கிறார். எப்படி சொல்கிறார்? ஆக்கப்பூர்வமான,
நிறைவான, இயன்ற நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க முன்
வந்த இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன் என்று இந்த தீர்மானத்திலே குறிப்பிட்டிருக்
கிறார்கள்.

நான் கேட்கிறேன், இங்கே பிரதமர் ஆக்கப்பூர்வமான
நடவடிக்கைகளை எடுத்திருக்கிறாரா? சர்வ கட்சித் தலைவர்களை
அழைத்துக் கொண்டு முதல்வர் டெல்லிக்குப் போனாரே,
மகஜர் கொடுத்தாரே, அந்த மகஜரிலே என்ன சொல்லப்பட்டிருக்
கிறது? அந்த மகஜரிலே ஐ.நா.மன்றத்திலே இந்தப் பிரச்னை
எழுப்பப்பட வேண்டுமென்ற கருத்து தெளிவாக சொல்லப்
பட்டிருக்கிறதே, அதை நான் இங்கே வாசிக்கிறேன். The issue has
to be immediaetlyraised in the United Nations and the Security Council
பாதுகாப்பு மன்றத்திலே, ஐ.நா.மன்றத்திலே இந்தப் பிரச்னை
எழுப்பப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது
மட்டுமா சொல்லப்பட்டிருக்கிறது நீங்கள் கொடுத்த மகஜரிலே?
ஐ.நா. மன்றம் இலங்கைக்கு சமரசப் படையை அனுப்ப வேண்டு
மென்று சொல்லப்பட்டிருக்கிறது. பங்களாதேஷ் பிரச்னையை
அணுகியது போல, பாலஸ்தீன அகதிகள் பிரச்னையை அணுகியது
போல மத்திய சர்க்கார் இந்திரா காந்தி அம்மையார் இதை
அணுக வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்,
நீங்கள் சர்வ கட்சித் தலைவர்களை மக்களுடைய வரிப்பணத்திலே
டெல்லிக்குக் கூப்பிட்டுக் கொண்டு போனீர்கள். அங்கே கொடுத்த
மகஜரிலே இருப்பதை அந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை
இந்திரா காந்தி அம்மையார் எடுத்திருக்கிறார்களா? நான் கேட்க
விரும்புகிறேன். எவ்வளவு காரியங்களை இங்கே சொல்லியிருக்
கிறீர்கள். இதிலே இந்திரா காந்தி அம்மையார், இந்தியப்
பிரதமர் ஐ.நா. மன்றத்திலே இதுவரைக்கும் இலங்கைத் தமிழர்
பிரச்னை குறித்துப் பேசியிருக்கிறாரா? அணு ஆயுதப்
குறைப்பைப் பற்றி பேசியிருக்கிறார். உலக சமாதானத்தைப்
பற்றி பேசியிருக்கிறார். இலங்கையிலே தமிழச்சிகள் கற்பழிக்கப்
படுகிறார்களே, தமிழர்கள் சொத்து சூறையாடப்படுகிறதே,
அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களே,
நம்முடைய பிரதமர் அது குறித்து ஐ.நா. மன்றத்திலே ஒரு
வார்த்தை பேசியிருக்கிறாரா? அப்படிப் பேசாமல் இருந்த
இந்திராகாந்தி அம்மையாருக்கு நீங்கள் வாழ்த்துச் சொல்வதற்கு
உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? இன்னமும்
சொல்கிறேன். இன்றைக்கு இதே இந்திரா அம்மையார்
அராபத்தினுடைய விவகாரத்தை—1947–க்கு முன்னாலே





இஸ்ரேலே கிடையாது. அமெரிக்காவும், இங்கிலாந்தும், யு.என்.
தீர்மானம் மூலமாக பாலஸ்தீனர்களின் தலைநகரமாக இருந்த
ஓல்ட் பாலஸ்தீனத்தை அவர்கள் பிடித்து இப்போது இருக்கிற
இஸ்ரேல் என்று பெயரிட்டுக் கொடுத்தார்கள். அராபத் தனி
நாடு கேட்கிறார். அராபத் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு
பலாத்கார முறையிலே எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று
கேட்கிறார். நான் கேட்கிறேன். இந்திரா அம்மையார் இந்தப்
பிரச்னையை பற்றி ஐ.நா.மன்றத்திலே பேசுகிறார். தனி நாடு
கோரிக்கையை ஆதரித்துப் பேசுகிறார்.

(பிற்பகல் 12–20)

அதுமட்டுமல்ல, இஸ்ரேலுக்கும் நமக்கும் எல்லைத் தகராறா?
கிடையாது. ஆனால் அராபத்திற்காக இந்தியத் தூதுவர்
இஸ்ரேலுக்குப் போகக்கூடாது, இஸ்ரேல் தூதுவர் இந்தியாவில்
இல்லை. யாருக்காக? இஸ்ரேலுக்கும் நமக்கும் தகராறா?
கிடையாது. அராபத்திற்காக, பாலஸ்தீனர்களுடைய
சுதந்திரத்திற்காக.

அது மட்டுமல்ல, ஆசிய விளையாட்டுப் போட்டி டெல்லியிலே
நடைபெற்றது. அந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில்
இந்திரா அம்மையார், பாரதப் பிரதமர் அவர்கள் உலகத்தில்
உள்ள எல்லா நாட்டு விளையாட்டு வீரர்களையும் அனுமதித்தார்,
ஆனால் இஸ்ரேல் நாட்டு வீரர்களை மட்டும் விளையாட
அனுமதிக்கவில்லை. யாருக்காக? அராபத்திற்காக?

அதுமட்டுமல்ல. ஒரு மாதத்திற்கு முன்பாக டெல்லியிலே
எனர்ஜி கான்பரென்ஸ் நடந்தது. உலகத்திலே உள்ள அத்தனை
விஞ்ஞானிகளும் கலந்துகொள்ள அனுமதித்த இந்திரா காந்தி
அம்மையார் இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகளை மட்டும் கலந்து
கொள்ள அனுமதிக்கவில்லை அமெரிக்க ஜனாதிபதி ரீகனே
இதைக் கண்டித்திருக்கிறார். நான் கேட்கிறேன். இந்த
அராபத்தைப் பற்றி இந்திரா அம்மையார் அவர்கள் பேசுகிறார்.
நீங்கள் கொண்டு போய்க் கொடுத்த, இங்கிருந்த அனைத்துக்
கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு போய் கொடுத்த
மகஜரிலே இதைப் பற்றி ஐ.நா. மன்றத்திலே பேசுங்கள் என்று
சொன்ன பிறகும் இதுவரையிலும் பேசவில்லை அதற்காக ஒரு
கண்டனம் தெரிவிப்பதற்கு உங்களால் முடியவில்லை. கண்டனம்
தெரிவிப்பதற்குப் பதிலாக வாழ்த்துவதா? இதற்காக இந்தச்
சர்க்கார் முதலில் பதில் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல. இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களாக
இருந்தாலும் சரி, தமிழகத்திலே இருப்பவர்களாக இருந்தாலும்
சரி, நாம் எல்லாம் வெளிநாட்டுக்குப் போகிறோம். இங்கே
உறுப்பினர்கள் எல்லோரும் போய்வந்தவர்கள்தான். ஆனால்
தென் ஆப்பிரிக்காவிற்குப் போகமுடியாது. பாஸ்போர்ட்
கிடையாது. தென் ஆப்பிரிக்காவிற்கும் நமக்கும் என்ன எல்லைத்

தகராறா? கிடையாது. என்ன காரணம்? என்று கேட்டால், தென் ஆப்பிரிக்காவிலே இருக்கக்கூடிய நிறவெறியை எதிர்த்து நீக்ரோக்களுக்காக இந்தப் பிரச்சினையை இந்திரா அம்மையார் ஐ.நா. மன்றத்திலே பேசினார்கள். தூதுவர்கள் அங்கே இருக்கக் கூடாது. இங்கேயும் இருக்கக் கூடாது, ராஜாங்க உறவு எல்லாம் விட்டுவிட்டார்கள். ஐ.நா. மன்றத்திலே இந்தப் பிரச்சினை குறித்து, தென் ஆப்பிரிக்காவின் நிறவெறியைக் கண்டித்து இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பேசினார்கள். நான் கேட்கிறேன். தென் ஆப்பிரிக்கா நாட்டுக்குள்ளே இருக்கிற கருப்பு ரோஜாக்களுக்காக, நீக்ரோக்களுக்காகப் பேசுகிற இந்தியப் பிரதமர், நம்முடைய சகோதரிகள் கற்பழிக்கப்படுகிறார்களே, நம்முடைய தமிழர்களின் சொத்துக்கள் வீதிகளிலே தீக்கிரையாக்கப்பட்டு, அழிக்கப்பட்டபோது, ராணுவமும் போலீசும் கொலை வெறிச் செயலைச் செய்தபோது, ஒரு வார்த்தை கண்டித்துப் பேசியது உண்டா? ஐ.நா.விலே பேசியது உண்டா?

Thiru K. S. G. HAJA SHAREEF: Sir, what the Hon. Member is saying is absolutely wrong and against all canons of correctness. Srimathi Indira Gandhiji, the Prime Minister of India, has condemned what was taking place in Ceylon and she has condemned in very strong terms and I can prove that because of her attitude and actions the cartridge was stopped in the middle; otherwise, it would have gone to a long extent.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு). இந்த மன்றத்திலே நாம் எடுத்து வைக்கின்ற வாதங்கள், பேசுகின்ற கருத்துக்கள் அத்தனையும், இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு துணை செய்வதாகவும், மாநில அரசு மத்திய அரசின் நடவடிக்கைகள் அவர்களுக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க உறுதுணையாக இருக்கவேண்டுமே தவிர, அங்கே இருக்கின்ற ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், இன்னும் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் துணையாக இருக்கின்ற கருத்துக்களை தயவுசெய்து சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரதப் பிரதமர் எந்தெந்த முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த முறைகளில் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எங்கெங்கே கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்ற முழு விபரமும் என்னிடம் சொல்வதற்குத் தயாராக உள்ளது. அதைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு ஐக்கிய நாட்டிலே பாரதத்தின் குரலாக இந்த அமைச்சரவையிலே பிரதிநிதியாக இருப்பவர் பேசியிருக்கிறார். பல்வேறு கட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். ஆகையினாலே நீங்கள் எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் கண்டித்துப் பேசவில்லை என்று சொன்னதை நான் வன்மையாக மறுத்து கண்டிக்கிறேன். (குறுக்கீடு).



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினர் பேசும்போதும் குறுக்கிட வேண்டாம். அவரவர்கள் பேசும்போது பதில் சொன்னால் போதும்.

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானம் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை இலங்கைப் பிரச்சினையிலே பிரதமர் இந்திரா அம்மையார் எடுக்கிறார், ஆகையினாலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்று வாசகம் வருகிறது. அப்படி எதுவும் நடைபெறவில்லை. அது தவறு, என்று நான் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறேன்.

இரண்டாவது, சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் இந்திரா காந்தி அம்மையாரைப் பார்க்கப்போனது எதற்காக? ஐ.நா. மன்றத்திலே இந்தப் பிரச்னையை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இது போன்ற பிரச்னை ஏற்பட்டபோது, ஐ.நா. மன்றத்திலே அதை விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

எங்கள் தலைவர், கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1963 ஆம் ஆண்டு, தூத்துக்குடியில் நடைபெற்ற கட்சிப் பொதுக் குழுவிலே—அப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்த இனப் படுகொலைகள் நடந்து கொண்டிருந்த கால கட்டம்—அதனை ஐ.நா. மன்றத்திலே கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். உங்களுடைய கோரிக்கையும் அதுவேதான். ஆனால் உங்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே. ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல; தீர்மானத்தையே போட்டிருக்கிறது இந்திரா காங்கிரஸ் கட்சி. ஒரு முழு பக்க விளம்பரமும் கொடுத்திருக்கிறது.

அந்த விளம்பரத்தில் வேடிக்கை என்னவென்றால், இலங்கை வாழ் மக்களின் பிரச்னையை ஐ.நா. மன்றத்திலே பேசவேண்டும் என்று, முதலமைச்சர் அவர்கள் தயாரித்த மகஜரில் சர்வகட்சி மகஜரில், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, மரியாதைக்குரிய தலைவர் பழனியாண்டி அவர்களும் கையெழுத்து இட்டிருக்கிறார்கள். பழனியாண்டியே சொல்கிறார், இந்திரா அம்மையாரை, ஐ.நா. மன்றத்திலே பேசுங்கள் என்று. ஆனால் பேசவில்லை. பிறகு எப்படி நீங்கள் வாழ்த்துச் சொல்லலாம். இதை ஐ.நா. மன்றத்திலே கொண்டு போவதினாலே பயனே இல்லை என்ற கருத்தை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்குப் பிறகும் அந்த அம்மாவை நீங்கள் பாராட்டுவதிலே நியாயம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் பொதுக் கூட்டத்திலே சொன்னது போல், இந்திரா காங்கிரஸ் கட்சி ஒரு ஜோக்கர், அதை தி.மு.க. இதுவரையில் பயன்படுத் தினார்கள். இப்போது நாங்கள் பயன்படுத்துறோம் என்று சொன்னது போல பயன்படுத்துகிறீர்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு இந்தப் பிரச்னையில், ஐ.நா. மன்றத்திலே உள்ள சமரசப் படை களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்து சர்வ கட்சி மகஜரில் இருக்கிறதா இல்லையா? அதிலே ஐ.நா.விலே இருக்கக் கூடிய சமரசப் படை இலங்கை செல்லவேண்டும் என்று வலியுறுத்தி யிருக்கிறார்களா இல்லையா? ஆனால் அப்படி இருந்தும் அதனை இந்திரா அம்மையார் ஏற்றுக் கொண்டார்களா?

1953 ஆம் ஆண்டு ஐ.நா. மன்றத்தினுடைய சமரசப்படை கொரியாவிற்கு போயிருக்கிறது. 1947 ஆம் ஆண்டு, ஐ.நா. மன்றத்தினுடைய சமரசப்படை இந்தோநேசியாவிற்குப் போயிருக்கிறது. 1960 ஆம் ஆண்டு, ஐ.நா. மன்றத்தினுடைய சமரசப்படை காங்கோவிற்குப் போயிருக்கிறது. சைப்ரசுக்குப் போயிருக்கிறது. ஆனால் உங்களுடைய கோரிக்கைக்கு அந்த அம்மையார் பாராமுகமாக இருந்து விட்டார்களே, அதை வீண் என்று சொல்லிவிட்டார்களே, அதற்குப் பிறகும் அந்த அம்மையாருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்று கிறீர்களே, அதனுடைய மர்மம் என்ன? இரகசியம் என்ன? உங்களுக்கு எதிராக போடப்பட்டிருக்கிற கமிஷனை திரும்பப் பெறவேண்டும் என்பதற்காகவா? அல்லது தேர்தலை ஒட்டியா? எனக்கு விவரங்கள் தெரியவில்லை. அதைத்தான் நான் மனதாரக் கண்டிக்கிறேன்.

அகில இந்திய இந்திரா காங்கிரசினுடைய பொதுச் செயலாளர் திரு. ஸ்டீபன் அவர்கள் என்ன சொல்லியிருக் கிறார்கள் என்றால், இதில் கடுமையாக ஈடுபட்டால் மேற்கு வள நாடுகள் வலுப்பெற்றுவிடும், உலக யுத்தம் வந்துவிடும் என்று பேசியிருக்கிறார்கள். யார்? இந்திரா காங்கிரசினுடைய பொதுச் செயலாளர். ஆகவே நான் உங்களிடத்திலே கேட்க விரும்புவது, பிரதம அமைச்சர் அவர்களுக்கு கண்டனம் தெரிவிப்ப தற்கு பதிலாக நன்றி சொல்லியிருப்பது ஏன்? அதைத்தா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்கிறேன், கண்டிக்கிறேன்.

அடுத்து இன்னொன்று. பார்லிமெண்டிலே இதுவரைக்கும் இதற்காக கண்டனத் தீர்மானம் போடப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஏன் போடப்படவில்லை? போடுவதற்கு என்ன அச்சம்? பங்களாதேஷ் விவகாரத்திலே பார்லிமெண்டிலே கண்டனத் தீர்மானம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த விவகாரங்களுக்கெல்லாம் தீர்மானம் போடும்போது, இதிலே ஏன் போடவில்லை. அது மட்டும் அல்ல, பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோது, தென் ஆப்பிரிக்காவில் ஒரு சின்ன கிராமத்தில், போலீசாரால் சுடப்





பட்டு, அங்கே இருந்த விடுதலை வீரர்கள் சிலர் செத்துப் போய் விட்டார்கள் என்பதற்காக, பார்லிமெண்டிலே கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள், 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம்.

ஆனால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டிருக்கிறார்கள், எங்களுடைய ரத்தம் அங்கே ஆறாகப் பெருகி ஓடுகிறது போராடிய தமிழர்கள் அடியோடு அழிக்கப் பட்டும், வேரறுக்கப்பட்டும் விட்டார்கள். அந்த இலங்கை வாழ் தமிழர்களுக்காக பார்லிமெண்ட்டிலே ஒரு வார்த்தை கண்டனத் தீர்மானம் உண்டா? ஏன் போடவில்லை? என்ன காரணம்? இங்கே இருக்கிற என் அருமை சகோதர உறுப்பினர் களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். அதைக் கண்டிக்கிற துணிவு உங்களுக்கு வேண்டாமா?

அடுத்து, ஜெனிவாவிலே ஒரு மாநாடு நடைபெற்றது. என்ன மாநாடு என்று கேட்டால், ஹியூமன் ரைட்ஸ் கமிஷனுடைய ஒரு சப்கமிட்டி மாநாடு. இப்போது ஐ.நா. கமிட்டியிலே நம்முடைய பிரதிநிதியாக மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டார். அது மாதிரி இதுவும் ஜெனிவா விலே நடைபெற்ற ஒரு கமிட்டி. அந்தக் கமிட்டியிலே எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டார்கள். நார்வே நாட்டுப் பிரதிநிதியும், பாகிஸ்தான் நாட்டுப் பிரதிநிதியும், மற்ற எல்லோரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையை வன்மையாகக் கண்டித்து, தீர்மானம் போட்டு, ஹியூமன் ரைட்ஸ் கமிஷனுக்கு இதை நாங்கள் கொண்டு போவோம் என்று சொன்னபோது, இந்தியாவின் பிரதிநிதி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

(பிற்பகல் 12-30)

அவ்வளவு வேகம் காட்டக் கூடாது. அது தேவையில்லை என்று அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள். ஆகையினால் நான் கேட்கிறேன், அவர்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் எல்லாம் இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சினையிலே ஆக்கப் பூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை. ஜெயவர்த்தனேயோடு டெலிபோனிலே பேசினார்கள், ஜெயவர்த்தனேயினுடைய தம்பிக்கு விருந்து கொடுத்தோம், திரு. நரசிம்மராவ் அவர்களை அனுப்பி வைத்தோம், வட்ட மேஜை மாநாடு போடுகிறோம், சதுர மேஜை மாநாடு போடுகிறோம். இதை சுமுகமாகத் தீர்க்க வேண்டும், உலக யுத்தம் வந்துவிடும் என்பது எல்லாம் இங்கே தமிழகமே திரண்டெழுந்து கொதித்து எழுந்து இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அண்ணா அவர்கள் முழங்கினார் களே 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்று, அதுபோன்று தனித் தமிழ்நாடு இங்கே உருவாகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி வேறு வழி

யில்லாமல் அற்ப சொற்பமான சின்னஞ்சிறு சாதாரணமான
நடவடிக்கையை எடுத்திருக்கிறார்களே தவிர இது பிரச்சினைக்குத்
தீர்வு ஆகாது. அதை இந்த சர்க்கார் கண்டித்து இருக்கவேண்டும்.
ஆனால் நீங்கள் கண்டிக்கத் தவறிவிட்டீர்கள்.

அடுத்து இராணுவம் சம்பந்தமாக அருமை சகோதரர்
திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசினார்கள். நான் கேட்கிறேன்,
இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பச் சொல்வது அக்ரஷன்
என்பதற்காக அல்ல, ஏகாதிபத்திய நாடுகள் காலனியாக்கு
வதற்காக ஏகாதிபத்திய வேட்டையிலே நின்றுகொண்டிருக்
கின்றனவே அந்தக் காரியத்தைச் செய்வதற்காக அல்ல.
இன்றைக்கு இலங்கையிலே இருக்கக்கூடிய நிலை 'ரெஸ்டோரேஷன்
ஆப் பீஸ்' அமைதியை நிலை நாட்டுவதற்காக வேறு வழி
யில்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறானே இலங்கை வாழ்
தமிழன், அவனைக் காப்பாற்றுவதற்காக. 1971 ஆம் ஆண்டு
பண்டாரநாயக பிரதமராக இருந்தபோது அங்கே இதுபோன்று
உள்நாட்டுக் கலவரம் வந்தது. அந்த உள்நாட்டுக் கலவரம்
சிங்களர்களுக்கும் தமிழர்களுக்கும் அல்ல, அங்கே இருக்கக்கூடிய
சிங்கள மிதவாத இயக்கம் அல்ல, பலாத்கார இயக்கம் ஒரு
பெரிய கலவரத்தை உருவாக்கியபோது பண்டாரநாயகா
இந்தியாவின் இராணுவத்தைக் கேட்டார். இந்தியாவின்
இராணுவம் அங்கே போய் அடக்கியது. நான் கேட்கிறேன்.
கோவாவிற்கு இந்தியா இராணுவத்தை அனுப்பியதே, யார்
கேட்டது? நான் கேட்க விரும்புகிறேன். அடைந்தால் பாகிஸ்தான்
இல்லையேல் கபார்கான் என்று கூறி காயிதேமில்லத் முகமது
அலி ஜின்னா சாகிப் பாகிஸ்தானை வாங்கிக் கொடுத்ததற்குப்
பிறகு முஜ்பீர் ரகுமான் பிரிவினை கேட்டாரா? தனி நாடு
கேட்டாரா? 6 அம்சக் கோரிக்கையை வைத்தார். அவரைப்
பிரிவினை கேட்க வைத்தது யார்? தனி நாடு கேட்க வைத்தது
யார்? அகதிகள் தொல்லை என்று சொல்லி இராணுவத்தை
அனுப்பியது யார்? இந்திய சர்க்கார் இல்லையா? பிரதமர்
இல்லையா? அது உள்நாட்டுக் கலவரம் இல்லையா? மாநில
சுயாட்சி கேட்ட முஜ்பீர் ரகுமானை பிரிவினை கேட்க வைத்து
இராணுவத்தை அனுப்பியது இந்திரா காந்தி இல்லையா? நான்
கேட்கிறேன், அங்கே அவர்கள் இராணுவத்தை அனுப்பியது
நியாயந்தானா?

அது மட்டுமல்ல. அங்கே இருக்கிற கான் அப்துல் கபார்
கான் சிறைச்சாலையிலே இருக்கிறார், அவர் பக்டூனிஸ்தான்
கேட்கிறார், தனிநாடு கேட்கிறார். பக்டூனிஸ்தான் கேட்கக்கூடிய
கானை இந்திராகாந்தி இந்தியாவுக்கு அழைத்து வரவில்லையா?
அவருக்கு இங்கே பண முடிப்பு தரவில்லையா? பக்டூனிஸ்தான்
தனிநாடு கோரிக்கையை இந்திரா காந்தி ஆதரிக்கவில்லையா?
இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்கிறபோது
ஏகாதிபத்திய ஆசையின் காரணமாக சொல்லப்படுவது அல்ல.

அது மட்டுமல்ல, இலங்கையிலே உள்ள இந்தியத் தூதுவர்
அலுவலகம் தாக்கப்படுகிறது. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் தாக்கப்
படுகிறது. சிரிமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தின்படி



இருக்கிற நம்முடைய இந்தியப் பிரஜைகள் தாக்கப்பட்டிருக்
கிறார்கள். இந்திய ஆபீஸ் தாக்கப்பட்டு இருக்கிறது, சுற்றுலாப்
பயணிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியர்கள் அநியாயமாக
இலங்கையில் கொல்லப்பட்டிருக்கிறார்களே, அந்த ஒரு காரணம்
போகாதா இராணுவத்தை கொண்டுபோய் நிலைமையைச் சரி
செய்வதற்கு? வேறு என்ன காரணம் வேண்டும்?

சைப்ரஸிலே கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் மன
வருத்தம் ஏற்பட்டபோது, கலவரம் ஏற்பட்டபோது, சைப்ரஸிலே
வாழ்கின்ற துருக்கியர்களுக்காக அவர்களைக் காப்பாற்று
வதற்காக துருக்கி இராணுவத்தை அனுப்பவில்லையா? அங்கே
அவர்களுக்கு என்று ஒரு தனிநாட்டை உருவாக்கிக் கொடுக்க
வில்லையா? ஆகவே இராணுவத்தை அனுப்புவது கூடாது என்று
சொல்கிற காரியம் தவறான காரியம்.

இங்கே அகில இந்திய அண்ணா தி.மு.க. சகோதரர்களைப்
பொறுத்தமட்டில் பிரச்சினை சிக்கலாக இருக்கிறது.
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொல்
கிறார் இதிலே இலங்கையிலே வாழ்கிற தமிழர்கள் பல்வேறு
அபிப்பிராயங்களில் இருக்கிறார்கள். தொண்டமான் ஒரு
அபிப்பிராயத்தில் இருக்கிறார், அமிர்தலிங்கம் ஒரு அபிப்
பிராயத்தில் இருக்கிறார், விடுதலை புலிகள் ஒரு அபிப்
பிராயத்தில் இருக்கிறார்கள். முதலிலே அவர்கள் ஒரு
மித்த கருத்தோடு ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று
கேட்கிறார். நான் கேட்கிறேன் இதிலே உங்களுக்குள் கருத்து
ஒன்றாக இருக்கிறதா? நான் கேட்க விரும்புகிறேன்: ஈழத்
தனிநாடு நீங்கள் ஆதரிக்கிறீர்களா? இல்லையா?

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : திரு. ரகுமான்கான்
அவர்கள் யாருக்காக பரிந்து பேசுகிறார்கள் என்று எனக்கு
தெரியவில்லை. சிலோன் மக்களுக்காகப் பரிந்து பேசுகிறாரா
அல்லது இந்திராகாந்தியை எதிர்க்க வேண்டும் என்று பேசுகிறாரா?
சிலோனில் இருந்து இங்கு வந்த எல்லா தலைவர்களும் இந்திரா
காந்தி அவர்கள் எடுத்த முயற்சி மிகவும் சரியான முயற்சி
என்றும் பாதுகாப்பு அவர்களுக்கு வந்து இருக்கிறது என்றும்
அதன் காரணமாகத்தான் அவர்கள் அடிபடுவது நின்று இருக்
கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இங்கே இவர்
அதற்கு நேர்மாறாக பேசுகிறார். இவர் பேசுவது அங்கே
சிலோனில் சிக்கல் வந்து தூண்டுவது போல் இருக்கும்.
இன்னும் சிலோனில் இருக்கக்கூடிய மக்களை அழிக்கக்கூடிய
ஒரு நிலைமையை இவர் உருவாக்கி வருகிறார். தயவுசெய்து
அதை நிறுத்த வேண்டும் என்று நான் திரு. ரகுமான்கான்
அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய அருமை சகோதரர்
ஹாஜாசெரீப்பாய் அவர்கள் இங்கே பேசுகிறபோது யாருக்காக
பேசுகிறேன் என்று கேட்கிறார்கள். நான் யாருக்காக பேசு
கிறேன் என்பதைக்கூட தெளிவாக்கிக் கொள்ளாதவர்கள்

இன்றைக்கு இந்திரா காங்கிரஸில் இருக்கிறார்கள் என்பது
தான் என்னைப் பொறுத்தவரை உள்ள வருத்தம். காரணம்
இலங்கை தமிழர்களுக்காகத்தான் பேசுகிறேன். அவர்கள்
எங்களவர்கள். எங்கள் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள்.
ஆகையால் அவர்கள் இன்றைக்கு ஒரு சிங்களத் தீவிலே சிங்கள
வெறியர்களால் சிங்கள ராணுவத்தினரால்....

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, யாருக்காக பேசுகிறார்கள்
என்கிற சந்தேகத்தை இந்திரா காங்கிரஸ் தலைவர் அவர்கள்
கிளப்பினார்கள். அதற்கு மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள்
நாங்கள் தமிழர்களுக்காக பேசுகிறோம் என்று சொன்னார்கள்.
அதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் நாம் பேசுகிற
பேச்சு இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு தேடித் தருகின்ற
பேச்சாக இருக்கவேண்டுமே தவிர அவர்களுக்கு இருக்கின்ற
ஆதரவை இழக்கின்ற அளவுக்கு நாம் உணர்ச்சி வயப்பட்டோ
ஆத்திரப்பட்டோ பேசி அவர்களுக்கு கிடைக்கின்ற ஆதரவை,
அவர்களுக்கு கிடைக்கின்ற பாதுகாப்பை இழக்கின்ற
முயற்சியில் நாம் ஈடுபடுவோமானால் நாம் மனதார விரும்புகிற
ஒரு நல்ல நோக்கம் நிறைவேறுவதற்கு மிகவும் கடினமாக
இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்
கொள்கிறேன். அங்கே சித்திரவதை அனுபவித்துக்கொண்டு
இருக்கிற இலங்கை வாழ் தமிழர்கள் இன்றைக்கு தங்களுடைய
வாழ்க்கையின் வசந்தத்தை இழந்து எப்படியும் இலங்கை
தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று துடித்துக்கொண்டு
இருக்கிறார்கள் அந்த விடுதலைப் புலிகள்.

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, முஜீபுர் ரஹ்மான் பிரிவினை கேட்க யார்
காரணம் என்று மறைமுகமாக சொன்னதை உண்மையிலேயே
நான் வேதனையோடு குறிப்பிட ஆசைப்படுகிறேன்.
வங்கத்திலே ஒரு பிளவு உண்டாக்குவதற்கு இந்திய அரசு
தான் காரணம் என்பதை உலக நாடுகள் அறியக்கூடிய
அளவுக்கு ஒரு நிலைமையை இங்கே பேச்சாக, கருத்தாக
கொண்டு இருப்பது நம்முடைய குறிப்புகளில் இருக்கலாமா
என்பதை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகள் குரலை, இலங்கை
தமிழர்கள் குரலை தான் நான் இங்கே எதிரொலித்துக்
கொண்டு இருக்கிறேன். இலங்கையில் உள்ளவர்கள் ஒத்த
கருத்து உடையவர்களாக இருக்கவேண்டும் என்று நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது நல்ல கருத்து
தான். ஆனால் இங்கே அமைச்சர்கள் இருக்கிறார்கள்



உங்களுக்குள் இந்தப் பிரச்சனை குறித்து ஒத்த கருத்து
உண்டா? இல்லையா? அதை நான் முதலில் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன். காரணம் ராணுவத்தை அனுப்பக்கூடாது,
போர் வந்து விடும், என்று போரைப் பற்றி தெரியாதவர்கள்
குண்டு போட்டுவிடுவான், உலகம் அழிந்துவிடும்—ராஜ ராஜன்
காலத்திலேயா வாழ்கிறோம்—என்று யாருக்கும் தெரியாத இந்த
உண்மையை அமைச்சர் வீரப்பன் அவர்கள் கூட்டங்களில்
பேசியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய கல்லூரியில்
படித்த என்னுடைய இனிய நண்பர் இன்னும் உணர்வுடைய
அமைச்சர் மதிப்பிற்குரிய காளிமுத்து அவர்கள் இங்கே
பேசுகிறார், மத்திய அரசு தமிழர்களைக் காப்பாற்ற ராணு
வத்தை அனுப்பியிருக்கவேண்டும். ராணுவம் அனுப்பினால்
உலக யுத்தமாக மாறிவிடுமா? திரிகோண மலையில் அமெரிக்கா
தளம் இருக்கிறது. ஆகவே அமெரிக்கா இலங்கையின் உதவிக்கு
வரும் என்கிறார்கள். ஜெயவர்த்தனே ஆத்திரத்தில் ராமேஸ்
வரத்தை தாக்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது
நாம் திருப்பி தாக்கினால் அமெரிக்கா உதவிக்காக வரத்
தானே செய்யும். மத்திய அரசு ராணுவத்தை அனுப்பாமல் தேசிய
ஒருமைப்பாடு என்று கூறுவது கேலி கூத்தாக உள்ளத்தில்
ஒன்றுபடாத உதட்டோடு தவழும் போலி பூச்சாக கபட நாடக
மாகத்தான் இருக்கும். மத்திய அரசு போற்றத்தக்க நிதானத்
துடன் நடந்து கொள்வதாக பாராட்டு வேறு கிடைக்கிறது.
உங்களைப் பார்த்துதான் சொல்கிறார். அது மட்டும் அல்ல—
இது பாராட்டு அல்ல மத்திய அரசுக்கு ஏற்பட்ட களங்கம்.
இலங்கை கலவரம் உள்நாட்டு விஷயம் என்று சொல்லும்
மத்திய அரசு அங்கே தமிழர்கள் தனி நாடு கேட்கக் கூடாது
என்று புத்திமதி கூறுகிறது. உள்நாட்டு பிரச்சனை என்றால்
இந்தப் புத்திமதியை சொல்வது ஜெயவர்த்தனே
கையை பலப்படுத்த உதவும். இவ்வாறு பேசியிருப்பது
அமைச்சர் திரு. காளிமுத்து. ஒரு திருமண வீட்டிலே முதல்
அமைச்சர் சொல்கிறார், என்னுடைய சம்மதத்தின் பேரில்,
என்னிடம் சொல்லிவிட்டுத்தான் பேசுகிறார், என்று. அப்படி
யானால் ஒத்த கருத்தாக இருந்தால், பிரதமரைக் கண்டித்
திருக்க வேண்டாமா? ராணுவத்தை அனுப்பாதது தவறு,
ராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்க
வேண்டாமா? கேட்டால் நாவலர், அவர் உணர்ச்சியுள்ளவர்,
உணர்ச்சியைக் காட்டினார், நான் அப்படித்தான் இருப்பேன்
என்று ஒருவேளை, சொல்லக் கூடும்.

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கருத்து வேறுபாடு
வேறு; உணர்ச்சி வேறுபாடு வேறு. நான் எப்படி என்பதை
இந்த நாடு நன்கு அறியும். 40 ஆண்டுக்காலமாக நன்றாக
அறியும். ரகுமான்கானை விட உணர்ச்சி உள்ளவனா,
எழுச்சி கொண்டவனா, அறிவு கொண்டவனா, ஆற்றல்
கொண்டவனா, என்பதை நாடு மிகத் தெளிவாக அறியும்.
அதிலே அவர் சந்தேகப்பட்டாலும், அதைப்பற்றி எனக்குக்

கவலை இல்லை ஆனாலும் இப்பொழுது நான் சொல்வது, ஒப்பீனியன் என்பது வேறு, உணர்ச்சி என்று சொல்கின்ற தன்மைகள் வேறு. கடைசியிலே அது குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு பொதுக்குழு என்ன முடிவு எடுக்கிறதோ அதுதான் முடிவு. முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறாரோ அதுதான் முடிவு. மற்ற வகைகளிலே, அவர்களுடைய ஒப்பீனியன் மாறலாம். அப்படி பார்த்தால், டாக்டர் கலைஞருடைய கருத்துக்கும் ரகுமான்கானுடைய கருத்துக்கும் வேறுபாடுகளை நான் தேடிப் பார்த்தால் 4 நாட்களில் எடுத்துக் கொடுக்க முடியும். ஆகவே, ஒப்பீனியன் மாறத்தான் செய்யும். உணர்ச்சி மாறத்தான் செய்யும். அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முடிவு எது என்று கேட்டால், முதலமைச்சர் சொல்வதுதான் முடிவு. கழகத்தினுடைய முடிவு எது என்று கேட்டால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்ன சொல்கிறாரோ அதுதான் முடிவு. கட்சியினுடைய தலைவர் என்ன சொல்கிறாரோ அது தான் முடிவு. இந்திரா காங்கிரசினுடைய முடிவு, இந்திரா காந்தி என்ன சொல்கிறாரோ, அதனுடைய கட்சித் தலைவர் என்ன முடிவு சொல்கிறாரோ, அதுதான் முடிவு. எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அது பொருந்தும். திராவிட முன்னேற்றக் கழகம் என்றால், அதனுடைய தலைவர் என்ன சொல்கிறார் என்பதுதான் முடிவாக எடுத்துக் கொள்ளப்படு கிறதே தவிர, ஒவ்வொருவரும் சொல்வதை முடிவு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன் :** நாவலர் சொல்கிற மாதிரி ஒவ்வொரு கட்சியிலும் ஒருவருக்கொருவர் கருத்துக்கள் வேறுபடலாம். ஆனால், அந்தக் கட்சியினுடைய இறுதி முடிவு வேறு என்று சொன்னார். இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் திரு. தொண்டமான் ஒரு கட்சி, திரு. அமிர்தலிங்கம் ஒரு கட்சி, விடுதலை வேட்கை புலிகள் ஒரு கட்சி. ஆகையினாலே, அவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையாக இருந்தால் சரி. ஆனால், அதிலே அவர்களுடைய கொள்கை ஒவ்வொரு கொள்கையாக இருக்கிறது. இங்கே உங்களுக்கு ஒரு கொள்கை, காங்கிரசுக்கு ஒரு கொள்கை. அப்படி இருக்கும்போது, அதில் எது நியாயம், எது நேர்மை, எது தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் என்பதைப் பொறுத்து, அப்படிச் சொல்லப்படுவதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, சில பேர் சொன்னதை எடுத்துக் கொள்ள முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இரண்டு மூன்று கட்சிகள் இருக்கின்றன. அவர்களுக்குத் தனித் தனி கருத்துக்கள் இருக்கின்றன. தனித்தனி கருத்துக்கள் கொள்ள அவரவர்களுக்கு உரிமை உண்டு. **தனி ஈழம் வேண்டுமென்று கேட்க, தமிழர் விடுதலை கட்சிக்கு முழு உரிமை**



உண்டு. சம வாழ்வு **வேண்டுமென்று** கேட்க, தொழிலாளர் கட்சித் தலைவருக்கு உரிமை உண்டு. இன்னதுதான் கேட்க வேண்டுமென்று வற்புறுத்த நமக்கு உரிமையில்லை. கிடைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புவது வேறு. ஆனால் இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் பிரச்னையாக இருப்ப தாலும், கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்களைப் பொறுத்த வரையில் இந்தத் தமிழர்கள் என்று வேறுபாடு காணாமல் அவ்வளவு தமிழர்களும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு இருப்பதனாலும் கூடுமான வரையில் ஒருமித்த கருத்தாக எல்லா தலைவர்களும் வற்புறுத்துவது நல்லது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அவையிலே கூட நான் பேசும்பொழுது குறிப்பிட்டேன், நாம் அனைவரும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமென்று. இங்கே இருக்கிற ஒவ்வொரு கட்சியும் தனித்தனிக் கருத்துக்கள் கொண்டிருந்தாலும் இந்தப் பிரச்னையிலே ஒருமித்த கருத்துக்கு வரவேண்டுமென்று தான் மாண்புமிகு முதலமைச்சர் 3,4 தடவை அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். அப்பொழுது கூட ஒரு வேண்டுகோளை விட்டாரே தவிர, அப்படி ஒரு நிலை ஏற்பட வேண்டுமே தவிர, அது கட்டளையாக ஆகாது என்று தெரிவித்தார்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் மீது நான் எப்போதுமே மரியாதை வைத்திருப்பவன். அதிலே சந்தேகமே வேண்டாம். ஆனால், நான் கொள்கை அடிப்படையிலே விளக்கம்— —சந்தேகப்——கேட்கிறேன். தவறாகக் கருத வேண்டாம். உணர்ச்சிகள் என்பது வேறு, கருத்துக்கள் என்பது வேறு என்று சொல்கிறபோது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்துவாக இருந்தாலும், அதைப்போலவே அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஸாக இருந்தாலும். இன்னும் சிலராக இருந்தாலும் அவர்கள் சொல்கின்ற கருத்துக்கள், உணர்ச்சிகள் இரண்டையும் பார்க்கின்றபொழுது, உணர்ச்சிகள், கருத்துக்கள் அதிகமாக இருக்கலாம், குறைவாக இருக்கலாம். ஆனால், கருத்தே முரண்படுகிறது என்பதுதான் நான் இங்கே சொல்ல விரும்புவது. உதாரணமாக, ஈழத் தனி நாடு வேண்டுமென்ற கொள்கை உங்கள் கட்சியாலே ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கிறதா? இல்லையா? ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பது தான் உங்களுடைய அதிகாரபூர்வமான அறிவிப்பு என்று நான் கருதுகிறேன். நம்புவதற்குப் போதுமான காரணங்கள் இருக் கின்றன.

இரண்டாவது இராணுவத்தை அனுப்பி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது ஒரு கருத்து. ஆனால் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்ற கருத்து உங்களுக்கு இருக்குமானால் கூட்டங்களிலே பேசியிருக்கலாம். கட்டுரைகளில் எழுதியிருக்கலாம்; கட்சியிலே தீர்மானம் போட்டிருக்கலாம்; மகஜரிலே குறிப்பிட்டிருக்கலாம். எதுவும்

இல்லை. ஆகையால் அந்தக் கொள்கை உங்களுக்கு இல்லை.
ஆகவே தான் நான் இங்கே சொல்ல வருகிறேன், உங்களுடைய
அடிப்படை கருத்துக்களே பிரதமர் இந்திரா அம்மையார் எந்த
கைட்-லைன்ஸ் கொடுக்கிறார்களோ, அதைப்பின்பற்றி நடப்பது.
அது உள்நாட்டு விவகாரம், ஈழத் தனிநாடு கேட்கக் கூடாது;
வட்ட மேஜை மூலமாகவே பேசி முடித்து விடலாம்; பிரச்னையை
முடித்து விடலாம் என்று ஹிஸ் மிஸ்ட்ரஸ் வாய்ஸ்; அம்மை
யாருடையவாய்ஸை நீங்கள் பிரதிபலிப்பதற்காக இருக்கிறீர்கள்
என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான கருத்து ஏற்பட்டு
விடக் கூடாது என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன்.
ஈழ நாடு கேட்கக் கூடாது என்று நான் சொல்லவே இல்லை.
ஈழ நாடு கேட்க அவர்களுக்கு முழு உரிமை உண்டு,
சம வாழ்வு கேட்க அவர்களுக்கு உரிமை உண்டு.
நாளை உட்கார்ந்து வட்ட மேஜை மாநாட்டிலே பேசி ஒரு
சமரச முடிவிற்கு வந்தாலும் நீங்கள் கட்டாயம் ஒற்றுமையாய்
போகக் கூடாது. நீங்கள் ஈழ நாடு கட்டாயம் கேட்டுத் தான்
தீர வேண்டுமென்று இங்கேயிருந்து அவர்களை அதட்டவும்
முடியாது; உருட்டவும் முடியாது; ஆகவே அவர்களுக்கு அந்த
உரிமை உண்டு. அவர்கள் கேட்கக் கூடாது என்று சொல்ல
நமக்கு உரிமை இல்லை. அவர்களைத் திருப்திபடுத்த வேண்டிய
பொறுப்பு சமரச மாநாட்டிலே கேட்கிறவர்களுக்கு இருக்கிறது.
அதற்குப்பிறகு என்ன விளைவு ஏற்படுகிறது என்பதை பார்த்து
சமவாழ்வு கேட்கிற தமிழர்களுக்கு முழு வாய்ப்பும் தந்து, ஈழ
நாடு தனியாகப் பிரித்து கொடுக்கிற சமரச முடிவு ஏற்படுமே
யானால் அதிலே நாம் குறுக்கே நிற்கப் போவதுமில்லை.
ஈழ நாட்டையும் தந்து, அங்கே வாழ்கிற தொழிலாளர்களைக்
காப்பாற்றுகிற சூழ்நிலை ஏற்படுமேயானால் அதை வரவேற்
போமே தவிர அதை எதிர்க்கிற போக்கோ, அதை எதிர்க்கிற
தன்மையோ இல்லை என்பதைத் தான் சொல்கிறேன். அவர்
களுக்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதைத் தான்
திரும்ப திரும்ப சொல்கிறேனே தவிர, கொடுக்கக் கூடாது
என்பது எங்களுடைய நோக்கமல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
ஈழ நாடு கோரிக்கையை உங்களுடைய இயக்கம் ஆதரித்து ஒரு
தீர்மானம் போட வேண்டும், நாங்கள் போட்டிருப்பதைப் போல,
என்று உங்களை வேண்டுகிறோம். அதுமட்டுமல்ல அதற்கு
மாறாக நீங்கள் இருக்கிறீர்கள். அங்கே ஸ்பெஷல் பொலிட்டிக்கல்
கமிட்டியில் மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள்
என்ன தெரிவித்து இருக்கிறார்கள்? அதற்குக்கூட நீங்கள் பாராட்டி
வாழ்த்து தெரிவித்திருக்கிறீர்கள். அவர்கள் பேசியிருப்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் முடித்து
விடுகிறேன். நம்முடைய அமைச்சர் பண்ருட்டியார் அவர்களுக்கு





வாழ்த்து அனுப்பியதற்குக் காரணம், இலங்கைத் தமிழர்கள்
பிரச்னையிலே போர்க் குரல் கொடுப்பார்; நியாயம் கேட்டு
வாதாடுவார் என்பதற்காக; இங்கே பிரதமர் இந்திரா அம்மை
யார் என்ன சொல்கிறார்களோ அதைத் தான் சொல்கிறார்,
We confine ourselves only to the extent of flow of refugees from Sri
Lanka—நாங்கள் இலங்கையிலேயிருந்து இந்தியாவிற்கு வருகிறார்
களே அகதிகள், அவர்களைப் பொறுத்த அளவிலேதான் எங்கள்
சிந்தனை, பிரச்னை, எங்கள் கவலை. அடுத்துச் சொல்கிறார்,
We neither criticise the policies of Sri Lanka nor criticise the actions
of the Government of Sri Lanka. இலங்கைத் தமிழர்களுக்கு
எதிராக, அங்கே பிரிவினைத் தடைச்சட்டம் கொண்டு வந்து
மரண தண்டனை, குடி உரிமைச் சட்டம் பறிக்கப்படும் என்று
சொன்னார்களே. . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்கள் கலந்து
கொண்ட கூட்டம் பொலிட்டிக்கல் அபேர்ஸ் கமிட்டி. விவாதம்
நடந்தது அகதிகளைப் பற்றி. ஆகவே அகதிகளைப் பற்றி
தான் பேச வேண்டும். அதோடு நிறுத்திக் கொள்கிறேன் என்று
அதை மட்டும் பேசியிருக்கிறார். ஆகவே கட்டுப்பாடுகளுக்கு
உட்பட்டு சிறந்த முறையிலே பேசியிருக்கிறார் என்பதுதான்
வரவேற்கத்தக்கதே தவிர, நினைத்ததை எல்லாம் பேசுகிற
அளவிற்கு அங்கே கமிட்டிகள் நடத்திக் கொண்டிருக்க
வில்லை.

(பிற்பகல் 12-50)

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே,
நாங்களும் ஐ. நா. கமிட்டிகளை அறிந்தவர்கள்தான்.
ஹியூமன் ரைட்ஸ் கமிஷனை அறிந்தவர்கள்தான். ஆகவே
இலங்கை தமிழர்களுக்காக கோடிக்கணக்கான மக்களிடத்திலே
கையெழுத்து வாங்கி நாங்கள் அனுப்பியிருக்கிறோம்.

We also requested that in the light of the genocide, the happening in
Sri Lanka make it impossible for the Tamil people of the Island to
live along with Sri Lanka people. The United Nations should call
upon the Government of Sri Lanka to hear the traditional Tamils and
to allow their claims, so that the Tamil people in Sri Lanka can exercise
their right of self-determination, which is granted under the Human
Rights Commission, of which Sri Lanka is also a party. As such the
Tamils in Sri Lanka should be heard under the auspices of the United
Nations. இதை மனித உரிமைக்கழகத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில்
நாங்கள் சொல்லியிருக்கிறோம். தமிழர்களும், சிங்களவர்களும்
ஒன்றாக வாழ முடியாது; ஜெயவர்த்தனேயிடத்தில் நியாயம்
கிடைக்காது; எனவே அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமைகள்
வழங்கப்பட வேண்டும் என்று ஹியூமன் ரைட்ஸ் கமிஷனிலேகூடச்
சொல்கிறோம். ஹியூமன் ரைட்ஸ் கமிஷனில்
சப்-கமிஷனாக இருந்தாலும் சொல்லுகிறோம். மரியாதைக்குரிய

அமைச்சர் பண்ருட்டியார் "In fact even in my inte vention I had made it very clear that we do not propose. we do not intend to interfere in the internal affairs of Sri Lanka" என்று சொல்லிவிட்டு, அவரைப் பொறுத்தவரையில் அதி தீவிர வாதிகளுக்கு, விடுதலைப் புலிகளுக்குத் தஞ்சம் கொடுக்கவில்லை; பிரிவினையை ஆதரிக்கவில்லை, உள்நாட்டு விவகாரத்திலே தலையிடவில்லை என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்கள். இது முரண்பட்ட கருத்தாக இல்லையா? இது இலங்கைவாழ் தமிழர் களுக்கு உதவி செய்யுமா என்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

நம்முடைய நாவலர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையிலுள்ள நிலைமைகளைப்பற்றி உலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டு மென்பதற்காகத்தான் எங்கள் கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தார்கள். அதைப் பற்றியும் கூட கிண்டலும் கேலியும் செய்தவர்களும் இருக்கிறார்கள். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்து விட்டதால் யாரும் அஸ்தமனமாகிவிட மாட்டார்கள். ஒரு கட்சி தேர்தலில் வெற்றி பெறலாம் அல்லது தோல்வி பெறலாம்; ஒருவர் பதவியில் இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் தந்தை பெரியார் அவர்களோ, ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களோ எந்தப் பதவியிலும் இல்லை. பதவியினாலேதான் தலைவர்கள் கவுரவிக்கப்படுகிறார்கள் என்பது அல்ல.

1957 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் 15 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடன் இருந்தார்கள். அப்பொழுது ஹாஜா பாய் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவா இருந்தார்? என்றாலும் அண்ணா அவர்கள் ஒரு சகாப்தமாகவே விளங்கினார்கள். எனவே, தமிழின மக்கள் தலைவர்களைப் பதவிகளை வைத்துக் கணக்கிடவில்லை.

தமிழக அரசாங்கத்தால் நடத்தப்படுகிற "தமிழரசு" பத்திரிகையில் வந்திருக்கின்ற ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாநாட்டில், உங்களுடைய சர்க்காரைப்பற்றி விமர்சிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார் கலைஞர் அவர்கள். ஏனென்றால், இலங்கை தீப்பற்றி எரிகிறது. எனவே ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று சொன்னார். பேரணி நடத்தினோம்; மத்திய அரசாங்க அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். இவையெல்லாம் உங்களுக்கு எதிராக நாங்கள் நடத்தவில்லை. பார்லிமெண்டின் முன்னால் எம். பி. க்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இலங்கையின் அரசியல் சட்டப் பிரிவை எரித்தோம். இரயில் நிறுத்தப் போராட்டம் என்று அறிவித்தோம். திரு. சுந்தரராஜன்



அவர்கள்கூட இந்தச் சர்க்காரும் பங்கு கொண்டு பந்த் நடந்த இந்த நேரத்தில் இரயிலை நிறுத்தி விட்டார்களேஎன்று சொன்னார்கள். ஏன் உத்திரப்பிரதேசத்திலேயும், பீகாரிலேயும், வங்கத்திலேயும், பஞ்சாபிலேயும் இரயில் களை நிறுத்தவில்லையா? பஞ்சாபிலே அகாலிகளின் இரயில் நிறுத்தப் போராட்டத்தின்பொழுது நடந்ததை நினைத்துப் பார்த்து, இங்கேயிருப்பவர்களைத் தமிழ் அகாலி களாகக் கருதி தமிழ்நாட்டில் சிக்கல் ஆகிவிடக்கூடாது என்பதற்காக இங்கே இரயில்களை நிறுத்திவிட்டார்கள். நாங்கள் அந்த இரயில் நிறுத்தப் போராட்டத்தை உங்களுக்கு எதிராகச் செய்வதாகச் சொல்லவில்லை. நாங்கள் பலாத்காரம் செய்ய வில்லை. ஒரு அடையாளத்திற்காகத்தான் சொன்னோம். இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்னைகளைப்பற்றி மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கட்டும் என்பதற்காக அந்தப் போராட்டத்தை நாங்கள் அறிவித்தோம். ஆனால் எங்கள் தொண்டர்கள் ஆயிரம் பேர்களைக் கைது செய்கிறீர்கள். பிறகு இந்திரா காந்தி அம்மையார் இரயில்கள் ஓடுவதை நிறுத்தப் போகிறார் என்று செய்தி வந்தவுடன் முதலமைச்சர் சொல்கிறார், நான் சொல்லித் தான் இந்திரகாந்தி அம்மையார் இரயிலை நிறுத்தினார் என்று

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட குறுக்கீடு கூடாது என்ற கொள்கை உடையவன்தான் நான். உறுப்பினர்கள் தங்கள் இஷ்டம்போல் கருத்துகளை வழங்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். இருந்தாலும் தவறான கருத்து பரப்பப்பட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான் நான் இப்பொழுது வருகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் என்னைப் பொறுத்த வரையில் ராஜினாமா பண்ணி இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். அவர்கள் இங்கே இருந்திருக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவராக இங்கே இருந்து இப்படிப்பட்ட பிரச்சினைகளில் முழுப் பங்கும் கொண்டு பணியாற்றவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். அவர்களுக்குத் தியாக உணர்வு இல்லை என்றோ தூய்மைத் தன்மை இல்லை என்றோ கருத வில்லை. அவர்களைப் பற்றி நாடறியும். ஏற்கனவே இருக்கின்ற வரலாறும் அறியும். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் ராஜினாமா பண்ணியிருக்கக்கூடாது என்பதுதான். எப்படி அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் இருந்து பணியாற்று கிறார்களோ அப்படி அவர்களும் இருந்து பணியாற்றவேண்டும். அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

இரயில் நிறுத்தத்தைப் பொறுத்தவரையில் இரண்டாம் நாளே எல்லோரும் சேர்ந்து நிறுத்தியதன் காரணத்தால் முதல்வர் அவர்களும் மற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே

கட்சித் தலைவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர்
அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.       ஆர்பாட்டம்
வேண்டுமானால் நடத்துங்கள், இரயில் நிறுத்தும் வேண்டாம்
என்று மற்ற கட்சிக்காரர்கள் கேட்டார்கள். ஆனால் திட்ட
மிட்டபடி அமைதியாக இரயில் நிறுத்தப் போராட்டம் நடை
பெறும் என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். அப்படியானால்
இந்த ரெயிலைத்தான் நிறுத்துவோம் என்றாவது சொல்லுங்கள்
என்றார்கள். அப்போது கட்சி எடுக்கின்ற முடிவுப்படி நடப்போம்
என்று சொன்னார்கள். தீர்மானத்தின் முடிவுக்கேற்ப நடப்போம்
என்று சொன்னார்கள். ஆகவே மறியல் என்று வருகின்றபோது
சட்டப்படி கைது செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்,
ஊர்வலங்கள் போன்றவைகளைப் பொறுத்தவரையில் அதற்கான
அனுமதிகள் தரப்படுகின்றன. ஆனால் மறியல் என்று எங்கே
வந்தாலும் சட்டப்படி அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டி
இருக்கின்றது. அந்நடவடிக்கை இரயிலை நிறுத்துகிறபோதும்
எடுக்கப்படலாம். முன்கூட்டியே கைது செய்வது என்பது
ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப செய்யப்படுவது
தான். முதலமைச்சரோ, மற்றவர்களோ அவ்வாறு கூறுவதல்ல.
ஆகவே எந்த ஒரு போராட்டத்தை யார் நடத்தினாலும் இன்னும்
சொல்லப்போனால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது அவரிடத்திலே காவல் துறை இருந்தபோது
போராட்டங்கள் என்று நடத்தப்பட்டபோது முன்கூட்டியே
ஆயிரம் பேர், 500 பேர் என்று ஆங்காங்கே கட்சித் தொண்டர்
களை மற்றும் தீவிரவாதிகள் என்று கருதப்படக்கூடியவர்களைக்
கைது செய்வது என்பது நடந்திருக்கின்றது. எனவே கட்சிக்காரர்
களில் தீவிரவாதிகள் என்பவர்களைக் கைது செய்வது என்பது
ஒரு பழக்கம். அவர்களுடைய உரிமையைக் கெடுக்கவேண்டும்
என்பதல்ல. உரிமைகளைத் தடுக்கவேண்டும் என்பதல்ல. மறியல்
என்று வருகின்றபோது சட்டத்தைப் பிரயோகப்படுத்தவேண்டிய
அவசியம் அரசுக்கு வருகின்றது. எனவே இந்தப் பிரச்சினையைப்
பொறுத்தவரையில் கைது செய்ய வேண்டும் என்பது நோக்க
மல்ல என்ற விளக்கத்தை மட்டும் அன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, சர்வ
கட்சிக் கூட்டத்திற்கு நான் போய் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையெல்லாம்
எல்லோரும் பேப்பரிலே பார்த்துவிட்டார்கள். எல்லோருக்கும்
தெரியும். எனவே இங்கே சொல்ல வேண்டாம்.

திரு. துரைமுருகன் : வெளிநடப்பு என்பது எவ்வாறு செய்ய
வேண்டி வந்தது என்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர்
அவர்களே, அதைப்பற்றியும் சொல்லிவிடுகிறேன். முதலமைச்சர்
அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் கட்சித் தீர்மானப்படி நடப்போம் என்று
சொன்னார்கள். முதலமைச்சர் சொன்னார், என்னுடைய





வேண்டுகோளை எதிர்க் கட்சித் தலைவர் மறுத்து விட்டார்
என்று. அவ்வாறு மறுத்துவிட்டார் என்று சொன்னதால்
நாங்கள் இந்தக் கூட்டத்திலே இல்லை என்று சொன்னார்கள்.

திரு துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, நாவலர்
அவர்கள் சொல்கிற மாதிரி எந்தெந்த இரயிலை நிறுத்தப்
போகிறீர்கள், எப்போது நிறுத்தப் போகிறீர்கள் என்று கலைஞர்
அவர்களிடம் கேட்டார்கள். கலைஞர் அவர்கள் கட்சியிலே
முடிவு எடுத்திருக்கிறோம், எனவே அது குறித்து கட்சியினைக்
கேட்டுத்தான் சொல்வேன் என்று சொன்னார்கள். இரயில்
நிறுத்தப் போராட்டம் அமைதியாக நடக்கும் என்று நாவலர்
அவர்களிடம் சொன்னார்கள் *** *** (கூச்சல், குழப்பம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * *
அவர்கள் சொல்லப்பட்டது எல்லாம் நீக்கப்படுகிறது. மேலும்
ஆல் பார்ட்டி மீட்டிங் பற்றி எல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்க
வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத்
தலைவர் அவர்களே, ஏன் கைது செய்தார்கள் என்பதற்கு
விளக்கம் சொல்வதற்குத்தான் அதைக் கோடிட்டுக் காட்டினேனே
தவிர, வேறு அல்ல. அதிலேகூட மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் சொல்லுகிறபோது கூட நீங்கள் யோசித்து முடிவு
சொல்லுங்கள் என்று கூடச் சொன்னார்கள். யோசித்து, நாளைக்கு
முடிவு சொல்லுங்கள் என்று கூடச் சொன்னார்கள். ஆனால்,
கலைஞர் அவர்கள், இல்லை, நாங்கள் எடுத்த முடிவுப்படி
(குறுக்கீடு) அது வேறு விவகாரம். கலைஞர் ஏன் அந்த முடிவு
எடுத்தார் என்று அந்தப் பிரச்னைக்கு நான் போகவில்லை.
கலைஞர் ஒரு முடிவு எடுக்க உரிமை இருக்கிறது. கலைஞர் அந்த
முடிவை எடுப்பதற்கும் உரிமை இருக்கிறது. ஏன் அந்த முடிவை
எடுத்தார் என்ற பிரச்னைக்கு நான் போகவில்லை. ஏன் கைது
செய்தார்கள் என்பதற்குத்தான் நான் விளக்கம் சொன்னேன்.
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் பேசும்போது அவற்றிற்கான விளக்கங்களை
அளிக்கலாம். இப்போது திரு. ரகுமான்கான் பேசி முடிக்கட்டும்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், நடமாடும்
பல்கலைக்கழகம் அவர்களே குறுக்கிட்டுச் சொல்லியிருக்கிற
போது, அதற்கு நான் பதில் சொல்லக் கூடாதா?

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** விளக்கங்கள் சொல்வதற்காகத்தான் நான் குறுக்கிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களின் உள்ளத்தையும், அவர்களுடைய கருத்துக்களையும் ஐயப்பாட்டிற்கு இடம் இல்லாமல் நான் தெரிந்து கொண்டு இருப்பதால், மேற்கொண்டு விளக்கங்கள் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சியின் சார்பாக ஒருமித்த கருத்தின் அடிப்படையில் ஒரு கருத்து இலங்கைத் தமிழர் பிரச்னையில் இருக்கவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சர்வக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள் என்றாலும், நம்முடைய இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் இலங்கை தூதுவரகத்திற்கு முன்னால் அவர்களுடைய கட்சியின் அடிப்படையில், அவர்களுடைய துயரங்களைத் தெரிவிப்பதற்காக, அவர்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதற்காக ஊர்வலமாகச் சென்று மகஜரைக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய முறை. அதே போல், தியாகப்படையின் தலைவராக நம்முடைய அருமை சகோதரர் திரு. நெடுமாறன் அவர்கள் எதற்கும் தயாராக 5,000 பேரோடு இராமேஸ்வரத்தைக் கடந்து இலங்கைக்குப் போவதாகச் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு கட்சியும் அவரவர்களுடைய முறைகளிலே, அவரவர்களுடைய உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு அடையாளமாகப் போனார்கள், ஆனால் நான் சொல்வது எல்லாம் தியாகப் படையோடு சென்ற நம்முடைய அருமை சகோதரர் திரு. நெடுமாறன் அவர்களையும், குமரி அனந்தன் போன்றவர்களையும் இங்கே கிண்டலும், கேலியும் செய்யாமல் அவர்களுடைய உணர்வுகளை மதித்து இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில் அவர்கள் ஆற்றிய பணிக்குப் பாராட்டுத் தெரிவிக் கின்ற முறையில் இந்தத் தீர்மானத்திலே எதுவும் சேர்க்கப்பட வில்லை. மணியடிக்கப் பெற்றது. ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் 45 நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்னும் ஒரு உறுப்பினர் பேச இருப்பதால், சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** அதேபோல், கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் ஏறத்தாழ 25 ஆண்டுக்காலம் இந்த மன்றத்திலே பணியாற்றியிருக்கிறார்கள். முதலமைச்சராக, அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்குத் தங்களது பதவிகளை ராசினாமா செய்து இருக்கிறார்கள். அதற்குக்கூட ஒரு பாராட்டு இல்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் தன்னைத்தானே இந்த இலங்கைத் தமிழர் பிரச்னையிலே கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்திலே பாராட்டிக்கொண்டு இருக்கிறார். பரவாயில்லை.



கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) 'தமிழரசு' என்கிற பத்திரிகை அரசால் வெளியிடப்படுகிற பத்திரிகை. மக்களுடைய வரிப் பணத்தைக்கொண்டு இதற்குச் செலவிடப்படுகிறது. எங்களுடைய வரிபணமும் சேர்ந்துதான் இதற்குச் செலவாகிறது. இதிலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து கலைஞர் போராட்டங்கள் நடத்துகின்ற காரணத்தால் தமிழக சர்க்காருக்கு இலங்கைப் பிரச்னையில் சிக்கல் உண்டாகிறது. இந்தப் போராட்டங்களால் எந்தப் பலனும் வாராது என்று பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன் என்று பேசிக்கொண்டே இருப்பது சரியல்ல. முடித்துவிட்டு உட்காருங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன் நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக இதைச் சொல்கிறேன். தப்பான கருத்து அல்ல. தமிழரசு பத்திரிகையில் ஸ்ரீமாவோ பண்டார நாயகாவோடு கலைஞர்கள் எல்லாம் படம் பிடித்திருக்கிறார்கள். ஜயவர்த்தனேயுடன்1978—ம் ஆண்டு உங்கள் மந்திரிசபை ஆட்கள் இருக்கிறார்களே, ஏன் இந்த லாவாணிக் கச்சேரி? ஆக இலங்கைத் தமிழர் பிரச்னையில் நீங்கள் முறையாக இல்லை; சரியாக இல்லை. எனவே இரட்டை இலைகளின் இரட்டை வேடம் இந்தத் தீர்மானம் என்று சொல்லி நான் அமர்கிறேன்.

*** திரு. மி. வின்செண்ட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1841 ஆம் ஆண்டிலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டிலிருந்து நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டு இலங்கையில் குடிபுகுந்த இந்திய வம்சாவழி தமிழர்களுக்கும் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இலங்கையிலே குடியேறிய ஈழத் தமிழர்களுக்கும் உரிமைகள் மறுக்கப்பட்டு, சமுதாய உணர்வுகள் மறுக்கப்பட்டு, இன்றைய தினம் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்பு, தீ வைப்பு ஆகிய கொடுமைகள் ஆட்சி பீடத்தில் இருக்கிற ஜயவர்த்தனே அரசு உதவியுடன் இராணுவத்தாலும் போலீசாலும் நடந்து வருகின்ற அத்தகைய கோர நிகழ்ச்சிகளைத் தமிழ் உணர்வு படைத்த தமிழர் கூட்டம் அத்தனையும் கண்ணீர் சிந்தி, இன்று வேதனையோடு அதுபற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

இன்றையதினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய பேச்சின் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். கேரளா தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. ஆந்திரா கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது, கர்நாடகம் கண்டன தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது ஆனால் தமிழ்நாட்டில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு. இவ்வளவு தாமதமா என்று கேட்டார்.

9-7-1977-ம் ஆண்டு ஒரு தீர்மானமும் 21-8-1981 ஆம்
ஆண்டிலே ஒரு தீர்மானத்தையும் போட்ட பெருமை எங்கள்
புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்று நான் குறிப்பிட
விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனையைத்
தீர்ப்பதற்கு இதே மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைப்
போட்டவர் எங்கள் புரட்சித் தலைவர். ஆறு ஆண்டுக்காலம்
ஆட்சிப் பீடத்தில் இருந்து இரண்டு முறை இதே மாமன்றத்தில்
தீர்மானத்தை நிறைவேற்றிய பெருமைக்குச் சாந்தக்காரரான
எங்கள் புரட்சித் தலைவரைப்பார்த்து ஏழு ஆண்டுக்காலம்
ஆட்சிப் பீடத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்கள் ஒரு தீர்மானத்தைக்கூட போடாமல் இன்றைய
தினம் தீர்மானத்தைக் கொண்டு வருவதிலே தாமதமா என்று
கேட்பதற்கு அடிப்படை உரிமையே கிடையாது என்று இந்த
நேரத்திலே தெரிவித்துக் சொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் இலங்கைத் தமிழர்கள் கொள்ளையால்,
கொலையால், கற்பழிப்பால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற
நிலை தெரிந்தவுடனே, எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள்
ஒன்றுபட்ட தமிழ் இனமே கட்சியை மறந்து வா, அரசியல்
உணர்வுகளை விலக்கிவிட்டு வா, ஒன்று சேருவோம்;
இலங்கைக் கொடியவனான ஜயவர்த்தனேயைப் கண்டிப்போம்
என்று சொல்லி அனைத்துக் கட்சித் தலைவர்களையும்பலமுறை
சந்தித்தார்கள். பலமுறை அனைத்துக் கட்சித் தலைவர்கள்
கூட்டத்தைக் கூட்டினார்கள்; தீர்மானத்தை நிறைவேற்றினார்
கள். பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரைச் சந்திப்போம்
என்று சொல்லி, அனைத்துக் கட்சித் தலைவர்களையும்
அழைத்துச் சென்றார்கள். இந்தியப் பிரதமரைச் சந்தித்தார்கள்.
ஆகஸ்ட் 2-ம் தேதி ஜயவர்த்தனே அரசின் கொடுமைகளைக்
கண்டிப்பதற்கு தமிழ்மக்கள் அத்தனைபேரும் அர்த்தால்
நடத்துவார்கள், அதற்கு ஆதரவு தர வேண்டுமென்று
கேட்டார்கள். பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி
அம்மையார் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

(பிற்பகல் 1.10)

1981 ஆம் ஆண்டு இதைப்போன்று ஒரு அர்த்தால்
நடைபெற்ற நேரத்தில் நமக்கு மத்திய அரசு ஆதரவு தராமல்
இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய நிலைமையை உணர்ந்து
ஆதரவு தந்தார்கள். அன்றையதினம் விமானம் பறக்காது,
இரயில் ஓடாது, மத்திய அரசு நிறுவனங்கள் அனைத்தும்
செயல்படாது என்று சொல்லுகின்ற அளவுக்கு ஆணை
பிறப்பித்த காரணத்தால் தமிழ்நாட்டில் தமிழன் மூச்சு விடவே
மறந்தான் என்று சொல்லுகின்ற அளவுக்கு அமைதி நிலவியது.
ஒன்று சேர்ந்து தமிழர் கூட்டம் எழுந்து விட்டது; ஆகையால்
இலங்கைத் தமிழர் பாதுகாக்கப்படுவர் என்று ரஷ்ய நாட்டுப்
பத்திரிகை பிராவ்தா பாராட்டியது. லண்டன் எக்கனாமிக்



பாராட்டியது, 'ஏஷியா வீக்' பாராட்டியது. உலக நாடுகள்
எல்லாம் ஒன்று திரண்டு ஒற்றுமையோடு வாழுகின்ற உணர்ச்சி
வயப்பட்டு தமிழனைப் பாராட்டுகின்ற நேரத்தில், 2 நாட்களுக்
குள்ளாக 5-ந் தேதி திருப்பியும் ரயில் நிறுத்தப் போராட்டம்
என்று அறிவிப்பு வருகிறது. சாகின்ற இலங்கைத் தமிழர்
களுக்கு ஒன்றுபட்டான் இந்தத் தமிழன் என்று உணர்ச்சியில்
பூரித்த தமிழன் இதயத்தில் வேற்றுமையோ, பிளவோ என்று
சொல்லுகின்ற அளவுக்கு அன்றையதினம் 5-ந்தேதி இரயில்
நிறுத்தப் போராட்டம் என்று அறிவிக்கப்படுகிறது. இங்கே
அருமை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள்
குறிப்பிட்டதைப்போல மத்திய அரசை புரட்சித் தலைவர்
தனது அணுகுமுறையால் செயல்பட வைத்தார். ஐந்தாம்
தேதி ரெயில் நிறுத்தப்போராட்டம் நடந்திருக்குமென்றால்
இங்கே சில கொலைகள் தமிழர்கள் இறந்திருக்கக்கூடிய
வாய்ப்பு இருந்து இருக்கலாம். அப்படி இறந்தால் இலங்கையை
யும், இங்கேயும் ஒப்பிட்டு அரசியல் இலாபம் தேட வேண்டிய
சூழ்நிலை உருவாகும். இந்த நிலையை மாற்றிட வேண்டு
மென்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அணுகுமுறையை
இந்திய நாட்டின் தலைவி பாரதப் பிரதமர் இந்திரா காந்தி
அம்மையார் ஏற்றுக் கொண்டார் ரயில்கள் ஓடாது என்று
அன்றும் அறிவித்தார். அதே போல தான் உடனடியாக
வெளி விவகார அமைச்சரை இலங்கைக்கு அனுப்புங்கள் என்று
பாரத பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் எங்கள் தமிழக
முதல்வர் கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டார்.
நரசிம்மராவ் இலங்கைக்குச் சென்றதால் தான் அங்கே அமைதி
ஏற்பட்டது. படுகொலை நிறுத்தப்பட்டது என்பதை யார்
ஏற்றுக்கொள்ள வேண்டுமோயார் ஒத்துக் கொள்ள வேண்டுமோ
அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் பார்த்தசாரதி
வருகையால் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை
ஓரளவிற்கு இன்றையதினம் நிம்மதி அடைந்திருக்கிறது
என்பதை அமிர்தலிங்கம் அவர்கள் பாராட்டினார். ஏன்
தொண்டமான் அவர்களும் பாராட்டினார். இதுவரையில்
எந்த அரசும் செய்யாத அளவிற்கு தமிழக அரசும், மத்திய
அரசும் இலங்கைப் பிரச்சினையில் தாராளமாக அக்கறைக்
கொண்டு இன்றையதினம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு
செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று அமிர்தலிங்கம்
பாராட்டுகின்ற நேரத்தில், தொண்டமான் பாராட்டுகின்ற
நேரத்தில், அந்தப் பாராட்டுதல் இதற்கு முன்னாலே
ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்கள் செய்யவில்லை என்பதைக்
குறிப்பிடுவதால் அவர்கள் தானாக கோபம்கொள்ளக்கூடாது
என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1973-74-ல் இலங்கையில் இதே பிரச்னை வந்தது. அங்கே
உலகத் தமிழர் மாநாடு நடைபெறுகின்ற நேரத்தில்
தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்த நேரத்தில்
ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்களுக்கு உணர்ச்சி வந்ததா

[திரு மி. வி.்.செண்ட்] [1983 அக்டோபர் 25

என்றால் உணர்ச்சி வரவில்லை. இந்தக் கட்சிக்கும் மாநில
அரசிற்கும், அயல் நாட்டு வி ·காரத்திற்கும் தொடர்பு இல்லை
என்று சொல்லப்பட்ட தமிழ்நாட்டில் எங்கள் கட்சி மட்டும்
அல்ல ஆட்சிக்கும் தொடர்பு உண்டு என்று கண்டனம்
தெரிவித்தார். எங்கள் புரட்சித் தலைவர்அவர்கள், ஆட்சியை
இலங்கைத் தமிழர்களின் துயர் துடைப்பதற்காக இன்றைய
தினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் பயன்படுத்தி
வருகிறார் என்பதை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்
கிறேன். மத்திய அரசிடம் முறையிடலாம், ஆனால் தட்டிக்
கேட்க வ யில்லை என்று சொன்ன 1973-74 ஆம் ஆண்டு
அரசியல் நிலை மாறி, இன்று மத்திய அரசை வற்புறுத்தி,
மத்திய அரசை இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கின்ற
வழித்தடத்தில் இறக்கி விட்ட பெருமை எங்கள் புரட்சித்
தலைவருக்கு உண்டு.

கருப்புக் கொடி காட்டியவர்களை கைவிலங்கிட்டு சிறைக்
கூடத்துக்கு அழைத்துச் சென்று 1973–74 ஆம் ஆண்டு ஆட்சிக்
காலத்தில்நடந்த கொடுமைகள் மாறி, மக்களால் தேர்ந்தெடுக்
கப்பட்டதமிழக முதல்வர் புரட்சித் தலைவரிலிருந்து, அவர்
கீழே இருக்கின்ற அமைச்சர்கள்,தேர்ந்தெடுக்கப்பட்டசட்டமன்ற
உறுப்பினர்களிலிருந்து லட்சோப லட்சம் கட்சித் தொண்டர்கள்
வரை கருப்புச் சட்டை அணிந்து ஜெயவர்த்தனேயின்
கொடுமையைக் கண்டிப்பார்கள் என்றும் இலங்கையில் உயிர்
துடித்துச் செத்த இலங்கைத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்து
வார்கள் என்றும் ஆணை பிறப்பித்து செயல்படுத்திய பெருமை
எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுக்குண்டு. அயல் நாட்டு
விவகாரத்தில் தலையிட முடியாது என்ற நிலை மாறி,
ஜெயவர்த்தனே அயல் நாட்டு உதவியை நீநாடினால்இலங்கையின்
சுதந்திரமே பறிபோகும் என்று எச்சரித்தார் எங்கள் புரட்சித்
தலைவர் இலங்கை அரசுக்கு எதிராக நடந்த தமிழர்களைப்
பிடித்துக் கொடுத்த காலமெல்லாம் மாறி இன்றையதினம்
இலங்கைத் தமிழர்களுக்குக் குரல் கொடுக்கும், இலங்கைத்
தமிழர்கள் இங்கே வந்தால் அவர்களுக்கு நாங்கள் அடைக்கலம்
கொடுக்காமல் வேறு யார்அடைக்கலம் கொடுக்க முடியும் என்று
உரிமை குரல் எழுப்புகின்ற உன்னதத் தலைவராக எங்கள்
புரட்சித் · தலைவர் செயல்படுகிறார் என்பதை இந்த
நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குட்டிமணி
உயிரோடு இருந்திருந்தால் இன்று தமிழ்நாட்டில் அவர்
பாதுகாப்போடு இருந்திருப்பார் என்பதையும் நான் சுட்டிச்
காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரிகோண மலையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கிறார்க
அங்கே அந்தத் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்
வேண்டும் என்று சிங்கள வெறியர்களைப் புகுத்த வேண்டும்
அதன் மூலம் திரிகோண மலையில் டிக்கோ—கார்சியாவி
அமெரிக்கா கப்பல் படைதளம் வைத்திருப்பதைப் போ



1983 அக்டோபர் 25] [திரு. மி. வின்செண்ட்]

திரிகோண மலையில் வைப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும்
என்று வருகின்ற முயற்சியை இன்றையதினம் முறியடித்து
காட்டிய அளவுக்கு இன்றையதினம் லட்சக்கணக்கான பேர்
களைத் திரட்டி, பேரணி அமைத்து, வல்லரசை மோதுகின்ற
அளவுக்கு நேரடியாகச் சென்று மனு கொடுத்த பெருமை எங்க
ளுடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்களுக்கு உண்டு.
ஏனென்றால் இந்திய நாட்டில் ஹியூமன் ரைட்ஸ் மனித
உரிமையைப் பாதுகாப்பதற்கு நாங்கள் இருக்கிறோம் என்று
வல்லரசுகளின் தலைமையான அமெரிக்கா நாடு இன்றையதினம்
மந்திரம் சொல்கிறது; தோத்திரம் பாடுகிறது. ஆனால்
நீ தான் உரிமைகளை பறிக்கிறாய் என்று சொல்கின்ற அளவுக்கு
ஊர்வலம் நடத்தி, மனுவை கொடுத்த பெருமை எங்களுடைய
புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை நான் இந்த
நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இலங்கைத்
தமிழர்கள் பிரச்சினையில் பாரதப் பிரதமர் எடுத்த நிலை
இன்றையதினம் பாராட்டப்படுகிறது. ஏன்என்றால் அவர்களு
டைய அணுகுமுறையை யார்ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப்
பார்க்க வேண்டும். திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் ஏற்றுக்
கொண்டார்கள். திரு. சரண்சிங் அவர்கள் ஏற்றுக் கொண்
டார்கள். திரு. ராஜேஸ்வரராவ் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.
டார்கள். திரு. வாஜ்பாய் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்,
திரு. நம்பூதிரிபாடு அவர்கள் ஏற்றுக் காங்கிரசோடு ஒன்று
என்றுமே இந்திய அளவில் இந்திரா கட்சிகள் எல்லாம் அரசியலை
சேராத, ஒத்து வராத உணர்வைக் கண்டன. மனிதப்படு
மறந்தன, தமிழர்கள் வேண்டியது மனித சமுதாயத்தில்
கொலையை தடுத்து நிறுத்த உணர்வுகள் என்பது தெரிந்தன.
எழ வேண்டிய நியாயமான ஏற்றுக்கொண்டது. பாரதிய ஜனதா
ஆதலால்தான் ஜனதாவும் லோக்தளமும் ஏற்றுக்கொண்டது.
வும் ஏற்றுக் கொண்டது. கட்சி ஏற்றுக் கொண்டது, இந்திய
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஏற்றுக் கொண்டது. ஆனால் ஒரே
கம்யூனிஸ்ட் கட்சியும் என்று சொல்கிறது. ராணுவத்தை
ஒரு கட்சி, படை எடு சொல்கிறது. மனிதப் படுகொலையைக்கூட
அனுப்பு என்று உணர்வுகளால் அரசியலாக்குகின்றார்கள்
மனிதாபிமானமற்ற நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
என்பதைத்தான்
கொள்கிறேன்.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அருமை
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது,ராணுவத்தை
அனுப்புவதற்கு நீங்கள் ஏன் சொல்லவில்லை
என்று கேட்டார். நான் கேட்கிறேன். கோடி கையெழுத்துப்
பெற்றதாக நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அது உண்மையா,
இல்லையா என்பது விவாதம் அல்ல. ஆனால் கோடி கையெழுத்
திட்டு ஐக்கிய நாட்டுச் சபைக்கு அனுப்பிய அந்த மனுவில்
இந்தியாவுக்கு அறிவுரை சொல்லி ராணுவத்தை அனுப்பு என்று
நீங்கள் எழுதி அனுப்பியிருக்கிறீர்களா, நீங்கள் அதைக்
கேட்டிருக்கிறீர்களா என்பதை நான் இந்த நேரத்திலே
கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்.

திரு. ஸ். கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ஐக்கிய
நாட்டுக்கு வேண்டுகோள் விட்டு, கையெழுத்து வாங்கி
அனுப்பிய இடத்திலே மிலிட்டரி இல்லை. இந்தியாவிலேதான்
மிலிட்டரி இருக்கிறது. ஐக்கிய நாட்டிலே இல்லை. பிரதமருக்குக்
கொடுக்கின்ற மனுவிலே வேண்டுமானால் அதைச் செய்யுங்கள்
என்று சொல்லலாம். ஆனால் ஐக்கிய நாடு இந்தியாவினுடைய
மிலிட்டரியை கண்ட்ரோல் பண்ணுவதில்லை, என்பதை நான்
உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாற்றுத் தலைவர் அவர்களே,
இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்காக
இன்று உலகமே கண்ணீர் சிந்துகிறது. ஐக்கிய நாட்டு சபைக்கு
இதை அனுப்பினால் இந்தப் பிரச்சினை தீருமா? என்று
கேட்கின்ற கட்சிக்கு நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன்.

1947 ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச்னை ஐக்கியநாட்டுக்குச்
சென்றது. முடிவு வந்ததா? 1948 ஆம் ஆண்டு பாலஸ்தீனப்
பிரச்சினை ஐக்கிய நாட்டு சபைக்குச் சென்றது. அதிலே
முடிவு வந்ததா? 1974 ஆம் ஆண்டு சைப்ரஸ் பிரச்சினை
ஐக்கிய நாட்டுக்குச் சென்றது. அதிலே முடிவு தெரிந்ததா?
1980 ஆம் ஆண்டு ஈரான்-ஈராக் பிரச்சினை ஐக்கிய நாட்டுக்குச்
சென்றது, முடிவு தெரிந்ததா, என்று கேட்கின்றவர்களை நான்
கேட்கிறேன். அந்தப் பிரச்சினை வேறு இந்தப் பிரச்சினை
வேறு. ஏன் என்றால் ஈரான்-ஈராக் பிரச்சினையாக இருந்
தாலும் சரி, சைப்ரஸ் பிரச்சினையாக இருந்தாலும் சரி,
பாலஸ்தீனப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, காஷ்மீர்
பிரச்சினையாக இருந்தாலும் சரி, உலக நாடுகள் ஒன்று
சேர்ந்து ஒவ்வொரு நாட்டு பிரச்னைக்கு முழுமையாக இது
சரி என்று வாதாடவில்லை. ஆனால் இன்றையதினம் இலங்கைப்
பிரச்னையில், ஜெயவர்த்தனே செய்கின்ற வன்முறைகளுக்கு
உலக நாடுகள் எதுவுமே ஜெயவர்த்தனே செய்வது சரி
என்று சொல்லவில்லை. ஆதலால், இதுவரையிலும், 1947,
48, 74, 80-ல் கொண்டு போன பிரச்னைகளைக் காட்டிலும்
இந்தப் பிரச்னை முற்றிலும் மாறுபட்டது. இது ஒரு மனித
படுகொலை. உலகமே பரிதாபப்படுகிறது என்பதற்கு நான்
சில ஆதாரங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இன்றையதினம் கொடுமை செய்கின்ற ஜெயவர்த்தனே
அவர்களே, நீங்கள் வன்முறையைத் தூண்டி ஆட்சியை நடத்தி
இலங்கை வாழ் தமிழர்களின் உயிரைக் குடித்து விட்டீர்கள்.
ஆகவே லண்டன் மாநகருக்கு வரக்கூடாது என்று இங்கிலாந்து
ராணி அவர்கள் தடை விதித்து இருக்கிறார்கள். அதே போல்
தான் உலக வங்கி சொல்கிறது, தமிழர்களின் சொத்தை
பறிமுதல் செய்தால் விபரீதம் நடக்கும் என்று உலக வங்கி
சொல்லியிருக்கிறது. சர்வதேச நிதி நிறுவனம் சொல்கிறது.



தமிழர்களின் பிரச்னையில் தொடர்ந்து வன்முறையில்
நடவடிக்கைகள் நீடிப்பீர்களே யானால், உதவி கிடைப்பதற்கு
கிடைத்த கதி தான் உங்களுக்கும் என்று சர்வதேச
நிதி நிறுவனம் இலங்கை அரசை எச்சரிக்கிறது. ஐக்கிய
நாட்டு சபையின் மனித உரிமையை பாதுகாக்கும் கமிஷனின்
கூட்டம், ஜெனிவாவிலே நடைபெற்ற போது, அதிலே
நார்வே நாட்டு உறுப்பினர், ஆங்ப்ஜொன் அவர்கள்
சர்வதேச சமுதாயமே பாதிக்கப்பட்டு விட்டது. ஆதலால்
உடனடியாக இதை விசாரிக்க ஒரு விசாரணைக் கமிஷனை
அங்கே அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார். அதேபோல
சட்டப்பிரிவு பிரதிநிதி பெண் பிரதிநிதி ஆமியாங் அவர்கள்
மனித உரிமைக் கமிஷனின் பிரதிநிதியை உடனடியாக
இலங்கைக்கு அனுப்ப வேண்டும். மனித உரிமைகள் எந்த
அளவுக்கு பாதிக்கப்பட்டு உள்ளன. மீறப்பட்டு உள்ளன
என்பதை அவர்கள் தெரிந்து, அந்த மனித உரிமைக் கழகத்
திற்கு அவர்கள் தகவல் தர வேண்டும் என்று, சட்டப்பிரிவு
பெண் பிரதிநிதி ஆமியாங் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல அசோசியேஷன் ஆப் இன்டர் நேஷனல்
ஜூரிஸ்டுகள் இதனைக் கண்டித்து தீர்மானம் போட்டிருக்கிறார்
கள். ஐக்கிய நாட்டு கமிஷனின் கூட்டத்திலும் இதை
அவர்கள் எடுத்துச் சொல்லி குற்றம் சாட்டியுள்ளனர்.
யாரையாவது போலீசை வைத்தோ, ராணுவத்தை வைத்தோ
சுட்டுக் கொலை செய்தால். பிரேத பரிசோதனைக்கூட
தேவையில்லை,விசாரணை இல்லாமல் புதைக்கலாம் என்பது
வேறு எந்த நாட்டிலும் உலகத்தில் எங்கேயுமே இல்லாத நிலை,
அதிர்ச்சியைத் தருகிறது. ஆகவே, இது கண்டிக்கத் தக்கது.
காட்டுமிராண்டித்தனமானது என்று அசோசியேஷன் ஆப்
இன்டர்நேஷனல் ஜூரிஸ்டுகள் கண்டித்திருக்கிறார்கள்.

வன்முறையில் ஈடுபட்ட போலீசாரும் ராணுவத்தினரும்
தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் கண்டிக்கப்
படுவதற்கு பதிலாக பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்
கிறார்கள். அது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. கடுமையாக
கண்டிக்கப்பட வேண்டியது என்று இன்றையதினம் அசோசியே
ஷன் ஆப் இன்டர்நேஷனல் ஜூரிஸ்டுகள் கண்டித்திருக்கிறார்கள்.
இலங்கையில் நடைபெறுகிற அந்த கொலைவெறி சம்பவங்கள்
இலங்கையில் உள்ள அமைச்சர்களின் தூண்டுதலால் தான்
நடைபெறுகிற என்று அதைச் சித்தரித்திருக்கிறார்கள்.
சிங்கள வெறி பிடித்த கிழவி, வில்லி பண்டார நாயகா கூட.
பிரிவினை தடைச்சட்டத்தை பகிரங்கமாக எதிர்த்திருக்கிறார்.
இந்தச் சட்டம் இலங்கையை இரண்டாகப் பிரிக்கும் என்று
இன்றையதினம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

லண்டன் ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிட்டி புஃரொபெசர் டேவிட் செல்பாரின் அவர்கள் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர், சிலோனுக்குச் சென்றபோது, அங்கே நடந்திருக்கிற படுகொலை யைப் பார்த்து, ஜெயவர்த்தனேயின் நடவடிக்கைகள் காட்டு மிராண்டித் தனமானது என்று விமர்சித்திருக்கிறார்கள். அமெரிக்கத் தூதுவராக இருந்த எம். எஸ். பாட் அவர்கள் ஜெயவர்த்தனேயின் நடவடிக்கைகள் காட்டுமிராண்டித்தன மானது, வன்முறையானது என்பதை இன்றையதினம் சித்தரித் திருக்கிறார்கள்.

உலக நாடுகள் எல்லாம் ஒன்று திரண்டு இந்த இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குரல் கொடுக்கிற நேரத்தில், அவைகளைப் பயன்படுத்தி, இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிக்கின்றார். உண்மையிலேயே இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு பெற வேண்டும் என்று நினைக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். ஆகவால் தாம பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுடைய உணர்வுகளை விருப்பங்களை அவர் கேட்கிறார். எது தேவை என்பதை, எதைச் செய்ய வேண்டும் என்பதை சொல்ல வேண்டியவர்கள் இலங்கைத் தமிழர்கள்தான் என்கிறார்.

தொண்டைமான் சொல்கிறார், ஈழம் வேண்டாம் என்று. அமிர்தலிங்கம் ஈழம்தான் வேண்டும் என்று சொல்லவில்லை. ஈழம் வேண்டும், ஆனால் நிபந்தனை இல்லாமல் பேச்சு வார்த்தை நடத்தி. அந்த யோசனைகளை மக்கள் முன் வைத்து முடிவு எடுக்க தயார் என்று சொல்கிறார். உடைய வருக்கு வருத்தம் உள்ளத்தில்; ஒப்பாரிக்காக வந்தவன், ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டுவதைப் போல ஈழம் தான் வேண்டும் என்று சொல்ல தமிழகத்தில் இருப்பவர்களுக்கு உரிமை இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தொண்டமான் அவர்கள் ஈழம் வேண்டாம் என்கிறார்கள். அமிர்தலிங்கம் அவர்கள் ஈழம் தான் வேண்டும் என்று சொல்லவில்லை; ஈழம் வேண்டும்; ஆனால் நிபந்தனை இல்லாமல் பேச்சு வார்த்தை நடத்தினால், பேச்சு வார்த்தைக்கு தயார் என்று சொல்கிறார்கள். ஆகையினால் ஒப்பாரி வைக்காதீர்கள். அங்கேயிருக்கிற தமிழர்களுடைய வாழ்வை பறிப்பதற்கு, இங்கேயிருந்தும் முயற்சிக்காதீர்கள் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தேவையற்ற வாதங்கள், சர்ச்சைகள், செயல்முறைகள், எழுத்துக்கள், பேச்சுக்கள் வேண்டாம். ஏனெனில் அவைகளால் இன்றையதினம் இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா அவர்களால் ஐக்கிய நாட்டு சபையில், அதிகமாக குற்றம் சாட்டுவதற்கு உதவுவீர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை உணர வேண்டும். இதை உணர மறுப் பீர்களானால், மேலும் சர்ச்சை செய்வீர்களானால் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்னைக்கு தீர்வுகாண நீங்கள் உதவவில்லை என்பதை அது வெட்ட வெளிச்சமாக்கும் என்பதைதெரிவித்துக் கொள்கிறேன்.



இன்றையதினம் பண்ருட்டியார் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையிலே பேசியிருக்கிறார்கள். இலங்கை அரசு ராணுவத் தையும், போலீசையும் வைத்து தமிழர்களின் உயிரைப் பறித்ததாக ஐநாவிலேயே சொல்லியிருக்கிறார்கள். இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீது அவர்களின் குற்றச்சாட்டை தகர்த்து எறிந்திருக்கிறார்கள். இலங்கையில் அவதிக்குள்ளான தமிழர்கள், தாங்க முடியாத வேதனையோடு, இந்தியாவுக்கு திரும்புவதால், இந்தியா வேதனையை அடையாமல் இருக்க முடியாது என்ற நியாயமான வாதத்தை ஐக்கிய நாட்டு சபையிலே வைத்திருக்கிறார்கள். இந்திய அரசியல் தலைவர் களை விமர்ச்சித்தற்கு இலங்கையின் தாழ்ந்த குணத்தைக் கடிந்துள்ளார் பண்ருட்டியார். ஐக்கிய நாட்டுக்குச் செல்லும் இந்தியத் தூதுக்குழுவில் மத்திய ஆளுங்கட்சியில்லாத தமிழக அமைச்சரான பண்ருட்டியாரை இடம்பெற வைத்த ராஜதந்திரி எங்கள் புரட்சித் தலைவர். இதனையும் கிண்டல் பேசாதீர்கள். உணர்வால் பண்ருட்டியாரின் ஐ. நா. பயணத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் உணர்ச்சியற்ற தமிழர்கள் ஆகிவிடுவர். உள்ளத்தால் பண்ருட்டியாரின் ஐக்கிய நாடுகள் பங்கினால் விளைந்த சாதனைகளைப் பாராட்டாதவர்கள் கள்ளமனம் படைத்தவர்கள். இன்று தமிழன் ஒருவன் இந்தியத் தூதுக் குழுவிற்கு ஐக்கியநாடுகளுக்குச் செல்கின்ற குழுவிற்கு தலைமை தாங்குகிறார்என்பதை நினைத்துப் பூரிக்காதவன் தமிழனாக இருந்தால்நோயாளி என்றே பொருள். இலங்கை இராணுவத் தால்போலீசால், ஜெயவர்த்தனே அரசால் தாக்கி தகர்க்கப்படும் தமிழன் வாழ்விழந்த நிலையை விளக்கி தன்மான உணர்ச்சி யோடு ஐக்கிய நாடுகள் சபையில் நீதி கேட்கும் பண்ருட்டி யாரை அனுப்பிய புரட்சித் தலைவரின் அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளாத இதயத்தில் பாதிக்கப்படும் இலங்கைத் தமிழனைப் பற்றிய கவலை உதயமாக நியாயமில்லை.

இலங்கைத் தமிழன் பிரச்சினைக்குதீர்வுகாணமுடிந்ததுஎன்ற நிலை உருவாகியே தீரும். இது சத்தியம். ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும், சமாதானப்படை அனுப்பவேண்டும் என்ற கோரிக்கை வெல்லும். இந்த நேரத்திலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், இதனையும கேலி பேசுகின்றவன் குறுகிய எண்ணம் கொண்டவன், கொமதி படைத்தவன், கொஞ்சு தமிழ் காவியங்கள், பாவியங்கள் மீது ஆணை, ஆயிரக்கணக்கான சிங்கத் தமிழர்கள் உயிரிழந்ததால் அவதியுறும் அவர்கள் குடும்பங்கள் இடும் சாபத்தால் அரசியல் வாழ்விழந்து சீரழிவான். இதனை ஏற்றுக் கொள்ளாத நெஞ்சம் உணர்வு இல்லாத வஞ்சக நெஞ்சம், ஆனால் கச்சேரிக்குப் போகிறார் என்று சொல்கிறார்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று இங்கே அமைச்சரவையில் வீற்றிருக்கிற ஒரு அமைச்சரை கச்சேரிக்கு செல்கிறார் என்று சொல்கிறார்கள்.

கொடியோன் ஜெயவர்த்தனே அரசால் இலங்கையில் நடைபெறும் மனிதப் படுகொலையை நிறுத்த கட்சி மறந்து அரசியல் உணர்வு இழந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக